# சாதக பாரிசாதம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 505

வேதலிங்கப்பட்டர் தமிழாக்கம் செய்த

# சாதக பாரிசாதம்

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் திருமதி. ***சத்தியபாமா காமேஸ்வரன்,***

எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.எட்.,பிஎச்.டி.,

சோதிடவியல் பட்டயம், சுவடியியல் பட்டயம்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2007] [விலை ரூ. 100-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : சாதக பாரிசாதம் |
| பதிப்பாசிரியர் | : முனைவர். திருமதி. சத்தியபாமா காமேஸ்வரன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 505 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : ஆகஸ்டு 2007 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 252 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : சோதிடம் |
| விலை | : ரூ. 100-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகத் திகழ்வது சோதிடக்கலை. மனித வாழ்வின் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று முக்காலத்தையும் உணர்த்தும் ஆற்றல்மிக்கது என்ற நம்பிக்கையில் அமைந்தது மனித வாழ்வின் இன்ப துன்பங்களை எடுத்துரைக்கும் சிறந்ததொரு கருவியாக இக்கலை விளங்குகின்ற காரணத்தால், தங்களுக்கு நேரவிருக்கும் துன்பங்களுக்கு இறைவழிபாடு மூலம் தற்காத்துக்கொள்ளும் கலையென நம் முன்னோர்கள் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆதலின், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இக்கலையின் பயனைத் தம் காலத்திற்குப் பிறகும் அனைவரும் உய்த்துணரும் வண்ணம் நூல்களாக எழுதி வைத்தனர். அவற்றுள் ஒன்றாக விளங்குவது சாதக பாரிசாதம் என்ற நூலாகும்.

அவற்றுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சாதக பாரிசாதம் எனும் (சுவடி-எண்.850 d.)நூலை பதிப்புப் பணிக்காக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் திருமதி கா.சத்தியபாமா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாதக பாரிசாதம் என்ற இந்நூல் ஒவ்வொரு பாவத்திற்கும் ஒரு பகுதியாகப் பன்னிரு பாவங்களும் பன்னிரு பகுதியாக அமைந்துள்ள நூலாகும். காப்புச்செய்யுள் நீங்கலாக 517 அறுசீர் விருத்தப்பாக்களைக் கொண்டது.

சாதக பாரிசாதத்தின் மூல நூலை வடமொழியில் எழுதியவர் வைத்தியநாத தேசிகர் என்பவராவார். இந்த சாதக பாரிசாத நூலைத் தமிழில் வேதலிங்கப்பட்டர் என்பவரும் வேதாந்த தேசிகர் என்பவரும் மொழிபெயர்த்துள்ளனர் என அறியப்படுகிறது. பதிப்புப் பணிக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட சாதக பாரிசாத நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் வேதலிங்கப்பட்டராவார்.

பன்னிரு பாவங்களின் பலன்களையும் எளிமையாக எடுத்துரைக்கும் பழமையான நூலாக இந்தச் சாதக பாரிசாதம் விளங்குகிறது. சோதிடத்தைக் கற்க விரும்புவோருக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளது. சோதிடர்களும், சோதிட ஆர்வலர்களும் இந்நூலைப் படித்து அதன் மூலம் நற்பலனைப் பெறுவார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினிஅச்சில் வெளிவர பணியாற்றிய கணினிப் பணியாளர் அனைவருக்கும் எனது இனிய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
25-8-2007.

# பதிப்புரை

ஆயக்கலைகள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகத் திகழ்வது சோதிடக்கலை. மனித வாழ்வின் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று முக்காலத்தையும் உணர்த்தும் ஆற்றல் மிக்கது. மனித வாழ்வின் இன்ப துன்பங்களை எடுத்துரைக்கும் சிறந்ததொரு கருவியாக இக்கலை விளங்குகின்ற காரணத்தால், தங்களுக்கு நேரவிருக்கும் துன்பங்களுக்கு இறைவழிபாடு மூலம் தற்காத்துக் கொள்ளும் கலையென நம் முன்னோர்கள் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆதலின், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இக்கலையின் பயனைத் தம் காலத்திற்குப் பிறகும் அனைவரும் உய்த்துணரும் வண்ணம் நூல்களாக எழுதி வைத்தனர். அவற்றுள் ஒன்றாக விளங்குவது சாதக பாரிசாதம் என்ற நூலாகும்.

இராசிச் சக்கரத்தில் அமைந்துள்ள பன்னிரு பாவங்களின் பலன்களைக் கூறும் சோதிடம் பன்னீராயிரம், துய்யகேரளம், மணிகண்ட கேரளம் முதலான பல நூல்கள் உள்ளன. பன்னிரு பாவங்களில் பலன்களைக் கூறும் பகுதியைக் கொண்ட சர்வார்த்த சிந்தாமணி, சாதக சிந்தாமணி, குமாரசுவாமியம், சாதக பாரிசாதம் முதலான நூல்களும் உள்ளன. பின்னாளில் இந்நூல்களில் இருந்து பன்னிரு பாவ பலன்களைக் கூறும் பகுதியைத் தனித்த நூலாகச் சிலர் எழுதியுள்ளனர். அந்த நிலையில் இன்று தமிழில் பன்னிரு பலன்களை மட்டும் கூறும் சர்வார்த்த சிந்தாமணி, சாதக பாரிசாதம் போன்ற நூல்கள் கிடைக்கின்றன. அவற்றுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சாதக பாரிசாதம் (சுவடி எண். 850d) இங்குப் பதிப்புப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## சுவடி நூலகங்களில் சாதக பாரிசாதம்

சோதிடச் சுவடிகள் உள்ளிட்ட பல்வேறு ஓலைச் சுவடிகள், பல்வேறு சுவடிகள் நூலகங்களில் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்ட, கணிப்பொறி வழி அனைத்துலக ஓலைச்சுவடிகளின் விபர அட்டவணையின்படி, தஞ்சை சரசுவதி மகால் நூலகம், திருவனந்தபுரம் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், ஈரோடு கலைமகள் சுவடிகள் நூலகம் முதலான பல சுவடி நூலகங்களில் சாதக பாரிசாத ஓலைச்சுவடிகள் உள்ளன. இவற்றுள் திருவனந்தபுரத்தில் ஐந்து சாதக பாரிசாதச் சுவடிகளும் மற்ற நூலகங்களில் ஒவ்வொரு சுவடியுமாக மூன்று சுவடிகள் உள்ளன. இவையன்றி மேற்கண்ட அட்டவணை உருவாக்கத்திற்குப் பின்னர் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சேகரிக்கப் பட்ட இரண்டு சுவடிகளையும் சேர்த்து பத்து சுவடிகள் உள்ளன. மேலும், தனியாரிடம் சாதக பாரிசாத ஓலைச் சுவடிகள் இருக்கக்கூடும்.

## சாதக பாரிசாதம் – நூல்

சாதக பாரிசாதம் ஒவ்வொரு பாவத்திற்கும் ஒரு பகுதியாகப் பன்னிரு பாவங்களும் பன்னிரு பகுதிகளாக அமைந்துள்ள நூலாகும்.காப்புச் செய்யுள் நீங்கலாக 517 அறுசீர் விருத்தப்பாக்களைக் கொண்டது.

பதிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதக பாரிசாத நூலில் முதல் 112 பாடல்கள் வரை மூலமும் உரையுமாகவும் பின்னர் உள்ள 405 பாடல்கள் வரை மூலம் மட்டுமே அமைந்ததாகவும் இருந்தது. ஆதலால் நூலின் சீர்மை கருதியும் படிப்போருக்கு எளிமை கருதியும் உரை எழுதப்படாமல் இருந்த 405 பாடல்களுக்குப் பதிப்பாசிரியரால் உரை எழுதப்பட்டது. தற்பொழுது கிடைக்கும் அச்சு நூல் ஒன்றில் 500 அறுசீர் விருத்தப் பாடல்கள் மட்டுமே உள்ளன. மூலம் மட்டுமே அமைந்துள்ள இந்நூலை, இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் வெளியிட்டுள்ளது.

வடமொழியில் எழுதப்பட்டுள்ள மூல நூலான சாதக பாரிசாதத்தில் இராசிகள், நட்சத்திரங்கள், அவை தொடர்பான செய்திகள், பன்னிரு பாவ பலன்கள், யோகங்கள் அட்டவர்க்கம், காலச்சக்கரம், தசாபுத்தி, பெண் சாதகம் போன்ற பல்வேறு பகுதிகள் அமைந்துள்ளன. பதிப்பிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட சாதக பாரிசாதத்தில் பன்னிரு பாவ பலன்கள் மட்டுமே அமைந்துள்ளன.

சாதக பாரிசாதத்தில் அமைந்துள்ள பன்னிரு பாவங்களில், முதல் பாவத்தில் 33 பாடல்களும், இரண்டாம் பாவத்தில் 51 பாடல்களும், மூன்றாம் பாவத்தில் 54 பாடல்களும், நான்காம் பாவத்தில் 93 பாடல்களும், ஐந்தாம் பாவத்தில் 62 பாடல்களும், ஆறாம் பாவத்தில் 19 பாடல்களும், ஏழாம் பாவத்தில் 39 பாடல்களும், எட்டாம் பாவத்தில் 27 பாடல்களும், ஒன்பதாம் பாவத்தில் 46 பாடல்களும், பத்தாம் பாவத்தில் 64 பாடல்களும், பதினோராம் பாவத்தில் 11 பாடல்களும், பன்னிரண்டாம் பாவத்தில் 18 பாடல்களும் உள்ளன. இவற்றில் நான்காம் பாவத்தில் அதிபட்சமாக 93 பாடல்களும் பதினோராம் பாவத்தில் குறைந்த பட்சமாக 11 பாடல்களும் இருப்பது நோக்கத்தக்கது.

## மூல ஆசிரியரும், மொழிபெயர்த்தவரும்

சாதக பாரிசாதத்தின் மூல நூலை வடமொழியில் எழுதியவர் வைத்தியநாத தேசிகர் என்பவராவார். இவர் கி.பி. 1425 முதல் கி.பி. 1450ம் ஆண்டுக்குள் பிறந்தவராக இருக்கக் கூடும் என்று வி. சுப்பிரமண்ய சாஸ்திரி என்ற அறிஞர் ஆதாரம் காட்டி எடுத்துரைக்கிறார். ஆகவே மூல நூல் எழுதப்பட்ட காலம் பதினைந்தாம் நூற்றாண்டு என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

இந்தச் சாதக பாரிசாத நூலைத் தமிழில் வேதலிங்கப் பட்டர் என்பவரும் வேதாந்த தேசிகர் என்பவரும்

மொழிபெயர்த்துள்ளனர் என்பதைக் கணிப்பொறிவழி அனைத்துலக ஓலைச்சுவடிகள் அட்டவணையின் மூலமாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

பதிப்புப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சாதக பாரிசாத நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் வேதலிங்கப்பட்டராவார். இதனை,

**"சத்துருத் தானக் கோளன் தாண்டிய வியத்தா னத்திற்**
**பத்திடப் பார்க்க வந்தப் படிநர கத்தில் பாய்வார்**
**சொற்றமி ழாக இந்தச் சூத்திரம் செகத்தில் தோன்ற**
**வித்தகன் வேத லிங்கம் பட்டராம் விளம்ப லுற்றார்"**

*(பாடல் எண். 516)*

என்ற பாடலால் அறியலாம்.

சாதக பாரிசாதம் வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றாக

**"சாதக பாரிசாதம் தமிழினால் உரைக்க நாயேன்**
**பூதலம் எங்கும் வாழ்த்திப் புகழும்நா மகளைப் போற்றி**
**அதிபன்மு தற்கோ ளாக ஒன்பதும் அடவாய்ச் சொல்ல**
**ஏதமில் முருகன் முன்னோன் இயற்கண பதிகாப் பாமே"**

*(காப்புச்செய்யுள்)*

என்பதைக் எடுத்துக் கூறலாம்.

அச்சு நூலில் அமைந்துள்ள பாயிரப் பாடலில்,

**"பூதல நன்மை தீமைப் புணர்ப்பினை அறிய வேண்டில்**
**மாதவம் உடைய தேவ மானமகன் படைப்பி னாலே**
**வேதமே உருவாய் வந்த வேதாந்த தேசி கன்தான்**
**சாதக பாரி சாதம் சாற்றினான் தமிழி னாலே"**

என்று கூறப்பட்டுள்ளது. இப்பாடலில் இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் வேதாந்த தேசிகர் என்று

கூறப்பட்டுள்ளது. ஆயினும் வேதலிங்கப்பட்டர் மொழிபெயர்த்துள்ள பாடல்களே இந்நூலிலும் அமைந்துள்ளன என்பது இங்குச் சுட்டத்தக்கது.

## இராசிச் சக்கரம்

ஒரு சாதகத்தின் பலனைக் கூறத் தேவைப்படும் முக்கியமான குறிப்புகள் பிறந்ததேதி, மாதம், வருடம், இராசிச் சக்கரம், நட்சத்திர பாத சாரம், நவாம்ச சக்கரம், சனன நட்சத்திரத்தின்படி மாதர் கர்ப்பச்செல் நீக்கி மகாதிசை இருப்பு, நடப்பு, தசாபுத்தி, அந்தரம், பஞ்சாங்க நடப்பு, கோசாரம் போன்றவையாகும். இவற்றுள் இராசிச் சக்கரமே சனன காலத்தின் உண்மையான இயற்கை நவக்கிரகங்களின் நிலையைக் காட்டக்கூடியவையாகும். மற்ற சக்கரங்கள் கிரகயோகம், அவயோகம் உட்பட பல நிலைகளையும் கணிக்க உதவும் கணித முறைகளாகும்.

இந்தியச் சோதிட முறைப்படி, மேஷம் முதல் மீனம் வரை உள்ள பன்னிரு இராசிகளும் நகராதவை. இதனால் மேஷம் முதலான பன்னிரு இராசிகளில் நவக்கிரகங்கள் நின்ற பலன்களையும் சனன இலக்கனப்படி பன்னிரு வீடுகளில் நவக்கிரகங்கள் நின்ற பலன்களையும், இலக்கனப்படி பன்னிரண்டு பாவாதிபதிகள் மாறி நின்ற பலன்களையும், பன்னிரு பாவங்களில் நின்ற நவக்கிரகங்களின் சேர்க்கைப் பலன்களையும் கணக்கிடவேண்டும். இவற்றுடன் பாவ காரகத்துவம், அறுவகை பலன்கள் ஆகியவற்றையும் கணித்துப் பலன்களைக் கூறவேண்டும்.

## பன்னிரு ஆதிபத்தியங்கள்

இலக்கனம் முதல் பன்னிரு வீடுகள் ஒவ்வொன்றும் பன்னிரு ஆதிபத்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு வீட்டின் அதிபர் கெட்டுவிட்டால் காரக கிரகம் அவ்வீட்டின் வேலைகளைச் சிறிதளவு செய்யும் அவை:

**இலக்கனம்-காரகன் : சூரியன்**

1. நிறம், 2. தேகம், 3. உச்சந்தலை, 4. மூளை, 5.நினைவாற்றல், 6. கவலை, 7. புகழ், 8. பக்தி, 9. மங்களம், 10. மகிழ்ச்சி, 11. ஆயுள், 12. இச்சென்மம்.

**இரண்டாம் வீடு-காரகன் : குரு**

1. குடும்பம், 2. தனம், 3. கண், 4. வித்தை, 5. பூமி, 6.வாக்குறுதி, 7. சாத்திரம், 8. முடிவு செய்தல், 9. திட்டம், 10.சேமிப்பு, 11. தங்கம், மணிகள், 12. யோகம்.

**மூன்றாம் வீடு-காரகன் : செவ்வாய்**

1. சிற்றின்பம், 2. வேலையாள், சீடன், 3. இசை, 4.தைரியம், வீரியம், 5. பின் சகோதரம், 6. காது,7. ஆபரணம், 8. தேவதை அருள், 9. வெற்றி, 10. உண்கலம், 11. ஆயுள், 12.பண உதவி.

**நான்காம் வீடு-காரகன் : சந்திரன்**

1. தாய், 2. கல்வி, 3. வாகனம், 4. சுகவாசம், 5.வியாபாரம், 6. வீடு, 7. முன்னேற்றம், 8. மங்களம், 9. சாந்தி முகூர்த்தம், 10. மெய்ஞானம், 11. கால்நடைகள், 12. உயர்ந்த பதவி.

**ஐந்தாம் வீடு-காரகன் : குரு**

1. தாய்பாட்டன், 2. தாய் மாமன், 3. பூர்வீகம், முற்பிறப்பு,4. சாகித்யம், 5. புத்திரம், 6. கர்ப்பம், 7. மந்திர வித்தை, 8. பக்தி, 9. யுக்தி, 10. கடைசி சகோதரம், 11. அடுத்த பிறவி, 12. தியானம், தவம்.

**ஆறாம் வீடு-காரகன் : சனி**

*1.* நோய், *2.* கடன், *3.* வெட்டுக்காயம், *4.* ஆயுள் கண்டம், *5.* சொந்த பந்தப்பகை, *6.*வாதனை, *7.*ஏமாற்று, திருட்டு, *8.*பெண் நோய், *9.* தவறான வழி, *10.* எதிரிகள், *11.* எதிர்ப்பு, *12.* சிறைச்சாலை.

**ஏழாம் வீடு-காரகன் : சனி**

*1.* சுற்றம், *2.* நண்பர்கள், *3.* மனைவி, *4.* திருமணம், *5.*திருமணப் பிரச்சினை, *6.* பின்மனையாள் பிள்ளைகள், *7.*இராசவேலை, சன்மானம், *8.* வசியமாதல், *9.* வியாபாரம், *10.* பின் மனையாள், *11.* மரணம், *12.* புத்திரச் செலவு.

**எட்டாம் வீடு-காரகன் : சனி**

*1.* யுத்த களம், கோஷ்டி கலவரம், *2.* சாதிப்பகை, *3.*உயரத்திலிருந்து விழுந்து காயம், *4.* தீராத நோய், *5.* காரிய முக்கம், *6.* அசுப செலவு, *7.* தற்கொலை, விபத்து, கொலை, *8.* பங்காளிப் பகை, *9.* மனநோய், *10.* மருந்து, சீவிராசிகள், பயம், *11.* சிறை படல், வில்லங்கம், *12.* தோல்வி, கேவலம்.

**ஒன்பதாம் வீடு-காரகன் : சூரியன் அல்லது குரு**

*1.* தந்தை, *2.* தந்தையின் சொத்து, கடன், *3.* தானம், தருமம், *4.* யோகம், பாக்கியம், *5.* பள்ளிகட்டுதல், தலைமை, *6.* கோவில் கட்டுதல், *7.* தர்ம ஸ்தாபன தலைமை, *8.*போதித்தல், மதகுரு, *9.* தவம், சித்தி, *10.* நீதிபதி, *11.* முக்தி, *12.* வனவாசம்.

**பத்தாம் வீடு-காரகன் : குரு**

*1.* சீவனத்தொழில், *2.* உதவி செய்தல், *3.* அரசு பதவி, *4.*செயல்திறன், *5.* மந்திரம் ஓதுதல், *6.* கட்டிடம் கட்டுதல், *7.*தேவதை பூசை, *8.* வசதிகள், *9.* புகழ், *10.* கர்ப்பம் தரித்தல், *11.* ஆடை ஆபரணம், *12.* சுற்றுலா.

**பதினோராம் வீடு-காரகன் : குரு**

1. மூத்த சகோதரம், 2. மூத்த சகோதர யோக பாவம், 3.பெண்களால் உதவி, 4. அரசியல் உதவி, அரசியல் புகழ், 5.பூமியில் இலாபம், 6. வாகன இலாபம், 7. பிரச்சனை தீருதல், மகிழ்ச்சி, 8. ஆடை ஆபரணம், 9. முத்தமிழ்த் தொழில், 10.சகலகலா வல்லமை, 11. அரசு உதவி, 12. நீண்ட பயணம், வெளிநாடுகள்.

**பன்னிரண்டாம் வீடு-காரகன் : சனி**

1. மலைதேசபயணம், 2. வெளிநாடு வாசம், 3. வெளியூர் தொழில், 4. செலவுகள், 5. சிற்றின்பம், போதைப்பொருள், 6. தூக்கம், 7. பில்லி சூன்யம், 8. கப்பல், விமான வாகனத் தொழில், 9. சாத்திரயுக்தி, ஞானம், 10. மோட்சம், 11. தியாகம், பொதுச்சேவை, 12. யாகம்.

பன்னிரு வீடுகளில் ஆட்சிபெறும் கிரகங்களே அந்த அந்த வீட்டுக்கு அதிபதிகள். வீட்டு அதிபதிகள் கிரணமாகி, அஸ்தமனமாகி, மறைவு வீடுகளில் பாவியருடன் கூடிக் கெட்டுவிட்டால், வீட்டின் காரக கிரகம் செயல்பட்டு அந்த வீட்டு வேலைகளைச் சிறிது கவனிக்கும்.

**பன்னிரு பாவங்கள்**

இராசிச் சக்கரத்தில் முப்பது பாகையுள்ள ஒரு வீடு பாவம், ஸ்தானம், இராசி என்று குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தனிகுணம் அமைந்திருக்கும் ஒவ்வொரு வீட்டின் இயற்கை குணம் இராசி என்று கூறப்படுகிறது. ஆதிபத்தியம் குறித்துக் கூறும்பொழுது பாவம் என்றும் ஸ்தானம் என்றும் சொல்லப்படுகிறது. இராசி அதிபதிகள் இராசிநாதன், பாவாதிபதி, ஸ்தானாதிபதி என்று குறிப்பிடப்படுகின்றனர்.

தனிப்பட்ட வீட்டின் குணநலன்களைக் கொண்டு அந்த வீடு இராசி எனப்படுகிறது. அதில் ஆட்சிபெறும் கிரகம் இராசிநாதன் என்றழைக்கப்படுகிறது. சந்திரன் நின்ற வீடு **ஜென்ம இராசி** எனவும் அந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகம் **ஜென்ம இராசிநாதன்** எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஒரு சாதகத்தில், இலக்கனம் முதல் பாகம் என்றும் இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகம் இலக்கனாதிபன், இலக்கனாதிபதி எனச் சுட்டப்படுகிறது. இலக்கனத்திற்கு இரண்டாவது விட்டிற்குத் தனஸ்தானம், வாக்கு ஸ்தானம், வித்தை ஸ்தானம், நேத்திர ஸ்தானம், குடும்ப ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகம், தனேசன், தனாதிபதி, குடும்பேசன், குடும்பநாதன், குடும்பாதிபதி, வாக்கேசன், வாக்கு நாதன், நேத்திரேசன், நேத்திர ஸ்தானாதிபதி என்று பலவாறாகக் கூறப்படுகிறது. மூன்றாவது வீட்டிற்குப் பிராதுரு ஸ்தானம், தைரிய ஸ்தானம், கீர்த்தி ஸ்தானம், சகோதர ஸ்தானம், வீரிய ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகம், தைரியேசன், தைரியாதிபதி, வீர்யாதிபதி, கீர்த்தி ஸ்தானாதிபதி, சகோதர ஸ்தானாதிபதி எனப் பலவாறாக எடுத்துரைக்கப்படுகிறது.

நான்காம் வீட்டிற்கு சுகஸ்தானம், மாதுரு ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்தைச் சுகாதிபதி, வானாதிபதி, மாதுரு ஸ்தானாதிபதி என்று சுட்டுவர். ஐந்தாம் வீட்டிற்கு புத்திர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்தைப் புத்திரேசன், புத்திராதிபதி, புத்திர ஸ்தானாதிபதி, பூர்வ புண்ணியாதிபதி என்று கூறுவர். ஆறாம் வீட்டிற்குச் சத்துரு ஸ்தானம், ருண ஸ்தானம், ரோக ஸ்தானம், சல்லிய ஸ்தானம், சோரஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெற்றுள்ள கிரகத்தை ரோகாதிபதி, ருணாதிபதி, சத்ரு ஸ்தானாதிபதி என்று கூறுவர்.

ஏழாம் வீட்டிற்குக் களஸ்திரஸ்தானம், காம ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெற்றுள்ள கிரகத்தைக் களத்திராதிபதி, களத்திரேசன், காமாதிபதி என்று கூறுவர். எட்டாம் வீட்டிற்கு அட்டம தானம், ஆயுள் தானம், மாரகத் தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகத்தை அட்டமாதிபதி, மாரகாதிபதி என்று உரைப்பர். ஒன்பதாம் வீட்டிற்கு பாக்கிய ஸ்தானம், பிதுர்த்தானம், தருமஸ்தானம் என்றும் பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெற்றுள்ள கிரகத்தைப் பாக்கியாதிபதி, தருமாதிபதி, தர்மேசன் என்று கூறுவர்.

பத்தாம் வீட்டிற்கு சீவன ஸ்தானம், கர்ம ஸ்தானம், தொழில் ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்தை ஜீவனாதிபதி, கர்மாதிபதி, கர்மேசன், கர்மநாதன் என்று உரைப்பர். பதினோராம் வீட்டிற்கு இலாபஸ்தானம் மூத்த சகோதர ஸ்தானம் என்று பெயர். இங்கு ஆட்சி பெற்றுள்ள கிரகத்தை இலாபாதிபதி, இலாபேசன் என்று கூறுவர். பன்னிரண்டாம் வீட்டிற்கு விரயஸ்தானம், வியஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்தை விரயாதிபதி, வியாதிபதி, வியநாதன் என்று உரைப்பர்.

பன்னிரு பாவங்களின் பலன்களையும் எளிமையாக எடுத்துரைக்கும் பழமையான நூலாக இந்தச் சாதக பாரிசாதம் விளங்குகிறது. சோதிடத்தைக் கற்க விரும்புவோருக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளது. சோதிடர்களும், சோதிட ஆர்வலர்களும் இந்நூலைப் படித்து அதன் மூலம் நற்பலனைப் பெறுவார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி, சாதக பாரிசாதம் எனும் இந்நூலைப் பதிப்பிக்க அனுமதித்து ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர்

மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு சா.விஜயராஜ் குமார், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம், எம்.ஏ., அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலகக் கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கா. சத்தியபாமா,**

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

# பொருளடக்கம்

## நூல்

| | பக்கம் |
|---|---|
| **இலக்கன பாவம்** | 1 |
| புகழும் தீர்க்காயுளும் உள்ளவன் | 2 |
| சாதகனின் உடல் நிறம் | 2 |
| புகழும் தீர்க்காயுளும் உள்ளவன் | 3 |
| புகழற்றவன் | 3 |
| தரித்திரமும் அற்பாயுளும் உள்ளவன் | 3 |
| பொய்யன் | 4 |
| புகழுடையவன் | 4 |
| பாக்கியவான் | 5 |
| புகழுடையவன் | 6 |
| வீரன் | 6 |
| சாதகன் தங்குமிடம் | 7 |
| கிராம மணியம் | 7 |
| கீழ்மையுடையவன் | 8 |
| உடல் வருந்துபவன் | 8 |
| நோயாளி | 9 |
| உடல் பலவீனமானவன் | 9 |
| நோயாளி | 9 |
| அண்டநோய்உடைவன் | 10 |
| உடல் வருந்துபவன் | 10 |
| பயம் உடையவன் | 11 |
| சதா துக்கி | 11 |
| மத்திய வயதில் சுகமடைபவன் | 11 |
| வாழ்நாளின் இறுதியில் சுகம் அடைபவன் | 12 |
| பதினாறு வயதிற்குமேல் சுகமடைபவன் | 12 |
| இலக்கனத்ததைச் சூரியன் பார்க்கப் பிறந்தவனின் குணம் | 12 |
| இலக்கனத்தைச் சனி பார்க்கப் பிறந்தவனின் குணம் | 13 |
| சதா துக்கி | 13 |
| செல்வன் | 14 |

| | பக்கம் |
|---|---|
| **2. இரண்டாம் பாவம்** | 15 |
| செல்வன் | 15 |
| பயம் உடையவன் | 16 |
| பொருள் நட்டம் அடைபவன் | 16 |
| செல்வன் | 17 |
| தாய்வழியில் செல்வம் அடைபவன் | 17 |
| தந்தை வழியில் செல்வம் அடைபவன் | 17 |
| பொருள் இலாபம் பெறுபவன் | 18 |
| தகப்பனால் பொருள் நட்டம் அடைபவன் | 18 |
| செல்வன் | 19 |
| பயணம் செய்பவன் | 19 |
| குடும்பத்தான பலன் | 19 |
| புகழுடையவன் | 20 |
| பொருள் நட்டம் அடைபவன் | 20 |
| செல்வன் | 21 |
| தேசாந்திரி | |
| கண்ணொளி அற்றவன் | 22 |
| காதுநோய் உடையவன் | 22 |
| கண்நோய் உடையவன் | 23 |
| நல்லபார்வை உடையவன் | 23 |
| வாக்குசித்தி உடையவன் | 24 |
| நெய்யில் கையிருடுபவன் | 24 |
| கபடன் | 25 |
| நல்ல பார்வை உடையவன் | 25 |
| பல், நாக்கு நோய் உடையவர்கள் | 26 |
| நோயாளி | 26 |
| மூக்கரையன் | 26 |
| வித்தை இல்லாதவனும் கற்றவனும் | 27 |
| பவனநேரம் உடையவன் | 27 |
| மூக்கரையன் | 28 |
| வழக்குரைப்பவன் | 28 |
| வித்துவான் | 28 |

| | பக்கம் |
|---|---|
| சகலகலா வல்லவன் | 29 |
| வேதம், தர்க்க சாத்திரம் அறிந்தவன் | 29 |
| புகழுடையவன் | 29 |
| வேதங்களைக் கற்றவன் | 30 |
| மனைவி மரணம் | 30 |
| ஒரு மனைவி | 30 |
| வெள்ளி, வெங்கல உண்கலம் | 31 |
| இரும்பு, சட்டி உண்கலம் | 31 |
| பிச்சைக்காரன் | 32 |
| பலவீட்டில் உண்பவன் | 32 |
| சிறிது உணவு உண்பவன் | 32 |
| சௌண்டி, சிரார்த்த உணவு உண்பவன் | 33 |
| அன்னதானம் அளிப்பவன் | 33 |
| எதையும் உண்பவன் | 34 |
| **3. மூன்றாம் பாவம்** | 35 |
| பொது | 35 |
| சகோதர இலாபம் | 35 |
| தலைவன் | 36 |
| இளைய சகோதரங்கள் அழிவு | 36 |
| இளமையில் சகோதரர் மரணம் | 37 |
| மாற்றான் தாயால் சகோதரம் | 37 |
| சகோதரர் அழிவு | 38 |
| நேர் இளைய சகோதரன் மரணம் | 38 |
| இளைய சகோதரங்கள் | 38 |
| தாயாரல்லாரால் பேணப்படுபவன் | 39 |
| சகோதரம் இல்லாதவன் | 39 |
| இளைய சகோதரன் மரணம் | 39 |
| சகோதரிகள் | 40 |
| சகோதரங்களின் ஆயுளும் ஆரோக்கியமும் | 40 |
| சகோதரங்கள் இல்லாதவன் | 41 |
| மூத்த, இளைய சகோதரங்கள் | 41 |
| சகோதரர்களின் அழிவு | 41 |

| | பக்கம் |
|---|---|
| இளைய சகோதரர்களின் எண்ணிக்கை | 42 |
| இளைய சகோதரிகளின் எண்ணிக்கை | 42 |
| இளைய சகோதரர்களின் எண்ணிக்கை | 43 |
| இளைய சகோதர சகோதரிகள் | 43 |
| இளைய சகோதரர்களின் வலிமை | 43 |
| இளைய சகோதரர்களின் ஒற்றுமை | 43 |
| இளைய சகோதரர்களின் பிரிவு | 44 |
| சகோதரர்களால் துக்கம் | 44 |
| சகோதரர்களின் பகை | 45 |
| சகோதரர்களின் பகை, உறவு | 45 |
| சகோதரனைக் கொல்பவன் | 45 |
| உடன்பிறந்தோரின் மரணம் | 46 |
| வீரன் | 46 |
| பராக்கிரமன் | 46 |
| புத்திவான் | 47 |
| காமுகன், வெகுளி | 47 |
| கோழையும் தைரியசாலியும் | 48 |
| மிருகம், நீர் பயம் | 48 |
| இனிய சொல்லன் | 48 |
| வீரன் | 49 |
| சகோதரர்களால் இலாபமும் கடனும் | 49 |
| மனவருத்தம் உடையவன் | 50 |
| தொண்டைநோய் உடையவன் | 50 |
| விடத்தால் கண்டம் உடையவன் | 51 |
| விடம் உண்பவன் | 51 |
| இசைக் கலைஞன் | 51 |
| ஆபரணங்களை அணிபவன் | 52 |
| வீரன் | 53 |
| **4. நான்காம் பாவம்** | 55 |
| பொது | 55 |
| சாத்திரங்களில் வல்லவன் | 55 |
| வித்தை, படிப்பறிவற்றவன் | 55 |

| | பக்கம் |
|---|---|
| அறிவிலி | 56 |
| புத்திமான் | 56 |
| தாயார்க்கு நீண்ட ஆயுள் | 57 |
| தாயார்க்கு மரணம் | 57 |
| நோயாளி தாயார் | 58 |
| கெட்டநடத்தை உடைய தாய் | 59 |
| மாற்றான் தந்தை | 59 |
| தாயுடன் குற்றம் செய்பவன் | 59 |
| மாற்றான் தாயின் பாலருந்துபவன் | 60 |
| குருவின் மனைவியுடன் உறவு | 60 |
| விலைமாதுவான தாய் | 61 |
| பிற ஆடவருடன் உறவு | 61 |
| தந்தையின் மரணம் | 61 |
| தாய், தந்தை மரணம் | 62 |
| தாயார் உடன்கட்டை ஏறுதல் | 63 |
| தாய், தந்தை மரணம் | 63 |
| தாய் மரணம் | 63 |
| புண்ணியவான் | 64 |
| பாக்கியவான் | 64 |
| சுகமற்றவன் | 65 |
| சுகவான் | 65 |
| சிறிதுகாலம் இன்பம் துய்ப்பவன் | 65 |
| பாக்கியவான் | 66 |
| சுகவான் | 66 |
| அணியும் ஆடைகள் | 67 |
| செல்வன் | 67 |
| சக்கரவர்த்தி | 67 |
| உயர்ந்த நிலையில் இருப்பவன் | 68 |
| சுகவான் | 68 |
| வாகனம் உடையவன் | 69 |
| அனைத்து வாகனங்களையும் உடையவன் | 69 |
| குதிரை வாகனம் உடையவன் | 69 |

| | பக்கம் |
|---|---|
| குதிரை, யானை உடையவன் | 70 |
| குதிரை வாகனம் உடையவன் | 70 |
| பல்லக்கு உடையவன் | 70 |
| சுகவான் | 71 |
| பல்லக்கு உடையவன் | 72 |
| அரச வெகுமதி பெற்றவன் | 72 |
| வாகனம் உடையவன் | 73 |
| அரசன் | 73 |
| பாக்கியவான் | 74 |
| செல்வன் | 74 |
| பாக்கியவான் | 74 |
| வாகன யோகம் உடையவன் | 76 |
| நான்கு வாகனங்கள் உடையவன் | 77 |
| துக்கி | 77 |
| அரசன் | 78 |
| பல்லக்கு உடையவன் | 78 |
| பாக்கியவான் | 79 |
| அரச சமானன் | 79 |
| அரச வெகுமதி பெறுபவன் | 79 |
| வெற்றி வீரன் | 80 |
| பாக்கியவான் | 80 |
| சக்கரவர்த்தி | 81 |
| அதிகாரி | 81 |
| அரசன் | 81 |
| அரச சமானன் | 83 |
| அரசன் | 83 |
| பகைவரின் செல்வம் பெறுபவன் | 84 |
| இழந்த செல்வத்தைப் பெறுபவன் | 84 |
| சுகமற்றவன் | 85 |
| செல்வன் | 85 |
| தரித்திரன் | 85 |
| செல்வன் | 86 |

| | பக்கம் |
| --- | --- |
| செல்வத்தை இழப்பவன் | 87 |
| கிணற்றில் விழுந்து மரணம் அடைபவர் | 88 |
| தரித்திரன் | 88 |
| சர்வாதிகாரி | 88 |
| ஊரைவிட்டுச் செல்பவன் | 89 |
| வீடுகள் | 89 |
| மரணம் | 90 |
| கல்வீடு | 90 |
| **5. ஐந்தாம் பாவம்** | 92 |
| பொது | 92 |
| பலன்கூறுதல் | 92 |
| பெண்தெய்வங்களை வணங்குதல் | 93 |
| தெய்வ வழிபாடு | 93 |
| நற்பலன்களைப் பெறுபவன் | 94 |
| பெருஞ்செல்வம் | 94 |
| மன்னரின் விரோதம் | 95 |
| பிள்ளை மரணம் | 95 |
| அழகற்ற பிள்ளை | 96 |
| பெருஞ்செல்வன் | 96 |
| பிள்ளை மரணம் | 97 |
| பெண் பிள்ளைகள் | 97 |
| ஆண்பிள்ளைகள் | 97 |
| அனாசாரன் | 98 |
| அதிக பிள்ளைகள் | 98 |
| பேரனுடன் வாழ்பவன் | 99 |
| பிள்ளைகள் இல்லதாவன் | 99 |
| பிள்ளைகள் மரணம் | 100 |
| ஆண்பிள்ளைகள் இல்லாதவன் | 100 |
| தத்து புத்திரன் | 101 |
| அற்ப ஆயுள் உடைய பிள்ளை | 102 |
| வயதான காலத்தில் பிள்ளை பிறத்தல் | 102 |
| மாற்றான் குழந்தை | 102 |

| | பக்கம் |
|---|---|
| பிள்ளைகள் உடைய சாதகன் | 103 |
| பிள்ளை மரணம் அடைதல் | 104 |
| பிள்ளை இல்லாச் சாதகி | 105 |
| மலடன் | 105 |
| தத்துபுத்திரன் | 107 |
| பிள்ளை மரணம் அடைதல் | 108 |
| பகைவர்களால் பிள்ளைகள் மரணம் | 108 |
| மாதுர் தோடத்தால் குழந்தை மரணம் | 108 |
| பிதுர் தோடத்தால் குழந்தை மரணம் | 108 |
| கர்ப்ப தோடத்தினால் குழந்தை மரணம் | 109 |
| அந்தணனிடம் குழந்தையைக் கொடுப்பவன் | 109 |
| தத்து புத்திரன் | 110 |
| தத்து புத்திரனுக்குப் பின் சாதகனுக்குப் புத்திரன் | 111 |
| இரண்டாம் தாரத்திற்குப்பிள்ளை | 111 |
| பிள்ளைகள் மரணம் | 111 |
| நீண்ட ஆயுளைக்கொண்ட புத்திரர்கள் | 112 |
| இராசாக்களால் போற்றப்படுபவன் | 112 |
| சுகவாழ்வு கொண்ட தந்தை | 112 |
| நீண்ட ஆயுள்கொண்ட தந்தை | 113 |
| அற்ப ஆயுள்கொண்ட தந்தை | 113 |
| தந்தையைப் போலத் தனயன் | 114 |
| தந்தை மரணம் | 114 |
| தந்தையோடு பகையுடைய மகன் | 114 |
| கர்ப்பத்தோடு தாய் மரணம் | 115 |
| தாயாருக்குக் கேடுவரும் காலம் | 115 |
| தந்தையைக் காக்கும் தனயன் | 116 |
| புகழையுடையவன் | 116 |
| **6. ஆறாம் பாவம்** | 117 |
| பொது | 117 |
| நோயாளி | 117 |
| அதிக பகைவர்களும் பகைவர்களின் அழிவும் | 117 |
| தந்தையின் மூலம் அதிக பகைவர் உடையவன் | 118 |

| | பக்கம் |
|---|---|
| உடலில் வெட்டுக்காயம் உடையவன் | 118 |
| பகைவர்கள் உடையவன் | 119 |
| கால்நடைகள் உடையவன் | 119 |
| பகைவர்கள் அழிவு | 119 |
| பகைவர்களால் பயமும் உடலில் காயங்களும் | 120 |
| பொதுப்பலன் | 120 |
| புண் அல்லது காயம் ஏற்படுதல் | 121 |
| கண்டரோகம் | 122 |
| நோயும் பகைவர்களால் துன்பமும் | 123 |
| குதிரைகளால், வலிமை மிக்கோரால் பயம் | 124 |
| பகைவர்கள் அழிவு | 124 |
| உயர்ந்தவன் | 125 |
| **7. ஏழாம் பாவம்** | 126 |
| பொது | 126 |
| பெண்களுடன் உறவு கொள்பவன் | 126 |
| மனைவியை இழந்தவன், காமன் | 126 |
| இராச சமானன் | 127 |
| காமம் மிகுந்தவன் | 127 |
| பெண்களுடன் உறவு கொள்பவன் | 128 |
| ஒருமகன் உடையவன் | 129 |
| குழந்தைப்பேறு இல்லாத சாதகி | 130 |
| மனைவியின் தோற்றம் | 130 |
| பிற பெண்களுடன் உறவு | 131 |
| களத்திரம் மரணம் | 131 |
| மனைவியின் பண்புகள் | 132 |
| மூன்று தாரங்கள், நல்ல மனைவி | 135 |
| பல மனைவியர் | 135 |
| ஒரு மனைவி | 136 |
| மனைவி மக்கள் மரணம் | 136 |
| இழிவான மனைவி | 136 |
| பல மனைவியர் | 137 |
| திருமணம் நடைபெறும் காலம் | 138 |

| | பக்கம் |
|---|---|
| பெண்களுடன் உறவு | 139 |
| உறவு கொள்ளும் இடம் | 140 |
| உடன் மரணம் அடையும் மனைவி | 141 |
| நிதம்பத்தைச் சும்பிப்பவன் | 141 |
| அல்குலைச் சும்பிப்பவன் | 142 |
| **8. எட்டாம் பாவம்** | 143 |
| பொது | 143 |
| அற்பாயுள் | 143 |
| நீண்ட ஆயுள் | 143 |
| அற்பாயுள் | 144 |
| திடசரீரம் அற்பாயுள் | 144 |
| தீர்க்காயுள் | 145 |
| மரணம் | 147 |
| மனைவி மரணம் | 151 |
| வைசூரியால் மரணம் | 152 |
| உடலில் புண் | 152 |
| நோயாளியும் சுகவானும் | 153 |
| **9. ஒன்பதாம் பாவம்** | 154 |
| பொது | 154 |
| செல்வன் | 154 |
| செல்வம் இல்லாதவனும் உள்ளவனும் | 154 |
| பாக்கியவான் | 155 |
| இராச யோகம் | 155 |
| சிவனுக்குப் பூசை செய்வோன் | 156 |
| செல்வன் | 156 |
| சுகவான், பெருஞ்செல்வன் | 156 |
| செல்வன், படைத்தளபதி | 157 |
| வித்துவான் | 157 |
| கிரகாதிபதி, சுகவான் | 158 |
| சயனசுகம், சூரன் | 158 |
| பெரிய வித்துவான் | 159 |
| அரசன் | 159 |

பக்கம்


| | |
|---|---|
| ஒன்பதாம் இடத்தில் கோள்கள் நின்ற பலன் | 160 |
| இகழ்ச்சியுடையவன் | 167 |
| பாக்கியமற்றவன் | 167 |
| பாக்கியவான் | 167 |
| கொடையாளி | 168 |
| ஆசாரவான், தர்மவான் | 168 |
| தந்தை, குருவிற்குப் பிரியமானவர்கள் | 169 |
| நல்லவன், தர்மவான் | 169 |
| தீயவாக்கு, தரித்திரன் | 170 |
| தர்மவான் | 170 |
| தந்தைக்கு உதவாத பிள்ளை | 170 |
| தந்தை மரணம் | 171 |
| தகப்பனுக்கு முன் தனயன் மரணம் | 172 |
| ஆறுசாத்திரங்கள் கற்றவன் | 172 |
| வேதாந்தி | 172 |
| தர்மவான் | 173 |
| **10. பத்தாம் பாவம்** | 174 |
| பொது | 174 |
| ஆசாரவான் | 174 |
| யாத்திரைக்குச் செல்பவன் | 174 |
| கங்கையில் நீராடுபவன் | 175 |
| காசி யாத்திரைக்குச் செல்பவன் | 175 |
| யாகம் செய்பவன் | 176 |
| அன்னதானம் செய்பவன் | 178 |
| யாகங்கள் செய்பவன் | 178 |
| தானங்கள் செய்பவன் | 178 |
| பலர்போற்ற வாழ்பவன் | 179 |
| யாகம் செய்பவனும் செய்யாதவனும் | 179 |
| யாகங்கள் செய்யாதவன் | 180 |
| ஆசாரவான் | 180 |
| யாகங்கள் செய்பவன் | 180 |
| வித்துவான் | 181 |

பக்கம்

தானம் செய்பவன் 181
ஆறு சாத்திரங்களைக் கற்றவன் 182
தவசி 182
மன்னரால் போற்றப்படுபவன் 182
ஆசாரம் கடைபிடியாதவன் 183
நடத்தை கெட்டவன் 183
துறவி 184
யோகி 184
செல்வன் 184
துறவி 185
அரசன் 186
துறவி 186
முனிவன் 187
துறவி 188
பொதுப்பலன் 189
தொழில் 189
தீயவன் 192
சுகவான் 193
தலைவன் 194
பத்தாம் இடத்தில் நிற்கும் கோள்களின் பலன் 194
தலைவன் 197
அடிமை வேலை 197
புகழுடையவன் 197
அழகு புகழ் இல்லாதவன் 198
எசமானன் 199
**11. பதினோராம் பாவம்** 200
பொது 200
பதினோராம் இடத்தில் கோள்கள் நிற்கும் பலன் 200
பொதுப்பலன் 202
தானங்கள் செய்பவன் 202
பிச்சைக்காரன் 202
அரசசமானன் 203

| | பக்கம் |
|---|---|
| நல்லவன் | 203 |
| தீயவன் | 204 |
| செல்வம் சேரும் காலம் | 204 |
| **12. பன்னிரண்டாம் பாவம்** | 205 |
| பொது | 205 |
| காட்டில் வாழ்பவன் | 205 |
| செல்வம் அழிதல் | 205 |
| கருமியும் வரவுக்கேற்ற செலவு செய்பவனும் | 206 |
| தீயவழிகளில் செலவிடுபவன் | 206 |
| செல்வம் அழிதல் | 207 |
| அடியாள் அழிவு | 207 |
| பொருள் சேர்தலும் அழிதலும் | 207 |
| வள்ளலாகத் திகழ்பவன் | 208 |
| இராச யோகமும் பொருள் அழிவும் | 208 |
| செல்வம் காப்பவனும் சயன சுகம் அடைபவனும் | 209 |
| சயன சுகம் அடைபவன் | 209 |
| சயன சுகமும் உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிதலும் | 209 |
| இராசயோகம் | 210 |
| சயன சுகமும் வீட்டில் பிற உயிரின வகையும் | 210 |
| நரகில் வீழ்பவன் | 211 |
| மோட்சம் அடைபவன் | 211 |

# சாதக பாரிசாதம்

## காப்பு

சாதகப் பாரி சாதம் தமிழினால் உரைக்க நாயேன்
பூதலம் எங்கும் வாழ்த்தி புகழும்நா மகளைப் போற்றி
ஆதிபன் முதல்கோ ளாக ஒன்பதும் அடவாய்ச் சொல்ல
ஏதமில் முருகன் முன்னோன் இயற்கண பதிகாப் பாமே. (1)

(இதன் பொருள்) சாதகப் பாரிசாதம் என்ற வடமொழி நூலைத் தமிழில் எடுத்துரைக்க, இப்புவியுலகில் எங்கும், எல்லோரும் வாழ்த்திப் போற்றும் நாமகளை வணங்கி, சூரியன் முதலாக உள்ள ஒன்பது கோள்களின் பலனையும் எடுத்துரைக்க, முருகனுக்கு மூத்தவனான கணபதியை காக்க வேண்டும் என்றவாறு.

## இலக்கன பாவம்

சென்மலக் கனமே ஒன்று சீர்குணம் அழகு காந்தி
நன்மையா கிறுதி வண்மை இலட்சணம் சரீர பேதம்
வன்மமிகப் பாமே வாய்மை வருந்திய தானம் கிள்ளை
இன்னவை தேச மாமென் றியம்புமிலக் கனத்தின் சீரே. (1)

(இ-ள்.) சிறந்த குணம், அழகு, கவர்ச்சி, நன்மை, வண்மை, இலட்சணம், உடலின் தன்மை, பலம், உண்மை போன்றவற்றை இலக்கினத்தைக்கொண்டு சொல்ல வேண்டும் என்றவாறு.

## புகழும் தீர்க்காயுளும் உள்ளவன்

*சீவனில் சுபரே வாழ சீரியர் நோக்கக் கூட*
*பாவகர் பார்க்க வெய்யோன் பார்த்திடும் பனிபோ லாகும்*
*மாவதே ஆயுள் தீர்க்கம் அறிவில்மன் னவனே யாவன்*
*கோவகில் குலத்துக் கெல்லாம் குறிப்பெனக் கீர்த்தி யேகாண். (2)*

**(இ-ள்.)** *இலக்கனத்தில் சுபக்கோள்கள் இருக்க அல்லது இலக்கனத்தை சுபக்கோள்கள் பார்க்க அல்லது சேர, இலக்கனாதிபதி பார்க்க, சூரியனைக் கண்ட பனியைப் போல சாதகர்க்குத் துன்பங்கள் நீங்கிவிடும். நீண்ட ஆயுள் உண்டு. இச்சாதகன் அறிவில் மிகச் சிறந்தவனாக விளங்குவான்.*

## சாதகனின் உடல் நிறம்

*இலக்கனந வாங்கிச நாதன் தன்னிறம் அப்பால் வாழ்நாள்*
*தக்கவன் தன்னைப் பார்த்துச் சரீரவண் ணங்கள் சொல்ல*
*விக்கின மாகில் திங்கள் விளங்கும்அங் கிசத்தோ னாதல்*
*வர்க்கமோ சொல்லச் செனனம் அங்கிச வலிமை கேளே. (4)*

**(இ-ள்.)** *இலக்கனம் எந்த நவாம்சத்தில் அமைந்துள்ளதோ அந்த நவாம்ச நாதனைக் கொண்டும் இராசி நாதனைக் கொண்டும் சந்திரன் எந்த நவாம்சத்தில் அமைந்துள்ளதோ அந்த நவாம்ச நாதனைக் கொண்டும் பிறந்த சாதகனின் நிறத்தைச் சொல்லவேண்டும்.*

---

3. இப்பாடல் அச்சு நூலில்,

> லக்கன நவாம்ச நாதன் றன்னிறம் தனையு மப்பால்
> தக்கசந் திரலக் கனத்தான் தன்நவாங் கிசாதி தானும்
> உக்கிர மாகப் பார்த்த உயர்கிர கத்தா லுந்தன்
> ஒக்கவே நிறத்தைச் சொல்ல வேண்டுமென் றுரைத்தார் மானே.

என்றுள்ளது.

இப்பாடலுக்குரை, பதிப்பாசிரியரால் தரப்பட்டது.

### புகழும் தீர்க்காயுளும் உள்ளவன்

*கேந்திர திரிகோ ணத்தில் நெறியுடன் இலக்க னாதன்*
*சார்ந்திட சுபக்கிர கங்கள் தானும்நவத் தூறில் நோக்க*
*ஆய்திடும் ஓரை நன்றாய் மாந்திட பிலவா னாக*
*வாய்ந்திடும் கீர்த்தி மானாய் வயதுநூ றிருப்பன் மானே. (4)*

(இ-ள்.) இலக்கனாதிபதி கேந்திர திரிகோணங்களில் இருந்து சுபக்கிரகங்களுடனே கூடி, சுபக்கிரகங்களாகவே பார்க்கப்பட, சுப இராசிகளில் இருக்க, அவன் பிலவானாக இருக்க, கீர்த்திமானாய்த் தீர்க்காயுளாய் இருப்பன் என்றவாறு.

### புகழற்றவன்

*இலக்கனா திபன்ஈ ராறில் எட்டினில் ஆறி லாதல்*
*துக்கமாம் பாவர் கூட தோன்றிட நோக்க வோரை*
*தக்கதாய்ப் பிறந்த பிள்ளை தரணியில் இருக்கும் எல்லாம்*
*மிக்கதாய் கீர்த்தி யாக விளங்கிடான் விகிர்தி வாக்கான். (5)*

(இ-ள்.) இலக்கனாதிபதி பன்னிரண்டாம் இடம், எட்டாமிடம், ஆறாம் இடத்தில் இருந்து பாவக்கிரகங்களுடன் கூடி, பாவக்கிரகங்கள் பார்க்க, பாவ இராசியில் இருக்கப் பிறந்தவன் பிறந்த நாள் முதல் பிரகாசம் இல்லாமல் இருப்பான் தெத்துவாய் உடையவன் என்றவாறு.

### தரித்திரமும் அற்பாயுளும் உள்ளவன்

*இலக்கன நாதன் ஆறீ ராறுஎட் டினிலி ருக்க*
*மிக்கமாம் பாபர் கூடி மிகுநோக்க இராசி நாதன்*
*ஒக்கவே வக்கிர மாகி உடன்நீசம் அத்த மாக*
*மக்கவே தரித்திர னாகி வயதுமே குறைவன் தானே. (6)*

(இ-ள்.) இலக்கனாதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் பாவக்கோள்களோடு கூடி இருக்க, அல்லது பாவர்கள் இலக்கனாதிபதியை நோக்க, இராசியாதிபதி வக்கிரம் பெற்று, நீசம், அத்தமனம் பெற்று இருக்க, அச்சாதகன் தரித்திரவானாக விளங்குவான். இச்சாதகனுக்கு ஆயுளும் குறைவு என்று கூறவேண்டும் என்றவாறு.

## பொய்யன்

வாக்கினுக் குடைய கோளும் வசைந்தநற் கோளும் கூடி
வாக்கினில் இருக்க நோக்க வரும்வித்தை செல்வம் உண்டு
வாக்கினுக் குடையோன் ஆறெட் டினில்பகை நீசம் சேரில்
வாக்கினுக் குடையோன் பாபி யாகில்வஞ் சனையும்
பொய்யே. (7)

(இ-ள்.) இரண்டாம் இடத்திற்கு அதிபதி, சுபக்கோள்களுடன் சேர்ந்து இரண்டாம் இடத்தில் இருக்க அல்லது இரண்டாம் இடத்தைப் பார்க்கப் பிறந்தவனுக்கு வித்தைகள் கைகூடும். செல்வம் கிடைக்கும். இரண்டாம் இடத்திற்கு அதிபதி, ஆறு, எட்டாம் இடங்களில் பகை, நீசம் பெற்றிருக்க, இரண்டாம் இடத்திற்கு அதிபதி பாவியாக இருந்தால், அவன் வஞ்சனையுடைய பொய்யனாக விளங்குவான் என்றவாறு.

## புகழுடையவன்

வாக்கினுக் குடைய கோளன் வருமுயிர் தன்னில் கீர்த்தி
வாக்கினுக் குடையோ எட்டில் வாக்கினில் வரிசை கீர்த்தி
வாக்கினுக் குடையோன் எட்டில் பன்னிரண் டாறில்
வக்கினால் தீய சொல்லும் மனதுசஞ் சலமாய் நேரும். (8)

(இ-ள்.) இரண்டாமிடத்துக்கு உடையவன் இலக்கனத்தில் இருக்க, தனத்தாலே கீர்த்தி உண்டாக்கிக் கொண்டிருப்பன். இரண்டாமிடத்துக்குடையவன் உச்சமாக, இரண்டாம் இடத்திலே இருக்க, அதிக கீர்த்திமானாக இருப்பான். இரண்டாம் இடத்துக்கு உடையவன் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இந்தத் தானங்களிலே இருந்தால் கொடூர வாக்கு, சஞ்சலப்பட்ட மனது உடையவனாகவும் இருப்பான்.

---

6, 7ம் பாடல்கள் அச்சு நூலில் உள்ளவை. சுவடியில் இப்பாடல்கள் இல்லை. இப்பாடல்களுக்கு உரை பதிப்பாசிரியரால் தரப்பட்டுள்ளது.

## இதுவுமது

*உயிர்தனக் குடைய நாதன் உச்சம் அஞ் சொன்பான் தன்னில்*
*பயிலுடன் இருக்க வல்லால் பரிந்தகோ ளுடனே சேர*
*தயிரிய வானாய்த் தந்தை சற்குணம் கீர்த்தி யாவான்*
*அயிலுடை முருகன் பாதம் அன்புடன் போற்று வானே.(9)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி உச்சத்தில் ஐந்தாமிடத்தில், ஒன்பதாமிடத்தில் இருக்க, சுபக்கோள்களோடு சேர்ந்திருக்கப் பிறந்தவன் தைரியவானாகவும், தகப்பன் கீர்த்திமானாகவும், சற்குணவாக்குடன் சுப்பிரமணிய சுவாமி பக்தி உடைய வனாகவும் இருப்பான் என்றவாறு.

## இதுவுமது

*மூன்றுதா னத்தின் கோளும் அந்தலக் கனத்தில் மூன்று*
*ஈன்றலக் கனத்தின் நாதன் இயல்பெற செவ்வா யோடு*
*தோன்றிய போதும் கூட தோன்றிய பேர்கள் எல்லாம்*
*ஏன்றமர் பலத்தை நல்கும் இயல்புடன் கீர்த்தி யாக. (10)*

*(இ-ள்.)* மூன்றாம் இடத்துக்கு உடையவன், இலக்கனத்திலே இருக்க, இலக்கனாதிபதி செவ்வாயுடனே கூடிப் பலமாக இருக்க, சகோதரர்கள் கீர்த்தியானவர்கள் என்றவாறு.

### பாக்கியவான்

*பாக்கியத் ததிபன் அந்தப் பதியில்இலக் கனத்து நாதன்*
*தாக்கிய இராசி தன்னில் சார்ந்திட மாறி நிற்க*
*வாக்குடன் வியாழன் பார்க்க மறுவிட வயது நூறு*
*ஆக்கத்தைப் பலத்தை நல்கும் அவனியில் வாழ்வுண்*
*டாமே.(11)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்துக்கு உடையவன் ஒன்பதாம் இடத்திலே இருக்க நல்லது. இலக்கனாதிபதி இலக்கனத்திலே

இருக்க, அல்லவெனில் ஒன்பதாம் இடத்துக்கு உடையவன் ஒன்பதாம் இடத்திலே இருக்க, வியாழன் பார்க்க, அல்லவென்றால் கூடி இருக்கப் பிறந்த பிள்ளை செனனம் முதல் மரண பரியந்தம் பாக்கியத்தை அனுபவிப்பன் என்றவாறு.

### புகழுடையவன்

*மாதுரு தான நாதன் வலியஇலக் கனத்தில் வாழ*
*ஏதமில் நாலி ரண்டு இலக்கனா திபனோ டேக*
*ஆதொரு பாவர் நோக்க தோன்றிடா திருக்க இந்தப்*
*பூதலம் மீது மிக்காய்ப் புலமையாய்க் கீர்த்தி யாவான். (12)*

**(இ-ள்.)** நான்காம் இடத்துக்கு உடையவன், இலக்கனத்தில் இருக்க, நான்காம் இடத்தே புதன் இருக்க, அல்லவென்றால் இரண்டு கிரகமும் இலக்கனாதிபனுடன் கூடி பலமாக இருக்க, பாவர் திருட்டி(பார்வை) இல்லாமல் இருக்க, இப்படிப் பிறந்த பிள்ளை வித்தையாலே கீர்த்திமானாக இருப்பான் என்றவாறு.

### வீரன்

*எண்ணியலக் னாதி பதிக்கு ஈராறுக் குடைய கோள்கள்*
*நண்ணிய உச்சம் ஆட்சி நட்புடன் இருக்க வோரை*
*பண்ணிய உயிர்க்குப் பன்னி ரண்டினில் உச்சம் நட்பாய்*
*மண்ணினில் வீர னாகி மன்னர்க்குச் சரியா வானே. (13)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதிக்குப் பன்னிரண்டாம் இடத்திலே உச்சக்கிரகமாவது நட்புக் கிரகமாவது இருக்க, இலக்கனத்துக்குடையவன், பன்னிரண்டாம் இராசி, உச்ச இராசியாவது, நட்பு இராசியாவது இருக்கப் பிறந்தவன் வீரனாகி, இராசாவுக்குச் சரியாகி இருப்பன் என்றவாறு.

## கிராம மணியம்

*சென்மநா தனுக்கீ ராறில் சேரவெல்லாம் ஆறும் வாக்கும்*
*தன்மநா யகனு மாகத் தான்பல வீன மாகித்*
*துன்மநீ சந்தோ டேகித் தோன்றிட வியாழன் பார்க்க*
*நன்மையாம் ஒருகி ராம நன்குடி வாச னாமே. (14)*

**(இ-ள்.)** இலக்கனத்துக்குப் பன்னிரண்டாம் இடத்தில் ஆறாமிடத்துக்குடையவனும், இரண்டாம் இடத்துக்கு உடையவனும் நீசத்தோடும் கூடிப் பலயீனனாக இருக்க, அவர்களை வியாழன் பார்க்கப் பிறந்த பிள்ளை ஒரு கிராம மணியம் பண்ணுவன், அல்லவெனில் நன்மையாகத் தன் கிராமத்திலே குடியிருப்பன் என்றவாறு.

## சாதகன் தங்குமிடம்

*சரராசி யார்க்குத் தானே சார்பிற வூர்தான் வாசம்*
*திரராசி யார்க்குப பாடு திரநடு வூர்தான் வாசம்பு*
*உரமான உபய ராசி உள்ளூரில் வாசம் மேலும்*
*பரமான பனிரண் டோனைப் பார்த்துநீ பகரு வாயே. (15)*

**(இ-ள்.)** சரராசியில் பிறந்த சாதகன் தூரத்தில் உள்ள வெளியூரில் தங்கி வாழ்வான். திரராசியில் பிறந்த சாதகன், தான் பிறந்த ஊருக்கு சமீபத்தில் தங்கி வாழ்வான். உபய இராசியில் பிறந்த சாதகன், உள்ளூரிலேயே இருந்து வாழ்வான். இவையன்றியும் பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதியைக் கண்டு தங்கி வாழும் ஊரைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*சரஇராசி யாகச் சென்மம் சார்ந்தவன் சரமாய்ப் பார்த்தோன்*
*இருவரும் சரமாய் திரமாய் வாழ்வோங்கு சமஊர் தன்னில்*
*திரஇராசி யாகச் சென்மம் சார்ந்தவன் திரமாய் நோக்கும்*
*வெருங்குணம் சரியாய் வாழ்வு வந்திடும் மனையில் செல்ல. (16)*

---

பதிநான்காம் பாடல் சுவடியில் இல்லை. அச்சு நூலில் இருந்த இப்பாடலுக்குப் பதிப்பாசிரியரால் உரை எழுதப்பட்டுள்ளது.

(இ-ள்.) சென்ம இலக்கனம் சர இராசியாக இருக்க, இலக்கனத்தில நின்றவன் சரக்கிரகமாக இருக்க, சரக்கிரகத்தை திரக்கிரகம் பார்க்கப் பிறந்தவன் இச்சென்மத்திலே பாக்கியத்தை அனுபவித்துச் செல்வனாக இருப்பன் என்றவாறு. சென்மம் திர இராசியாக இருக்க, இலக்கனத்தில் நின்றவன் திரக்கிரகமாக இருக்கப்பிறந்தவன் நல்ல குணத்தின் காரணமாக நல்வாழ்க்கையை உடையவனாக விளங்குவான் என்றவாறு.

### கீழ்மையுடையவன்

சென்மவான் பாவ ரோடும் சேர்ந்துபின் ஆறில் இராசி
வன்மபா வர்கள்வீ டாக மந்தனும் அமர வந்தோன்
கன்மன்ஆ சார ஈனன் கடுஇராகு கேதுகூட
ஈனமுறை யாலே நீசம் இடர்தன்னில் வாழ்வுண் டாமே. *(17)*

(இ-ள்.) இலக்கனாதிபதி, பாவர்களுடனே ஆறாம் இடத்தே இருக்க அந்த இராசி பாவக்கிரகங்கள்வீடாக இருக்க, அதிலே சனியும் இருக்கப் பிறந்தவன் சூத்திரக் கிரிகைகளைப் பண்ணி ஆசார ஈனனாகப்பட்டவனாக இருப்பன். இது அல்லாமல் இராகு உடனேயாகிலும் கேது உடனேயாகிலும் கூடியிருக்கப் பிறந்தவன் சண்டாளக் கிரிகைகளைப் பண்ணி, நீசனாய்ப் போவான் என்றவாறு.

### உடல் வருந்துபவன்

பசியஇலக் கனத்து நாதன் பன்னிரண் டாறில் எட்டில்
வசிகர முடனே ஏக வருமுடன் ஏறும் அன்னோன்
சசியுடன் இருந்த வீட்டுக் குடையவன் தன்னைச் சூழ்ந்து
பிசியிடும் நீசன் பார்க்க பருமுடல் நொந்து போமே. *(18)*

(இ-ள்.) இலக்கனாதிபதி ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் நிற்கப் பிறந்தவன் சரீரம் நொந்து இருப்பன். இலக்கனாதிபதி இருந்த வீட்டுக்கு உடைய வனைச் சனி பார்க்கப் பிறந்தவன் உடம்பு நொந்திருக்கும் என்றவாறு.

### நோயாளி

ஆனஇலக் கனத்து நாதன் ஆறினுக் குடையா னோடு
ஈனஇராகு கேது பார்க்கத் தங்களோ டொருவ ராக
தானமாம் வோரை தன்னிற் சார்ந்திட சரீரம் மீதில்
ஊனமாம் வியாதிக் கெல்லாம் உதயவன் என்ன லாமே. *(19)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி, ஆறாமிடத்துக்கு உடைய வனுடனே, கூடினாலும், இராகுடனேயாகிலும் கேதுவுடனே யாகிலும் எந்த இராசியிலே யாகிலும் கூடியிருக்க, உடலிலே எந்நேரமும் வியாதியாக இருப்பான் என்றவாறு.

### உடல் பலவீனமானவன்

சார்ந்தஇலக் கனத்து நாதன் சார்பல யீன னாகக்
கேந்திரதிரி கோணம் மீதில் கிளர்ரோ கத்த னாவான்
ஆய்ந்தவர் பத்தாம் இராசிக் காறெட்டுப் பன்னி ரண்டில்
வாய்ந்திடப் பலயீன மாகும் அவருமுடல் என்னு
மாதே. *(20)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி பலயீனனாக இருந்து கேந்திரத் திரிகோணங்களிலே போகப் பிறந்தவன் நோயாளியாக இருப்பன். இலக்கனாதிபதி, கர்மாதிபதி ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இந்தத் தானங்களில் பலயீனமாகப் பிறந்த பிள்ளை துர்ப்பல தேகமாய் இருப்பான் என்றவாறு.

### நோயாளி

பன்னுலக் கனத்தின் நாதன் பாவர்க ளோடுங் கூடி
உன்னிய மனையில் ஏற உயிரெட்டில் சுகமே இல்லை
அன்னவன் செவ்வா யோடு ஆறெட்டில் பன்னி ரண்டில்
சொன்னஇலக் கனத்து நாதன் தோன்றிட ரோக வானே. *(21)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி, பாவக்கிரகங்களுடனே கூடி இலக்கனத்திலே இருக்க, அல்லது எட்டாம் இடத்திலே

யாவது இருக்கப் பிறந்தவர்களுக்குச் சரீர சுகம் இல்லை. இலக்கனாதிபதி செவ்வாயுடனே ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இந்தத் தானங்களிலே இருக்க அல்லது இலக்கனத்திலே இருக்கப் பிறந்தவன் நோயாளியாக இருப்பான் என்றவாறு.

### அண்டநோய் உடையவன்

பாவர்க ளோடு கூடி பதிஇலக் கனத்து நாதன்
கோவியாய் பலமும் கொஞ்சம் கொடுராகு செவ்வாய் கூடி
ஆவியில் இருக்க நாதன் அவனுடன் சனியும் சேர
மேஷமே பருத்த அண்டம் விதனமாம் சாத கர்க்கே. (22)

(இ-ள்.) இலக்கனாதிபதி பாவக்கிரகங்களுடனே கூடி இலக்கனத்தில் இருக்கப் பிறந்தவன் கோபம் உடையவனாகவும், துர்பலவானாகவும் இருப்பன். இதுவல்லாமல் இலக்கனத்திலே இராகுவும், செவ்வாயும் இருக்கப் பிறந்தவனுக்கு ஓதம் இறங்கும். இதுவல்லாது இலக்கனத்திலே இராகுவும், சனியும் இருக்கப் பிறந்தவனுக்கு அண்டவாய் உண்டாகி இருக்கும்.

### உடல் வருந்துபவன்

ஆறிரண் டினிலே இலக்க னாதிபன் பலவா னாக
ஊறிடில் தேகம் காந்தி உறுபாவர் கூடிச் சும்மா
வேறுகோள் இருக்க இராகு உத்தமன் வேசை ஆசை
தேறுவான் ரோக வானாய்த் தேகமும் மெலிந்து போமே. (23)

(இ-ள்.) இலக்கனாதிபதி பன்னிரண்டாம் இடத்திலே பலவானாக இருக்கப் பிறந்தவன் சரீரம் காந்தியாக இருக்கும். இலக்கனாதிபதி பாவர்களுடனே கூடியிருக்கப் பிறந்தவன் சரீரம் காந்தியில்லாதவனாக இருப்பான். இதுவல்லாமல் இலக்கனாதிபதி பன்னிரண்டாம் இடத்தில் இருந்து அத்தமன மாகப் பிறந்தவன் பர ஸ்திரியிடம் மனம் சென்றவனாய் அதிக நோய்களை உடையவனாக உடல் நொந்து இருப்பன் என்றவாறு.

### பயம் உடையவன்

சத்துரு தானக் கோளும் தன்பதி யுடைய கோளும்
ஒத்திருந் தாறில் கூட உடம்பினில் வெள்ளை உண்டாம்
உத்தமன் அவரோ டேகில் உறில்வஞ்சம் யாலு மல்லாமல்
வித்தகர் கோளும் நல்ல விசபயம் விளங்கும் தானே. (24)

(இ-ள்.) இலக்கனாதிபதியும் ஆறாமிடத்துக்கு உடையவனும் ஆறாமிடத்தில் சேர்ந்து இருக்கப் பிறந்தவன் சரீரங்களிலே வெள்ளை உண்டாகி இருப்பன். இதுவல்லாமல் இலக்கனாதிபதி இராகுவுடனே கூடியிருக்கப் பிறந்தவன் வஞ்சனை பயமும் விசபயமும் உடையவனாக விளங்குவான் என்றவாறு.

### சதா துக்கி

உயிர்தனில் சுபக்கிர கந்தான் ஊறிடச்சுபரே பார்க்க
தயிரிய சுகவான் என்றும் சாற்றுவர் வெளிக்கு இந்த
மயிலிமுறை யாகப் பாவர் வந்திட மனித ரெல்லாம்
பயிலும்நாள் அளவும் துக்கப் பட்டுவாழ் திருப்பர்
பாரே. (25)

(இ-ள்.) இலக்கனத்திலே சுபக்கிரகங்கள் இருக்க, சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட பிறந்தவன், வெளிக்குத் தைரியவான் என்றும், சுகவான் என்றும் சொல்லப்படுவான். இதுவல்லாது இலக்கனத்திலே பாவக்கிரகங்கள் இருக்க, பாவக்கிரகங்கள் பார்க்கப் பிறந்தவன் உடல் மரணம் வரைக்கும் துக்கப்பட்டு இருப்பான் என்றவாறு.

### மத்திய வயதில் சுகம் அடைபவன்

சுக்கிரன் தேவ லோகங் கிசமது ஏறி நிற்க
லக்கினா திபனும் கோபு ராங்கிசம் நன்றாய் ஏற
மிக்கலக் கனத்தை வெள்ளி வியாழன்மால் விரைய நோக்கத்
துக்கமில் வயது மத்தி சுகமது மேலுண் டாமே. (26)

(இ-ள்.) சுக்கிரன் தேவலோகாங்கிசம் ஏறியிருக்க, இலக்கனாதிபதி கோபு ராங்கிசமே இருக்க, இலக்கனத்தைச் சுக்கிரன், குரு, புதன் முதலான சுபக்கோள்கள் பார்க்க, மத்திய வயது அந்தியத்திலே சுகத்தைக் கொடுக்கும் என்றவாறு.

### வாழ்நாளில் இறுதியில் சுகம் அடைபவன்

உரைத்திடும் ஓரை தன்னில் உறுதியாய் சுபரும் ரண்டில்
பருத்தகேந் திரங்கள் தன்னில் பாவர்கள் நிறைந்து நிற்பப்
பெருத்தலக் கனத்து நாதன் பெறுமுத்த மாங்கிசம் ஏறி
இருந்திட ஆறின துக்கம் அந்தியம் இயலுண் டாமே. *(27)*

(இ-ள்.) இலக்கனத்திலே சுபக்கிரகம் இருக்க, இரண்டாம் இடத்தில் பாவக்கிரகங்கள் இருக்க, கேந்திரங்களிலே பாவக்கிரகங்கள் இருக்க, இலக்கனாதிபதி உத்தமாங்கிசத்தில் இருக்கப் பிறந்தவனுக்கு ஆதியில் துக்கமும் அந்தத்தில் சுகமும் உண்டாக இருப்பன் என்றவாறு.

### பதினாறு வயதிற்குமேல் சுகம் அடைபவன்

பாரிலக் கனத்து நாதன் பசியஇரா சியிலே பாய்ந்து
சீரிய சுபரே பார்க்க அல்லது சென்ம இராசன்
பாரிகோ புராங்கி சத்தில் மார்க்கண்டன் வயது மேலே
நாரிகேள்! சுகமுண் டாகும் நன்மையும் மிகவுண் டாமே. *(28)*

(இ-ள்.) இலக்கனாதிபதி சுப இராசிகளிலே இருக்க, சுபக்கிரகங்கள் பார்க்க அல்லது இலக்கனாதிபதி கோபு ராங்கிசம் ஏறி இருக்கப் பிறந்தவன் பதினாறு வயதுக்குமேல் சுகத்தை அனுபவிப்பான். அவனுக்கு அதிகமான நன்மைகளும் உண்டாகும் என்றவாறு.

### இலக்கனத்தைச் சூரியன் பார்க்கப் பிறந்தவனின் குணம்

வெய்யவன் முதலாய்க் கோள்கள் விளங்கும்இலக்
கனத்தைப் பார்க்க
அய்யமில் தந்தை தேடும் அரும்பொருள் சலத்தி னாலே
பையவே நிதியும் கூடும் பருத்ததே கத்த னாவன்
உய்யவே தர்மம் தேரும் உமருங்கோ வேசை யாசை. *(29)*

(இ-ள்.) இலக்கனத்தை ஆதித்தன் முதலான கிரகங்கள் பார்க்க, இராச சேவையும் தகப்பன் கேடும் திரவியத்தினாலேயும் சலத்தினாலேயும் சிறிது திரவியம் தேடி வாழ்வான். தர்மவானாக இருப்பான், பருத்திருக்கின்ற தேகத்தை உடையவனாகவும் இருப்பன். வேசையுடனே சஞ்சாரமாக இருப்பன். இப்படிப்பட்ட குணத்தை உடையவனாக இருப்பான்.

## இலக்கினத்தைச் சனி பார்க்கப் பிறந்தவனின் குணம்

*மந்தன்இலக் கனத்தைப் பார்க்க மங்கைமுத் தவளைச் சேர்வன்*
*தந்தைஇலக் கனத்தைப் பார்க்கத் தருசுக ராசன் அன்னன்*
*சிந்தைசேர் சுபரே பார்க்கச் சேர்ந்திடும் சுகமே என்று*
*விந்தைசேர் பாவர் பார்க்க வீரியம் இல்லை தானே.* *(30)*

(இ-ள்.) இலக்கனத்தைச் சனி பார்க்க மூத்தாளைச் சேர்வன். இலக்கனத்தை இலக்கனாதிபதி பார்க்க, இராசப் பிரியனாய் அதிக சுகத்துடனே கூடி இருப்பன். இலக்கனத்தைச் சுபக்கிரகங்கள் பார்க்கச் சுகவானாக இருப்பன். இலக்கனத்தைப் பாவக்கிரகங்கள் பார்க்கச் சுகமில்லாதவனாக இருப்பன் என்றவாறு.

## சதா துக்கி

*பாவர்இலக் கனத்தைப் பார்க்க பயந்திடும் துக்கி யாவான்*
*தாவிநற் கிரக மெல்லாம் நோக்கிடத் தனவான் ராசர்*
*மேவிட இலக்க னத்தில் சுபர்மூன்று சேர இராசன்*
*தாவிடப் பாவர் மூன்று தரித்திட துக்கி யாமே.* *(31)*

(இ-ள்.) இலக்கனத்தைப் பாவக்கிரகங்கள் பார்க்க துக்கியாக இருப்பான். நற்கிரகங்கள் பார்க்க இராசாவனாவன்; இலக்கனத்தில் மூன்று சுபக்கிரகங்கள் இருக்க, தனவானாய் இருப்பான். இராசாவாவான். இலக்கனத்திலே மூன்று பாவக்கிரகங்கள் இருக்க, எந்நேரமும் துக்கியாக இருப்பான் என்றவாறு.

## செல்வன்

பார்த்தஇலக் னாதி நாதன் பதியனும் பலமாய் வாழில்
ஏத்தகேந் திரங்கள் ஏற எழில்சுபர் உடனே பார்க்க
கூர்த்திடும் பாவர் பார்வை இன்றிநற் குணமோ டாயுள்
மூத்திட பலமாம் நாளும் முதிர்ந்தஇலட் சுமிவாழ்
வாளோ. *(32)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி அதிக பலமாகக் கேந்திரங்களிலே இருக்க சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட, பாவக் கிரகங்களின் பார்வை இல்லாது இருக்க, சகல அரிட்டங்களும் நிவர்த்தியாகி, தீர்க்காயுள் உண்டாய் நல்ல குணவானாக இருப்பான். அவனிடத்தே இராசலெட்சுமியும் பிரியாது இருப்பாள் என்றவாறு.

## இதுவுமது

இலக்கனா திபனும் சோமன் நண்பனேல் நன்மை யாகும்
இலக்கனா திபனும் பாவர் சத்துருவேல் தீமை யாகும்
இலக்கனா திபன்நற் கோளாய் நன்மனை வீட்டி ருக்கில்
இலக்கனா திபனால் நன்மை நாடும்லட் சுமியி னாளே. *(33)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதியும் சந்திரனும் தங்களுக்குள் நட்புடன் இருப்பின், சாதகர்க்கு நன்மையாகும். இலக்கனாதிபதியும் பாவராக, சந்திரனுடன் பகைபெற்று இருப்பின் சாதகர்க்குத் தீமையாகும். இலக்கனாதிபதி சுபக்கோளாகத் தன் சொந்த வீட்டில் இருக்க, இலக்கனாதி பதியால் நன்மை கிட்டும். இச்சாதகனுக்கு செல்வம் பெருகும் என்றவாறு.

**இலக்கன பாவம் முற்றும்.**

---

33ம் பாடல் சுவடியில் இல்லை. அச்சு நூலில் உள்ள இப்பாடலுக்குப் பதிப்பாசிரியரால் உரை தரப்பட்டுள்ளது.

# இரண்டாம் பாவகப் பலன்

தானங்கள் அறிய வேண்டில் தரும்பலன் இரண்டில் செப்பில்
தீனமில் திரவி யங்கள் திகலொளி இல்லாக் கண்ணை
ஊனமில் முகத்தை யன்ன முடியிட உயர்ந்த வாக்கை
ஆனதோர் குடும்பம் தன்னை வித்தையும் அடவாய்ச்
சொன்னேன். (34)

(இ-ள்.) திரவியம், கண், முகம், வித்தை, வாக்கு, குடும்பம், அசனம், இதுவெல்லாம் இரண்டாம் இடத்தைப் பிடித்துச் சொல்லுக என்றவாறு.

## செல்வன்

சொன்னஅக் கோளும் இலாப நாதனும் தூய சென்மம்
அன்னவ னோடும் கூடி அமர்ந்திடத் திரவி யந்தான்
முன்னமே உரைத்த கோள்கள் இரண்டுமே மொழிந்த
இலாபம்
தன்னிலே ஆட்சி உச்சம் ஆயினால் தனவான் பாரே. (35)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவனும், பதினோராம் இடத்துக்கு உடையவனும், இலக்கனத்துக்கு உடையவனும் இந்த மூன்று கிரகங்களும் ஒரு இராசியிலே கூடியிருக்க செல்வனாக இருப்பான். இரண்டாம் இடத்துக்கு உடையவனும் பதினோராம் இடத்துக்கு உடையவனும், பதினோராம் இடத்தே இருக்க, வந்த இராசி, ஆட்சி, உச்சமாக இருக்க அச்சாதகன் செல்வனாக இருப்பான் என்றாவாறு.

## இதுவுமது

இலாபத்தான் வாக்கு நாதன் இலக்கனா திபனும் மூவர்
இலாபத்தான் சென்மம் மீது ஊறிடப் பகையி லாமை
இலாபத்தான் லாப மாகில் காண்பொருள் கையில் கூடும்
இலாபத்தால் சொன்னோம் மின்னே! தோன்றுமந் தன்முன்
முன்னே. (36)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவனும் பதினோராம் இடத்திற்கு உடையவனும் பகையில்லாமல் உறவாக இருக்க, இலக்கனாதிபதியும் இவர்களுடனே கூடி, இலக்கனத்தில் இருக்க, பகை கொண்டாகிலும் இருக்க, வெகு செல்வனாக இருப்பான் என்றவாறு.

## பயம் உடையவன்

இலக்கனா திபனோ ரண்டில் நற்பல வானாய் வந்தால்
தக்கதோர் நிதியும் காணும் சார்பல யீன மாகத்
துக்கப்பா வந்தான் கூட தோன்றிட துயர மாகி
மிக்கவஞ் சனையாய் வாழும் மிகுபயம் உண்டு தானே. *(37)*

(இ-ள்.) இலக்கனாதிபதி, இரண்டாம் இடத்தில் பூரணமாக இருக்க, அச்சாதகனுக்கு செல்வம் சேரும். இலக்கனாதி துர்ப்பலனாகப் பாவக்கிரகங்களுடனே கூடி இருக்க, துக்கப்பட்டு வஞ்சனையோடும் கூடி மிகுந்த பயத்தை உடையனாய் இருப்பான் என்றவாறு.

## பொருள் நட்டம் அடைபவன்

வாக்கினுக் குடையோன் வாக்கைப் பார்த்தவர் இருந்த வர்கள்
தீர்க்குமத் தமன மாகத் திசைஅப காரம் தன்னில்
ஆக்கமாம் திரவிய நாசம் அறியும்கோ சரப லத்தில்
தூக்கமாய் அதிக துட்ட பலனெனச் சொல்ல லாமே. *(38)*

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன், இரண்டாம் இடத்தில் இருந்தவன், இரண்டாம் இடத்தைப் பார்த்தவன், இந்த மூன்று கிரகங்களும் அத்தமனமாக இருக்க, அவர்களுடைய திசை அபகாரங்களிலே திரவிய நட்டம் வரும் என்பது. இதுவெல்லாம் அல்லாமல் கோசாரத்திலே துட்ட பலனாக இருக்கும் என்றவாறு.

## செல்வன்

வாக்கினிலே கிரகம் ஏற வந்திட வாக்கி நாதன்
தீர்க்கமாய் உச்சம் ஆட்சி தன்னிலே திருந்தி நிற்க
பாக்கிய வானாய் பாரில் இருக்குநாள் அளவும் பாலும்
தாக்கிய திரவி யத்தால் தரணியில் வாழ்வ தாமே. (39)

(இ-ள்.) இரண்டாம் இடத்தே அநேக கிரகங்கள் இருக்க, இரண்டாம் இடத்துக்கு உடையவன் பலவானாக, ஆட்சி, உச்சங்களிலே இருக்க, அச்சாதகனுக்குச் செனனம் முதல் மரணம் வரைக்கும் பாலும், பாக்கியமும், செல்வமும் உடையவனாக இருப்பான் என்றவாறு.

## தாய் வழியில் செல்வம் அடைபவன்

வாக்கினுக் குடையோன் மூன்றுக் குடையவன் இவர்கள் வந்து
தாக்கிலக் கனத்தில் ஏறச் சகோதரம் நிதியுண் டாகும்
ஆக்கநா லுடைய கோளும் ஆறிரண் டதிபன் கூடி
வாக்கில்லக் கனத்தில் ஏறத் திரவியம் தாயால் சேரும். (40)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவனும், மூன்றாம் இடத்துக்கு உடையவனும், இலக்கனத்தில் கூடியிருக்க, இச்சாதகனுக்கு சகோதரர்களாலே பொருள் இலாபம் கிடைக்கும். இதுவல்லாமல் நான்காம் இடத்துக்கு உடையவனும், இரண்டாம் இடத்துக்கு உடையவனும் கூடி இலக்கனத்திலே இருக்கத் தாயார் வழியிலே செல்வம் உண்டு என்றவாறு.

## தந்தை வழியில் செல்வம் அடைபவன்

ஏழினுக் குடையோன் ரண்டிற் கதிபனும் இவர்கள் கூடித்
தாழ்வில்லக் கனத்தில ஏறத் தன்மனை யாளால் சேரும்
வாழும்பாக் கியத்தோன் ஐந்தில் பதியவன் வாக்கு நாதன்
சூழும்இலக் கனத்தாய் வாழச் சுதன்பிதா தன்மேல்
தோன்றும். (41)

(இ-ள்.) ஏழாமிடத்துக்கு உடையவன், இரண்டாமிடத்துக்கு உடையவனுடனே கூடி, இலக்கனத்திலே இருக்க, பெண் சாதியுடைய வழியிலே பொருள் சேரும். இதுவல்லாது ஒன்பதாம் இடத்துக்கு உடையவனும் ஐந்தாம் இடத்திற்கு உடையவனும், இரண்டாம் இடத்துக்கு உடையவனுடனே கூடி இலக்கனத்திலே இருக்க, தகப்பன் வழியிலே செல்வம் கிடைக்கும்.

## பொருள் இலாபம் பெறுபவன்

குடும்பதா னத்தோன் நல்ல குணமுடன் சென்மம் தன்னில்
கடும்புலக் கனத்து நாதன் கண்ணுடை யோனில் சேர
கொடும்பவம் ஏறக் கோணம் கொண்டுடன் முயற்சி பண்ண
இடும்பற்றார் பூமிக் கீழே நிட்சேபம் இவன்கை கூடும். (42)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன் இலக்கனத்திலே இருக்க, இலக்கனாதிபதி, இரண்டாம் இடத்திலே இருக்க, எத்தனை பாபம் செய்தாலும் நீங்கி, தான் பண்ணுகிற முயற்சியினால் பொருள் இலாபம் உண்டு என்பது.

## தகப்பனால் பொருள் நட்டம் அடைபவன்

கண்ணுடை யோனும் இலக்கன நாதனும் ஏற மூன்றில்
நண்ணிட சகோத ரத்தால் நாசமே திரவி யந்தான்
எண்ணிய ஏழில் கொள்ள இயல்புடை திரியால் நாலில்
புண்ணிய தாயால் அஞ்சில் புத்திரன் பிதாவொன் பானே. (46)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவனும் இலக்கனாதிபதியும் மூன்றாம் இடத்தில் இருக்க, சகோதரங்களாலே திரவியம் நாசம். இந்த இரண்டு கிரகங்களும் ஏழாம் இடத்தே இருக்கப் பெண்சாதியால் நாசம். இவர்கள் நான்காம் இடத்தே நிற்கத் தாயால் செல்வம் நாசம். ஐந்தாம் இடத்தே நிற்கில் புத்திரரால் செல்வம் நாசம். ஒன்பதாம் இடத்தே நிற்க தகப்பனால் பொருள் சேதம் வரும் என்றவாறு.

## செல்வன்

சந்திரன் தனக்கு ரண்டாம் தானத்தைச் சுங்கன் பார்க்க
தந்திரக் குடும்ப நாதன் தன்னொடும் சுபரும் ஏக
விந்தையால் சுபரும் பார்க்க விருந்தின ரோடும் வாழ்ந்து
அந்தமே ஓடும் செம்பொன் அளவிலா தாட்சிப் பானே. *(44)*

**(இ-ள்.)** சந்திரனுக்கு இரண்டாம் இடத்தைச் சுக்கிரன் பார்க்க, இரண்டாம் இடத்துக்கு உடையவனுடனே சுபக்கிரகங்கள் இருக்க அல்லது சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட இச்சாதகன் செனனம் முதல் மரணம் வரை செல்வனாக இருப்பான் என்றவாறு.

## பயணம் செய்பவன்

குடும்பதா னத்து நாதன் கூடிய இராசி நாதன்
இருந்திசை அபகா ரத்தில் இயல்புடன் இலாபம் பொன்னே
கடுங்கண்ணான் பிறக்கும் போது வக்கிர னாகக் கண்டால்
அடும்பகை இல்லான் திக்கு விசயமும் அவனே
ஆள்வன். *(45)*

**(இ-ள்.)** இரண்டாம் இடத்துக்கு உடையவன் கூடிய இராசிநாதனின் திசை, அபகாரங்களில் பொருள் இலாபம் உண்டாகும். இரண்டாம் இடத்துக்கு உடையவன் வக்கிரனாக இருந்தால் பகை இல்லாதவனாக அனைத்துத் திசைகளிலும் பயணம் பண்ணுவான் என்றவாறு.

## குடும்பத்தான பலன்

குடும்பத்தா னத்தில தான்கா ரகன்சனி ரவியே சேர்ந்தால்
குடும்பத்தா னத்தில் இராகு கேதொடு குளிகன் கூடில்
குடும்பத்தா னத்தை நல்லோர் குலவியே பார்த்துக் கூடில்
குடும்பத்தில் நன்மை யாகும் அல்லதேல் தீமை யாகும். *(46)*

**(இ-ள்.)** இரண்டாம் இடத்தில் காரகன், சனி, சூரியன் இவர்களோடு சேர்ந்தால் வறுமை உண்டாகும். இரண்டாம் இடத்தில் இராகு அல்லது கேதோடு குளிகன் கூடி அமர்ந்திட அச்சாதகன் வறுமையுடன் வாழ்வான். இரண்டாம் இடத்தை சுபக்கோள்கள் பார்க்க அல்லது இரண்டாம் இடத்தில் நற்கோள்கள் கூடி நிற்க குடும்பத்திற்கு நன்மையாகும். இல்லையெனில் தீமை என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## புகழுடையவன்

வாக்குதா னத்தோன் இலாபம் தன்னிலே வருந்தி வாழ
தீர்க்கஇலா பத்தோன் வாக்கில் சேர்ந்திட அல்ல வென்றால்
ஆக்கமாம் நேந்தி ரத்து அறிவுடன் அவனே கீர்த்தி
பாக்கிய வானாய் தர்மம் பண்ணுவான் தர்ம வானே. *(47)*

**(இ-ள்.)** இரண்டாமிடத்துக்கு உடையவன், பதினோராம் இடத்தில் நிற்க, பதினோராம் இடத்துக்கு உடையவன் இரண்டாம் இடத்தே நிற்க, அல்லவென்றால் இரண்டு கிரகங்களும் கேந்திரத் திரிகோணங்களிலே நிற்க இச்சாதகன் தர்மவானாய்க் கீர்த்திமானாக இருப்பான் என்றவாறு.

## பொருள் நட்டம் அடைபவன்

வாக்குதா னத்தோன் பன்னி ரண்டிதனில் ஆறில் வந்து
தீக்குமீ ராறோன் ரண்டில் சேர்ந்துஇலா பத்தோன் ஆறில்
தாக்குமீ ராறில் எட்டில் சார்ந்திட வல்லன் என்றால்
போக்குமீ ராறில் ஏகப் போய்விடும் தனமே நாசம். *(48)*

**(இ-ள்.)** இரண்டாம் இடத்துக்கு உடையவன், ஆறாம் இடத்திலாவது, பன்னிரண்டாம் இடத்திலாவது இருக்க, பன்னிரண்டாம் இடத்துக்கு உடையவன் இரண்டாம் இடத்தே நிற்க, பதினோராம் இடத்திற்கு உடையவன் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவற்றில் நிற்க, இச்சாதகனுக்குத் தன நாசம் வரும் என்றவாறு.

### இதுவுமது

பொன்னவன் பன்னி ரண்டில் பொருந்திட ரண்டில் கொள்ள
அன்னவன் பலமோ ஈனம் சார்ந்திடச் சுபக்கிர கங்கள்
நன்மையால் இலக்க னத்தை நகையொடு நோக்கா தாகில்
கன்னியர்க் கரசே கேளாய் ! கைப்பொருள் நாச மாமே. *(49)*

**(இ-ள்.)** பன்னிரண்டாம் இடத்திலே வியாழன் நிற்க, இரண்டாம் இடத்திற்கு உடையவன், பலவீனமாய் போக, இலக்கனத்தைச் சுபக்கிரகங்கள் பார்க்காமல் போக, பொருள் அழிவு ஏற்படும் என்றவாறு.

### *செல்வன்*

*சென்மஇலக் கனத்தோன் ரண்டில் சேர்ந்திட வாக்கு நாதன்*
*அன்பினி இலாபம் மீதில் அமர்ந்திட இலாப நாதன்*
*தன்ம இலக் கனத்தில் ஏற சார்ந்திட முதலாய் உள்ள*
*இன்புறு திரவி யங்கள் இயல்பினால் சேரும் தானே. (50)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி, இரண்டாம் இடத்தில் இருக்க, இரண்டாம் இடத்துக்கு உடையவன் பதினோராம் இடத்தில் இருக்க, பதினோராம் இடத்துக்கு உடையவன் இலக்கனத்தில் இருக்க இச்சாதகனுக்கு செல்வம் முதலாய் இருக்கின்ற பொருள்கள் கிடைக்கும் என்றவாறு.

### இதுவுமது

*பாக்கியத் ததிபன் ரண்டின் பதிபன்இலக் கனத்தின் நாதன்*
*மூர்க்கமாய் மூன்று பேரும் அதிகஉச் சாங்கி சத்தில்*
*நீக்கிவை சேடி யாங்கிசம் நினைவுடன் ஏறி நின்றால்*
*ஊக்கமாய் இலட்சம் கோடி திரவியம் உண்டா கும்மே.(51)*

**(இ-ள்.)** இலக்கனத்துக்கு உடையவனும் பன்னி ரண்டாம் இடத்துக்கு உடையவனும், ஒன்பதாம் இடத்துக்கு உடையவனும் இவர்கள் மூன்று பேரும் உச்சாங்கிசத்திலே இருக்க அல்லது வைசேடியாங்கிசம் ஏறி இருக்க இச்சாதகன் கோடி பணத்திற்கு எல்லாம் எசமானனாவான் என்றவாறு.

## கண்ணொளி அற்றவன்

சந்திரன் சுங்கன் வித்தைக் கதிபனும் சதிராய்க் கூடி
எந்தெந்த வோரை தன்னில் ஏகினும் இராக்கண் இல்லை
வந்தலக் கனத்து நாதன் வருகதிர் வெள்ளி செவ்வாய்
மந்தனும் நோக்க கொஞ்சம் விழிஒளி இல்லான்
மின்னே. (53)

(இ-ள்.) சந்திரன், சுங்கன், வித்தைக் கதிபன் இவர்கள் மூன்று பேரும் எந்த இராசியிலாயினும் இருக்கப் பிறந்தவன் மாலைக்கண் நோய் உடையவன். இலக்கனாதிபதி, சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி இவர்கள் பார்க்க சிறிது, கண் ஒளி இல்லாதவனாக இருப்பான் என்றவாறு.

## இதுவுமது

பாக்கியத் ததிபன் ஐந்தின் பதியின்லக் கனத்தின் நாதன்
வாக்கினுக் கதிபன் ஏழில் மன்னவர் இவர்கள் கூடில்
தீர்க்கமாய் எட்டீ ராறில் ஆறினில் சேர்ந்து வாழ்ந்து
ஆக்கலக் கனத்தைப் பார்க்க அவர்களின் கண்ணிறம்
போமே. (54)

(இ-ள்.) ஒன்பதாம் இடத்துக்கு உடையவன், ஐந்தாமிடத்துக்கு உடையவன், ஏழாம் இடத்திற்கு உடையவன் இவர்கள் ஐந்து பேரும் கூடி, பன்னிரண்டாம் இடம், எட்டாமிடம், ஆறாமிடத்தில் இருந்து இலக்கனத்தைப் பார்க்கப் பிறந்தவனுக்கு இரண்டு கண்களும் பார்வை அற்றவையாய் விளங்கும் என்று சொல்ல வேண்டும்.

## காது நோய் உடையவன்

சுக்கிரன் ஆறின் கோளன் சுகமுறு ஐந்தின் நாதன்
இலக்கனத் திவர்கள் கூடில் இராசனால் கண்கள் பேமென்
தக்கசேய் இரண்டின் நாதன் தானும்இலக் கனத்தில் ஏற
உக்கிர மாகக் காதில் உயர்பிணி உண்டா கும்மே. (55)

(இ-ள்.) சுக்கிரனுக்கு ஐந்தாம் இடத்துக்கு உடையவனும், ஆறாம் இடத்துக்கு உடையவனும் கூடி, இலக்கனத்தில் இருக்கப் பிறந்தவன், இராசாவாலே கண் பிடுங்கப்பட்டுப் போவான். இதுவல்லாமல் இரண்டாம் இடத்துக்கு உடையவன் செவ்வாயுடனே கூடி இலக்கனத்தில் இருக்கப் பிறந்தவன் காதிலே நோயுண்டாய் இருப்பான் என்றவாறு.

## கண்நோய் உடையவன்

*மந்தனும் செவ்வா யோடு வாழ்ந்திடக் குளிகன் தானும்*
*வந்திடக் குடும்பம் தன்னில் வளரும்நா யகனும் கண்ணில்*
*நொந்திடும் ரோக மாகும் நோக்குத்தா னத்தில் பாவர்*
*உந்திட வெகுவாய் கண்ணில் ரோகமாய்க் கொடூர*
*மாமே. (56)*

(இ-ள்.) சனியும் செவ்வாயும் குளிகனும் கூடி, இரண்டாமிடத்து உடையவனுடனே இரண்டாமிடத்தில் கூடியிருக்க, நேத்திர ரோகமாய் இருப்பான். இரண்டாமிடத்தில் பாவக்கோள் இருக்க கண்ணில் நோய் உள்ளவனாக அச்சாதகன் விளங்குவான் என்றவாறு.

## நல்ல பார்வை உடையவன்

*வாக்கினுக் குடைய நாதன் வாழ்சுப ருடனே கூடி*
*ஆக்கமாம் சுபரே பார்க்க அங்கிசம் அவரே யாக*
*தீர்க்கமாய்க் குளிர்ந்த கண்ணாய் ! திருட்டியும் நல்ல தாகப்*
*பார்க்கினில் நோக்க மிக்க பார்வையில் இருப்பன் பாரே. (57)*

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன் சுபக் கிரகங்களுடனே கூடி இருக்க, சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட, சுபக்கிரகங்கள் அங்கிசமாக இருக்கப் பிறந்தவன் குளிர்ந்த பார்வையையும் நல்ல நயனத்தையும் உடையவனாக இருப்பான் என்றவாறு.

### வாக்கு சித்தி உடையவன்

வாக்கினில் சுபர்கள் ஏற வளர்மதி முகமும் நன்றாம்
வாக்கினில் சுபர்கள் உச்சம் வர்க்கமே யாக வந்தால்
வாக்கினுக் குடையோன் நல்ல வர்க்கமே சுபரே யாக
வாக்கினில் சித்தி உண்டாய் மண்ணினில் வாழ்வ தாமே. *(58)*

**(இ-ள்.)** இரண்டாம் இடத்தில் சுபக்கிரகங்களை இருக்க, நல்ல முகமுடை யவனாய் இருப்பான். இரண்டாம் இடத்தில் சுபக்கிரகங்கள் இருந்து, உச்ச வர்க்கத்தில் இருக்க, இரண்டாம் இடத்துக்கு உடையவன் சுபக்கிரகமாக, உச்ச வர்க்கத்திலே இருக்க, வாக்குச் சித்தி உண்டாய் இருப்பான் என்றவாறு.

### நெய்யில் கையிடுபவன்

குடும்பதானத்தைச் செவ்வாய் கோபமாய் நோக்கப் பின்னும்
கடும்பகல் கதிரோன் தானும் கண்ணினால் பார்க்க நெய்யில்
இடுங்கையின் கண்ணி ரண்டில் இராகுவே இருக்கப் பாவர்
நெடுங்கண்ணால் பார்க்க நெய்யில் நிர்ணயக் கையா
வானே. *(59)*

**(இ-ள்.)** இரண்டாம் இடத்தைச் செவ்வாயும், சூரியனும் பார்க்கப் பிறந்தவன் நெய்யில் கையிடுவான். இதுவல்லது இரண்டாம் இடத்திலே இராகு இருக்க, பாவக்கிரகங்கள் இரண்டாம் இடத்தைப் பார்க்க, நிர்ணயமாக நெய்யில் கையிடுவான் என்றவாறு.

### இதுவுமது

ஏழினில் ஆறில் எட்டில் இயல்புடன் வெய்யோன் நிற்க,
உள்ளிய செவ்வா யாலும் ஊறிட மற்றோர் பார்க்க
தாழித நெய்யில் கையான் அல்லது தப்பில் சொல்ல
ஆழியின் முத்துப் போல வசூரியா வதுகாண் பின்னே. *(60)*

**(இ-ள்.)** ஏழாம் இடமாதல், எட்டாம் இடமாதல், ஆறாம் இடமாதல் சூரியன் நிற்க அல்லது செவ்வாயாகிலும் நிற்க, மற்றக் கிரகங்களாலே பார்க்கப்படப் பிறந்தவன், நெய்யிலே கையிடுவான் அல்லது வைசூரி பிணி வந்து சேரும் என்பது.

## கபடன்

நேந்திர தானம் தன்னில் இகழ்பவர் இருக்கப் பார்க்க
பார்த்திடும் கண்கள் கோணல் பல்லுமே பருத்தி ருக்கும்
சாத்துமுக் கோள னோடு சதிபெறு குளிகன் சாரத்
துர்த்திடு முகமே யாகும் சூனியக் கபட னாமே: *(61)*

**(இ-ள்.)** இரண்டாமிடத்தில் பாவக்கிரகங்கள் இருக்க, பாவக்கிரகங்கள் பார்க்க, துர்முகமும், பருத்த பல்லும் உடையவனாய் இருப்பான். இரண்டாம் இடத்துக்கு உடையவன் குளிகனுடனே கூடியிருக்க, கபமுள்ள முகமாய் இருப்பான் என்றவாறு.

## நல்ல பார்வை உடையவன்

வாக்குத்தா னத்தோன் கேந்திரம் தன்னிலே வருந்தி வாழத்
தீர்க்கா முகமும் நல்ல சிரிப்புடன் வாக்கும் உண்டாம்
மார்க்கமாம் உச்சம் ஆட்சி வர்க்கமாய் அமர்ந்து நிற்க
பார்க்கவே திருட்டி நன்றாம் பால்மதி முகவா னாமே. *(62)*

**(இ-ள்.)** இரண்டாம் இடத்துக்கு உடையவன் கேந்திரங்களிலே இருக்கச் சிரித்த முகத்துடனே இருப்பான். இரண்டாம் இடத்துக்கு உடையவன் உச்சம், ஆட்சி வர்க்கங்களிலே நிற்க, நல்ல பூரண சந்திர உதயமுகம் போல குளிர்ந்த முகத்தை உடையவனாக நல்ல கண்களை உடையவனாக இருப்பான் என்றவாறு.

## பல், நாக்கு, நோய் உடையவர்கள்

வாக்குத்தா னத்தோன் இராகு வானவ னுடனே கூடி
ஆக்கமாய் ஈரா றெட்டில் ஆறினில் இராகு வாழத்
தீர்க்கரா சிக்கு நாதன் திசையப காரத் தேனும்
பார்க்கினில் பல்லு ரோகம் பதியமால் நாக்கு ரோகம். (63)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன் இராகுவுடனே கூடி, ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, இராகு இருந்த இராசிக்கு உடையவனுடனே கூடியிருக்க, இவர்களுடைய திசை அபகாரங்களிலே பல்நோய் வரும் என்பது. இப்படிப் புதன் இருக்க, நாக்கில் நோய் வரும் என்பது.

## நோயாளி

இராகுவின் உடன்இ ரண்டில நாதனும் மூன்றின் கோளும்
சரகம மாக ஊறில் கண்டந்தனில் மயிரும் சும்பன்
சுராசனி கதிரோன் ரண்டில் தோன்றிட தரித்திர வானன்
சரசினில் சனியும் சேயும் சார்ந்திட சகல ரோகன். (64)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவனும் மூன்றாம் இடத்துக்கு உடையவனும் இராகுவுடனே கூடியிருக்கப் பிறந்தவன் முடம், இரண்டும் சும்பிப்பான். இதுவல்லாது ஆதித்தனும் சனியும் இரண்டாம் இடத்திலே இருக்க தரித்திரம் வரும். இரண்டாம் இடத்தே சனியும் செவ்வாயும் இருக்க சகல ரோகமும் வரும் என்றவாறு.

## மூக்கரையன்

வாக்கினுக் குடைய நாதன் வளர்வியாழன் தன்னோ டேகி
ஆக்கமா றெட்டீ ராறில் அண்டிட நாசி இல்லான்
தீர்க்கமாய் உச்சம் ஆட்சி தன்னிலே தெளிவாய் நின்றால்
நீங்கிடும் தோசத் துக்கு நிகருமா லையவா னாமே. (65)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன் வியாழத்துடனே கூடி, ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடம் இவற்றில் இருக்க, மூக்கறையனாவான். இந்தக் கிரகம் இருந்த தானத்திலே உச்சம், ஆட்சியிலே இருந்தால் தோசத்துக்கு மாலையன் என்றவாறு.

## வித்தை இல்லாதவனும் கற்றவனும்

*புதனொடு வியாழமி ரண்டில் புண்ணிய ரிவர்கள் பூணச்*
*சதமிடும் ஆறில் எட்டி ல் சார்ந்திட வித்தை இல்லான்*
*பதமொடு திரிகோ ணத்தில் பகருங்கேந் திரங்கள் தன்னில்*
*விதமுடன் நின்றால் நல்ல வித்தையால் மிகவாழ்*
*வானே.(66)*

(இ-ள்.) புதன், வியாழன் இரண்டாம் வீட்டிற்கு உடையவன், இவர்கள் மூன்று பேரும் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவற்றில் இருக்க வித்தையில்லாதவனாவான். இந்தக் கிரகங்கள் மூன்று பேரும் கேந்திர திரிகோணங்களிலே இருக்க வித்தைகளைக் கற்றவனாக விளங்குவான் என்றவாறு.

## பவன நோய் உடையவன்

புண்ணிய புதனோர் இரண்டில் பொருந்திட பலமில் லாமல்
நண்ணினால் மல்லுக் கட்டாய்ச் சண்டையில் நரகம் என்க
கண்ணுடைக் குருவும் ரண்டிற் கதிபனும் பலவீ னம்மாய்ப்
பன்னிடப் பவன ரோகம் வியாதியா பலுகும் தானே. (67)

(இ-ள்.) புதன் இரண்டாம் இடத்தில் பலவீனமாக இருக்க, மல்லுக்கட்டுச் (மல்யுத்தத்தால்) சண்டையால் செத்துப்போவான். வியாழனும் இரண்டாம் இடத்துக்கு உடையவனும் பலகீனமாக இருக்க பவன வியாதி உடையவனாக இருப்பான் என்றவாறு.

## முக்கரையன்

சொன்னஇக் கோளன் நல்ல சுபவியாழன் தன்னோ டேகிப்
பன்னுமா றெட்டீ ராறில் பதியமூக் கறைய னாவன்
அன்னவர் சுபரோ டுறிக் கேந்திரதிரி கோண மானால்
தன்னிலே சுயவாக் குண்டாய் தரணியில் வாழ்வான் தானே. (68)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன், வியாழனுடனே கூடி, ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடம் இவற்றில் இருக்க மூக்கரையன் ஆவான். இரண்டாம் இடத்துக்கு உடையவன் சுபக்கிரகங்களுடனே கூடிக் கேந்திர திரிகோணங்களிலே இருக்க, சுயவாக்கு உடையவனாக இருப்பான் என்றவாறு.

## வழக்குரைப்பவன்

மாலவன் வியாழன் உச்ச இராசிஅங் கிசமாய் வாழ
சீலமாஞ் சுபக்கிர கத்தால் சிரித்துடன் பார்க்க வல்லால்
கோலமாம் பர்வா தாங்கிசம் குணமுடன் ஏறி நின்றால்
வாலசீ வசனாய்த் தானே மன்னவன் வழக்கும்
சொல்வான். (69)

(இ-ள்.) புதனும் வியாழனும் அங்கிசத்தில ஏறி உச்ச இராசியில் இருக்க, சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட அல்லது பர்வதாங்கிசத்திலே குணமுடன் ஏறி நின்றால் பால சீவகனாகத்தான் ஆஸ்தானச் சபையில் பேச வல்லவனாகவும் வழக்குச் சொல்ல மிக்கவனாகவும் அழகானவனாகவும் இருப்பான் என்றவாறு.

## வித்துவான்

கேந்திரத்திரி கோணம் தன்னில் கிளர்குரு இருக்கச் சுங்கன்
சார்ந்திட உச்ச மாக இரண்டிலே புதனும் சார
ஆய்ந்தநல் கணக்கும் ஆறு சாத்திரம் படிக்க வல்லன்
வாய்ந்திடும் கணித எண்ணால் வரும் பலன் சொல்லு
வானே. (70)

(இ-ள்.) வியாழன் கேந்திர திரிகோணங்களிலே இருக்க, சுக்கிரன் உச்சமாக இருக்க, இரண்டாம் இடத்தில் புதன் இருக்கப் பிறந்தவனுக்குச் சகலவிதமான கணக்கும் வரும் என்றவாறு. சாத்திரமும் படிக்க வரும். கணிதம் முதலானது எல்லாம் எண்ணவரும் என்றவாறு.

### *சகலகலாவல்லவன்*

*வாக்கினிற் செவ்வா யோடும் வருசுப ருடனே கூடப்*
*பாக்கிய புதனே பார்க்கப் பசியகேந் திரங்கள் தன்னில்*
*ஆக்கமாம் புதனே மேவ யாதொரு குறையில் லாமல்*
*தாக்கனாங் கலைக்கி யானம் சகலமும் அவன்பா லாமே.(71)*

(இ-ள்.) இரண்டாம் இடத்திலே செவ்வாயும் சுபக் கிரகங்களும் கூடியிருக்கப் புதனாலே பார்க்கப்பட, புதன் கேந்திரங்களிலே இருக்க, சகலகலா வல்லவனாவான் என்றவாறு.

### *வேதம், தர்க்க சாத்திரம் அறிந்தவன்*

*சூரியன் செவ்வாய் ரண்டில் துணைவனை அன்பி னாலே*
*காரியம் வியாழன் வெள்ளி கண்ணாலே நோக்கப் பெற்றால்*
*பாரிய பர்வ தாங்கிசம் பயனுடன் பதிந்து நின்றால்*
*சீரியவேத தர்க்க சாத்திரம் சொல்வன் தானே. (72)*

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன், ஆதித்தன், செவ்வாய் இவர்களை வியாழனும் சுக்கிரனும் பார்க்க, பர்வதாங்கிசம் ஏறி இருக்கப் பிறந்தவன் வேத தர்க்க சாத்திரமும் பாட, படிக்கவரும் என்றவாறு.

### *புகழுடையவன்*

*குருவுடன் இரண்டு கொள்ள குணமுடன் பலவா னாக*
*உருபதி தன்னி லுற்று உயர்கதிர் சுங்கன் பார்க்கப்*
*பரிவொடு சப்த சாத்திரம் படித்துடன் கீர்த்தி யாக*
*வரிசையாய் எவர்க்கும் மேலாய் வந்தவன் என்ன லாமே. (73)*

(இ-ள்.) வியாழனும் இரண்டாம் இடத்துக்கு உடையவனும் பூரண பலமாக இருக்க, சூரியனும், சுக்கிரனும் இவர்களைப் பார்க்கப் பிறந்தவனுக்குச் சப்த சாத்திரமும் வரும். அதனால் அனைவருக்கும் மேலான புகழையுடைய வனாகத் திகழ்வான் என்றவாறு.

## வேதங்களைக் கற்றவன்

சுங்கன்கேந் திரத்தி லாதல் சுகத்திரி கோணத் தாதல்
தங்கிட புதனும் பார்க்க சதிரொடு வெள்ளி பார்க்க
மங்கைகேள்! பர்வ தாங்கிசம் மந்தனே ஏறி நின்றாற்
சங்கையாய்ப் பிறந்த பிள்ளை சகலசாத் திரவா னாமே. (74)

(இ-ள்.) சுக்கிரன் கேந்திரத் திரிகோணங்களிலே இருக்க, புதன், சுக்கிரனைப் பார்க்க, சுக்கிரன் புதனைப் பார்க்க, சனி பர்வதாங்கிசமே இருக்கப் பிறந்தவன் வேதங்களைப் படிக்க வல்லவன் என்றவாறு.

## மனைவி மரணம்

ஏழினுக் குடையோன் சுங்கன் எழில்பெறும் இரண்டின் நாதன்
வாள்விழிப் பாவர் பார்க்க மருவிட எட்டீ ராறில்
தாழ்வுறு மாறில் இந்தத் தானங்கள் தன்னில் நின்றால்
ஊழ்விதி யாக வந்த உயர்மனை யாட்டி சாவார். (75)

(இ-ள்.) ஏழாம் இடத்திற்கு உடையவனும், சுக்கிரனும், இரண்டாம் இடத்துக்கு உடையவனும் பாவக்கிரகங் களுடனே கூட, அல்லது பாவர் பார்க்க, ஆறாமிடம், எட்டாம் இடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்களில் பிறந்தவனுக்குப் பெண்சாதி செத்துப்போவாள் என்றவாறு.

## ஒரு மனைவி

கண்ணுடைத் தானத் தோனும் கற்புடை மக்க ளான
பெண்ணுடை தானத் தோனும் பெறும்பல வானாய் வந்து
நண்ணிய உச்சம் மீதில் நாடியே இருந்து வாழ்ந்தால்
எண்ணமே நினைப்ப தேனோ ஏகபெண் டாட்டி யாமே. (76)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவனும், ஏழாம் இடத்துக்கு உடையவனும் அதிபலமாக இருக்க, அல்லது உச்சங்களிலே இருக்க, ஒரு மனைவி உண்டு என்றவாறு.

## வெள்ளி, வெங்கல உண்கலம்

வாக்கினுக் குடையோன் வெள்ளி மான்மதி கேந்தி ரத்தில்
தாக்கிட வெள்ளி பாத்திரம் தன்னிலே பொசிபுண் டாகும்
மார்க்கமாய் இரண்டின் நாதன் அருள்குரு வெள்ளி திங்கள்
தீர்க்கமாய் இவர்கள் கூட தினமும்வெண் கலத்தில் உண்பான். (77)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவனும் சுக்கிரனும் சந்திரனும் கூட,கேந்திரங்களிலே இருக்க, வெள்ளிப் பாத்திரத்திலே சாப்பிடுவான். இதுவல்லாமல் இரண்டாம் இடத்திற்கு உடையவனும், வியாழனும், சுக்கிரனும், சந்திரனும் இந்த நான்குபேரும் கூடியிருந்தால், எந்த நாளும் வெண்கலப் பாத்திரத்திலே சாப்பிடுவான் என்றவாறு.

## இரும்புப் பாத்திரம் அல்லது சட்டி உண்கலம்

சென்மவா னாகி நல்லச் சீர்பெறும் சனியோ டேகித்
தன்மமில் இருப்புப் பாத்திரம் தன்னிலே புசிப்புண் டாகும்
சொன்னதா னத்தில் செவ்வாய்த் தோன்றிடப் பாவர் பார்க்க
அன்னமே சட்டி தன்னில் அறிவுடன் உண்பான் பாரே. (78)

(இ-ள்.) இரண்டாம் இடத்தில் இலக்கனாதிபதியுடன் சனி சேர்ந்திருக்க, அச்சாதகன் இரும்புப் பாத்திரத்தில் உண்பான். இரண்டாம் இடத்தில், செவ்வாய் இருக்க, அதனை பாவக்கிரகம் பார்க்க, அச்சாதகன் மண்சட்டியிலே உண்ணுவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## பிச்சைக்காரன்

வாக்கினுக் குடையோன் பாவக் கிரகங்க ளுடனே வாழ்ந்து
தாக்குதா வாக்கினி தண்டா யுதப்பர்வ தங்களில் ஏறின்
வாக்கிய சோறு மெத்த அசனமே இரண்டின் நாதன்
திக்குநீ சாங்கி சத்தில் தீயவர் பார்த்தால் பிச்சை. (79)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன் பாவக்கிரகங்களுடனே தாவாக்கினி தண்டாயுதப் பர்வதங்களிலே ஏறி இருந்தால் மிஞ்சின பொசிப்பாய் பொசிப்பான். இரண்டாம் இடத்துக்கு உடையவன், நீசாங்கிசம் ஏறிப் பாவராலே பார்க்கப்பட்டால் பிச்சையெடுத்து உண்பான் என்றவாறு.

## பலவீட்டில் உண்பவன்

வாக்கினில் சுபரிருக்க மன்னவர் சுபரோடேக
ஆக்கமாம் சுபரே பார்க்க அதிசுக போச னந்தான்
வாக்குளோன் பகைநீ சத்தில் வருந்திய தீயர் பார்க்க
ஆக்கமாய்ப் பலவீட் டன்னம் உண்டவன் தன்னை வைவான். (80)

(இ-ள்.) இரண்டாம் இடத்திலே சுபக்கிரகங்கள் இருக்க, இரண்டாம் இடத்துக்கு உடையவனும் சுபக்கிரகங்களுடனே கூடியிருக்க, சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட பல வீட்டிலே உண்பான். இரண்டாம் இடத்திற்கு உடைய வாக்குநாதன் பகை, நீசத்தில் இருக்க, பாவராலே பார்க்கப்பட, பல வீட்டிலே உண்பான். உண்ட வீட்டிற்கு உடையவர்களை இழிவாகப் பேசுவான் என்றவாறு.

## சிறிது உணவு உண்பவன்

குடும்பத்தா னத்தோன் நல்லன் குணமுடன் சுபராய் உச்சம்
கடும்பலம் ஆட்சி தன்னில் கண்டிட சுபரே பார்க்க
இடும்பொசிப் பெல்லாம் கொஞ்சம் ஏந்திழை யாரே கேளீர்!
குடும்பத்தா னத்தான் சேதி கூறினேன் கொஞ்சம் தானே. (81)

(இ-ள்.) இரண்டாம் வீட்டுக்கு உடையவன் சுபக்கிரகமாக உச்ச ஆட்சிகளிலே இருக்க, சுபராலே பார்க்கப்பட கொஞ்சமாகப் புசிப்பான் என்றவாறு.

## சௌண்டி, சிரார்த்த உணவு உண்பவன்

வித்தையாம் பாவர் வீட்டில் விளங்கிய சனியாம் பன்னொன்
குத்திரச் சனியோ டேகக் குணமில்லா இராசி தன்னில்
வற்றிட மந்தன் பார்க்க உண்பது சவுண்டி சிராா்த்த
மத்தனே கேளீர் உண்ணும் அடவிது அறிந்து பாரே. (82)

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன் சனியாகிலும், அல்லது இரண்டாம் இடத்துக்கு உடையவ னுடனே சனியாகிலும் கூடி நீச இராசியிலே இருக்க, அல்லது சனியாலே பார்க்கப்படப் பிறந்தவன் சௌவுண்டி, சிரார்த்தங் களிலே சாப்பிடுவான் என்றவாறு.

## அன்னதானம் அளிப்பவன்

பொன்னவன் சிங்கா கிசத்தில் பொருந்தியே ஏறி நிற்க
என்னவன் சுங்கன் கோபு ராங்கிசம் ஏறி வாழ்த்த
தன்னவன் அயிரா பதாங்கி சந்தான்னில் பலமாய் நின்றால்
அன்னமே சுநேகம் பேருக் களித்தவன் இரட்சிப் பானே. (83)

(இ-ள்.) வியாழன் சிங்காகிசம் ஏறி இருக்க, சுக்கிரன் கோபுராங்கிசம் ஏறி இருக்க, இரண்டாம் இடத்துக்கு உடையவன் அயிராபதாங்கிசம் ஏறி இருக்கப் பிறந்தவன். அனேக சனங்களுக்குக்கெல்லாம் அன்னதானம் செய்து காப்பாற்றுவான் என்றவாறு.

## எதையும் உண்பவன்

சென்மஇலக் கனத்தின் நாதன் சீரொடும் இரண்டின் கோளை
தன்னவ னென்று பார்க்க சார்பவ ருடனே நோக்க
இன்னது புசிப்போம் என்று இருந்திடான் ஏதா னாலும்
முன்னமே கிடைத்த தெல்லாம் முகந்திடான் புசிப்பன்
என்றான். *(84)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி, இரண்டாமிடத்ததிபதியை நோக்கினாலும், பாவர்கள் அவனை நோக்கினாலும் இதைத்தான் உண்ண வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லாது கிடைத்ததையெல்லாம் உண்பான் என்றவாறு.

**இரண்டாம் பரவகப் பலன் முற்றும்.**

# மூன்றாம் பாவகப் பலன்

## பொது

ஓதிய பலனே மூன்றின் பலனதை உரைக்க வேண்டிப்
பேதமில் உடன்பி றப்பைப் பெரும்பராக் கிரமந் தன்னைச்
சாதஞ்சா வகமே கண்டம் தன்னில்சுரம் சுருதி யாகும்
போதஆ பரணம் வன்மம் போகம்வீ ரியம்உண் டாமே. *(85)*

(இ-ள்.) சகோதரங்கள், பராக்கிரமம், கண்டம், சுரம், சுருதி, ஆபரணம், போகம், வீரியங்கள் இதுவெல்லாம் மூன்றாம் இடத்தைக் குறித்துச் சொல்ல வேண்டியது.

## சகோதர இலாபம்

கூடவே வந்தோன் தானும் ஆவது கூற மூன்று
தேடிய இலாபம் ஒன்பான் சிறந்தஏ ழிதனைச் சொல்ல
பாடியே நாலு பேர்கள் இராசியின் பதியின் வாழ்ந்து
ஒடிய திசைகள் தன்னில் உறுசகோ தரம்உண் டாமே. *(86)*

(இ-ள்.) சகோதரத் தானமாவது, மூன்றாமிடம், ஒன்பதாமிடம், பதினோராமிடம், ஏழாமிடம். இந்த இராசிகள் நான்கிற்கும் உடைய கிரங்கள், அவர்களுடைய திசை சுபகாரியங்களிலே சகோதர இலாபம் உண்டு என்றவாறு.

## இதுவுமது

பலமொடு மூன்றின் கோளன் பெருதிரி கோணம் தன்னில்
நலமொடு மூன்றி லுள்ள நாதனும் பலவா னாகி
இலமொடு இரண்டு கோளும் இருந்துண்ணும் திசைகள் தன்னில்
பவனொடு சகோத ரங்கள் பலுகிடும் அறிந்து பாரே. *(87)*

(இ-ள்.) மூன்றாம் இடத்துக்கு உடையவன் திரிகோணத்தில் இருக்க, அவன் பலவானாக இருக்க, மூன்றாம் இடத்தில் இருந்தவன் பலவானாக இருக்க, இவர்கள் இரண்டு பேருடைய திசை அபகாரங்களிலே சகோதர இலாபம் உண்டு என்றவாறு.

## தலைவன்

*சேய்பல வானே யாகிற் சகோதரம் தீர்க்கா யுள்தான்*
*சேய்பல வானாய் சென்மம் மீதினில் சேரு மாகில்*
*தூயசா தகன்பி றப்புத் தோன்றுமே பிரபு வாகும்*
*தீயகோ பத்தில் வாழ்வான் செந்திரு அனைய மாதே ! (88)*

(இ-ள்.) செவ்வாய் பலவானாக இருந்தால் சகோதரங்கள் தீர்க்காயுளாக இருப்பார்கள். சேய் பலவானாய் இலக்கனத்தில் இருக்க பிறந்த பிள்ளை பிரபுவாகவும், கோபத்திலே மிகுந்தவனாகவும் இருப்பான் என்றவாறு.

## இளைய சகோதரங்கள் அழிவு

*சேயுடன் மூன்றின் கோளன் இருந்திடஆ றெட்டீ ராறில்*
*மாய்வெனும் சகோத ரங்கள் மற்றவர் பாவ இராசி*
*தோய்வுறப் பாவர் கூடில் தோன்றிய சகோத ரங்கள்*
*போய்விடும் நாச மாகும் பூமியில் இராது மாதே ! (89)*

(இ-ள்.) மூன்றாம் இடத்துக்கு உடைவன், செவ்வாயுடனே கூடி ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவற்றில் இருக்க, சகோதர நாசம் உண்டு. இவர்கள் பாவ இராசிகளிலே இருக்க அல்லது பாவக்கிரகங்களுடனே கூடியிருக்கச் சகோதரம் நாசம் உண்டு என்றவாறு.

## இதுவுமது

*காரகச் செவ்வாய் நீசன் கரந்தஸ்த மனங்கள் ஏறி*
*கோரநீ சாங்கி சத்தில் அல்லது கொடுமை யான*
*பார்பவ ருடனே கூடிப் பாவசட் டி யங்கிசம் ஏற*
*சார்சகோ தரங்கள் எல்லாம் சாற்றினார் நாசம் தானே. (90)*

(இ-ள்.) சகோதரக் காரகன் செவ்வாய் நீச அஸ்த மனங்களிலே இருக்க நீசாங்கிசம் ஏறி இருக்க அல்லது நீசக்கிரகங்களுடனே கூடி இருக்கும். பாவசட்டி அங்கிசம் ஏறி இருக்கச் சகோதரங்கள் எல்லாம் நாசத்தை அடைத்து போவார் என்றவாறு.

## இளமையில் சகோதரர் மரணம்

திருந்திய சேயா னாலும் திரிபதிக்குக் குடையோன் தானும்
வருந்திய பாவ ரோடே மருவிட இருந்த இராசி
இருந்தவர் பாவர் கூட அல்லவா லிபத்தில் கூட
பொருந்திய சகோத ரங்கள் போய்விடும் நாச மாமே. *(91)*

(இ-ள்.) சகோதரக் காரகனை செவ்வாயாவது, மூன்றாமிடத்துக்கு உடையவனாவது அதில் பாவக் கிரகங்களுடனே கூடியிருக்க, அந்த இராசிக்குடையவன் பாவக் கிரகமாக, வாலிபத்தில் சகோதர நாசம் உண்டாம் என்றவாறு.

## மாற்றான் தாயால் சகோதரம்

வாக்கினுக் கதிபன் ஈரா றெட்டினில் ஆறில் மிக்காய்த்
தீர்க்கமாய் சேயும் பாவர் கூடவே சேரத் திங்கள்
ஆக்கமாய் எவரோ டாகில் அழுந்திட அறிவாய் நன்மை
தாக்கிய தாயால் அல்லால் தாயரும் உண்டாம் தம்பி. *(92)*

(இ-ள்.) இரண்டாம் இடத்துக்கு உடையவன் பன்னிரண்டாம், ஆறாம், எட்டாம் இடங்களிலே பலவானாகச் சகோதர காரகனானச் செவ்வாய் பாவக்கிரகங் களுடனே கூடியிருக்க, மாதுரு காரகனான சந்திரன், எந்தக் கிரகங்களுடனேயாவது கூடியிருக்கப் பிறந்தவனுக்கு இரண்டாவது தாயார் இருப்பார். அந்தத் தாயாருக்குப் பிள்ளை உண்டாகி இவனுக்குச் சகோதரம் உண்டென்றவாறு.

## சகோதரர் அழிவு

சகோதரத் தானம் தன்னில் தன்மையாய்ச் சுபரே ஊறப்
பகோரமாய் தீர்க்கா யுள்தான் பலுகிடும் சகோத ரந்தான்
அகோரமாய் பாவத் தானம் அண்டிட அவரே பார்க்க
இகலொடும் வெகுநோ யாலே இருந்திடார் உடன்வந் தாரே. (93)

**(இ-ள்.)** சகோதரத் தானத்திலே சுபக்கிரகங்கள் இருக்க, பார்க்க சகோதரங்கள் தீர்க்காயுளாகஇருப்பார்கள். அல்லவெனில் சகோதரத் தானத்திலே பாவக்கிரகங்கள் இருக்க, பார்க்க சகோதர நாசம் உண்டாம் என்றவாறு.

## நேர் இளைய சகோதரன் மரணம்

ஆதித்தன் மூன்றாம் தானம் தன்னிலே அறிவர் ஏற
ஆதித்தன் பாவர் பார்க்க வந்ததில் முன்னோன் சாவான்
சாதித்தன் சனியும் சேயும் சார்ந்துஅத் தானம் சேரில்
வேதித்தன் பாவர் பார்க்க விளங்கிய பின்னோர் சாவார். (94)

**(இ-ள்.)** ஆதித்தன் மூன்றாம் இடத்தே இருக்க, பாவக்கிரகங்கள் அந்த ஆதித்தனைப் பார்க்கப் பிறந்தவனுக்கு மூத்தவன் செத்துப்போவான். மூன்றாம் இடத்தே சனியாவது செவ்வாயாவது இருக்க, இவர்களை பாவக்கிரகங்கள் பார்க்கப் பிறந்தவனுக்கு நேரே இளையப்பிள்ளை செத்துப்போம் என்றவாறு.

## இளைய சகோதரங்கள்

சொன்னதா னத்தைத் தொட்டுச் சுகதிரி கோண கேந்திரம்
தன்னிலே பாவர் வாழச் சகோதர நாசம் உண்டாம்
நன்மையாம் சுபரே வாழ நலமுடன் வந்தோர் வாழ்வர்
சன்னையாய்ச் சுபரும் பாவர் சார்ந்திடச் சமனா கும்மே. (95)

**(இ-ள்.)** மூன்றாமிடத்துக்குக் கேந்திர கோணங்களிலே பாவக்கிரகம் இருக்கப் பிறந்தவன் சகோதரம் நாசம் வரும். மூன்றாம் இடத்திலே சுபரிருக்கச் சகோதரம் தீர்க்கமாக

இருக்கும். மூன்றாம் இடத்திலே சுபக்கிரகமும் பாவக்கிரகமும் இருந்தால் சமனாக இருக்கும் என்றவாறு.

## தாயாரல்லாதாரல் பேணப்படுபவன்

சந்திரன் எட்டீ ராறில் சார்ந்திட மூன்றாம் தானம்
தந்திரி யுடனே கூடிச் சார்ந்திட பிறந்த பிள்ளை
வந்தநாள் முதலாய்த் தாயார் வளர்முலை குடியான் வேறே
செந்திரு வளையால் உண்டாய் திருமுலைப் பாலை
உண்பான். *(96)*

(இ-ள்.) ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடம் இவைகளிலே சந்திரன் இருக்க, அவனுடனே மூன்றாம் இடத்துக்கு உடையவனும் இருக்கப் பிறந்த பிள்ளை தாயார் முலை குடியாமல் வேறு ஒருத்தியின் முலை குடித்து வளருவான் என்றவாறு.

## சகோதரம் இல்லாதவன்

மாதருத் தானத் தோனும் வரும்சகோ தரத்தான் தானும்
ஆதர வாகக் கூடி அன்புடன் நாலில் ஏக
ஓதிய ஒருவன் அல்லால் உயிருடன் பிறப்பே இல்லை
சாதகன் யோக வானாய்த் தரணியில் வாழ்வான் தானே. *(97)*

(இ-ள்.) நான்காமிடத்துக்கு உடையவனும் மூன்றாமிடத்துக்குடையவனும் நான்காமிடத்திலே இருக்கச் சகோதரம் இல்லாதவனாகவும் சாதகன் யோகவானாகவும் இருப்பான் என்றவாறு.

## இளைய சகோதரன் மரணம்

மூன்றினுக் குடைய கோளன் முதிர்ந்தசே யுடனே கூடி
ஆன்றிடும் வோரை தன்னில் அமர்ந்திட வன்னி தாக
ஈன்றிடும் பிள்ளை தன்னை இனியசகோ தரமாய்க்
கொள்வான்
மூன்றினில் சனிவந் தெய்தில் முனியும்நே ரிளையோர்
சாவார். *(98)*

(இ-ள்.) மூன்றாம் இடத்துக்குடையவனும் செவ்வாயும் கூடியிருக்க, அன்னிதாய் இருக்கின்றவனை சகோதரமாய் வைத்துக் கொள்வான். மூன்றாம் இடத்தே சனியிருக்க பிறந்தவனுக்கு நேர் இளைய சகோதரன் செத்துப்போம் என்றவாறு.

## சகோதரிகள்

*புருட இராசியிலே மூன்றுக் குடையவன் பொருந்த, பார்க்க*
*வரிசையாய்ச் சகோத ரங்கள் வளர்ந்திடும் மூன்றின் நாதன்*
*திருதிரி இராசி மீதில் சேர்ந்திடக் கிரகம் கூடி*
*கருவுடன் பார்க்கப் பெண்ணாம் சகோதரம் கண்டு*
*கொள்ளே. (99)*

(இ-ள்.) மூன்றாம் இடத்துக்கு உடையவன் புருட இராசியிலே இருக்க, புருடக்கிரகங்கள் பார்க்க, புருட சகோதரங்கள் கண்டுகொள்க அதுவல்லது மூன்றாம் இடத்துக்கு உடையவன் ஸ்திரி இராசியிலே இருக்க, ஸ்திரி கிரகமான சுக்கிரனும் சந்திரனும் கூடியிருக்க, அல்லது இவர்களைப் பார்க்க பிறந்த பிள்ளைக்குத் ஸ்திரி சகோதரமே உண்டென்றவாறு.

## சகோதரங்களின் ஆயுளும் ஆரோக்கியமும்

*கேந்திரத்திரி கோணம் தன்னில் கெதியுடன் மூன்றில் கோள்கள்*
*சார்ந்திடும் வோரை நன்றாய்த் தானது சுபரே பார்க்க*
*வாய்ந்துடன் பிறந்த பிள்ளை மந்திரி தீர்க்கா யுள்தான்*
*சேர்ந்திடும் சகோத ரங்கள் தீர்க்கஆ ரோக்கிய மாமே. (100)*

(இ-ள்.) மூன்றாமிடத்துக்கு உடையவன் கேந்திர திரிகோணங்களிலே இருக்க, சுபக்கிரகங்கள் ஆட்சியாக இருக்க, சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட பிறந்த பிள்ளைக்குச் சகோதரங்கள் எல்லாம் தீர்க்காயுள் உடையவராய் ஆரோக்கியத்தை அடைந்து இருப்பார்கள் என்றவாறு.

### சகோதரங்கள் இல்லாதவன்

மூன்றினுக் குடைய கோளன் முனிந்தஇலக் கனத்தி லேற
ஆன்றலக் கனத்து நாதன் அமரஇலக் கனத்தில் தாயார்
ஈன்றவே உண்டாம் கர்ப்பம் இராதுவல் லாதே போகும்
தோன்றிய பலனைச் சொன்னோம் சோர்வில்லை அறிந்தா ர்
சொல்லே. *(101)*

(இ-ள்.) மூன்றாமிடத்துக்கு உடையவன், இலக்கனத்தில் ஏறி இருக்க, இலக்கனாதிபதி இலக்கனத்தில் இருக்க, இவன் ஒருவனைத் தவிர வேறு கர்ப்பம் தங்காது. தங்கினாலும் அது அழிந்து போகும். தக்க பலனை சோதிட நூல் ஆராய்ந்தவர்கள் கூறியபடியே கூறியுள்ளேன் என்றவாறு.

### மூத்த, இளைய சகோதரங்கள்

எத்தனை கிரக இலாபம் மீதிலே ஏற எண்ண
அத்தனை தமக்கு முன்னோ னாமென அழுந்தச் சொல்ல
பத்தியால் இரண்டில் மூன்றில் பதியும்கோள் அதனை எண்ணி
எத்தியாம் தம்பி தங்கை யாமென விரையச் சொல்லே. *(102)*

(இ-ள்.) இலாபத்தானத்தில் எத்தனைக் கிரகங்கள் உள்ளனவோ அவற்றின் எண்ணிக்கையைக் கொண்டு அத்தனை மூத்த சகோதரங்கள் உண்டு என்று சொல்ல வேண்டும். இரண்டாமிடத்தில் மூன்றாமிடத்தில் பதிய அமர்ந்துள்ள கோள்களின் எண்ணிக்கையைக் கொண்டு அத்தனை இளைய சகோதரங்கள் சாதகனுக்கு உண்டு என்று கூறவேண்டும் என்றவாறு.

### சகோதரர்களின் அழிவு

திருந்திய மூன்றின் கோளும் சேயுடன் மூன்றி லேனும்
வருந்தியே பார்த்தே னாக நாலுபேர் பலவா னாகில்
இருந்தவ ருடனே வாழும் கிரகமே எண்ணில் வந்தோர்
மருந்தென நீசம் அத்த மனங்களால் எண்ணும் நாசம். *(103)*

(இ-ள்.) மூன்றாம் இடத்து அதிபதி, செவ்வாயுடன் சேர்ந்து மூன்றாமிடத்தில் இருப்பினும்,மூன்றாம் இடத்தைப் பார்த்தாலும் இவர்கள் பலவான இருக்க, இவர்களுடனே சேர்ந்துள்ள கிரகங்களில் நீசம், அத்தமனம் பெற்றுள்ள கிரகங்களை எண்ணி சகோதரர்களின் அழிவைச் சொல்ல வேண்டும் என்றவாறு.

## இளைய சகோதரர்களின் எண்ணிக்கை

காரகச் செவ்வாய் மூன்றில் கண்டிட அன்னோன் என்றும்
பார்வதாங் கிடமாம் வோரை பார்ராகு முதலாய் எண்ணி
சார்பகை நீச இராசி தள்ளியே சதுராய்ப் பார்த்து
ஓர்தொகை யாக இம்மாத் திரம்சகோ தரமுண்
டெண்ணே. *(104)*

(இ.ள்.) இலக்கனத்திற்கு மூன்றாம் இடத்தில் செவ்வாய் இருக்க, பார்வதாம்சம் ஏறி இருக்க, இராகு முதலாக பகை, நீசம் முதலான இராசியைக் கழித்து, சகோதரர்களின் எண்ணிக்கையைச் சொல்லவேண்டும் என்றவாறு.

## இளைய சகோதரிகளின் எண்ணிக்கை

திண்ணிய மூன்றின் கோளும் சேயனும் பேடு இராசி
நன்னியே திரிகிர கந்தான் நாடியே கூடிப் பார்க்க
எண்ணியே பார்க்கும் போது இயல்சகோ தரமாய் வந்த
பெண்ணிம்மாத் திரந்தான் என்று பேசலாம் பிறந்த
நன்மை. *(105)*

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கு அதிபதியும், செவ்வாயும் பெண் இராசியில் பெண் கிரகங்களோடு கூடி இருக்க, இவற்றை பெண் கோள்கள் பார்த்திருக்கப் பிறந்த சாதகர்க்கு அக்கோள்களின் எண்ணிக்கையைக் கொண்டு உடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இளைய சகோதரர்களின் எண்ணிக்கை

அறிவுடன் மூன்று கோளும் சேயாலும் ஆணின் வோரை
உறில்புரு டக்கோள் கூட பார்த்திட உரைத்த கோளைக்
குறிப்புடன் எண்ணிப் பார்த்துக் குணமுடன் சகோத ரத்தைத்
தெறிப்பொடு ஆணாம் மாத்திரம் என்றுதான் செப்ப
லாமே. *(106)*

**(இ-ள்.)** இலக்கனத்திற்கு மூன்றாம் இடத்திற்கு அதிபதியும் செவ்வாயும் ஆண் இராசியில் ஆண் கோள்களோடு கூடி இருக்க, அல்லது அந்த இராசியை ஆண் கோள்கள் பார்த்திருக்கப் பிறந்த சாதகர்க்கு இக்கோள்களின் எண்ணிக்கையைக் கொண்டு சகோதரர்கள் எத்தனைபேர் என்பதைச் சொல்லவேண்டும்.

## இளைய சகோதர, சகோதரிகள்

பேசிய மூன்றாம் தானம் ஓரையே பெண்ணாய் நல்ல
வாசபோல் திரியே யாக வந்துடன் கூடப் பார்க்க
ஆசில்லாப் பெண்கள் உண்டாம் அதன்பிற குடனே ஆணும்
தேசிக னெனவே வந்து சீருடன் வாழ்வ தாமே. *(107)*

**(இ-ள்.)** இலக்கனத்திற்கு மூன்றாம் இடம் பெண் இராசியாக இருக்க, மூன்றாம் இடத்திற்கு அதிபதி பெண் கோளாக இருக்க அல்லது மூன்றாம் இடம் பெண் கோள்களால் பார்க்க, இச்சாதகனுக்கு சகோதரிகள் பலர் இருப்பார்கள். அதன்பின் சகோதரன் பிறப்பான் என்று சொல்லவேண்டும்.

## இளைய சகோதரர்களின் வலிமை

நாடியே மூன்றின் கோளும் விவில்இராசி பார்த்து நன்றாய்க்
கூடியே வந்தோர் தங்கள் ஸ்திரிகளின் குணத்தைச் சொல்லத்
தேடிய இலக்க னாதன் செயமூன்றில் கோளன் தன்னைப்
பாடியே பார்த்துக் கூடப் பிறந்தவர் பலத்தைச்
சொல்லே. *(108)*

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கதிபதியும் இலக்கனாதிபதியும் ஒன்று சேர்ந்து இருப்பின் , உடன் பிறந்த இளைய சகோதரர்கள் துன்பம் இல்லாமல் ஒற்றுமையுடனும் அன்புடன் சிறக்க வாழ்வார்கள் என்றவாறு.

## இளைய சகோதரர்களின் பிரிவு

*மொழிந்தஇலக் கனத்து நாதன் பதியெனும் மூன்றின்*
*கோளும்*
*தெளிந்தஇலக் கனத்தி லாதல் அல்லது மூன்றில் சேர*
*வளிந்திடும் பகைக ளாக அண்ணனும் தம்பி மாரும்*
*குளிர்ந்தடா விரோத மாகக் கூடிடாப் பிரித்துக்*
*கொள்வார். (110)*

(இ-ள்.) இலக்கனாதிபதியும், மூன்றாம் இடத்ததி பதியும் இலக்கனத்தில் அல்லது மூன்றாமிடத்தில ஒன்றாக இருக்க, இவ்விரு கிரகங்களும் பகைவர் ஒருவருக்கொருவர் பகையாக இருப்பின், சகோதரர்கள் தங்களுக்குள் பகைமை உடையவர்களாக, தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் பிரிந்து வாழ்வார்கள்.

## சகோதரங்களால் துக்கம்

*திருந்திய இலக்க னாதி பதியனும் திரியின்கோளும்*
*வருந்திடும் பகையாய் ஈன மாகவும் இருப்பா ராகில்*
*இருந்திடச் சகோத ரங்கள் இகலுடன் துக்கம் வந்து*
*பிரிந்துடன் திரவி யங்கள் பிணியொடு நாச மாமே. (111)*

(இ-ள்.) இலக்கனாதிபதியும் மூன்றாம் இடத்திற்கு அதிபதியும் பகையாகவும் பலகீனமாகவும் இருக்கப் பிறந்த சாதகர்க்குச் சகோதரங்களால் துக்கம் வந்து சேரும். மேலும் சாதகன் நோய்க்கு ஆளாவான். செல்வங்கள் அழியும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

---

111ம் பாடல்: வலியான் நட்பாய்.

### சகோதரர்களின் பகை

அல்லது செவ்வாய் எட்டில் ஆறினில் பன்னி ரண்டில்
அல்லல்பல வீன மாக வரில்திசை அபகா ரத்தில்
நல்லவர் பகையாய் வாழ பிறந்தவர் நலத்தி னாலே
இலவினில் உள்ள தெல்லாம் இடரினால் அழிந்து போமே. *(112)*

**(இ-ள்.)** செவ்வாய், எட்டாமிடம், ஆறாமிடம், பன்னிரண்டாம் இடங்களில் இருக்க, அல்லது பலவீனமாக இருக்கில், செவ்வாய் திசை அல்லது புத்தி நடக்கும் காலங்களில், உடன்பிறந்த சகோதரர்கள் பகையாகி, அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டு அழிந்து போவார்கள்.

### சகோதரர்களின் பகை, உறவு

உரைத்திடும் கிரகம் மூன்று பேரையும் ஓர்ந்து பார்த்து
துரைத்தன மாக வந்த சுகசகோ தரங்கள் வாழ்நாள்
கருத்துடன் சினேகி தங்கள் கலகமும் எல்லாம் பார்க்க
வருத்தமோ இல்லை மின்னே! மனதுடன் வருந்து
வார்க்கே! *(113)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி, மூன்றாம் இடத்திற்கு அதிபதி, செவ்வாய் ஆகிய மூன்று கிரகங்களையும் பார்த்து உடன்பிறந்த சகோதரர்கள், அவர்களுடனான நல்உறவு, சண்டை ஆகியவற்றைக் காணவேண்டும் என்றவாறு.

### சகோதரனைக் கொல்பவன்

சொல்லிய மூன்றாம் தானம் தன்னையே வியாழன் சுங்கன்
நல்லவ னாக நோக்க இரட்சிப்பான் சகோத ரத்தை
அல்லது கதிரோன் புந்தி ஆனவன் நோக்கிப் பார்க்க
வலபில மாக்கக் கூட வந்தவன் தன்னைக் கொல்வான். *(114)*

**(இ-ள்.)** மூன்றாம் இடத்தைக் குரு, சுக்கிரன் ஆகியோர் நட்புடன் பார்க்க, உடன்பிறந்த சகோதரங்களைக் காப்பான். மூன்றாம் இடத்தைச் சூரியன், புதன் ஆகியோர் பார்க்க அல்லது அங்குக் கூட, உடன் பிறந்தவனைக் கொல்பவனாக இருப்பான் என்றவாறு.

### உடன்பிறந்தோரின் மரணம்

*மூன்றினுக் குடைய நாதன் சேயொடு மூன்றில் வந்தே*
*ஆன்றவர் பகைநீ சங்கள் ஆறெட்டில் பன்னி ரண்டில்*
*ஊன்றிட திசைகள் தன்னில் உறுபொருள் பலமும் நட்டம்*
*தோன்றிய பிறப்பு நாசம் சொல்லிய திசைகள் தன்னில். (115)*

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கதிபதி செவ்வாயோடு சேரந்து இருக்க, பகை அல்லது நீசம் பெற்று ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்களில் இருக்கப் பிறந்த சாதகனுக்கு மூன்றாம் இடத்திற்கு அதிபதி, செவ்வாய் ஆகியோரின் திசைகளில் செல்வமும் பலமும் நட்டமாகும். உடன் பிறந்தவர்கள் மரணமடைவார்கள் என்றவாறு.

### வீரன்

*பரிவுடன் மூன்றின் நாதன் உச்சமாய்ப் பாவ ரோடும்*
*தெரியவர் எட்டீ ராறில் சேர்ந்திடில் சரமாம் வோரை*
*அரியதாய் சுகராங் கிசத்தில் அன்புடன் ஏறி உய்யத்*
*தரியவர் முன்னே நின்று சண்டையில் திடமா வானே. (116)*

(இ-ள்.) மூன்றாமிடத்து அதிபதி உச்சம் பெற்று, பாவரோடு சேர்ந்து, இலக்கனத்திற்கு எட்டாமிடம், ஆறாமிடத்தில் இருந்து அது சர இராசியாக இருந்து சுப நவாம்சத்தில் இருக்கப் பிறந்தவன் பகைவர் முன்னே பராக்கிரமத்துடன் சண்டையிடும் பலவானாக விளங்குவான்.

### பராக்கிரமன்

*சேய்பல வீன மாகச் சேர்பாவ சட்டி யாங்கிசம்*
*சுபருடன் உடனே கூட அன்புடன் சுபரைப் பார்க்க*
*பாய்பராக் கிரம னாகப் படையினில் முன்னே சென்று*
*மாய்வென வெட்டி மீன்று வரிசையள் பெறுவ னாமே. (117)*

(இ-ள்.) செவ்வாய் பலவீனமாக பாவ சட்டியாங் கிசத்தில், சுபருடன் சேர்ந்திருக்க, சுபரைப் பார்க்க, வீரமுடையவனாக எதிரி படையினர் முன்னே சென்று வெட்டி வீழ்த்தி வீரசாகசம் புரிந்து மன்னனிடமிருந்து வெகுமதிகளைப் பெறுவான்.

## புத்திவான்

சொல்லிய மூன்றின் நாதன் சூரிய னுடனே கூட
வொல்லியில் அதிக வீரன் உயர்மதி யுடனே ஊன்றில்
நல்மன தைரிய வானாம் நலமுடன் செவ்வா யாகில்
வல்மகா துட்டன் கோபி வரும்புதன் சாது புத்தி. *(118)*

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கு அதிபதியுடன் சூரியன் இருப்பின் அதிக வீரமுடையவனாக விளங்குவான். மூன்றாம் இடத்துக்கு அதிபதி, வளர்பிறைச் சந்திரனுடன் சேர்ந்திருக்க, தைரியவானாக இருப்பான். மூன்றாம் இடத்திற்கு அதிபதி செவ்வாயுடன் சேர்ந்து இருக்க, மகா துட்டனாக விளங்கு வான். மூன்றாம் இடத்திற்கு அதிபதி புதனோடு சேர்ந்து இருக்க, சாதுவான புத்திவானாக விளங்குவான் என்றவாறு.

## காமுகன், வெகுளி

சொல்லிய மூன்றின் நாதன் சுகவியா ழத்தோ டேக
நல்லவன் குணவான் சாத்திர நன்மையும் அறிவான்அ நேக
சுல்லிய சுங்கன் கூட சுகம்வெகு காமி யாவான்
அல்லது காமம் மூல மாகவே கோபி யாவான். *(119)*

(இ-ள்.) மூன்றாமிடத்திற்கு அதிபதி, குருவுடன் சேர்ந்து இருப்பின், நல்லவனாகவும் சிறந்த குணமுடையவனாகவும், சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவனாகவும் விளங்குவான். மூன்றாமிடத்து அதிபதியோடு சுக்கிரன் சேர்ந்து இருக்க சுகம் அனுபவிப்பான். காமம் மிகுந்தவனாக விளங்குவான் அல்லது காமத்தில் காரணமாகக் கோபம் உடையவனாக விளங்குவான் என்றவாறு.

### கோழையும் தைரியசாலியும்

சொன்னவ னுடனே மந்தன் சேர்ந்திட உடம்பு காதும்
பன்னுரா குடனே கூட பயத்துடன் இருந்து வாழ்வான்
என்னலாங் குளிகன் கூட இப்படி பலனைச் சொல்லப்
மன்னவ னுடனே கூட வரும்பராக் கிரவான் என்றே. *(120)*

(இ-ள்.) மூன்றாமிடத்திற்கு அதிபதி சனியுடன் சேர்ந்து இருக்க, உடல்நோயுள்ளவனாக இருப்பான். மூன்றா மிடத்திற்கு அதிபதி, இராகுவுடன் சேர்ந்திருக்க எந்நாளும் காதுநோய் உள்ளவனாக மூன்றாம் இடத்திற்கு அதிபதி, குளிகனுடன் கூடி இருக்க பயத்துடன் வாழ்பவனாக இருப்பான். மூன்றாம் இடத்திற்கு அதிபதி காரகனுடன் சேரப் பிறந்த சாதகன் தைரிய சாலியாக இருப்பான் என்றவாறு.

### மிருகம், நீர் பயம்

மூன்றினுக் குடைய நாதன் முதிர்ந்தவந் தணனோ டேகி
ஆன்றஇலக் கனத்தில் வாழ்ந்தும் அமர்ந்திட மிருகத் தாலே
தோன்றிய பயமும் உண்டு சுகராசி தனிலே கூடி
ஆன்றிடும் தண்ணீ ராலே வருபயம் உண்டு தானே. *(121)*

(இ-ள்.) மூன்றாமிடத்திற்கு அதிபதி, குருவுடன் சேர்ந்து இலக்கனத்தில் இருக்க, மிருகங்களால் பயம் உண்டாகும். நான்காமிடத்தில் மூன்றாமிடத்ததிபனும் குருவும் சேர்ந்து இருக்க, தண்ணீரால் பயம் உண்டாகும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### இனிய சொல்லன்

திருந்திய செவ்வா யோடும் சலகிர கங்கள் கூட
வருந்திய பலவா னாக வாழ்ந்திட வலிமை யாகப்
பொருந்திய சரீரம் மீறில் புகழ்சுக வானாய்ப் போற்றும்
அருந்தமிழ் படிக்க நல்ல அமிர்தவாக் குடைய
னாவான். *(122)*

(இ-ள்.) செவ்வாயோடு, சலக்கிரகங்கள் கூட, பலவானாக விளங்குவான். வலிமையுடையவனாகவும், சுகவானாகவும், எல்லோரும் போற்றும் அருந்தமிழைக் கற்றுத் தேர்ந்தவனாகவும் இனிமையான சொற்களை உடையவனாகவும் விளங்குவான் என்றவாறு.

## வீரன்

காரகச் செவ்வாய் மூன்றிற் கதிபனு மாக வந்தோர்
வாரமாய் மூன்று பேரும் வரும்பில முடனே வாழச்
சூரனாய் யுத்தம் செய்து சூதொரு மீண்டு நல்ல
வீரனாம் என்று யாரும் விளம்பவே சகத்தில் வாழ்வார். *(123)*

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கு அதிபதி, சகோதரக் காரகன் செவ்வாய், மூன்றாம் இடத்தில் நிற்பவர் ஆகிய மூவரும் பலம் பொருந்தியவர்களாக இருப்பின், வீரனாக விளங்குவான். நல்ல வீரன் என்று உலகத்தோரால் போற்றப்படுவனாகத் திகழ்வான் என்றவாறு.

## சகோதரர்களால் இலாபமும் கடனும்

முன்னமே உரைத்த கோள்கள் மூன்றுபேர் திசையில் அன்னோன்
பன்னிய அபகா ரத்தில் பழங்கிழங் கமுது செய்வான்
சொன்னதில் இரண்டு கோள்கள் சுகபல வானாய் வாழ
நன்மையாம் சகோத ரத்தால் இலாபமும் கடனும் உண்டாம். *(124)*

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கு அதிபதி, செவ்வாய், மூன்றாம் இடத்தில் நின்றோர் ஆகியோரின் திசைகளில் அல்லது புத்தி காலங்களில் பழைய கிழங்குகளை உண்டு வாழ்வான். மூன்றாம் இடத்திற்கு அதிபதி, செவ்வாய், மூன்றாம் இடத்தில் நின்றோர் ஆகிய மூவரின் இரண்டு கோள்கள் சுப பலன்கள் பெற்று இருந்தால் சகோதரர்களால் இலாபமும் கிடைக்கும், கடனும் உண்டாகும் என்றவாறு.

## மனவருத்தம் உடையவன்

செப்பிய மூன்றின் நாதன் சுபவர்க்கம் தனிலே சென்று
தப்பில்லாப் பலவா னாகில் சாதுவாய் இருப்பான் என்க
ஒப்பில்லான் பகைநீ சங்கள் ஓரையாய்ப் பாவர் கூட
வைப்புறு சாக சங்கள் பண்ணுவான் மனது நோவான். *(125)*

**(இ-ள்.)** மூன்றாம் இடத்தின் அதிபதி சுப வர்க்கங்களில் இருந்து பலவானாக விளங்கினால் சாதுவாக இருப்பான். மூன்றாம் இடத்தின் அதிபதி பகை, நீசம் பெற்றுப் பாவர் களுடன் சேர்ந்து இருப்பின் சாகசங்கள் செய்பவனாக விளங்குவான். இருப்பினும் மனத்துயரம் உடையவனாக வாழ்வான் என்றவாறு.

## தொண்டை நோய் உடையவன்

வருந்திய மூன்றின் நாதன் வரியர வுடனே கூடி
இருந்தஅவ் வோரை நாதன் இயல்புலக் கனத்தில் ஏறில்
திருந்திய சர்ப்ப அச்சம் திரிக்கதி பதிமால் இராகும்
பொருந்தியே பாவர் பார்க்க பொடிமுட மயிருண் டாமே. *(126)*

**(இ-ள்.)** மூன்றாம் இடத்திற்கு அதிபதி, இராகுவுடன் கூடி இருக்க, அந்த இராசிநாதன் இலக்கனத்தில் ஏறி இருக்க, பாம்பினால் கண்டம் ஏற்படும் என்று சொல்ல வேண்டும். மூன்றாம் இடத்திற்கு அதிபதி புதன், இராகு இவர்கள் சேர்ந்து அமர்ந்திடப் பிறந்தவனுக்குத் தொண்டையில் நோய் உண்டாகும் என்று சொல்லவேண்டும்.

## இதுவுமது

தோன்றிய மூன்றில் பாவர் சுகக்குளி கனுமாய்த் தோன்ற
வான்றவன் கண்டம் தன்னில் ஆமுட மயிராம் என்க
மூன்றினில் சனிசேய் கூடி முழுப்பல வானாக வந்தால்
ஏன்றிய கண்ட ரோகம் உண்டெனஉரைக்க லாமே. *(127)*

**(இ-ள்.)** மூன்றாம் இடத்தில் பாவக்கோள்களும் குளிகனும் தோன்ற அவனுடைய தொண்டையில் நோய் உண்டாகும். மூன்றாம் இடத்தில் சனியும் செவ்வாயும்

சேர்ந்து, முழு பலம் பெற்று இருந்தால் கண்டரோகம் உண்டாகும் என்பதை உரைக்க வேண்டும் என்றவாறு.

**விடத்தாய் கண்டம் உடையவன்**

ஆண்டிடும் மூன்றின் நாதன் அந்தண னுடனே கூடி
வேண்டும்இலக் கணத்தில் ஏற மிகுபசுக் களினால் அச்சம்
தீண்டிய அரவோ டன்னோன் சேர்ந்துலக் கனத்தி லேறப்
பூண்டிடும் விடத்தால் அச்சம் உண்டெனப் புகல லாமே. *(128)*

**(இ-ள்.)** மூன்றாம் இடத்திற்கு அதிபதி குருவுடன் சேர்ந்து இலக்கனத்தில் ஏற, பசுக்களினால் கண்டம் ஏற்படும். மூன்றாம் இடத்திற்கு அதிபதி இராகு அல்லது கேதுவுடன் சேர்ந்து இலக்கனத்தில் ஏற, விடத்தால் கண்டம் ஏற்படும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

**விடம் உண்பவன்**

தானமாம் மூன்றின் கோளன் தரும்புத லுடனே கூடி
ஆனஇலக் கனத்தில் ஏற அரிவையர் தமைச்சும் பிப்பான்
தீனமில் அன்னோன் கூடச் சேர்பகை நீசர் கூடில்
ஊனமில் பாவர் கூடி ஊன்றிட விடத்தை உண்பான். *(129)*

**(இ-ள்.)** மூன்றாம் இடத்திற்கு அதிபதி, புதனுடன் சேர்ந்து இலக்கனத்தில் ஏற, பெண்களைச் சும்பிப்பான். மூன்றாம் இடத்திற்கு அதிபதியுடன் பகை, நீசம் உடைய கோள்கள், பாவக்கோள்கள் சேர்ந்து இருப்பின் விடத்தை உண்பான் என்றவாறு.

**இசைக் கலைஞன்**

நல்லவன் வியாழன் புந்தி நலமுடன் மூன்றில் ஏக
அல்லது பார்க்க மிக்க அதிபல மாக மூன்றில்
சொல்லிய திரிகோ ணகேந் திரமீதில் சேர நின்றால்
துல்லிய ராக கீதம் சுரத்துடன் சொல்லு வாரே. *(130)*

**(இ-ள்.)** சுபக்கோள்களான வியாழன், புதன் ஆகியவை மூன்றாம் இடத்தில் நட்புடன் இருக்க அல்லது இவ்விரு கோள்களும் மூன்றாமிடத்தைப் பார்க்க, அல்லது அதிக பலம்

பெற்று மூன்றாமிடத்திற்குத் திரிகோண கேந்திர தானங்களில் ஒன்று சேர விளங்கினால் இசைக்கலையில் வல்லவர்களாக விளங்குவார்கள் என்றவாறு.

### ஆபரணங்கள் அணிபவன்

*சொன்னஇத் தானம் மூன்றில் சுபக்கிர கங்கள் கூட*
*அன்னவன் பார்க்க மூன்றில் அதிபன்தான் சுபரோ டேக*
*கன்னமி தருகாய் உள்ள காதிலே கனபொன் னாக*
*மன்னவர் என்றும் உண்டு மாணிக்கத் துடனே தானே. (131)*

(இ-ள்.) மூன்றாம் தானத்தில் சுபக்கிரகங்கள் ஒன்று சேர்ந்து இருக்க, அல்லது மூன்றாம் தானத்தைச் சுபக்கோள்கள் பார்க்க, மூன்றாம் இடத்திற்கு அதிபதி சுபக்கோள்களோடு சேர்ந்து இருக்க, பொன், மணிகள் அணிந்த மன்னவனாக என்றும் விளங்குவான் என்றவாறு.

### இதுவுமது

*சுக்கிரன் மூன்றில் ஏகச் சொரிமுத்தா பரணம் உண்டாம்*
*தொக்கதோ வியாழ மாகில் துளசியா பரணம் சொல்ல*
*தக்கஆ தித்தன் நீலச் சரப்பளி சிவப்போ டாகும்*
*மிக்கசந் திரனால் நானா விதங்கள்ஆ பரண மாமே. (132)*

(இ-ள்.) சுக்கிரன் மூன்றாமிடத்தில் ஏற முத்தாபரணங் களை அணிபவனாக இருப்பான். மூன்றாமிடத்தில் வியாழன் நிற்க துளசிமாலை அணிந்தவனாக விளங்குவான். மூன்றாமிடத்தில் சூரியன் இருக்க, நீல கற்களுக்கு இடையே சிவப்புக்கற்கள் மாலையை உடையவனாக விளங்குவான். மூன்றாமிடத்தில் சந்திரன் இருக்க பல வகையான ஆபரணங்களை அணிபவனாக விளங்குவான் என்றவாறு.

### இதுவுமது

*புந்திதான் மூன்றில் ஏற பொருந்துமோர் சேய்வீ டாக*
*விந்தையாய்க் கட்டாய் மிக்க விசித்திரா பரணம் உண்டாம்*
*மந்தன்உச் சாட்சி வர்க்க மாகவே மூன்றின் கோளன்*
*வந்திட அதிக மான வர்க்கஆ பரணம் உண்டாம். (133)*

(இ-ள்.) மூன்றாமிடத்தில் புதன் நிற்க, அது செவ்வாயுடைய வீடாக இருக்க, விசித்திராபரணங்களை அணிபவனாக விளங்குவான். சனி உச்சம் ஆட்சி பெற்று இருக்க, மூன்றாம் இடத்திற்கு அதிபதியுடன் சேர்ந்திருக்க, வகை வகையான ஆபரணங்களை அணிபவனாக இருப்பான்.

*பத்தினில் மூன்றின் நாதன் பதிசுப இராசி யாக*
*வத்திரம் அதிக வர்க்கம் வரும்அன்னோன் சுங்கன் கூட*
*புத்தியில் பலவா னாகப் பூடணம் புடவை விற்பன்*
*சத்திய குருமால் நோக்கச் சதிரொடும் புராணம் செய்வான். (134)*

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கு அதிபதி பத்தாம் இராசியில் சேர, அது சுப இராசியாக இருக்க, பலவிதமான பட்டுப் பீதாம்பரம் முதலான ஆடைகளை அணிபவனாக விளங்குவான். மூன்றாம் இடத்திற்கு அதிபதியுடன் சுக்கிரன் சேர்ந்து பத்தாமிடத்தில் இருக்க, சிறந்த புத்திமானாக, ஆடை ஆபரணங்களை விற்கும் வியாபாரியாக இருப்பான். இவர்களை குரு, புதன் ஆகிய சுபக்கோள்கள் பார்க்க, கதா காலட்சேபம் செய்பவனாக இருப்பான் என்றவாறு.

ஆகும்மூன் றுடைய நாதன் அதிசுப ருடனே கூடத்
தாகமாய்ச் சுபரே பார்க்கத் தைரிய வானாம் என்க
பாகமாம் அன்னோ னோடும் பாவர்கள்கூடப் பார்க்கச்
சோகமாம் வீரம் இல்லான் என்னவும் சொல்ல லாமே. (135)

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கு அதிபதி, சுபக் கோள்களுடன் சேர, அல்லது சுபக்கோள்களால் பார்க்கப்பட தைரியவானாக விளங்குவான். மூன்றாமிடத்திற்கு அதிபதி, பாவக்கோள்களுடன் கூடி இருக்க அல்லது பாவக் கோள்களால் பார்க்கப்பட, கோழையாக இருப்பான் என்றவாறு.

## வீரன்

உரைத்திடும் மூன்றின் நாதன் உயர்செவ்வா யுடனே கூடத்
திருந்திய பாவ இராசி தன்னிலே தீயோ ரோடும்
இருந்திட போக நட்ட மேறில்திரி கோண கேந்திரம்
வருந்திடச் சுபரே கூடில் வருசுபர் பார்த்தால் வீரியம். (136)

(இ-ள்.) மூன்றாம் இடத்திற்கு அதிபதி, செவ்வாயுடனே சேர்ந்து பாவ இராசியில் பாவரோடு சேர்ந்து இருக்கப், பிறந்த சாதகனுக்குப் பெண் விருப்பம் இருப்பினும், தைரியமற்றவனாக விளங்குவான். மூன்றாம் இடத்திற்கு, அதிபனும் ஒன்றுகூடி, திரிகோண கேந்திர இடங்களில் சுபரோடு சேர அல்லது இவர்களைச் சுபர் பார்க்கில் பெண்களோடு உறவு கொள்ள தைரியம் மிக்கவனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும்.

*சந்திரன் சுங்கன் அல்லால் தானமாம் மூன்றின் மிக்கச்*
*சுந்தரச் சுபரே பார்க்கச் சுபராசி அங்கி சத்தால்*
*வந்திடச் சுகமாய் ஆறு சுவையுடன் அநேகம் பேர்க்கு*
*முந்தவே அன்னம் ஈயும் முதல்வனாம் என்று செப்பே. (137)*

(இ-ள்.) சந்திரன், சுக்கிரன் ஆகிய கோள்களை அன்றி, மூன்றாம் இடத்தைச் சுபர்கள் பார்க்க, அல்லது மூன்றாம் இடத்திற்கு அதிபதி, சுப இராசியில் இருக்க, அல்லது சுப அம்சங்களில் இருக்க, ஏராளமானோர்க்கு அறுசுவையுடன் கூடிய அன்னதானம் செய்யும் வள்ளலாக விளங்குவான் என்றவாறு.

*சுக்கிரன் வியாழன் மூன்றிற் குடையவன் சுகமாய்க் கூடில்*
*தக்கமா லுடனே பார்க்க அல்லது புதனே சார*
*மிக்கதாம் அன்ன தானம் விளம்புவான் வந்தோர்க் கெல்லாம்*
*பக்கமாய் அன்ன தானப் பதியெனப் பாரில் வாழ்வான். (138)*

(இ-ள்.) சுக்கிரன், குரு, மூன்றாமிடத்திற்கு அதிபதி ஆகிய மூன்று கோள்களும் ஒன்று சேர்ந்து நட்புடன் இருக்க, புதனால் பார்க்கப்பட, அல்லது புதனோடு சேர, தன்னை நாடி வந்தோர்க்கெல்லாம் மிகுந்த அன்னதானம் செய்பவனாக விளங்கி, உலகில் சிறப்புப் பெற்று வாழ்வான்.

**மூன்றாம் இட பாவகப் பலன் முற்றும்.**

# நான்காம் பாவகப்பலன்

## பொது

நலம்தரும் நான்காம் தானம் வித்தையாம் நல்ல தாயாம்
பலம்தரும் பூமி வீடும் பரிமளம் அடியார் மாடு
குலம்தரும் பந்து மிக்க குணமொடு சுகமே யுள்ள
தலந்தரு வாக னங்கள் தன்னொடு நாலில் சாற்றே. *(139)*

**(இ-ள்.)** வித்தை, தாய், பூமி, வீடு, வாசனை திரவியங்கள், அடியார், மாடு, உறவினர்கள், குணம், சுகம், வாகனங்கள் இவற்றை நான்காம் இடத்தைக்கொண்டு சொல்லவேண்டும்.

## சாத்திரங்களின் வல்லவன்

வித்தையான் வித்தை தன்னில் விளங்கிய சுபரோ டேறி
புத்தியால் சுபரே பார்க்கப் புதனுமே பலவா னாக
வித்துவா னாகி மிக்காய் மிகுந்தவன் சதுர னாகி
உத்தர வாதி யாகி உலகினில் இருந்து வாழ்வான். *(140)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி, நான்கா மிடத்தில் சுபக்கோள்களோடு சேர்ந்து இருக்க, அல்லது சுபரால் பார்க்கப்பட, புதன் பலவானாக இருக்க, சாத்திரங்களில் வல்லவனாக பலரும் போற்றும் வண்ணம் பூமியில் சிறந்து வாழ்வான்.

## வித்தை, படிப்பறிவற்றவன்

நண்ணிய நாலாங் கோளன் ஆறெட்டில் பன்னி ரண்டில்
புண்ணிய னென்ன ஓடிப் புகழ்பாவர் கூட நின்றால்
திண்ணிய பாவர் பார்க்க திகழ்பாவ இராசி மீதில்
பண்ணினால் வித்தை இல்லான் படிக்கவா ராது தானே. *(141)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய தீய இடங்களில் இருக்க அல்லது பாவர்களோடு சேர்ந்திருக்க, அல்லது பாவரால் பார்க்கப்பட, அல்லது பாவ இராசிகளில் இருப்பின், வித்தைகளைக் கல்லாதவனாகவும், படிப் பில்லாதவனாகவும் விளங்குவான் என்றவாறு.

## அறிவிலி

அந்தணன் புந்தி நாலுக் கதிபனும் ஆறில் எட்டில்
உந்திய பன்னி ரண்டில் அண்டிட வித்தை இல்லான்
சிந்தையால் பகைநீ சங்க னாய்விடம் சென்மித் தோர்க்கு
வந்திடும் வித்தை புத்தி வரும்விவே கமுமில் லாதான். *(142)*

**(இ-ள்.)** குரு, புதன், நான்காம் இடத்திற்கு அதிபதி ஆகிய மூவரும் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடங்களில் இருக்க, வித்தை இல்லாதவன். குரு, புதன், நான்காம் இடத்திற்கு அதிபதி ஆகிய மூவரும் பகை நீச இராசிகளில் இருக்க, வித்தை, புத்தி, விவேகம் இல்லாதவனாக இருப்பான் என்றவாறு.

## புத்திமான்

பொன்னவன் புந்தி நாலில் புண்ணியர் இவர்கள் கூடில்
நன்மையாம் உச்சம் ஆட்சி மீதிலே நடக்க வல்லால்
பன்னுகேந் திரத்தில் நல்ல பலதிரி கோணம் தன்னில்
உன்னிய வினையம் வித்தை யுறவுகோ வுடனே புத்தி. *(143)*

**(இ-ள்.)** குரு, புதன் இவர்கள் இருவரும் நான்காம் இடத்தில் கூடி இருக்க, அவ்விடத்தில் ஆட்சி. உச்சம் பெற்று விளங்க, கேந்திர, திரிகோண தானங்களில் இருக்க, வித்தை உடையவனாக விளங்குவான். செயலாற்றல் உள்ளவ னாகவும் மன்னருடன் தொடர்பு கொண்டவனாகவும் புத்தி மானாகவும் திகழ்வான்.

## தாயார்க்கு நீண்ட ஆயுள்

சுக்கிரன் பலவா னாக அல்லது தோன்றித் திங்கள்
மிக்கதாய் பலவா னாக மிகச்சுப ருட னே பார்க்கத்
தக்கவர் சுபர்கள் இராசி சார்ந்திட நாலின் கோளன்
சிக்கனப் பலமாய்த் தாய்க்குத் தீர்க்காயுள் உண்டாம்
என்னே. *(144)*

**(இ-ள்.)** சுக்கிரன் பலவானாக இருக்க, சந்திரன் பலவானாக சுபக்கோளுடன் சேர்ந்து இருக்க, சுபக்கோள் களால் பார்க்கப்பட அல்லது சுப இராசிகளைச் சார்ந்திருக்க, நான்காம் இடத்திற்கு அதிபதி பலவானாக இருக்க, தாய்க்குத் தீர்க்காயுள் என்று சொல்ல வேண்டும்.

## தாயார்க்கு மரணம்

சொன்னதா யுடைய கோளன் சோர்விலா றெட்டீ ராறில்
வன்பல வீன மாக வருந்தும்இலக் கனத்தில் பாவர்
துன்பபொடு பாவர் பார்க்கத் தோன்றிய சாத கர்க்குத்
தன்பீடும் தாயார் நாசம் ஆமென உரைக்க லாமே. *(145)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி எட்டாமிடம், பன்னிரண்டாம் இடம் ஆகிய இடங்களில் பலவீனமாக இருக்க, இலக்கனத்தில் பாவர் ஏற, அல்லது பாவர் இலக்கனத்தைப் பார்க்கப் பிறந்த சாதகர்க்குக் கேடு உண்டாவதோடு, தாயாருக்கும் அழிவு ஏற்படும் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

சந்திரன் அமர பட்சம் சார்ந்திட எட்டீ ராறில்
வந்திட ஆறில் பாவர் தானுமே மதியோ டேக
விந்தையாய் நாலில் பாவர் மேவிடச் சாத கர்க்குச்
சிந்தையால் இரங்கும் தாயார் செத்துப்போம் என்று
செப்பே. *(146)*

(இ-ள்.) தேய்பிறைச் சந்திரன் எட்டாமிடம், பன்னிரண்டாம் இடங்களில் இருக்க அல்லது ஆறாமிடத்தில் பாவக்கோள், சந்திரனோடு சேர்ந்து இருக்க, நான்காமிடத்தில் பாவக்கோள் இருக்கும் சாதகரின் தாயாருக்கு மரணம் என்று சந்தேகமின்றி சொல்ல வேண்டும்.

**இதுவுமது**

*சொல்லிய நாலில் மந்தன் தோன்றிடப் பாவர் பார்க்கக்*
*கொல்லிய அட்ட மாதி அதிபனும் கொடூர மாக*
*வல்லநீ சங்க ளாக வருந்திடப் பெற்ற தாயர்*
*ஒல்லையில் செத்துப் போவாள் என்னவே உரைக்க*
*லாமே.(147)*

(இ-ள்.) நான்காமிடத்தில் சனி இருக்க, அந்தச் சனியைப் பாவக்கோள் பார்க்க, எட்டமிடத்திற்கு அதிபனும் பாவக் கோளாக அல்லது நீசம் பெற்று விளங்கும் சாதகரின் தாயார் விரைவில் மரணம் அடைவாள் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *நோயாளி தாயார்*

*மூன்றினில் ஐந்தில் பாவர் மொய்த்திட நாலின் கோளன்*
*தோன்றிடும் பகைநீ சங்கள் இராசியில் துவண்டு நிற்க*
*வான்றிதன் மதியில் பாவர் வந்திட மாதா ரோகம்*
*மூன்றிடு மென்று முன்னோர் உரைத்திடும் சரிதை*
*தானே.(148)*

(இ-ள்.) மூன்றாமிடம், ஐந்தாமிடம் ஆகிய இடங்களில் பாவக்கோள்கள் இருக்க, நான்காமிடத்திற்கு அதிபதி பகை வீட்டில் அல்லது நீச வீட்டில் பலவீனமாக இருக்க, சந்திரனோடு பாவர் கூடி இருக்க, சாதகரின் தாயார் நோயுற்றவளாக விளங்குவாள் என்றவாறு.

## கெட்ட நடத்தையுடைய தாய்

ஆறினுக் குடையோன் நாலில் அதிபனும் ஒன்பான் மீதில்
ஊறிடத் தாயார் வேறோர் புருஷனை அன்பாய்ச் சேர்வாள்
வேறுபாக் கியத்தோன் நாலில் மிக்கவன் நாலில் சேர
தாறுமா றாய்தாய் அன்னிய சௌக்கிய வானைச் சேர்வாள். *(149)*

(இ-ள்.) ஆறாமிடத்திற்கு அதிபதியும் நான்காம் இடத்திற்கு அதிபதியும் ஒன்பதாம் இடத்தில் அமர, தாயார் மற்றோர் ஆடவனுடன் உறவு கொண்டவளாக விளங்குவாள். ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி நான்காம் இடத்தில் நான்காம் இடத்திற்கு அதிபதியுடன் அமர, தாய் மற்றோர் ஆடவனுடன் உறவுகொண்டவளாக விளங்குவாள் என்றவாறு.

## மாற்றான் தந்தை

பாக்கியத் ததிபன் ஆறின் பதியனும் அல்லால் வேறு
ஆக்கமாம் இரண்டின் நாதன் அஞ்சினுக் கதிப னோடும்
தீர்க்கலக் கனத்தின் நாதன் தன்னொடும் சேர்ந்த போது
ஏற்கவே குறிப்பைக் கண்டால் இருவர்க்கும் பிறந்தான்
என்னே. *(150)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியும், ஆறாமிடத்திற்கு அதிபதி அல்லது இரண்டாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாமிடத்திற்கு அதிபதியோடும் இலக்கனாதிபதி யோடும் கூடி இருப்பின், அச்சாதகன், தன் தாயின் கணவனையன்றி வேறு ஒருவனுக்குப் பிறந்தவன் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## தாயுடன் குற்றம் செய்பவன்

மதிபாவ ருடனே கூட வாழ்பாவர் பார்க்க அல்லால்
கதிரவ னுடனே யாலும் கேந்திரங் களிலே வேறு
பதிமிகு நாலில் பாவர் வந்திடப் பாவர் பார்க்க
அதிசய மாக குற்றம் ஆமெனும் தாயைச் சொல்வான். *(151)*

**(இ-ள்.)** சந்திரன் பாவருடனே சேர்ந்திருக்க, அல்லது பாவரால் பார்க்கப்பட அல்லது சூரியனுடனே சேர்ந்து கேந்திரத் தானங்களிலே அமர்ந்திருக்க, நான்காமிடத்தில் பாவர் இருக்க, நான்காம் இடத்தைப் பாவக்கோள் பார்க்க எந்நாளும் தாயுடன் சேர்ந்து குற்றம் செய்பவனாக இருப்பான் என்று சொல்லவேண்டும்.

## மாற்றான் தாயின் பாலருந்துபவன்

*ஆறினுக் குடையோன் நாலுக் கதிபனும் அஞ்சில் ஏற*
*பேறிடும் தகப்பன் வேறே பெண்ணோடும் அணையப்*
*போவான்*
*ஊறிய மூன்றில் நாதன் உயர்மதி எட்டீ ராறீல்*
*ஆறினில் கூடப் பிள்ளை அன்னியர் முலையைத்*
*துய்ப்பான். (152)*

**(இ-ள்.)** ஆறாமிடத்திற்கு அதிபதியும், ஐந்தா மிடத்திற்கு அதிபதியும், ஐந்தாமிடத்தில் சேர்ந்து இருக்க, தந்தை வேறொரு பெண்ணுடன்தொடர்புடையவனாக இருப்பான். மூன்றாம் இடத்திற்கு அதிபதியும் சந்திரனும் இலக்கனத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் சேர்ந்து இருந்தால், தன்னைப் பெறாத தாயின் முலைப்பாலை அருந்துவான் என்றவாறு.

## குருவின் மனைவியுடன் உறவு

*சந்திரன் என்னும் சுங்கன் தானும்கேந் திரத்தில் ஏற*
*வந்திடும் பாவர் பார்க்க வருந்திய நாலில் பாவர்*
*உய்ந்திடத் தாயார் தம்மை உறுகென மனங்க ளெல்லாம்*
*சுந்தர குருவின் பள்ளி தன்னுடன் சுகத்தைச் சேர்வான். (153)*

(இ-ள்.) நான்காம் இடம் பாவ இராசியாக இருக்க, சந்திரனும் சுக்கிரனும் கேந்திரத்தானத்தில் ஏற, பாவக் கோள்கள் அவற்றைப் பார்க்க, நான்காம் இடத்தில் பாவர் இருக்க, தாயாருடன் சேருவான் அல்லது குருவின் மனைவியுடன் சேருவான் என்று சொல்லவேண்டும்.

## விலைமாதுவானத் தாய்

சேயுடன் மதியும் ஆறின் செல்வனும் கூடி நாலில்
ஆயவே அல்லால் இராகு ஆதித்தன் ஆறின் கோளும்
தோயவே நன்றாய்ப் பார்க்கத் தோன்றிய சாத கர்க்குத்
தாய்விப சாரி யாகத் தரணியில் போவாள் தானே. (154)

(இ-ள்.) செவ்வாயும், சந்திரனும் ஆறாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றுகூடி நான்காம் இடத்தில் இருக்க, அல்லது இராகு, சூரியன் ஆறாம் இடத்திற்கு அதிபதி ஒன்று சேர்ந்து நான்காம் இடத்தில் இருக்க, தோன்றிய சாதகரின் தாய் விலைமாதுவாக இருப்பாள் என்றுசொல்ல வேண்டும் என்றவாறு.

## பிற ஆடவருடன் உறவு

சந்திர னுடனே இராகு கேதுதான் சதுராய்க் கூட
செந்தலைப் புலையன் தன்னைச் சேருவாள் என்று சொல்லு
மந்தன்சூத் திரனே புந்தி வைசியன் கதிரோ னாகில்
இந்துசத் திரிய னாகும் வியாழன்வே தியனைச் சேர்வாள். (155)

(இ-ள்.) சந்திரனுடனே இராகு அல்லது கேது ஒன்று சேர, சிவந்த தலைமயிர் உடைய புலையனோடு உறவு கொள்வாள். சந்திரனுடே சனி சேர்ந்திருப்பின், சூத்திரனோடு உறவுகொள்வாள். சந்திரனுடனே புதன் சேர்ந்திருப்பின், வைசியனோடு உறவு கொள்வாள். சந்திரனுடன் சூரியன் சேர்ந்திருப்பின், சத்திரியனோடு உறவு கொள்வாள். சந்திரனோடு குரு சேர்ந்திருப்பின், அந்தணனோடு உறவு கொள்வாள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## தந்தையின் மரணம்

அஞ்சினுக் குடையோன் நாலுக் கதிபனும் எட்டீ ராறில்
துஞ்சிய ஆறி லேகச் சுகமொடு லக்கன நாதன்
மிஞ்சிய பலமாய் வாழ விளங்கிய சாத கர்க்குக்
கொஞ்சிய தகப்பன் நாசம் குணமிது கூற லாமே. (156)

**(இ-ள்.)** ஐந்தாமிடத்திற்கு அதிபதியும் நான்காம் இடத்திற்கு அதிபதியும்,இலக்கனத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் ஏறி இருக்க, இலக்கனாதிபதி பலம் பெற்று விளங்க சாதகரின் தந்தைக்கு அழிவு உண்டாகும் என்று சொல்லவேண்டும்.

## இதுவுமது

*பத்தினுக் குடையோன் ஐந்தின் பதியனும் எட்டீ ராறில்*
*முற்றிட ஆறி லாக முதிர்ந்தஇலக் கனத்து நாதன்*
*சித்திரப் பலவா னாகச் சீமந்தம் செய்யும் முன்னே*
*செத்திடும் தகப்பன் என்று செப்பலாம் செகத்தின்*
*மீதே. (157)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்திற்கு அதிபதியும் ஐந்தாம் இடத்திற்கு அதிபதியும் ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருக்க, இலக்கனாதிபதி பலவானாக இருப்பின், தாயாருக்குச் சீமந்தம் செய்வதற்கு முன்னால் தந்தை மரணம் அடைவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *தந்தை, தாய் மரணம்*

*இந்தநா லுடைய கோளும் எழில்பெறும் இலக்க நாதன்*
*அந்தகேந் திரத்தி னாலும் திரிகோணம் தன்னி னாலும்*
*முந்துகேந் திரத்தில் இராசிக் குடையவன் இலக்க னத்தில்*
*வந்திடத் தந்தை யோட மரணம்தா யாரும் தானே. (158)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதியும் இலக்கனாதிபதியும் திரிகோண, கேந்திரங்களில் அமர்ந்து இருந்தாலும், இராசியாதிபதி கேந்திர தானத்தில வந்தாலும், இலக்கனத்தில் வந்தாலும் தந்தையோடு தாயும் சேர்ந்து மரணம் அடைவாள் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## தாயார் உடன்கட்டை ஏறுதல்

ஐந்தினுக் குடையோன் நாலுக் கதிபன்லக் கனத்து நாதன்
விந்தையாய்க் கேந்திர கோணம் மீதினில் ஏறி வாழ
வந்தவர் திசைகள் தன்னில் வாழுப காரம் தன்னில்
தந்தையும் செத்து மாதா அவனுடன் கட்டை சேர்வாள். *(159)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி இலக்கனாதிபதி ஆகிய மூவரும் கேந்திர திரிகோணங்களில் அமர்ந்திருக்க, அவர்களுடைய திசை, புத்திகளில் தந்தை மரணம் அடைந்து தாயாரும் அவருடனே உடன்கட்டை சேருவாள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## தந்தை, தாய் மரணம்

அஞ்சினில் வெய்யோன் நாலில் அரும்பிறை அடவாய் நிற்கத்
துஞ்சிடும் தந்தை மாதர்த் துடர்ந்தனு மரணம் ஆவாள்
மிஞ்சிய நாலின் நாதன் மிகுந்தநா லதனைப் பார்க்கக்
கொஞ்சிய கதிர்சங் காந்தன் கூடவே சாவான் என்னே. *(160)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில் சூரியனும், நான்கா மிடத்தில் வளர்பிறைச் சந்திரனும் இருக்கப் பிறந்த சாதகர்க்குத் தாய் மரணம் அடைந்தவுடன், தொடர்ந்து தந்தையும் மரணம் அடைவான். நான்காம் இடத்திற்கு அதிபதி, நான்காமிடத்தை நோக்கி, தீயின் காரணமாகத் தந்தையோடு சேர்ந்து தாயாரும் மரணம் அடைவாள் என்று சொல்லவேண்டும்.

## தாய் மரணம்

சந்திரன் நாலின் நாதன் சார்திசை அபகா ரத்தில்
விந்தையாம் நாலில் வந்தோன் மிகுந்திடும் பார்த்தோன்
ஊனும்
தந்திசை அபகா ரத்தில் தாயார்க்கு மரண மாக
வந்திடும் என்று சொன்னார் வரும்வகை கண்டு பாரே. *(161)*

(இ-ள்.) சந்திரன், நான்காம் இடத்திற்கு அதிபதி ஆகியோரின் திசைகளிலும் புத்திகளிலும் நான்காமிடத்தில் நின்றோன், நான்காம் இடத்தைப் பார்த்தோன் ஆகியோரின் திசைகளிலும் புத்திகளிலும் தாயாருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## புண்ணியவான்

கோபுராங் கிசத்தில் ஏறிக் குருவரில் நாலி லாதல்
தாவிர இரண்டில் இலாபம் தன்னில்சா தகர்க்கு நன்மைத்
தூபமால் நாலைப் பார்க்கச் சுபர்மத்தி யத்தி லாதல்
சீவமாய் குருந வாங்கிசம் சேரப்புண் ணியவான்
செப்பே.(162)

**(இ-ள்.)** குரு, கோபுராம்சத்தில் ஏறி நான்காம் இடத்தில் அல்லது இரண்டாம் இடத்தில் அல்லது பதினோராம் இடத்தில் நிற்க, இச்சாதகன் நன்மைகள் பலவும் பெற்று விளங்குவான். புதன், நான்காம் இடத்தைப் பார்க்க, சுபக்கோள்களுக்கு மத்தியில் அல்லது புதன், குரு நவாம்சம் பெற்று இருந்தால் புண்ணியவான் என்று சொல்லவேண்டும்.

## பாக்கியவான்

நலமிகு சுபர்கள் நாரில் நண்ணிடச் சுபரே பார்க்கத்
தலமிலா லக்க னத்தில் சம்பந்த மாகச் சார்ந்தால்
குலமிகு வேந்து வாலே கூடிய சுகமும் உண்டு
சிலபலன் அறிந்து சொன்னோம் செய்கையை ஓர்ந்து
பாரே.(163)

**(இ-ள்.)** நான்காம் இடத்தில் சுபக்கோள்கள் நின்றிட, அல்லது நான்காம் இடத்தைச் சுபக்கோள்கள் நோக்க இலக்கனத்தோடு சுபக்கோள்கள் சம்பந்தமுற்று இருக்க, அல்லது இலக்கனத்தில் சுபக்கோள்கள் இருக்க, மன்னரால் அனைத்து சௌபாக்கியங்களையும் பெற்றுச் சிறந்து வாழ்வான்.

### சுகமற்றவன்

நாலினில் வந்தோன் இந்து நலமுடன் பலவா னாக
கோலிய நன்மை யாகும் குணமுடன் இருந்து வாழ்வார்
சோலியாய் நீசம் அத்த மனங்களாய்ச் சோர நிற்கில்
பாலொடு சுகமோ இல்லைப் பலனிது அறிந்து பாரே. (164)

(இ-ள்.) நான்காம் இடத்தில் சந்திரன் பலவானாக இருக்க, நன்மையாகும். நல்ல பண்புகளுடன் சிறந்து வாழ்வான். நான்காம் இடத்தில், சந்திரன் நீசம், அத்தமனம் பெற்று இருக்கில், நல்ல உணவோ, சுகமோ அச்சாதகர்க்குக் கிடைக்காது என்று சொல்லவேண்டும்.

### சுகவான்

பாக்கியத் ததிபன் சுங்கன் பரிவுடன் நான்கில் ஏறி
ஆக்கமாய்ப் பலவா னாக அமர்ந்திட அநேக காலம்
போக்கிய போகம் தன்னைப் பொருந்தவே அறிந்து நல்ல
வாக்கினில் இனிய சொல்லால் வாழ்வராம் வருந்திப்
பாரே. (165)

(இ-ள்.) ஒன்பதாம்இடத்திற்கு அதிபதி, சுக்கிரனுடன் சேர்ந்து நான்காம் இடத்தில் பலவானாக அமர்ந்திருக்க, அச்சாதகன் நீண்ட காலம் அனைத்துவிதமான நன்மைகளையும் பெற்று இனிய சொல்லை உடையவனாக இன்புற்று வாழ்ந்திருப்பான் என்றவாறு.

### சிறிதுகாலம் இன்பம் துய்ப்பவன்

அட்டமாய் பன்னீ ராறில் அமர்ந்திடச் சுபர்கள் கூடத்
திட்டமாய் ஏது வான சிலசில காலம் எல்லாம்
இட்டமாய்ச் சுகத்தை நல்கும் இதுகளை அறிந்து பார்த்துப்
பட்டணம் மீதில் உள்ள பரிசுக்குப் பலனைச்
சொல்லே. (166)

**(இ-ள்.)** ஒன்பதாம் பாவத்திற்கு அதிபதி, எட்டு, பன்னிரண்டு, ஆறாம் இடங்களில் சுபக்கோள்களோடு சேர்ந்து இருக்கில், அச்சாதகனின் வாழ்வில் சிலகாலம் இன்பம் நிறைந்திருக்கும் அந்த காலங்களை அறிந்து பார்த்துச் சொல்ல வேண்டும் என்றவாறு.

## பாக்கியவான்

*தோன்றிய வியாழன் நாலாம் தானமே சுகத்தை நல்கும்*
*வான்றிய மதியம் நாலாம் தானமும் மாதா செய்கை*
*ஆன்றெழ சுங்க னாலு மாசிலா சுகந்த அஞ்சில்*
*போன்றிடு வாக னத்தைப் பூஷணம் என்று பாரே.* *(167)*

**(இ-ள்.)** குரு, நான்காம் இடம் இவற்றைக்கொண்டு சாதகனுக்கு வரும் சுகத்தைப் பற்றிக் கணக்கிடவேண்டும். சந்திரன், நான்காம் இடம் இவற்றைக்கொண்டு தாயைப் பற்றி கணக்கிடவேண்டும். சுக்கிரன், நான்காம் தானம் ஆகியவற்றைக் கொண்டு நறுமணம், ஆபரணங்கள், வாகனம் போன்றவற்றைப் பற்றி கணக்கிட வேண்டும் என்றவாறு.

## சுகவான்

*சொல்லுநா லுடைய கோளும் சுபராசி தன்னில் ஏற*
*நல்லசுக் கிரனே கூட அல்லது நன்றாய்ப் பார்க்க*
*வல்லல்நீ சங்கிர கங்கள் அண்டிடப் பார்த்தி டாமல்*
*மெல்லிய சுகந்த மாலை மெத்தவே சுகித்து வாழ்வான். (168)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி சுப இராசிகளில் ஏறி, சுக்கிரனுடனே சேர அல்லது சுக்கிரனால் பார்க்கப்பட, நீசக்கிரகங்கள் சேராமல், பார்க்காமல் இருக்க, மனைவியுடன் இன்பமாக வாழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## அணியும் ஆடைகள்

சந்திரன் பலவா னாகில் சாற்றும்வஸ் திரமே நன்றாம்
சந்திர னுடனே இராகு சார்ந்திடச் சீலை பீறல்
சந்திரன் வியாழத் தோடே சலவையும் சிவப்பு மாகும்
சந்திரன் சுங்க னோடு பலவர்ணம் சாற்ற லாமே. (169)

(இ-ள்.) சந்திரன் பலவானாக இருக்கில் நல்ல ஆடைகளை அணிபவனாக இருப்பான். சந்திரனுடன் இராகு சேர்ந்திருக்க கிழிந்த ஆடைகளை அணிவான். சந்திரன் குருவோடு சேர்ந்திருக்க, கசங்காத சிவப்புநிற ஆடையை அணிவான். சந்திரனுடன் சுங்கன் சேர்ந்திருக்க பலவர்ண ஆடைகளை அணிவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## செல்வன்

சொன்னவன் சுங்கன் திங்கள் சுபவர்க்கம் கூட அல்லால்
பொன்னவன் மதியும் சுங்கன் பொருத்தவே இவர்கள் பார்க்க
வன்பகை நீசக் கோள்கள் வாழ்பவர் பார்த்தி டாதல்
அன்பனுக் காடு மாடும் கன்றுமாம் அநேகம் பொன்னே. (170)

(இ-ள்.) சுக்கிரன் சந்திரனோடு சேர்ந்து சுபக்கோள் களுடன் கூடியிருக்க அல்லது குருவும் சந்திரனும் சுக்கிரனும் பார்க்க, பகை, நீசக் கோள்கள் பார்வையின்றி இருப்பின், அச்சாதகனுக்குப் புன்செய் நிலங்கள், கால்நடைகள் முதலியவை அதிகமாகும். பொன் மிகுதியாக உடையவனாக இருப்பான்.

## சக்கரவர்த்தி

தோன்றிய நாலில் நாதன் சுபக்கிர கங்க ளாக
வான்றவன் அல்லால் இராசி தன்னையே அறிவால் நோக்க
ஊன்றிய வியாழன் நல்ல உயிர்பல னாகி வந்தால்
வேன்றிடு பந்துக் கெல்லாம் இவனெச மான னாவான். (171)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, சுபக் கோள்களாக இருக்க அல்லது தன்னுடைய இராசியை தானே நோக்க, குரு பலவானாகி இருக்க, இச்சாதகன் மன்னவர்க்கு மன்னவனாகச் சக்கரவர்த்தியாகத் திகழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## உயர்ந்த நிலையில் இருப்பவன்

*செப்பிய நாலின் கோளன் சுகந்திரி கோணம் சேரில்*
*வைப்பென வைகேசி அங்கிசம் தன்னிலே மனதாய் நிற்கத்*
*தப்பரைப் பாவர் பார்வைச் சற்றுமே இல்லா தாகில்*
*ஒப்புர வான பந்து தங்களுக் காட்சி யாவான். (172)*

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, திரிகோண தானங்களில் இருக்க, வைகேசி அங்கிசத்தில் இருக்க, பாவக் கோள்களின் பார்வை சிறிதும் இல்லாமல் இருப்பின், உயர்ந்தவனாக, செல்வாக்குப் பெற்றவனாகத் திகழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## சுகவான்

*அட்டமா திபனைப் பாவர் அணைந்திடக் கபட னாக*
*இட்டமாய்ச் சுகத்தில் வந்து இருப்பவன் இருக்கும் காலத்*
*திட்டமாய் ஆட்சி உச்சம் தன்னிலே தெரிந்தால் நெஞ்சில்*
*ஒட்டிய கட்டும் இல்லா உறுதியாய் சுகத்தில்*
*வாழ்வான். (173)*

(இ-ள்.) எட்டாம் இடத்திற்கு அதிபதியோடு பாவக்கோள்கள் சேர, நான்காமிடத்தில் பாவர் இருக்க, அச்சாதகன் கபடனாக இருப்பான். ஆனால் எட்டாமிடத்திற்கு அதிபதி ஆட்சி, உச்சம் ஆகிய இடங்களில் இருப்பின், அச்சாதகன் சுகவானாக வாழ்வான் என்று கூறவேண்டும் என்றவாறு.

## வாகனம் உடையவன்

நாலினுக் குடைய கோளன் நட்பல னாக நண்ணக்
கோலின நாலிற் சுங்கன் குணமொடு பலமாய் நிற்க
வாலிபச் சுபரே பார்க்க வாகனம் உண்டாம் என்று
சாலமாய் உரைத்த தெல்லாம் சத்திய மாகச் சாற்றே. *(174)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி நல்ல பலவானாக இருக்க, நான்காமிடத்தில் சுக்கிரன் பலத்தோடு நிற்க, இவர்களைச் சுபக்கோள்கள் பார்க்க வாகனம் உண்டாகும் என்று உறுதியாகச் சொல்லவேண்டும் என்றவாறு.

## அனைத்து வாகனங்களையும் உடையவன்

சொன்னநா லுடைய நாதன் சுகமொடு நாலில் ஏற
மன்னவன் புதனும் கூடி வந்திடச் சுங்கன் பார்க்க
இன்னவர் சுபர்கள் அங்கிசம் ஏறியே இருந்து வாழ
என்னவா கனமென் றாலும் எய்திடும் இவர்க்குத்
தானே. *(175)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி, நான்காம் இடத்தில் இருக்க, புதன் அவனோடு கூடி இருக்க, இவர்களைச் சுக்கிரன் பார்க்க, இக்கோள்கள் சுபர்களின் அங்கிசத்தில் ஏறி இருக்க, அனைத்து வகையான வாகனங்களையும் கொண்டவனாக இச்சாதகன் இருப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## குதிரை வாகனம் உடையவன்

அம்புலிலக் கனசம் பந்த மாகவே இருக்க நாலின்
தம்பியும் மதியோ டேகிச் சதிரொடு இருந்து வாழ்ந்தால்
தும்பியோ இல்லை நல்ல துரகவா கனமுண் டென்று
நம்பியான் உரைத்தேன் இந்த நாட்டினில் இருந்து
பாரே. *(176)*

(இ-ள்.) சந்திரன் இலக்கனத்தில் இருக்க, யானை வாகனம் கிட்டாது. எனினும் குதிரை வாகனம் உண்டு என்பதை நம்பி நான் உரைத்தேன் இந்த நாட்டில் இதனைக் காண்பாயாக என்றவாறு.

## குதிரை, யானை உடையவன்

சந்திரன் இரண்டி லாகில் அல்லது நாலில் சாரச்
சுந்திரச் சுபரும் கூடி தோன்றியே இருந்து வாழ
வந்தவர் இருக்கும் ஓரை வாழ்சுபர் இராசி யாகில்
அந்தமாய்க் குதிரை மிக்க ஆனைவா கனமுண் டாமே. (177)

(இ-ள்.) சந்திரன் இரண்டாம் இடத்தில் அல்லது நான்காம் இடத்தில் சுபக்கோள்களுடன் சேர்ந்து இருக்க, அவர்கள் இருக்கும் இராசி, சுப இராசியாக இருக்கில், குதிரை வாகனத்தோடு, யானை வாகனமும் உடையவனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும்.

## குதிரை வாகனம் உடையவன்

மதியுடன் நாலின் கோளன் வந்திட இலக்க னாதி
பதியனும் ஒன்றாய்க் கூடிப் பதிந்தஇலக் கனத்தில் ஏறக்
குதிரைவா கனமுண் டாகும் குணமதை அறிந்து சொன்னோம்
அதிசய மல்ல மானே! ஆனதோ டரவு தானே. (178)

(இ-ள்.) சந்திரனுடன் நான்காம் இடத்திற்கு அதிபதி சேர்ந்திருக்க, இலக்கனாதிபதியும் அவர்களுடன் கூடி இலக்கனத்தில் ஏற, குதிரை வாகனம் கிடைக்கும் என்பதை உரைக்கவேண்டும்.

## பல்லக்கு உடையவன்

சுக்கிரன் நான்கின் கோளன் சுகமுடன் ஒன்றாய்க் கூட
இலக்கனா தியனு மாகச் சேர்ந்துலக் கனத்தில் ஏற
மிக்கதாய் உள்ள நல்ல மாநர வாக னத்தோன்
ஒக்கவே பவுசும் உண்டாம் உண்மையாம் அறிந்து பாரே. (179)

(இ-ள்.) சுக்கிரனும் நான்காம் இடத்திற்குஅதிபதியும் ஒன்றாக இலக்கனாதிபதியுடன் சேர்ந்து இலக்கனத்தில் இருக்க, நரவாகனம் என்று சொல்லப்படும் பல்லக்கினை உடையவனாக இருப்பான். மேலும் பலரும் போற்றும் வண்ணம் வாழ்வான் என்று கூறவேண்டும் என்றவாறு.

## இதுவுமது

பூரணசந் திரனும் புகரும் பொருந்தவே பலவா னாகத்
தாரனை வியாழன் தானும் கூடியே சதுராய் நின்று
ஏறிய கேந்திர கோணம் மீதிலே இயல்பாம் ஊறில்
ஆறிய இராச சமான அணிகலன் நரவா கனனாம். (180)

(இ-ள்.) பூரண சந்திரனும் சுக்கிரனும் பலம் பெற்று விளங்க, இவர்களுடன் குரு சேர்ந்து கேந்திர திரிகோணங் களில் ஏறி இருக்க, அரசனுக்குச் சமமான சிறப்புகளுடன் அணிகலன்களை அணிந்து கொள்பவனாகவும் பல்லக்கு வாகனத்தை உடையவனாகவும் விளங்குவான் என்று கூறவேண்டும் என்றவாறு.

## சுகவான்

குருவுடன் மதியும் கூடி குணமுடன் நிற்க அல்லால்
ஒருவருக் கொருவர் நோக்கிப் பார்த்திட உண்மை யாக
கருமநர வாக னங்கள் வர்க்கமாய் சால்வை களுமாம்
பெருகஆ பரண மோரும் பெற்றவன் இனிது
வாழ்வான். (181)

(இ-ள்.) குருவும் சந்திரனும் ஒன்று கூடி நிற்க, அல்லது ஒருவரை ஒருவர் பார்த்திட, பல்லக்கு வாகனத்தை உடையவனாய் பட்டுப் பீதாம்பரம் முதலான உயர்தர ஆடைகளையும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் அணிந்து இன்பமுடன் இனிது வாழ்பவனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## பல்லக்கு உடையவன்

சுக்கிரன் திங்கள் நான்கில் சுந்தரன் இவர்கள் கூடி
இலக்கனா திபதி யாக நண்ணிட இராசி தன்னில்
மிக்கதாய்க் குதிரை இலாபம் மிகுந்திடும் அல்லால் பின்னும்
பக்குவம் தன்னி லேதான் பரிந்தவா கனமுண் டாமே. (182)

(இ-ள்.) சுக்கிரன் சந்திரன், நான்காம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி இவர்கள் நால்வரும் ஒரே இராசியில் விலங்க, குதிரைகளால் இலாபம் மிகுதியாகக் கிடைக்கும், அல்லது பல்லக்கு முதலான உயர்ந்த வாகனம் அச்சாதகனுக்குக் கிடைக்கும்.

### இதுவுமது

சந்திரன் வியாழம் வெள்ளி தானும்மன் னுடைய கோளும்
வந்தகேந் திரத்தி லாதல் வாழ்திரி கோண மாதல்
உந்திட இராசன் மானம் உடன்நர வாக னங்கள்
தந்திடும் என்று முன்னோர் சாற்றினர் தரணி மீதே. (183)

(இ-ள்.) சந்திரன், வியாழன், வெள்ளி ஆகிய கோள்களும் நான்காம் இடத்திற்கு அதிபதியும் கேந்திரத் தானங்களிலாவது திரிகோணங்களிலாவது நின்றிட, அரசனிடமிருந்து வெகுமதிகள் பெறுபவனாகவும், பல்லக்கு முதலான உயர்ந்த வாகனங்களை உடையவனாகவும் இருப்பான் என்று இவ்வுலகிற்குச் சோதிட வல்லுநர்கள் கூறிச்சென்றுள்ளார்கள் என்றவாறு.

## அரச வெகுமதி பெற்றவன்

நூலினுக் குடைய பொன்னர் நண்ணவே நால்வா கனனன்
நாலினுக் குடையா னோடு நற்சுபர் உடனே கூட
நாலினில் உடனே ஏற இராசசன் மான மாக
நாலுசா மரைக ளோடும் நன்மையாய் இருந்து
வாழ்வான். (184)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதியாகக் குரு அமையின், நான்கு பக்கங்களிலும் வாகனங்களை உடைவனாக விளங்குவான். நான்காம் இடத்திற்கு அதிபதியோடு சுபர்கள் சேர்ந்திருக்க, அவர்கள் நான்காம் இடத்தினில் அமர்ந்திருக்க அரச வெகுமதிகளைப் பெற்று நன்மையோடு இருந்து வாழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### வாகனம் உடையவன்

செந்தநா லுடைய நாதன் சுகமுறும் கேந்தி ரத்தில்
உந்திடும் இராசி நாதன் உயர்ந்தலக் கனத்தில் அல்லால்
வந்தபத் துடையோன் இலாப மீதிலே வாழ மிக்காய்
அந்தவா கனத்தோன் கர்மம் அனையாவா கனமுண்
டாமே. (185)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, கேந்திரத் தானங்களில் இருக்க, இராசியாதிபதி இலக்கனத்தில் இருக்க, அல்லது பத்காம் இடத்திற்கு அதிபதி பதினோராம் இடத்திலே நிற்க, நான்காம் இடத்திற்கு அதிபதி பத்தாம் இடத்தில் ஏறி நிற்க, அச்சாதகனுக்கு வாகனம் உண்டு என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### அரசன்

இலாபத்தில் நான்கின் நாதன் நண்ணிட அல்லால் நாலில்
இலாபந்தான் சேயும் இலாபம் மீதிலே உறையச் செவ்வாய்
இலாபந்தான் இராசி யாகக் கண்டிட வாழும் நாளில்
உலோபத்தான் அல்லால் இராச்சியம் தோன்றிடும்
சொல்லுங் காலே. (186)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி பதினோராம் இடத்தில் அல்லது தன் வீட்டில் நின்றிட அல்லது செவ்வாய் பதினோராம் இடத்தில் அல்லது தன் வீட்டில் நின்றிட சந்தேகமின்றி அரசனாவான் என்றவாறு.

## *பாக்கியவான்*

*வாகன நாதன் நான்கில் வந்திட உச்சம் ஆட்சி*
*ஆகவே கேந்திர கோணம் ஆயினால் கீர்த்தி மானாய்த்*
*தேகமாய்க் கட்டில் மெத்தை சேத்திரம் நல்ல வீடும்*
*பாகமாய் ஆயுள் தீர்க்கம் வாகனம் பரிசை சுத்தம். (187)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி தன் சொந்த வீட்டில் ஆட்சி, உச்சம் பெற்றுக் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் அச்சாதகன் புகழுடையவனாகவும் கட்டில், மெத்தை, பூமி, நல்லவீடு போன்றவைகள் உடையவ னாகவும், நீண்ட ஆயுளைப் பெற்றவனாகவும், வாகனங்கள் பலவற்றை உடையவனாகவும் மகிழ்ச்சியுடன் வாழ்வான் என்று கூறவேண்டும்.

## *செல்வன்*

*புந்திதான் உச்ச இராசி தன்னிலே பொருந்த அன்னோன்*
*சொந்தகேந் திரத்தி லாதல் சுகதிரி கோணத் தாதல்*
*வந்திட வித்தை யாகும் வாகனம் வரசம் பத்தும்*
*சிந்தையால் தேடும் பொன்னும் திரவியத் தோடும் வாழ்வார். (188)*

**(இ-ள்.)** புதன் தன் உச்ச இராசியிலே பொருந்த நிற்க அல்லது புதன் தன் ஆட்சி வீட்டில் அல்லது கேந்திர திரிகோண தானங்களில் இருக்க, வித்தைகளில் சிறந்து விளங்குவான். வாகனங்களை உடையவனாகவும் செல்வம் நிறைந்த வனாகவும் திகழ்வான். தன் சொந்த முயற்சியால் செல்வத்தைத் தேடி இன்பமுடன் வாழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *பாக்கியவான்*

*தக்கலக் கனத்தோன் நாலுக் கதிபனும் தங்கள் ராசி*
*மிக்கபாக் கியத்தோன் மீது வந்தவர் இவர்கள் யாரும்*
*ஒக்கலக் கனசம் பந்தம் ஒருவருக் கொருவர் பார்க்க*
*திக்கெலாம் புகழும் இராசன் சிறிதுபல் லக்குண் டாமே. (189)*

(இ-ள்.) இலக்கனாதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி தங்கள் இராசிகளில் நிற்க, ஒன்பதாம் இடத்தில் இருந்த கோள்கள் இவை இலக்கன சம்பந்தம் உடையவைகளாக, ஒன்றை ஒன்று நோக்க, எண்திசையும் புகழும் இராசனாக விளங்குவான். பல்லக்கு உடையவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

**இதுவுமது**

முந்தைய பாட்டில் சொன்ன கிரகத்தில் மூன்று பேர்கள்
சிந்தையில் பலவா னாகிச் சேர்ந்திட இரத்தி னத்தால்
வந்திடும் ஆபர ணாதி வாகனம் முதலாய் உள்ள
விந்தையாய்ச் சேரும் நன்மை விளங்கவே புவியில்
வாழ்வான். (190)

(இ-ள்.) இலக்கனாதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி, தங்கள் இராசிகளில் நிற்க, ஒன்பதாம் இடத்தில் இருந்த கோள்கள் ஆகிய இந்த மூன்று கோள்கள் ஒன்று சேர்ந்து, பலம் பெற்று விளங்க, இரத்தினாபரணங்களை அணிபவனாக இருப்பவன்.வாகனங்களையும் பெற்று இப்புவியில் இன்பமுடன் வாழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

**இதுவுமது**

சொல்லிய கிரகம் மூன்றில் இரண்டுபேர் சுகமாய் நின்று
இல்லிடம் தன்னில் வாழ இவர்திசை அபகா ரத்தில்
அல்லலில் லாமல் வாழ்ந்து அசுவவா கனத்தி னோடும்
வல்பிணி இல்லான் நன்மை யாகவே வாழும்
அன்னோன். (191)

(இ-ள்.) இலக்கனாதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி, தங்கள் இராசிகளில் நிற்க, ஒன்பதாம் இடத்தில் இருந்த கோள்கள் ஆகிய இந்த மூன்று கோள்களில் எவையேனும் இரண்டு கோள்கள் தங்கள் வீடுகளில் ஆட்சி பெற்று விளங்க,

அக்கோள்களின் திசை, புத்திகளில், சாதகர் துன்பமின்றி வாழ்வார். குதிரை வாகனம் உடையவனாகவும், நோய்களற்றவனாகவும் இன்புற்று வாழ்ந்திருப்பான் என்று சொல்லவேண்டும்.

## வாகன யோகம் உடையவன்

*வருந்திய நாலின் கோளன் வன்பல னாக நாலும்*
*திருந்திய இலாபம் ஏழும் பலமொடும் சேர இராசிக்*
*கருந்தவர் லக்னசம் பந்த மாகவர் திசைகள் தன்னில்*
*பொருந்தவே நன்மை யாகும் போதவா கனமுண்*
*டாமே.(192)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி பலவானாக இருக்க, நான்காமிடம், ஏழாமிடம், பதினோராமிடம் ஆகிய இடங்களில் பலவானாகச் சேரவும் இலக்கன சம்பந்தம் உடையவர்களாக இருக்க, அவர்களுடைய திசைகளில் பல நன்மைகள் உண்டாகும். வாகன யோகமும் உண்டாகும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## சுகவான்

*பாக்கியத் ததிபன் நாலின் பதியனும் கண்ணுள் ளோனும்*
*ஆக்கமாம் இலாப நாதன் அவர்கள்லக் கனசம் பந்தம்*
*தாக்கிய பலவா னாகத் தன்திசைஅபகா ரத்தில்*
*தீர்க்கமாய் இராச்ய இலாபம் திரவிய முடனே*
*வாழ்வாம்.(193)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி, இரண்டாம் இடத்திற்கு அதிபதி, பதினோராம் இடத்திற்கு அதிபதி ஆகிய நால்வரும் இலக்கன சம்பந்தம் உடையவர்களாக விளங்க, அவர்களுடைய திசை, புத்தி காலங்களில், பூமி இலாபம் உண்டாகும். செல்வம் கிட்டும். இன்பமான வாழ்வு உண்டாகும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## புகழ், துக்கம் உடையவர்கள்

உரத்திடும் நான்கு பேரும் உறுபல னாகச் சென்மம்
வருத்துசம் பந்த மாக வருபவு சுடனே வாழ்வார்
கருத்தொரு பலமில் லாமல் கண்டிடத் துக்கி யாவான்
சரித்திரம் சுரூபம் பாவர் சரியெனச் சமனாய் என்ன. (194)

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி, இரண்டாம் இடத்திற்கு அதிபதி, பதினோராம் இடத்திற்கு அதிபதி ஆகிய நால்வரும் இலக்கன சம்பந்தம் பெற்றால் இச்சாதகன் புகழுடன் வாழ்வான். இவர்கள் பலம் இன்றி விளங்க என்றும் துக்கம் உடையவனாக வாழ்வான். இந்நால்வரில் பாவரும் சுபரும் சம எண்ணிக்கையில் இருக்க, பலன்களும் சமனாக இருக்கும் என்றவாறு.

## நான்கு வாகனங்கள் உடையவன்

ஆறெட்டில் பன்னி ரெண்டில் ஆனநான் குடைய கோளன்
சீறிடும் பகைநீ சங்கள் சேர்ந்திடப் பாக்ய நாதன்
ஏறிட்டுப் பார்க்க வேறு இகல்புறு வாக னங்கள்
கூறிட பின்னே கொஞ்ச நால்வா கனமாய்க் கூறே. (195)

(இ-ள்.) ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டா ம் இடங்களில் நான்காம் இடத்திற்கு அதிபதி பகை நீசமாக அமர்ந்திட, அதை ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி நோக்க, வாகன யோகம் உடையவனாக விளங்குவான். பின்னாளில் நான்கு வாகனங்களைப் பெற்றவனாகத் திகழ்வான் என்று கூறவேண்டும் என்றவாறு.

## துக்கி

சென்மமீ தணைந்தோன் பத்தில் சேர்ந்தவன் பாக்கி யத்தில்
தன்மமாய் வந்தோன் உச்சம் சார்ந்திடச் சுபராய் நிற்க
வன்பல லக்க னத்தோன் வந்திடும் வாக னத்தில்
பின்புஅந் தியத்தில் மிக்காய் பிழையொடும் துக்கி யாவான். (196)

(இ-ள்.) இலக்கனத்தில் அமர்ந்தோன், பத்தாம் இடத்தில் அமர்ந்தோன் ஆகியோர் உச்சம் பெற்று இலக்கனத்தோன் சுபராக விளங்கிட வாகன யோகம் உடையவனாக விளங்குவான். ஆயினும் வாழ்நாளின் பிற்பகுதியில் குற்றமுடைய வாழ்க்கையோடு, துக்கம் உடையவனாக வாழ்வான் என்றவாறு.

### அரசன்

*அந்தணன் என்னும் நாலுக் கதிபனா கிலுமே அன்பாய்*
*வந்திடும் சுபரோ டேகி வருந்தியே நாலிற் கூட*
*இருந்தவா றிருக்கும் வோரை இயல்பென வெகுகா லங்கள்*
*சிந்திடா திருக்கும் ராஜா தினம்நர வாக னத்தான். (197)*

(இ-ள்.) குரு, நான்காம் இடத்திற்கு அதிபன் ஆகிய இருவரும் சேர்ந்து இடத்தில் சேர்ந்திருக்க, நீண்ட காலம் மன்னனாக விளங்கி, பல்லக்கில் தினமும் செல்பவனாகச் சிறப்புற்று வாழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### பல்லக்கு உடையவன்

*முன்னுரை செய்த பேர்கள் இரண்டையும் உகந்து பாவர்*
*அன்னவ ருடனே கூடி ஆறெட்டில் பன்னி ரெண்டில்*
*வன்பகை நீச மத்த மனங்கள்வா கனமோ இல்லை*
*இன்புறும் ஆட்சி யாகில் இயல்பல்லக் கேறு வானே. (198)*

(இ-ள்.) குரு, நான்காம் இடத்திற்கு அதிபதி இவர்களுடன் பாவக்கோள்கள் கூடி ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்களில் பகையாகவோ நீசம் பெற்றோ அத்தனமாகவோ இருப்பின், இச்சாதகனுக்கு வாகனங்கள் கிடைக்காது. ஆனால் குரு, நான்காம் இடத்திற்கு அதிபதி இவர்கள் பாவக்கோள்களுடன் கூடி ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் ஆட்சிபெற்று இருந்தால் பல்லக்கினை உடையவனாக விளங்குவான்.

## பாக்கியவான்

எண்ணிய நாலிற் கோளன் இயல்புபாக் கியத்து நாதன்
நண்ணிய இலாபம் மீதில் நாடிட அல்லால் இலாபம்
புண்ணிய இராசி தன்னைப் பெரும்பல மாக நோக்க
மண்ணினில் பிறந்தோன் பாக்ய வானென வாழ்வுண்
டாமே.(199)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, பதினோராம் இடத்தில் இருக்க அல்லது இலாபாதிபதி ஒன்பதாம் இராசியை பலமாக நோக்கப் பிறந்த சாதகன் [redacted] பாக்கியங்கள் அனைத்தையும் பெற்று இன்புற்று வாழ்வான் என்று சொல்லவேண்டும்.

## அரச சமானன்

மன்னவன் நாலிற் கோளன் வருந்திய பாக்கி யத்தோன்
உன்னிய இலாபம் மீதில் ஊறிட அல்லால் நாலை
இன்னவர் பார்க்கப் பாக்ய என்றும் கனமும் உண்டாம்
தென்னவன் என்ன ராசப் பிரீதியும் தீர்க்க மாமே. (200)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி இருவரும் இலாபத் தானத்தில் இருக்க, நான்காம் தானத்தை இவர்கள் பார்க்கப் பிறந்த சாதகன், அனைத்து [redacted] பாக்கியங்களையும் பெற்று விளங்குவான். வாகனயோகம், உடையவனாகவும் அரசரின் நல்மதிப்பைப் பெற்று பாண்டிய மன்னனைப் போலத் திகழ்வான் என்று சொல்லவேண்டும்.

## அரச வெகுமதி பெறுபவன்

பாக்கிய நாதன் நாலில் பதியெனும் ஒன்றாய்க் கூடி
ஆக்கலக் கனசம் பந்த மாகவே இருந்து வாழ்ந்தால்
நீக்கிய இ[redacted]த்தை நினைவொரு வியாழன் பார்க்கத்
தீர்க்கமாய் இராச மானம் திருந்துபூ ஷணமுண் டாமே. (201)

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியும் நான்காம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றாகச் சேர்ந்து இலக்கன சம்பந்தம் பெற்றிருக்க, இலக்கனத்தை குரு பார்க்க, அரசனிடத்தில் இருந்து இச்சாதகனுக்கு வெகுமதியும் ஆபரணங்களும் கிடைக்கும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *வெற்றி வீரன்*

*பாக்கிய ததிபன் நாலில் பதியெனும் இவர்கள் தானும்*
*தீர்க்கமாய்ச் சுபரோ டேக சேர்ந்துவாழ் திருக்கும் நாளில்*
*வாக்கமாம் பலத்தை நல்கும் அணிபடைக் கதிப னாகும்*
*சீக்கிரக் கதியால் சென்ற இடந்தனில் செயமாம்*
*என்னே. (202)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி ஆகிய இருவரும் சுபக்கோள்களோடு சேர்ந்திருப்பின், அச்சாதகன் வீரம் மிக்கவனாகப் படைக்கு அதிபதியாக இருப்பான். போருக்குச் சென்ற இடங்களில் எல்லாம் வெற்றி பெற்றுத் திரும்புவான் என்றவாறு.

## *பாக்கியவான்*

*வாகனத் ததிபன் இலாபம் மீதிலே வந்தோன் தானும்*
*வேகமாய் வியாழன் சுங்கன் விரைவொடு கூட இராசி*
*பாகமாய் இலாப நாதன் பசியகேந் திரதிரி கோணம்*
*ஆகவேபல் லக்கு யானை அணிகலம் பரிமா*
*வென்னே. (203)*

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, பதினோராம் இடத்தில் நின்றவன், குரு, சுக்கிரன் ஆகியோர் ஒன்று கூடி சுப இராசியில் நிற்க, பதினோராம் இடத்திற்கு அதிபதி கேந்திர திரிகோணங்களில் ஏறி இருக்க, பல்லக்கு, யானை, குதிரை ஆகிய வாகனங்களொடு மிகுந்த ஆபரணங்களையும் உடையவனாக விளங்குவான் என்பது சொல்ல வேண்டும் என்றவாறு.

## சக்கரவர்த்தி

ஆறினுக் குடையோன் ஏழுக் கதிபன்இலக் கனத்து நாதன்
தூறிய இலாப நாதன் ஒருபன்னி ரண்டுக் குள்ளோன்
வீறொடு மூன்றுள் ளோனும் வெள்ளியும உடனே கூடில்
தேறிய இராசா ஆவான் செகமொடு குடைக்கீ ழாமே. (204)

(இ-ள்.) ஆறாம் இடத்திற்கு அதிபதி, ஏழாமிடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி, பதினோராம் இடத்திற்கு அதிபதி, பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதி, மூன்றாம் இடத்திற்கு அதிபதி ஆகிய இக்கோள்களுடன் சுக்கிரனும் கூடி இருக்க, அரசன் ஆவான். இச்சாதகன், இவ்வுலகத்தையே ஒரு குடைகீழ் ஆளும் சக்கரவர்த்தியாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## அதிகாரி

மாதுருந் தான நாதன் வருங்குரு வுடனே யாலும்
ஏதமில் புகரோ டாலும் ஏகியே பாக்கி யத்தில்
ஆதவன் கேந் திரத்திரி கோண மாகவே வாக னங்கள்
போதவாய் உண்டாம் அன்னோன் பொருந்திய எசமா னாமே. (205)

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியும் நான்காம் இடத்திற்கு அதிபதியும், சுக்கிரனும் ஒன்றுகூடி, ஒன்பதாம் இடத்தில் அல்லது நான்காம் இடத்தில், கேந்திர திரிகோணங்களில் இருந்தால் நல்வாக்கு உடையவனாக, வாகனங்களுடன் புவியை ஆளும் அரசனாக விளங்குவான் என்றவாறு.

## இதுவுமது

புந்திலக் கனத்தில் நட்பாய் பொருந்தவே பாக்கி யத்தில்
வந்திடும் கிரக உச்ச மாகவாக் குடைய நாதன்
தந்தகேந் திரத்தில் ஏறத் தருஞ்சிங்கா சனத்துக் காவான்
சிந்திடும் திரவி யங்க ளாமெனச் செப்ப லாமே. (207)

(இ-ள்.) புதன் இலக்கனத்தில் நட்புடன் விளங்க, ஒன்பதாம் இடத்தில் உச்சமடைந்து கோள்கள் நிற்க, இரண்டாம் இடத்திற்கு அதிபதி கேந்திரத்தில் ஏற, அரசனாக விளங்குவான். மிகுந்த செல்வங்களைக் கொண்டவனாகத் திகழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### இதுவுமது

*சொன்னகேந் திரத்தில் நல்ல சுபக்கிர கங்கள் கூடி*
*அன்னபாக் கியத்தைப் பார்க்க வானவர்க் குடையோன் மிக்க*
*பொன்சுப ருடனே கேந்திரம் பொருந்தவே இரண்டின் உச்சம்*
*உன்னிய கிரக மாதி உயர்சிம்மா சனத்துக் காவான். (208)*

(இ-ள்.) கேந்திரத் தானங்களில் சுபக்கோள்கள் நிற்க, அவை ஒன்பதாம் இடத்தைப் பார்க்க, இரண்டாம் இடத்திற்கு அதிபதி உச்சம்பெற்று சுபக்கோள்களுடன் கூடி கேந்திரங்களிலே நிற்க, இரண்டாம் இடத்தில் உச்சம் பெற்ற கிரகம் நிற்க, சிங்காசனத்திற்கு உரிமையுடைய மன்னனாகத் திகழ்வான்

### இதுவுமது

*நாலினுக் கதிபன் இலக்கன நாதனும் மாதாவின் கோளும்*
*சோலியி லாமல் பத்திற் சுகமுடன் இருக்கக் கன்மம்*
*வாலிபன் இலக்க னத்தில் வந்திடச்சுபரே பார்க்க*
*காலுள சிம்மா சனத்துக் கதிபனாம் கண்டு பாரே. (209)*

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதியும், இலக்கனாதிபதியும், நான்காம் இடத்திற்கு அதிபதியும் பத்தாமிடத்தில் அமர அல்லது பத்தாம் இடத்திற்கு அதிபதி இலக்கனத்தில் வந்திட அக்கோளைச் சுபக்கோள் நோக்க, சிம்மாசனத்திற்கு அதிபதியாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

பத்தினுக் குடையோன் இலக்கன நாதனும் பாக்கிய நாதன்
ஒத்திவர் கூடப் பத்தில் உறைந்திட கர்ம நாதன்
சத்தியஇலக் கனசம் பந்த மாகவே சார்ந்த போது
பெற்றிடும்சிங் காச னத்துப் பிள்ளையாம் பேணிப்
பாரே.(210)

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதியும், இலக்கனாதிபதியும், ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்று கூடி பத்தாம் இடத்தில் அமர்ந்திட, பத்தாம் இடத்திற்கு அதிபதி இலக்கனத்துடன் சம்பந்தமாக இருப்பின் சிங்கானத்தில் அமர்ந்து அரசனாவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## அரச சமானன்

பொன்னவன் வெள்ளி பார்க்கில் புண்ணியன் இவர்கள்
எல்லாம்
பண்ணுகேந் திரத்திரி கோணம் பதியவே அநேகம் உள்ள
வண்ணவா கனங்க ளுக்கு வரிசைமன் னவனாம் இராசா
என்னலாம் இன்ன யோகம் இளமையில் விளங்கு
வானே.(211)

(இ-ள்.) குரு, வெள்ளி, ஒன்பதாம் இடத்திற்கு, அதிபதி ஆகிய மூவரும் கேந்திர திரிகோண தானங்களிலே அமர, இளமையிலேயே பலவகையான வாகனங்களுக்கு அதிபதியாக அரசனைப் போல விளங்குவான் என்று சொல்லவேண்டும்.

## அரசன்

பத்தினிற் நாலிற் கோளன் பதிந்திடப் பலவா னாகப்
பத்தினுக் குடையோன் தானே பார்த்திட அல்ல வென்றால்
பத்தினுக் குடையோன் கூடிப் பரிவுடன் ஓரை ஏறில்
நித்தினில் பிள்ளை இராசா பதிசிம்மா சனமும் பாரே. (212)

(இ-ள்.) பத்தாம் இடத்தில் நான்காம் இடத்திற்கு அதிபதி பலவானாக அமர, பத்தாம் இடத்தின் அதிபதி பார்த்திட அல்லது பத்தாம் இடத்திற்கு உடையவனுடன் கூடி, சென்ம இராசியில் இருக்கப் பிறந்த பிள்ளை சிம்மாசனம் ஏறும் அரசனாகத் திகழ்வான்.

## பகைவரின் செல்வம் பெறுபவன்

இலக்கனாதிபதினும் பாக்கிய நாதனும் நாலில் ஏற
தக்கநா லுடைய நாதன் தன்னிலே சார்ந்து நிற்க
மிக்கதாய் சுபர்கள் இராசி மேவிடத் தினமும் நன்மைச்
சிக்கும்சத் துருவின் பாக்கியம் சேர்ந்திடும் செய்கை
யாமே. *(213)*

(இ-ள்.) இலக்கனாதிபதியும், ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியும் நான்காம் இடத்தில் சேர்ந்து அமர, நான்காம் இடத்திற்கு அதிபதி, இலக்கனத்தைச் சார்ந்து, அது சுப இராசியாக விளங்க, அச்சாதகன், பகைவருடைய செல்வத்தையும் தான் அனுபவிப்பான் என்று சொல்ல வேண்டும்.

## இழந்த செல்வத்தை பெறுபவன்

பாக்கியம் மீதில் ஏழின் பயன்வந் திருக்க நல்ல
ஆக்கமாம் சுபரே பார்க்க வரிபல மானால் வாழ்வோன்
போக்கிடு நன்மை யோகம் பொருந்திய திரியால் பின்னும்
சீக்கிரம் தன்னில் பாக்கியம் சேர்ந்திடும் அறிந்து
செப்பே. *(214)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தில், ஏழாமிடத்திற்கு அதிபதி அமர்ந்திருக்க, அதனை சுபக்கோள் பார்க்க, வலிமை பெற்று விளங்கினால், பெண்ணின் காரணமாக நன்மைகளையும், யோகங்களையும் இழப்பான். ஆனால் விரைவாகவே இழந்த செல்வங்களையெல்லாம் மீண்டும் அடைவான் என்று சொல்ல வேண்டும்.

## சுகமற்றவன்

பொருந்திய நாலிற் கோளன் புண்ணிய சுபரோடேக
வருந்தவர் திசையால் மிக்க அபகாரத் தாதல் நன்மை
வருந்திய பாபர் கூட வருந்திசை அபகாரத்தில்
இருந்திடச் சுகமே இல்லை எழில்பெறும் பிள்ளை
தானே. (215)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, சுபக்கோள்களுடன் சேர்ந்து இருக்க, அவருடைய திசை, புத்திகளில் நன்மை உண்டாகும். நான்காம் இடத்திற்கு அதிபதி பாவக் கோள்களுடன் சேர்ந்து இருக்க, அவருடைய திசை, புத்திகளில் சாதகர்க்குச் சுகம் கிடைக்காது என்றவாறு.

## செல்வன்

நாடிய நாலாம் தானம் நற்சுப இராசி யாக
தேடிய நாலின் கோளன் சீரிய னுடனே கூடிப்
பாடிய செவ்வாய் தானும் பதிந்திட அநேக சேத்திரம்
கூடிய திரவி யங்கள் குவிந்திடும் என்று சொல்லே. (216)

(இ-ள்.) நான்காம் இடம் சுப இராசியாக இருக்க, நான்காம் இடத்திற்கு அதிபதி, சுபக்கோள்களுடன் கூடி, செவ்வாயுடன் சேர்ந்து அமர, பூமி இலாபத்தை உடையவனாகவும் பெரிய செல்வனாகவும் விளங்குவான் என்று சொல்லவேண்டும்.

## தரித்திரன்

பாடிய நாலிற் கோளும் பகைநீசம் தன்னில் வாழ
வாடியகா லாக்கினி சூழ வந்திடச் சட்டி யாங்கிசம்
தேடிய பாவர் கூடச் சேத்திரசுப வாத்தி யங்கள்
ஓடிடும் திரவி யங்கள் உண்மையாய் நாச மாமே, (217)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி பகை, நீச வீடுகளில் இருக்க, சட்டியாம்சத்தில் காலாக்கினியில் ஏற,

பாவருடன் கூடி நிற்க, பூமி, இனிய இசைக்கருவிகள், செல்வங்கள் அனைத்தும் அச்சாதகனை விட்டு நீங்கிவிடும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

**இதுவுமது**

*சென்மஇலக் கனத்து நாதன் சேரும்ஓ ரைக்கு இலாபம்*
*சென்மஇரா சிக்கு நாதன் சத்துரு வாகச் சேர்ந்தால்*
*துன்புறும் திசையில் பொல்லா வரும்அப காரம் மீதில்*
*இன்புறும் வீடு பூமி இதுவெல்லாம் நாச மாமே.* *(218)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி அமர்ந்த இராசிக்குப் பதினோராம் இடத்தில் இராசியாதிபதி பகையாக அமர அவன் திசை, புத்திகளில் துன்பமும் பொல்லாப்பும் வந்து சேரும். இச்சாதகனுக்கு இருந்த வீடு பூமி இவையெல்லாம் கைவிட்டுப் போகும் என்றவாறு.

**இதுவுமது**

*புண்ணிய நாலின் கோளன் புகழ்திசை அபகா ரத்தில்*
*நண்ணும்தாய் வழியில் தானே நாசமாம் துக்க மாகும்*
*திண்ணிய சனியும் சேயும் திறமுடன் நாலிற் கோளன்*
*எண்ணிய குளிகன் கூடி இருந்திட நாச மாகும்.* *(219)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதியின் திசை, புத்திகளில் தாய் வழியில் அழிவும் துக்கமும் உண்டாகும். நான்காம் இடத்திற்கு அதிபதியுடன் சனி, செவ்வாய், குளிகன் முதலான பாவக்கோள்கள் சேர்ந்திருக்க அழிவு உண்டாகும் என்றவாறு.

## *செல்வன்*

*வாக்கினுக் குடையோன் நாலின் மன்னவ ருடனே கூடில்*
*பாக்கிய மீதே வந்து பரிவுடன் சுபரே கூட*
*ஆக்கமாய்ச் சுபர்கள் இராசி யாகவே அணைந்த போது*
*தீர்க்கமாய்த் திரவி யங்கள் செப்பமாய் இலபிக்கும்*
*தானே.(220)*

(இ-ள்.) இரண்டாம் இடத்திற்கு அதிபதி நான்காம் இடத்திற்கு அதிபதியுடன் சேர்ந்து, ஒன்பதாம் இடத்தில் சுபக்கோள்களுடன் சேர்ந்திருக்க, சுபக்கோள்கள் நட்புடன் விளங்கினால் திரவிய இலாபம் உறுதியாகக் கிடைக்கும் என்று சொல்ல வேண்டும்.

**இதுவுமது**

இலாபத்தா னத்தோன் இரண்டின் நாதனும் கேந்தி ரத்தில்
சுலோபத்தால் திரவி யங்கள் சுகமுடன் லபிக்கும் என்ன
குலோபத்தான் இரண்டின் நாதன் குணமுடன் சுபரோ டேகி
உலோபத்தான் இராசி நன்றாய் உடன்திர வியமே
காணும். (221)

(இ-ள்.) இலாபத் தானாதிபதியும் இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்று சேர்ந்து கேந்திரத் தானங்களில் இருப்பின் செல்வங்கள் மிகுதியாகக் கிடைக்கும். இரண்டாம் இடத்திற்கு அதிபதி சுபக்கோள்களோடு சேர்ந்து நட்பு இராசியில் அமர செல்வங்கள் மிகுதியாகச் சேரும் என்றவாறு.

## *செல்வத்தை இழப்பவன்*

பன்னிரண் டுடையோன் நாலின் பதியெனும் இரண்டின்
கோளும்
தன்மையே யாகக் கூடிச் சார்ந்திடப் பாவ ரோடு
முன்னிரு நான்கே ஆறும் பன்னிரண் டதிலே முத்தில்
அன்னவன் திரவிய நாச மாய்விடும் மனையும் போமே. (222)

(இ-ள்.) பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதியும், நான்காம் இடத்திற்கு அதிபதியும் இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றுகூடி பாவக்கோள்களைச் சார்ந்து நான்காமிடம், ஆறாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்களில் இருப்பின், செல்வங்கள் அழிவதோடு வீடும் கையை விட்டுப் போய்விடும்.

## கிணற்றில் விழுந்து மரணம் அடைபவர்

வாகனத் தான மீதில் வந்திடும் கிரக நீச
மாகவே அல்லால் அத்த மனங்களாய் அமர்ந்து வாழ
போகமாம் பெண்ணும் பிள்ளை பாழ்கிணற் றினிலே வீழ்ந்து
சாகவே விதியாம் என்ன சாத்தினார் நூல்வல் லோரே. *(223)*

**(இ-ள்.)** நான்காம் இடத்தில் நீசக்கோள்கள் அல்லது கோள்கள் அத்தமனம் பெற்று விளங்கு மாயின், அச்சாதகம் ஆணுடையதாக இருப்பினும் பெண்ணுடையதாக இருப்பினும் பாழும் கிணற்றில் விழுந்து இறப்பார்கள் என்று சோதிட நூல் வல்லவர்கள் கூறியுள்ளார்கள் என்றவாறு.

## தரித்திரன்

நலம்தரும் நான்காம் தானம் தன்னிலே நடக்கப் பாவர்
பலம்தரும் அறமே இல்லான் பாவரு மாவான் என்ன
பலம்தரும் சனியும் நான்கில் பின்னிடப் பிறந்த பிள்ளைக்
குலம்தனில் சுகமும் இல்லான் குணமில்லான் என்று
கூறே. *(224)*

**(இ-ள்.)** நான்காம் இடத்தில் பாவர் இருக்க, அநீதியாகப் பாவம் செய்பவனாக விளங்குவான். சனி, நான்காம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் சுகம் இல்லாதவனாகவும் நல்ல குணங்கள் இல்லாதவனாகவும் இருப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## சர்வாதிகாரி

தாயார்தா னத்தின் நாதன் தகுபன்னி ரண்டிற் சேர
ஆயவன் அன்னிய தேசம் அல்லது அடுத்தார் வீட்டில்
தூயநா லுடையோன் ஆறில் எட்டினில் சேர நிற்கில்
தீயதாய் அதிகா ரத்தில் இல்லினிற் திடமாய் வாழ்வான். *(225)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி பன்னிரண்டாம் இடத்தில் சேர, அச்சாதகன், அன்னிய தேசத்தில் அல்லது அடுத்தார் வீட்டில் வாழ்வான். நான்காம் இடத்திற்கு அதிபதி ஆறாமிடத்தில் எட்டினில் ஏறி இருக்க, வீட்டில் சர்வாதிகாரம் செய்து வாழ்பவனாக விளங்குவான்.

## *ஊரை விட்டுச் செல்பவன்*

*நாடிய நான்கின் நாதன் நலமிடும் இரண்டின் கோளன்*
*பாடிய பன்னி ரண்டின் பதியெனும் மூன்றீ ராறீன்*
*தேடியே எட்டீ ராறிற் சேர்ந்திட இவர்கள் உண்ண*
*ஓடிய திசைபொ சிப்பில் ஊரைவிட் டோடிப்*
*போவான். (226)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதியும் இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதியும் மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் சேர்ந்திருக்க, இவர்களுடைய திசை, புத்தியில் சாதகன் ஊரைவிட்டு ஓடிப்போவான்.

## *வீடுகள்*

*கேந்திரத்திரி கோண மீதிற் கெதியுடன் பலவா னாகச்*
*சார்ந்திடும் கோள்கள் எண்ணி தருபலன் வீடுண் டென்க*
*பேர்ந்தநா லுடையோன் பன்னி ரண்டினிற் பொருந்தி வாழ*
*ஈந்தவன் பிரிந்த வீட்டில் இருப்பனென் றுரைக்க*
*லாமே. (227)*

**(இ-ள்.)** நான்காமிடத்திற்கு அதிபதி கேந்திர திரிகோண தானங்களில் பலம் பெற்று விளங்க, அவ்வீடுகளில் உள்ள கோள்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வீடுகள் உண்டாம். நான்காம் இடத்திற்கு அதிபதி பன்னிரண்டாம் வீட்டில் அமர, அச்சாதகன் உறவினர்களை விட்டுப் பிறிந்து வேறு வீட்டில் இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

### இதுவுமது

சொன்னநா லுடையோன் கேந்திரத் தோன்றிடத் திரிகோ
ணத்தில்
அன்னவன் பலவா னாக அமர்ந்திட அல்லால் அன்னோன்
பன்னிரண் டாமி டத்திற் பதிந்திடப் பலவா னாக
வன்னசித் திரமாய் உள்ள மனையிலே இருந்து
வாழ்வான். (228)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி கேந்திர திரிகோணங்களில் பலவானாக அமர்ந்திட அல்லது பன்னிரண்டாம் இடத்தில் பலவானாக இருக்க, அழகான வீட்டில் இருந்து வாழ்வான்.

### இதுவுமது

மூன்றினிற் சுபனாய் நல்லோன் முழங்கியே பலவா னாகத்
தோன்றியே கோபு ராங்கிச மீதிலே சுகமாய் வாழ
வான்றவன் இருக்கும் வீடு அதிபல மாகி நன்றாம்
ஈன்றதைச் சொன்னோம் மின்னே! இயல்புடன் அறிந்து
பாரே. (229)

(இ-ள்.) மூன்றாமிடத்தில் சுபக்கோள்கள் பலம் பெற்றுக் கோபுராங்கிசத்தில ஏறி இருக்க, அவன் இருக்கும் வீடு அதிக பலமாக இருப்பின் அச்சாதகன் சுகமாக வாழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### *மரணம்*

பாவர்க ளுடனே ஐந்தின் பதிபனும் கூடி நாலில்
தாவிட வீடு சேத்திரம் தானு மாக் கினையாம் என்க
கோவிய அட்ட மாதி கொடுராங் கிசமாய் வாழ
ஆவலால் இந்த பாகம் மாய்ந்தஆக் கினையாம்
மின்னே. (230)

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி பாவர்களுடன் சேர்ந்து நான்காம் வீட்டில் இருந்தால் வீடு அழிந்து போவதோடு, சாதகர்க்கும் அழிவுண்டாகும். அட்டாதிபதி கொடூர அங்கிசத்தில் இருக்க, சாதகர்க்கு அழிவுண்டாகும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## கல்வீடு

மூன்றினிற் சுபர்கள் வாழ முதிர்ந்தநா லுடையோன்
நன்றாய்த்
தோன்றிட மூன்றிற் கோளன் சுகமொடு பலவா னாக
ஊன்றிட சாத கர்க்கு உறங்கிடும் வீடு கல்லால்
ஆன்றிட மட்டிப் பாவாய்! வந்திடும் அறிந்து பாரே. *(231)*

(இ-ள்.) மூன்றாம் இடத்தில் சுபக்கோள்கள் இருக்க, நான்காம் இடத்திற்கு அதிபதி நட்புடன் விளங்க, மூன்றாம் இடத்திற்கு அதிபதி பலவானாக இருக்க, அச்சாதகர் தங்கும் வீடு கல் வீடாக உறுதியானதாக விளங்கும் என்றவாறு.

**நான்காம் பாவம் முற்றும்**



# ஐந்தாம் பாவம்

## *பொது*

*பிஞ்சுமதி தரித்தமுடிப் பெம்மானை அடிதொழுது*
*பேசுங் காலை*
*கொஞ்சியபுத் திரர்நல்ல தெய்வம்வணங் கல்ராச*
*யோகம் கொண்டு*
*தஞ்சமெனும் புண்ணியத்தைத் தந்தபலன் யாத்திரையும்*
*சதிராய்ச் சொல்ல*
*ஐந்தில்வரும் பாவபலன் அறிந்துரைக்க வல்லீரே!*
*அடைவாய்ச் சொல்லே. (232)*

(இ-ள்.) இளம்பிறையைத் தன் சடாமுடியில் தரித்துள்ள பெருமானின் இடத்தைக்கொண்டு பலனைச் சொல்ல வேண்டும். புத்திரர்கள், தெய்வ வணக்கம், யோகம், புண்ணியம், யாத்திரை ஆகியவற்றை ஐந்தாம் இடத்தைக் கொண்டு பலனைச் சொல்லவேண்டும்.

## *பலன் கூறுதல்*

*சூரியன் நாலாம் தாளம் தன்னையே தொட்டுத் தந்தை ★*
*காரியம் சொல்ல அல்லால் கருதிய குருவும் ஐந்தில்*
*பாரியோன் தன்னைப் பார்த்துப் புத்திரப் பலனைச் சொல்ல*
*சீரிய புகரை ஏழும் இரண்டுடன் ஸ்திரியைச் சொல்லே. (233)*

(இ-ள்.) சூரியன், நான்காம் இடம் ஆகியவற்றைக் கொண்டு தந்தையைப் பற்றி சொல்லவேண்டும் குருவையும், ஐந்தாம் இடத்தின் அதிபதியையும் கொண்டு புத்திரனைப் பற்றிச் சொல்லவேண்டும். சுக்கிரனைக் கொண்டும், ஏழாமிடம், இரண்டாமிடம் ஆகியவற்றைக் கொண்டும் மனைவியைப் பற்றிச் சொல்லவேண்டும்.

---

★ சூரியன், ஒன்பதாம் இடத்தைக்கொண்டு தந்தையைப் பற்றி கூற வேண்டும் என்பது சோதிடர்கள் கூற்று.

## பெண் தெய்வங்களை வணங்குதல்

*புத்திரத் தானம் தன்னிற் புருடர்கள் இருக்க நல்ல*
*பத்தியால் புருடர் தெய்வம் பரிவுடன் வணங்கும் என்க*
*சத்தியாய் ஸ்திரி கிரகம் சார்ந்திட அல்லால் பார்க்க*
*நித்திய ஸ்திரிதெய் வத்தை நினைவுடன் போற்று வானே. (234)*

**(இ-ள்.)** ஐந்தாம் தானத்தில் ஆண் கோள்கள் இருக்க, இச்சாதகன் ஆண் தெய்வங்களை வணங்குவான் என்று சொல்ல வேண்டும். ஐந்தாம் தானத்தில் பெண்கிரகங்கள் இருக்க, அல்லது ஐந்தாம் தானத்தைப் பெண் கிரகங்கள் பார்க்க, இச்சாதகன் பெண் தெய்வங்களை வணங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## தெய்வ வழிபாடு

*ஆதித்தன் ஐந்தில் வாழ அல்லது அவரே பார்க்க*
*வாதிப்பன் சிவனை ஐந்தில் வந்திடும் மதியால் பார்க்க*
*சாதித்த தேவி செவ்வாய் சார்ந்திட நோக்கி நிற்க*
*சோதித்த குமரன் பாதம் சுகமொடு போற்று வாமே. (235)*

**(இ-ள்.)** சூரியன், ஐந்தாம் இடத்தில் இருக்க அல்லது சூரியன் ஐந்தாம் இடத்தைப் பார்க்க, இச்சாதகன் சிவனை வணங்குபவனாக இருப்பான். ஐந்தாம் இடத்தில் சந்திரன் இருக்க அல்லது சந்திரன் ஐந்தாம் இடத்தைப் பார்க்க, இச்சாதகன் உமையவளை வணங்குபவனாக இருப்பான். ஐந்தாம் இடத்தில் செவ்வாய் இருக்க அல்லது செவ்வாய் ஐந்தாம் இடத்தைப் பார்க்க இச்சாதகன் முருகனை வணங்குபவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

*புந்திதான் ஐந்தில் வாழப் பொருந்தவே பார்க்க விஷ்ணு*
*அந்தணன் இருக்கப் பார்க்க அம்மைசேர் சிவனுக் கன்பன்*
*சுந்தரச் சுங்கன் வந்து தோன்றிடப் பார்க்க லட்சுமி*
*மந்தனே இருக்கப் பார்க்க மாமனை வணங்கு வானே. (236)*

**(இ-ள்.)** புதன், ஐந்தாம் இடத்தில் அமர்ந்திருக்க, அல்லது ஐந்தாம் இடம் புதனால் பார்க்கப்பட இச்சாதகன் திருமாலை வணங்குபவனாக இருப்பான். ஐந்தாமிடத்தில் குரு இருக்க, அல்லது ஐந்தாமிடத்தைக் குரு பார்க்க, இச்சாதகன் அர்த்தநாரியாக விளங்கக் கூடிய சிவபெருமானை வணங்குபவனாக இருப்பான். ஐந்தாமிடத்தில் சுக்கிரன் அமர்ந்திருக்க, ஐந்தாமிடத்தைச் சுக்கிரன் பார்க்க இச்சாதகன் இலட்சுமியை வணங்குபவனாக இருப்பான். சனி ஐந்தாமிடத்தில் ஏறி இருக்க அல்லது ஐந்தாமிடத்தைப் பார்க்க மாமனை வணங்குபவனாக விளங்குவான் என்றவாறு.

## நற்பலன்களைப் பெறுவான்

புத்திரத் தான நாதன் புகழ்பெறு இலக்கன நாதன்
ஒத்துடன் கூடி ஏழில் உறைந்திட உண்மை தெய்வம்
சத்துரு வானால் அல்லல் சாருங்கோள் ஆட்சி உச்சம்
பத்திடப் பலனும் நன்றாய்ப் பரகதிக் குள்ளா வானே. *(237)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி ஒன்று சேர்ந்து ஏழாமிடத்தில் அமர்ந்திருக்க, இறைவன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உடையவனாக அச்சாதகன் இருப்பான். இக்கோள்கள் பகைபெற்று ஏழாமிடத்தில் இருக்கில், துன்பம் வந்து அச்சாதகன் மிகவும் வருந்துவான் ஏழாமிடத்தில் இக்கோள்கள் ஆட்சி அல்லது உச்சம் பெற்று இருப்பின், அச்சாதகன் நற்பலன்களைப் பெற்று நன்மையடைவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## பெருஞ்செல்வம்

வெள்ளியும் குருவும் புந்தி விளங்கவோ கூடி ஐந்தில்
உள்ளிட அல்லால் தானம் தன்னையே உண்மை யாக
வெள்ளியே நோக்க மாகி உயர்ந்தரா சாக்கள் போற்றும்
மெள்ளவே வெகுசம் பத்தும் விரைவுடன் உண்டாம்
என்றே. *(238)*

**(இ-ள்.)** சுக்கிரனும் குருவும் புதனும் ஒன்று கூடி ஐந்தாம் இடத்தில் இருக்க, அல்லது ஐந்தாம் இடத்தை சுக்கிரன் பார்க்க, இச்சாதன் இராசாக்களால் போற்றத் தக்கவனாக பெருமையுடன் வாழ்வான். பெருஞ்செல்வம் அவனை வந்து சேரும் என்பதைச் சொல்லவேண்டும் என்றவாறு.

## *மன்னரின் விரோதம்*

கும்பிடுத் தானம் ஐந்தில் கொடுப்பவர் இருக்க அல்லால்
நம்பிய ஐந்தின் நாதன் நலம்தரும் பாவர் பார்க்கத்
தம்பியோ வித்தை இல்லான் தான்வினைக் குதவான்
பொல்லான்
அம்புவி ஆளும் வேந்தன் அறைந்திட்டார் அறிந்து
பாரே. *(239)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில் கொடிய பாவக்கோள்கள் இருக்க அல்லது ஐந்தாம் இடத்திற்கு அதிபதியைப் பாவக் கோள்கள் பார்க்க, அச்சாதகன் வித்தைகளைக் கற்றுக் கொள்ளாமல் ஒரு செயலையும் செய்யாதவனாகப் பொல்லாதவனாக விளங்குவான். மன்னரிடம் நற்பெயர் பெறாதவனாகவும் திகழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## *பிள்ளை மரணம்*

நாலினுக் குடையோன் லக்கினம் நாடியே இருந்து வாழ
வாலிபன் இலக்கன நாதன் மனதொரு நாலில் ஏற
வேலவே கிரகம் பார்க்க எழிலொடு கூடி நின்றால்
காலுநா லுடைய பிள்ளைக் கடும்விடம் படுவா
னன்றே. *(240)*

**(இ-ள்.)** நான்காம் இடத்திற்கு அதிபதி, இலக்கனத்தில் இருக்க, இலக்கனாதிபதி நான்காம் இடத்தில் இருக்க, மற்ற கிரகங்கள் இவ்விடங்களைப் பார்க்க அல்லது அங்குள்ள கோள்களோடு சேர, இச்சாதகனுக்கு நான்கு கால்களை

உடையவனாகப் பிள்ளையாய்ப் பிறந்து, விடத்தினால் மரணமடைவான் என்று சொல்ல வேண்டும்.

## அழகற்ற பிள்ளை

ஏழினுக் குடையோன் ரண்டின் இறைவனும் நாலிற்
கோளும்
ஏழெனும் ஐந்திற் கோளும் விரைவுடன் கூடிப் பாவர்
ஊழியம் போலே கூட அல்லது உணர்வாய்ப் பார்க்க
வாழ்கடல் தாண்டு நல்ல அனுமனைப் போலும்
பிள்ளை.(241)

(இ-ள்.) ஏழாம் இடத்திற்கு அதிபதியும் இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் நான்காம் இடத்திற்கு உடையவனும் ஐந்தாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்று கூடி, அவர்களுடன் பாவக்கோள்கள் கூட அல்லது இவர்களைப் பார்க்க இச்சாதகர்க்கு அனுமனைப் போல புத்திரன் பிறப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## பெருஞ்செல்வன்

தூக்கிடும் ஐந்தாம் தானம் ஏழையும் தொடர்ந்து நன்றாய்ப்
பாக்கியத் ததிபன் கூட அல்லது பார்க்கத் திங்கள்
தாக்கிய இராசி தொட்டுச் சதிரோடிப் படியே பார்க்க
ஆக்கமாய் வெகுசம் பத்து ஆகுமே அவனி மீதே. (242)

(இ-ள்.) இலக்கனத்துக்கு ஐந்தாம் இடத்தில் அல்லது ஏழாம் இடத்தில், ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி சேர அல்லது இவ்விடங்களைப் பார்க்க, இராசிக்கு ஐந்தாம் இடத்தில் அல்லது ஏழாம் இடத்தில் ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி சேர அல்லது அவ்விடங்களைப் பார்க்க, இச்சாதகன் பெருஞ்செல்வம் உடையவனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## பிள்ளை மரணம்

கன்னியே ஜென்ம மாகக் கிரகசனி மீனத் தல்லால்
உன்னியே செவ்வா யாகில் உடன்திரி செத்துப் போவாள்
சொன்னஐந் தானம் மீதில் சோர்வின்றிப் படியே யாகில்
முன்னமே பிள்ளைச் சாவான் முருகவிழ் குழலி னாளே! *(243)*

**(இ-ள்.)** கன்னி ஜென்ம இராசியாக இருக்க, மீன இராசியில் சனி இருக்க, ஐந்தாமிடத்தில் செவ்வாய் நிற்கில், இச்சாதகனுடைய மனைவி மரணமடைவாள் என்று சொல்ல வேண்டும். ஐந்தாமிடத்தில் செவ்வாய் இருக்க, இச்சாதகனுடைய மரணத்திற்கு முன் அவனுடைய பிள்ளை மரணமடைவான் என்பதைச் சொல்லவேண்டும் என்றவாறு.

## பெண் பிள்ளைகள்

புத்திரத் தானம் மீதில் புகழ்பெறு பாக்கிய நாதன்
உத்துடன் ஏழில் வாழ ஊறிய இராசி பெண்ணால்
வைத்ததைச் சுங்கன் திங்கள் மனதொடு பார்த்து நின்றாய்ப்
போற்றிடும் பிள்ளை பெண்ணாம் பின்னையும் சொல்லு
வேனே. *(244)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில் அல்லது ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி ஏழாம் இடத்தில் இருக்க அல்லது இந்த இராசி பெண் கிரகங்களான சந்திரன், சுக்கிரன் ஆகிவற்றால் பார்க்கப் பட்டால், இச்சாதகனுக்கு அதிகமான பெண் குழந்தைகள் தோன்றுவார்கள் என்று சொல்லவேண்டும்.

## ஆண் பிள்ளைகள்

மகவுடைத் தான நாதன் வருந்திய பாக்கி யத்தோன்
இகலின்றி ஏழில் ஏறி இருந்ததோர் வோரைதான் ஆனால்
சுகமொடு புருஷ வர்க்கம் தோன்றிடப் புருஷர் பார்க்க
சகமதில் பிறக்கும் பிள்ளை ஆண்எனச் செப்ப லாமே. *(245)*

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி இருவரும் ஏழாம் இடத்தில் ஏற, அந்த ஏழாமிடம் ஆண் இராசியாக இருக்க, ஆண் கோள்களால் அந்த இடம் பார்க்கப்பட, இச்சாதகர்க்கு அதிகமான ஆண் பிள்ளைகள் பிறப்பார்கள் என்று சொல்லவேண்டும்.

## அனாசாரன்

*அந்தணன் இருக்கும் இராசிக் கைந்தினில் ஓரை தன்னைப்*
*பிந்திடா தெனவே பார்த்துப் பிள்ளைகள் பலனைச் சொல்லு*
*மந்தனும் வியாழன் தானும் மருவியே ஐந்தில் ஏறிச்*
*சுந்தரச் சுங்கன் பார்க்க தோன்றுமாஆ சார ஈனன். (246)*

(இ-ள்.) குரு இருக்கும் இராசிக்கு ஐந்தாம் இராசியினைக் கண்டு பிள்ளைகளுடைய பலனைச் சொல்ல வேண்டும். சனியும், குருவும் ஒன்று சேர்ந்து ஐந்தாம் இடத்தில் அமர, இவர்களைச் சுக்கிரன் பார்க்க, குல ஆசாரங்களைக் கடைபிடிக்காத புத்திரன் தோன்றுவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## அதிக பிள்ளைகள்

சந்திரன் சுங்க வர்க்க மாகவே தானம் ஐந்தில்
வந்திட அன்னோன் ஐந்தில் மருவிட அல்லால் பார்க்கச்
சிந்தியாய்ப் பாவர் பார்வை சேர்ந்திடா திருக்க நன்றாய்
முந்திய பிள்ளை மெத்த உண்டென உரைக்க லாமே. *(247)*

(இ-ள்.) சந்திரன், சுக்கிர வர்க்கமாக இருந்து ஐந்தாம் இடத்தில் அமர்ந்திட அல்லது இவ்விரு கிரகங்களும் ஐந்தாம் இடத்தைப் பார்த்திட, அதே சமயம் ஐந்தாம் இடத்தை எந்தப் பாவக்கிரகங்களும் பார்க்காமல் இருந்தால் அதிக பிள்ளைகள் அச்சாதகனுக்குப் பிறப்பார்கள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## பேத்தியுடன் வாழ்பவன்

அஞ்சினுக் குடையோன் ஏழில் அமர்ந்திட சுபர்கள்
அங்கிசம்
அஞ்சினுக் குடையோன் தன்னை ஆனவர் கூடப் பார்க்க
அஞ்சினுக் குடையோன் கேந்திரத் திரிகோணம் ஆகி
நின்றால்
அஞ்சிடான் பேரப் பிள்ளை அவனிடம்இருந்து
வாழ்வான். *(248)*

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஏழாமிடத்தில் சுபக்கோள்கள்களோடு சேர அல்லது சுபக்கோள்களின் நவாம்சத்தில் இருக்க, ஐந்தாம் இடத்திற்கு அதிபதியைச் சுபக்கோள்கள் பார்க்க, ஐந்தாம் இடத்திற்கு உடையவன் கேந்திர திரிகோண தானங்களில் நின்றிருந்தால், பேரப்பிள்ளை அவனிடம் இருந்து வாழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## பிள்ளை இல்லாதவன்

அஞ்சினுக் குடையோன் நல்ல அகம்தனில் இருந்து வாழ
கொஞசமாம் பிள்ளை உண்டாம் குறித்தவன் ஏறும்
அங்கிசம்
அஞ்சனவன் சொட்ச சேத்திரம் தன்னிலே சேரப் பிள்ளை
அஞ்சினைச் சனியே பார்க்க அமர்ந்திடப் பிள்ளை
இல்லான். *(249)*

*(இ-ள்.)* ஐந்தாம் இடத்திற்கு உடையவன் நல்ல இராசியில் இருந்து வாழ்ந்தால் புத்திரர்கள் சிலர் இருப்பர். ஐந்தாம் இடத்திற்கு உடையவன் ஏறுகின்ற நவாம்சம், சுபமாக இருக்க, ஐந்தாம் இடத்திற்கு உரியவன் சொந்த வீட்டில் இருக்க, அச்சாதகர்க்குப் புத்திரர் தோன்றுவர். ஐந்தாம் இடத்தைச் சனி பார்க்க, ஐந்தாம் இடத்தில் சனி அமர்ந்திருக்க, புத்திரன் இல்லாதவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

ஏழினுக் குடையோன் ஐந்தில் ஏறிடப் பாவர் கூடச்
சோளிய பாவர் பார்க்கச் சுகம்தரும் பெண்ணே இல்லான்
வாழினும் பிள்ளை இல்லை வருந்திய தானத் தானோ
டூழ்வினை படியே தானே உள்ளது போகா தென்னே. *(250)*

(இ-ள்.) ஏழாமிடத்திற்கு அதிபதி ஐந்தாம் இடத்தில் அமர, அவருடன் பாவர் சேர, அல்லது அவரைப் பாவர் பார்க்க, அச்சாதகன் மனைவியை இழந்தவனாக வாழ்வான். ஒருவேளை சுகவானாக இருப்பின் புத்திரர்கள் இருக்க மாட்டார்கள். விதிப்படி அமைந்த அச்சாதகப் பலன் மாறாது என்று சொல்ல வேண்டும்.

## *பிள்ளைகள் மரணம்*

ஐந்தினுக் குடையோன் ஐந்துக் காறெட்டில் பன்னி ரண்டில்
உந்திடில் பாவ ராக ஊறியே வாழும் நாளில்
வந்தவன் குலங்கள் எல்லாம் மாய்வுடன் நாச மாகும்
செந்திரு அனைய மாதே ! செய்தியைஅறிந்து பாரே. *(251)*

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் பாவக் கோளாக அமர, அச்சாகனுடைய புதல்வர் இறந்து போவார்கள் என்பதனைத் திருமகளை ஒத்த பெண்ணே ! அறிவாயாக என்றவாறு.

## *ஆண்பிள்ளைகள் இல்லாதவன்*

மகனுடைத் தானம் மீதில் வருந்தியே இராகு வாகில்
தகவொடு ஐந்தில் கொள்ள சார்ந்திடும் தானம் ஆறில்
இகலிடு எட்டீ ராறில் ஏறியே இருந்து வாழ்ந்தால்
சுகம்தரும் புதல்வன் இல்லான் என்னவே சொன்னார்
முன்னோர். *(252)*

(இ-ள்.) ஐந்தாம் இடத்தில் இராகு இருப்பின், ஐந்தாம் இடத்திற்கு அதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய தீய இடங்களில் ஏறி இருப்பின், இச்சாதகன் ஆண்பிள்ளைகள் இல்லாதவன் என்று சோதிடக்கலையில் வல்லவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## தத்து புத்திரன்

*புத்திரத் தான நாதன் புகழும்இலக் கனத்தில் ஏறச்*
*சத்தியாய் இலக்கன நாதன் சதிரொடும் ஐந்தி லாகப்*
*பெத்தசா தகர்க்குப் பிள்ளை இல்லையாம் பிறர்சேய்*
*தன்னைத்*
*தெத்திடு வானாம் கண்ட செய்தியைச் செப்ப லாமே.(253)*

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி இலக்கனத்தில் ஏற, இலக்கனாதிபதி ஐந்தாமிடத்தில் அமர, இச்சாதகனுக்குப் புத்திரர் இல்லை என்று கூறவேண்டும். ஆயினும் பிறருடைய குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்ப்பான் என்பதைக் கூறவேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*இலக்கனா திபனும் ஐந்தின் நாதனும் எட்டீ ராறில்*
*தக்கவர் அதனில் சார தருசுப ருடனே அல்லால்*
*மிக்கதாய்ச் சுபரே பார்க்க விளங்கியே சாத கர்க்கு*
*மக்களாம் தத்துப் புத்திரன் வந்திடும் மனையில் தானே. (254)*

(இ-ள்.) இலக்கனாதிபதியும் ஐந்தாம் இடத்தின் அதிபதியும் சேர்ந்து ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய வீடுகளில் சுபக்கோள்களோடு சேர்ந்திருக்க அல்லது இவ்வீடுகளைச் சுபக்கோள்கள் பார்க்க, இச்சாதகன் தனக்குப் பிள்ளையாக ஒருவனை தத்தெடுத்துக் கொள்வான் என்று சொல்ல வேண்டும்.

## அற்ப ஆயுள் உடைய பிள்ளை

மக்கள்தா னத்தின் நாதன் வரும்திரி கோண கேந்திரம்
மிக்கதாய் சுபர்கள் இராசி மிதித்திடச் சுபர்கள் கூட
தக்கவா லிபத்தில் பிள்ளை தந்திடும் இராகு கூடில்
பக்கமில் அற்பா யுள்தான் பலித்திடும் பிள்ளை
உண்டாம். (255)

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, கேந்திர, திரிகோண இராசிகளில் சுப இராசிகளில் அமர்ந்திட, சுபக்கோள்களோடு சேர்ந்து இருப்பின் இச்சாதகர்க்கு வாலிப வயதில் புத்திரர் பிறப்பர். இந்த ஐந்தாம் இடத்திற்கு அதிபதி இராகுவோடு சேர்ந்து இருந்தால், அற்ப ஆயுள் உடைய புத்திரர் பிறப்பர் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## வயதான காலத்தில் பிள்ளை பிறத்தல்

சேய்வருதான நாதன் செப்பிய ரண்டில் கோளன்
தீயவர் இணக்க மாகத் திகழைந்திற் பாவர் பார்க்க
மாய்விலா ஸ்திரிகள் மெத்த வந்திடும் வெகுநாள் சென்றுச்
சேய்வரும் என்று செப்ப லாமெனச் செய்கை ஈதே. (256)

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, இரண்டாம் இடத்திற்கு அதிபதி இவர்களுடன் பாவக்கோள்கள் சேர்ந்திருக்க, ஐந்தாம் இடத்தைப் பாவக்கோள்கள் பார்க்க, மனைவிகள் பலர் இருப்பினும் நீண்டகாலத்திற்குப் பின்பு குழந்தைகள் பிறக்கும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## மாற்றான் குழந்தை

பாக்கியத் தானம் ஐந்தின் அதிபனும் சுபரும் வாழ
ஆக்கமாம் அன்னோன் தன்னை அறிவுடன் ஆறோன்
பார்க்கத்
தீர்க்கமாம் இவனை அல்லால் திரிவிப சாரி யாக
நீக்கமாம் பிள்ளை உண்டாம் நிலவரம் அறிந்து பாரே. (257)

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்தில், ஐந்தாம் இடத்திற்கு அதிபனும் சுபக்கோள்களும் இருக்க, ஐந்தாம் இடத்திற்கு உடையவனை ஆறாம் இடத்திற்கு அதிபதி நோக்க, இச்சாதகனின் மனைவி நடத்தைக் கெட்டவளாகவும் அதனால் பெற்ற குழந்தைகள் உடையவளாகவும் இருப்பாள் என்று சொல்ல வேண்டும்.

## *பிள்ளைகள் உடைய சாதகன்*

*புத்திரத் தானம் மீதில் பொருந்தவே ஐந்தின் நாதன்*
*உத்திட அல்லால் பார்க்க உயர்குரு சுங்கன் புந்தி*
*பத்திலே கூட வேதான் பார்த்திடப் பரிந்து போற்றிப்*
*பெற்றிடும் பிள்ளை உண்டாம் என்னவே பேசலாமே. (258)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில், ஐந்தாம் வீட்டின் அதிபதி நிற்க அல்லது ஐந்தாம் இடத்தைப் பார்க்க, குரு, சுக்கிரன், புதன் ஆகிய மூவரும் பத்தாம் இடத்தில் ஒன்று சேர்ந்து அமர்ந்திருக்க,அல்லது பத்தாம் வீட்டை இக்கோள்கள் பார்த்திருக்க, இச்சாதகனுக்குப் பிள்ளைகள் பிறப்பார்கள் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*அஞ்சினில் இலக்கன நாதன் அமர்ந்திட அஞ்சின் கோளன்*
*மிஞ்சியே பலவா னாக வியாழனும் பார்க்கப் பிள்ளை*
*தஞ்சமாம் வியாழன் அஞ்சில் சார்ந்திடப் பலவா னாகக்*
*கொஞ்சிய இலக்கன நாதன் பார்த்திடப் பிள்ளை*
*உண்டாம். (259)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில் இலக்கனாதிபதி அமர்ந்திட, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி பலவானாக இருக்க, அவனை குரு பார்க்க, புத்திரர்கள் தோன்றுவர் என்றவாறு. குரு, ஐந்தாம் இடத்தில் பலவானாக இருக்க, இலக்கனாதிபதி பார்த்திட புத்திரர்கள் தோன்றுவர் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## பிள்ளை மரணம் அடைதல்

அந்தணன் வைசேடி யாங்கிசம் அறிவுடன் ஏறி வாழ
அந்தஐந் துடையோன் ஐந்தில் மருவிட ஒன்பான் பார்க்க
முந்தவே பிள்ளை உண்டாம் முருகொடு திங்கள் பத்தில்
சுந்தரச் சுங்கன் நாலில் தோன்றசந் ததியே நாசம். (260)

(இ-ள்.) குரு, வைசேடியாம்சம் ஏறி இருக்க, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி தன் சொந்த வீட்டில் இருக்க, அவனை ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி பார்க்க, புத்திரர் உண்டு என்று சொல்லவேண்டும். சந்திரன் பத்தாம் இடத்தில் இருக்க, சுக்கிரன் நான்காம் இடத்தில் இருக்க, புத்திரர்க்கு அழிவு உண்டாகும் என்று சொல்ல வேண்டும்.

### இதுவுமது

இலக்கனா திபன்ஆ றெட்டில் நாடவே ஐந்தின் கோளன்
துக்கப்பா வருமாய்க் கூடித் தோன்றிடப் பகைநீ சக்கோள்
தக்கதால் அவரைப் பார்க்க சார்ந்திடும் பிள்ளை எல்லாம்
ஒக்கவே நாச மாகும் என்பதை உணர்ந்தார் நூலோர். (261)

(இ-ள்.) இலக்கனாதிபதி ஆறு, எட்டாம் இடங்களில் இருக்க, ஐந்தாம் தானத்திற்கு அதிபதி பாவருடன் கூடி பகை, நீசத்தில் இருக்க, பாவக்கோள்கள் அவரைப் பார்க்க, அச்சாதகன் பெற்ற பிள்ளைகள் அனைவரும் மரணம் அடைவார்கள் என்று சொல்ல வேண்டும்.

### இதுவுமது

பன்னிரண் டொன்பான் தானம் பதிந்திடச் சென்மம் மீதில்
தன்மையாய்ப் பாவர் பார்க்கச் சார்ந்திட அல்லால் ஏழில்
உன்னியே அணையும் பாவர் ஊறிடப் பிறந்தான் வம்சம்
முன்னமே நாச மாகும் என்னவே மொழிய லாமே. (262)

(இ-ள்.) பாவக்கோள்கள், பன்னிரண்டு, ஒன்பது, இலக்கனம் ஆகிய இடங்களில் அமர்ந்திட அல்லது இவ்விடங்களைப் பார்த்தாலும், ஏழாம் இடத்தில் பாவக்கோள்கள் இருந்தாலும் அச்சாதகனுடைய பிள்ளைகள் மரணமடைவார்கள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### *பிள்ளை இல்லாச் சாதகி*

அன்பது வயதா ளாகா அம்பிலா ரோகக் காரி
இன்புறு விலக்கம் இல்லா விடையினில் ரோகி யானாள்
முன்பினால் பருத்த காயம் முன்னமே மலடி யானாள்
எண்பது வயது வந்தாள் எட்டுமே பிள்ளை இல்லாள். *(263)*

(இ-ள்.) ஐம்பது வயதிற்குமேல் உள்ளவள்; நோய் உடையவள், வயதுக்கு வராதவள், நோயினால் இளைத்தவள், பருத்த உடலை உடையவள், மலடியாக உள்ளவள், போன்றோருக்குப் பிள்ளைகள் பிறக்காது என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### *மலடன்*

குருவொடு இலக்க னாதன் குணமொடு ஐந்தின் கோளன்
தருபலன் ஐந்தின் நாதன் சார்ந்திடும் ஓரை தன்னில்
மருவிடப் பலமோ ஈன மாகவே வந்தோ னுக்குத்
திருவுளம் அழிய நானே செப்பினேன் மலடன்
ஆவான். *(264)*

(இ-ள்.) குருவுடன் இலக்கனாதிபதி, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்துள்ள இராசி அல்லது ஐந்தாம் இடத்திற்கு அதிபதி அமர்ந்துள்ள இராசியில் இக்கோள்கள் பலவீனமாக இருக்க, இச்சாதகனுக்குப் பிள்ளைகள் இருக்காது. மலடனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### இதுவுமது

*புத்திரத் தானம் மீதில் புகர்பாவர் இருக்க ஐந்தில்*
*உற்றவன் நீச மாக உறைந்திடச் சுபர்கள் பார்வை*
*சத்துமே இல்லா தாகில் சாதகன் தனக்குப் பிள்ளை*
*சுத்தமாம் இல்லை என்று சொல்லுவார் மலடன்*
*என்றே. (265)*

(இ-ள்.) ஐந்தாம் இடத்தில் சுக்கிரனும் பாவக்கோள் ஒன்றும் இருக்க, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி நீசமான இராசியில் அமர்ந்திருக்க, சுபக்கோள்களின் பார்வை இல்லையாயின் அச்சாதகனுக்குப் புத்திரபாக்கியம் கிட்டாது. மலடனாக இருப்பான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### இதுவுமது

*சந்திரன் வியாழன் கூடி தந்தஇலக் கனத்தில் ஏற*
*ஐந்தினில் பாவர் வீழ்ந்து வாழ்ந்திடப் பார்வை யாகச்*
*சுந்தரச் சுபர்கள் பார்வைத் தோன்றிடா திருக்க வந்தோன்*
*முந்தவே மலட னாகும் என்பதை மொழிய லாமே. (266)*

(இ-ள்.) சந்திரனும் குருவும் ஒன்று சேர்ந்து இலக்கனத்தில் இருக்க, ஐந்தாம் இடத்தில் பாவக்கோள் இருக்க, ஐந்தாம் இடத்தை பாவக்கோள் நோக்க, சுபக்கோள்களுடைய பார்வை இல்லாமல் இருக்க இச்சாதகனுக்குப் பிள்ளைகள் பிறக்காது. மலடன் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### இதுவுமது

*மக்கள்தா னத்தில் பாவர் வந்திட ஐந்தின் கோளன்*
*தக்கமாய் பாவர் மத்தி யத்திலே சார்ந்து நிற்க*
*மிக்கதாய்ச் சுபர்கள் கூட விரும்பிய நோக்கம் இல்லான்*
*துக்கமாம் பிள்ளை இல்லான் துயரொடு மலடன்*
*ஆவான். (267)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில் பாவர் அமர்ந்திருக்க, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி பாவக்கோள்களுக்கு இடையில் இருக்க, சுபக்கோள்களுடன் சேர, சுபக்கோள்களின் பார்வையில்லாமல் இருந்தால் பிள்ளைகள் பிறக்காது மலடனாகத் துயரத்தோடு வாழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

பாவர்தன் இடையில் பொன்னன் பதிந்திட ஐந்தின் கோளன்
நீவிலாப் பலமோ ஈனம் ஆகவே இருந்து வாழ்ந்தால்
மேவிய சுபர்கள் கூட விளங்கிய பார்வை இல்லான்
ஆவியில் கிலேச மாகி ஆண்மல டாவான் என்னே. *(268)*

**(இ-ள்.)** பாவக்கோள்களுக்கு இடையில் குரு அமர்ந்திட ஐந்தாம் இடத்திற்கு அதிபதி பலவீனமாக இருந்து, அவனோடு சுபக்கோள்கள் சேர்ந்து இருப்பினும், சுபக் கோள்களின் பார்வை இல்லாவிடில் இச்சாதகன், மனதில் துயரம் நிறைந்தவனாகப் பிள்ளைகள் இல்லாதவனாக, மலடனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## தத்துப் புத்திரன்

சொல்லிய ஐந்தாம் தானம் புதனுடை வீடாய்த் தோன்ற
அல்லது மந்தன் வீடாய்அமர்ந்திட தானம் மீதில்
வல்சனிக் குளிகன் கூடி வாழ்ந்திடப் பார்த்து நிற்கச்
செல்வமாம் வாழ்வா னாலும் புதல்வனைத் தத்துக்
கொள்வான். *(269)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடம், புதனுடைய வீடாக இருக்க அல்லது சனியினுடைய வீடாக இருந்து அதில் சனி இருக்க, அல்லது ஐந்தாம் இடத்தில் சனி, குளிகன் இவை கூடி இருக்க, செல்வம் நிறைந்தவனாக இச்சாதகன் விளங்குவான். புத்திரன் ஒருவனைத் தத்தெடுத்துக் கொள்வான் என்று சொல்ல வேண்டும்.

## பிள்ளை மரணம் அடைதல்

தேடிய ஐந்தில் பாவர் பார்த்திட தெய்வ சாபம்
கூடியே பிள்ளை சாவாம் குணமுடன் ஆறின் கோளன்
நாடியே ஐந்தில் ஏற அல்லது பார்த்து நின்றால்
பாடுஅந் தணர்சா பத்தால் பலித்திடும் பிள்ளை சாவாம். *(270)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில் பாவர் இருந்திட, அல்லது ஐந்தாம் இடத்தைப் பாவர் பார்த்திட, தெய்வ சாபமாகும். பிறந்த பிள்ளைகள் இச்சாதகனுக்கு இறந்துபோவார்கள். ஆறாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்தில் ஏறி இருக்க, அல்லது ஐந்தாம் இடத்தைப் பார்த்து நிற்க, பிராமணர்களின் சாபத்தால் இச்சாதகனுக்குப் பிறந்த பிள்ளை மரணம் அடையும் என்று சொல்ல வேண்டும்.

## பகைவர்களால் பிள்ளைகள் மரணம்

சேயொடும் ஐந்தின் கோளன் சேர்ந்திட ஆறின் நாதன்
தூயவன் என்ன பார்க்கத் தோன்றிய சுபர்க ளாலும்
மாய்வில்லா நோக்க மல்லால் வந்திடும் பிள்ளைக் கெல்லாம்
மாயசத் துருவி னாலே அல்லவாய் செத்துப் போவான். *(271)*

**(இ-ள்.)** செவ்வாயோடு ஐந்தாம் இடத்திற்கு அதிபதி சேர்ந்திட, ஆறாமிடத்திற்கு அதிபதி இவ்விருவரையும் பார்க்க, இவ்விருவருக்கும் சுபர்களின் பார்வை இல்லையானால் பிறந்திடும் பிள்ளைகள் பகைவர்களினால் அழிந்து போவார்கள் என்று சொல்ல வேண்டும்.

## மாதுர் தோடத்தால் குழந்தை மரணம்

நாலினிற் பாவர் வாழ அன்றியும் நாலிற் கோளன்
கோலிய சனியோ டேகக் குணமுடன் எட்டீ ராறில்
வாலிபப் பாவர் வந்து வளைந்திட மாதா வாலே
சோலியால் பிள்ளைச் சாவாம் என்பதைச் சொல்லுங்
காலே. *(272)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்தில் பாவர் இருக்க, ஒன்பதாம் இடத்தைப் பாவர் பார்த்திட, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி சனியோடு சேர்ந்து விளக்க, குளிகன் ஒன்பதாம் இடத்திலாவது ஐந்தாம் இடத்திலாவது இருக்க அச்சாதகனுக்குப் பிறந்த பிள்ளை அச்சாதகனின் தோஷத்தால் (பிதுர் தோஷம்) அழிந்து போவான் என்று சொல்ல வேண்டும்.

## சர்ப்ப தோடத்தினால் குழந்தை மரணம்

படமுடன் இராகு கேது பரிவுடன் அஞ்சில் லாமல்
திடமுடன் பார்க்க அஞ்சில் சேர்ந்தவன் பலவா னாக
அடவுடன் ஐந்தாம் தானம் அதிபல வீன மானால்
இடவுடன் சர்ப்ப தோடம் எழுந்திடும் பிள்ளை
சாவாம். *(274)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடம் இராகு அல்லது கேது இருக்க, அல்லது ஐந்தாம் இடம் இராகு அல்லது கேதுவால் பார்க்கப்பட, ஐந்தாம் தானம் அதிக பலவீனமாக இருக்க, பிறந்த பிள்ளை சர்ப்ப தோடத்தினால் மரணம் அடையும் என்று சொல்ல வேண்டும்.

## அந்தணனிடம் குழந்தையைக் கொடுப்பவன்

அந்தணன் ஐந்தின் நாதன் அடவுடன் ஏழிற் கோளும்
வந்திட இராசி ஒன்றில் மருவிடச் செவ்வாய் கூடில்
சுந்தரத் துட்ட தெய்வ தோடத்தாற் பிறக்கும் சேயை
அந்தணன் தனக்குப் பிள்ளை யாமென அழைத்துப்
போவான். *(275)*

**(இ-ள்.)** குருவுடன் ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஏழாமிடத்திற்கு அதிபதி இவர்கள் ஒன்று சேர்ந்து ஏதாவது ஒரு இராசியில் அமர்ந்திட, இவர்களோடு செவ்வாய் சேர, துட்ட தெய்வத்தின் தோடத்தால், பிறக்கும் பிள்ளையை அச்சாதகன், அந்தணனுக்குப் பிள்ளையாகக் கொடுத்துவிடுவான் என்று சொல்லவேண்டும்.

## தத்து புத்திரன்

ஐந்தினில் வாழும் கோளும் அதிபல மாக வாழ
ஐந்தினுக் குடையோ னாலே அன்னவன் தன்னை இன்னோன்
முந்தவே நோக்கம் இல்லா மொழிவது தத்துப் புத்திரன்
செந்திரு வனைய மாதே சேதியை அறிந்து பாரே. *(276)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில் இருக்கும் கோள் பலம் பொருந்தி வாழ, ஐந்தாம் இடத்திற்கு அதிபதியை எந்தக் கோள்களும் பாராமல் இருக்க, இச்சாதகன் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக் கொள்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

அம்புலி பாவ ராசி தன்னிலே அடைவாய் நிற்க
நம்பியே அஞ்சிற் கோளன் நலமுடன் ஒன்பான் மீதில்
தம்பியாம் இலக்க னாதன் சார்திரி கோணம் தன்னிற்
கும்பிடும் சாத கர்க்குக் குணமுடன் பிள்ளை தத் தாம். *(277)*

**(இ-ள்.)** சந்திரன் பாவ இராசியில் நிற்க, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஒன்பதாம் இடத்தில் நிற்க, இலக்கனாதிபதி, திரிகோணத் தானங்களில் அமர்ந்திருக்கப் பிறந்த சாதகன் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக் கொள்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

புத்திரத் தான நாதன் புகழும்ரெட் டித்த ராசி
உத்திட வல்லால் நாலில் ஊறிட மந்தன் அம்சம்
பெத்திடத் தத்துப் பிள்ளை பேணுவான் என்று மின்னே
சத்திய மாகச் சொன்ன **சாதக பாரி சாதம்.** *(278)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்திற்கு அதிபதி இரட்டித்த இராசிகளில் நிற்க, அல்லது நான்காம் இடத்தில் சனியின் நவாம்சத்தில் அமர்ந்திட, இச்சாதகன் தத்துப்பிள்ளையைத் தன்னுடைய பிள்ளையைப் போல பேணிப் பாதுகாப்பான் என்று சாதக பாரிசாதம் கூறுகின்றது என்றவாறு.

## தத்துப் புத்திரனுக்குப்பின் சாதகனுக்குப் புத்திரன்

அஞ்சினுக் குடையோன் மந்தன் அங்கிசம் ஏறி வாழ
மிஞ்சிய வியாழன் வெள்ளி மிகுந்தசொட் சேத்திர வம்சம்
கொஞ்சிய தத்துப் புத்திரன் கொண்டவன் தனக்கு நல்ல
தஞ்சமாய் பிள்ளை உண்டாம் சாத்திரப் படியே தானே. (279)

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு உடையவன் சனியின் நவாம்சத்தில் ஏறி இருக்க, குரு, சுக்கிரன் ஆகிய இரு கிரகங்களும் சொந்த வீடுகளில் இருக்க, இச்சாதகனுக்குத் தத்துப்புத்திரன் கிடைப்பான். அதன்பிறகு அச்சாதகனுக்கு மனைவியின் மூலமாகப் பிள்ளை பிறப்பான் என்பதைச் சோதிடச் சாத்திரங்கள் கூறியுள்ளன என்றவாறு.

## இரண்டாம் தாரத்திற்குப் பிள்ளை

புத்திரத் தான நாதன் புகழ்சனி அங்கிசம் ஏற
உத்தநல் வியாழன் சுங்கன் உயர்சொட்சேத் திரஅங் கிசந்தான்
பெத்திட முந்தி கொண்ட பெண்டீர்க்குப் பிள்ளை இல்லை
வத்திர மாக இரண்டாம் தாரம்உண் டாகிற் பிள்ளை. (280)

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, சனி நவாம்சத்தில் ஏற, குரு, சுக்கிரன் ஆகியோர் தங்கள் சொந்த வீடுகளில் அல்லது தங்கள் நவாம்சங்களில் ஏறி இருக்க, சாதகரின் முதல் மனைவிக்குப் பிள்ளை இல்லை. இரண்டாம் தாரத்திற்குப் பிள்ளை பிறக்கும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## பிள்ளைகள் மரணம்

மகவுடைத் தான நாதன் வரிசையாய் ஐந்தில் வந்தோர்
சுகமுடன் பார்த்தோர் மிக்க சுபகுரு இவர்கள் எல்லாம்
மிகபல வீனமாகி ஈனமாய் எட் டீ ராறில்
அகன்றிடத் திசையப காரம் ஆகுநாள் புத்திர நாசம். (281)

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்தில் நின்றோர், ஐந்தாம் இடத்தைப் பார்த்தோர், குரு இவர்கள் எல்லாம் மிகவும் பலவீனமாக எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றில் இருக்க, இவர்களுடைய

திசை, புத்திகளில் இச்சாதகனின் பிள்ளைகளுக்கு அழிவு ஏற்படும் என்று சொல்ல வேண்டும்.

## நீண்ட ஆயுள் கொண்ட புத்திரர்கள்

பாக்கியத் ததிபன் ஐந்தின் பதியெனும் வியாழன் திங்கள்
ஆக்கமாம் திசைகள் தன்னில் அபகாரங் களிலே பிள்ளைத்
தீர்க்கமாய் உண்டாய் வாழும் சேதியை அறிய வேண்டி
ஏர்க்கவே உரைத்த நூலை நானுமே அறிய லுற்றேன். (282)

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, குரு, சந்திரன் ஆகியோரின் திசை, புத்திகளில் தோன்றும் புத்திரர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள் என்று சொல்ல வேண்டும். இவற்றைப் பற்றி அறிந்து சொன்ன சோதிட நூல்கள் பலவற்றைக் கற்று நானும் பலரும் அறியச்சொல்லுகின்றேன் என்றவாறு.

## இராசாக்களால் போற்றப்படுபவன்

சொல்லிய நாலும் வேறே சோர்வின்றிப் பலவா னாக
வெல்லவே திசைகள் தன்னில் மேவவே அபகா ரத்தில்
ஒல்லையில் புத்திரர் உண்டாம் உருசம்பத் துடனே யாகும்
நல்லஇரா சக்க ளாலே நலமுடன் பிரீதி உண்டாம். (283)

**(இ-ள்.)** பாக்கியத்ததிபன், ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, குரு, சந்திரன் ஆகியோர் பலவான்களாக இருக்க, அவர்களுடைய திசை, புத்திகளில் இச்சாதகருக்குப் புத்திரர்கள் தோன்றுவார்கள். செல்வம் மிகுதியும் கிடைக்கும். இராசாக்களால் மதிக்கப்படுவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## சுகவாழ்வு கொண்ட தந்தை

சொன்னவைந் துடைய கோளன் சுபரொடு வாழ அல்லால்
மின்னுமோ கதிரோன் தானும் பெருமையாய்ச் சுபரோ டேக
தன்மையாய் ஐந்தில் தானே சதிரொடு சுபரே ஊறே
அன்னமே கோளாய் ! தந்தை ஆனவன் சுகத்தில்
வாழ்வான். (284)

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, சுபக்கோள் களோடு சேர்த்து இருக்க, அல்லது சூரியன், சுபக்கோள் களோடு சேர்ந்து இருக்க, ஐந்தாம் இடத்தில் சுபக்கோள் ஏறி இறுக்க, இச்சாதகனின் தந்தை சுகமான வாழ்வினை உடையவனாக விளங்குவான் என்பதை அன்னம் போன்ற நடையையுடைய பெண்ணே! கேட்பாயாக! என்றவாறு.

## நீண்ட ஆயுள் கொண்ட தந்தை

சூரியன் ஐந்தின் நாதன் சுகமொடு பார்வ தாங்கிசம்
காரிய மாக ஏறக் கண்டிட அல்லால் உச்சம்
சீரிய ஆட்சி அம்சம் திடமுடன் ஏறி நின்றால்
பாரினிற் றந்தை தீர்க்க ஆயுளாய்ப் பரிந்து வாழ்வான். *(285)*

**(இ-ள்.)** சூரியன், ஐந்தாம்இடத்திற்கு அதிபதி ஆகியோர் பார்வதாம்சம் ஏற அல்லது ஆட்சி பெற்று சுபாம்சம் ஏறி இருப்பின், அச்சாதகனின் தந்தை நீண்ட ஆயுளை உடையவனாக இவ்வுலகில் வாழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## அற்பாயுள் கொண்ட தந்தை

கதிரவன் ஐந்தின் நாதன் கனபகை நீச அம்சம்
சதிரொடும் ஏறி வாழச் சனியொடு குளிகன் தானும்
அதிபல வீன மாக அன்னவன் இருந்து வாழ்ந்தாற்
பதியினில் வாழும் தந்தை பரகதி அடைந்து போவான். *(286)*

**(இ-ள்.)** சூரியன், ஐந்தாம் இடத்திற்கு அதிபதி பகை பெற்று இருக்க, அல்லது நீச அம்சங்களில் இருக்க, சனியுடனும் குளிகனுடனும் சேர்ந்து அதிக பலவீனமாக ஐந்தாம் இடத்திற்கு அதிபதி இருந்தால், இச்சாதகனுக்குத் தந்தை விரைவில் இறந்து போவார் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## தந்தையைப் போலத் தனயன்

தந்தைஇலக் கனத்துக் கைந்திற் பத்தினில் இராசி தன்னில்
வந்திடும் பிள்ளைக் கந்த இராகுஇலக் கனமாய் வந்தால்
சிந்தையும் குணமும் வண்ணம் சேர்ந்திடும் கிரியை எல்லாம்
மந்தமாய்த் தந்தை போல அறிவுடன் இருந்து
வாழ்வான். *(287)*

(இ-ள்.) சூரியன், இலக்கனத்திற்கு ஐந்தாம் இடத்தில், பத்தாம் இடத்தில் இராசியில் இருக்க, இலக்கனத்தில் இராகு இருந்தால் சிந்தனை, குணம், செயல்கள் அனைத்தும் தந்தையைப் போல செய்து அறிவாளியாக இவ்வுலகில் வாழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## தந்தை மரணம்

ஐந்தினுக் குடையோன் நல்ல அறிவுடைச் சுபரே யாகில்
வந்திடு ராசி நீசப் பகையத்த மனங்க ளாக
உந்திய கொடூர சட்டி அங்கிசம் குணமாய் ஏற
உந்திடாத் தந்தை சாவாம் உறுதியாய்ப் பார்த்துக்கொள்ளே. *(288)*

(இ-ள்.) ஐந்தாமிடத்திற்கு உடையவன் சுபக்கோளாக இருக்க, அவன் அமர்ந்திருக்கும் இராசியில் நீசம், பகை, அத்தமனங்களை அடைய சட்டியம்சம் ஏறி இருக்க, தந்தை இறந்துபோவார் என்று உறுதியாகச் சொல்ல வேண்டும் என்றவாறு.

## தந்தையோடு பகையுடைய மகன்

அய்யன்இலக் கனத்தில மூன்றாம் இராசியில் அன்னோர்
கன்மம்
செய்திடத் தந்தைக் காளாம் செப்புஇலக் கனத்துக் கெட்டில்
பையவே ஆறிற் பிள்ளை இலக்கனம் பதியும் நாளில்
வெய்யசத் துருவாம் பிள்ளை யாமென விரைந்து
சொல்லே. *(289)*

(இ-ள்.) தந்தையின் சாதகத்தில் இலக்கனத்திற்கு மூன்றாம் இராசி பிள்ளையின் சென்ம இலக்கனமாக இருப்பின், அவன் தந்தைக்குக் கீழ்படிந்தவனாக இருப்பான். தந்தையின் சாதகத்தில், இலக்கனத்திற்கு ஆறு, எட்டாம் இராசி பிள்ளையின் சென்ம இலக்கனமாக இருந்தால், தந்தையோடு பகையுடையவனாக அந்தப் பிள்ளை இருப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## கர்ப்பத்தோடு தாய் மரணம்

சந்திரன் நாலின் கோளன் தந்தைஇலக் கனத்து நாதன்
ஐந்தினுக் குடையோன் நின்றோன் அதிபல வீன மாக
விந்தையாய் நாலாம் தானம் மிகுபல வீன மாகில்
சிந்தையால் இறக்கும் தாயார் கர்ப்பமாய்ச் செத்துப்
போமே. (290)

(இ-ள்.) சந்திரன், நான்காம் இடத்திற்கு அதிபதி, சூரியன், இலக்கனாதிபதி, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்தில் நின்றோர் ஆகியோர் அதிக பலவீனமாக இருக்க, நான்காமிடம் அதிக பலவீனமாக இருந்தால், தாய் கர்ப்பமாக இருக்கும்போது மரணமடைவாள் என்று சொல்லவேண்டும்.

## தாயாருக்குக் கேடுவரும் காலம்

ஆதித்தன் இருந்த இராசி அங்கிசத் தைந்தில் மூன்றில்
சாதித்த வெய்யோன் வந்தால் தந்தைதாய் உபாதி யாகும்
சோதித்த கதிரோன் அம்சம் தோன்றிய இராசி தன்னில்
வாதித்த அங்கி சத்தில் மதிவரில் மாதா பீடை. (291)

(இ-ள்.) சூரியன் இருந்த இராசி அல்லது நவாம்சத்தில், ஐந்தாமிடத்தில் அல்லது மூன்றாவது இடத்தில் கோசார ரீதியாகச் சூரியன் வரும் காலத்தில் சாதகனுடைய தந்தை, தாய் இருவருக்கும் உடல்நோய் வந்து சேரும் என்று சொல்லவேண்டும் என்றவாறு. சூரியனின் நவாம்சம் இருக்கும் இராசியில் அல்லது பானு நவாம்சத்தில் மதி வரும் காலத்தில் தாயாருக்குக் கேடு உண்டாகும் என்று சொல்ல வேண்டும்.

## தந்தையைக் காக்கும் தனயன்

நாலினுக் குடையோன் அஞ்சின் நாதன்ஆ றெட்டீ ராறில்
சோலியில் லாமல் தந்தை சேருங்கால் முகத்தில் தோன்றான்
வாலிபம் ஐந்தின் நாதன் வளர்த்திய தானம் மூன்றில்
வேலிபோல் தகப்பன் தன்னை விரைவொடு காத்துக்
கொள்வான். (292)

(இ-ள்.) நான்காம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி ஆகியோருடன் சூரியன் சேர்ந்து ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் அமர்ந்திருக்க, சாதகன், தந்தையைக் காணாதவனாக இருப்பான். ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, மூன்றாம் தானத்தில் இருக்க, சாதகன், தந்தையைக் காத்துக்கொள்பவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## புகழையுடையவன்

புத்திரத் தான நாதன் பொருந்தியே சுபனாய் அம்சம்
பத்தியாய்ச் சுபராய் அன்னோர் பார்த்திடக் கூடி நின்றால்
சத்திரங் கட்டி வைத்துச் சதிரொடு அன்ன தானம்
மெத்தவே கொடுப்பான் கீர்த்தி மிகுந்திடும் தர்ம வானாம்.(293)

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதி சுபக்கோளாக, சுப நவாம்சத்தில் நின்று, சுபரால் பார்க்கப்பட அல்லது சுபக் கோள்களோடு சேர்ந்திருக்க, சாதகன், ஏழை எளியவர் வந்து தங்கக் கூடிய சத்திரங்கள் கட்டிவைத்து, அன்னதானம் செய்யக் கூடியவனாக விளங்குவான். சிறந்த தர்மவானாகத் திகழ்வான். அவன் புகழ் நாடெங்கும் பரவியிருக்கும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

**ஐந்தாம் பாவம் முற்றிற்று.**

# ஆறாம் பாவம்

## பொது

ஆறினின் பலனை மிக்கார் அறிவுடன் உரைக்க வேண்டில்
கூறிய ரோகம் மக்கள் கொடூரஆக் கினைகள் எல்லாம்
தேறிய அவதி சத்துரு திருந்திய தானம் தன்னில்
வாறியே உரைக்க ஆறின் வகையிது அறிந்து கொள்ளே. *(294)*

(இ-ள்.) நோய், மக்கள், தண்டனை, துன்பம், பகை, ஆகியவற்றைப் பற்றி ஆறாவது இடத்தைக்கொண்டு அறிய வேண்டும்.

## நோயாளி

சந்திரன் புந்தி ஆறின் சதிரனும் இவர்கள் கூடி
அந்தஇலக் கனசம் பந்த மாகவே இருந்து வாழ்ந்தால்
சொந்தமாய் உள்ள கோசம் மீதிலே சோர்வு நோயாம்
உந்திடு மெலிவால் வாடும் என்றதை உரைக்க லாமே. *(295)*

(இ-ள்.) சந்திரன், புதன், ஆறாம் இடத்திற்கு அதிபதி ஆகிய மூவரும் ஒன்று கூடி இலக்கன சம்பந்தம் பெற்று, இருக்கப் பிறந்த சாதகனுக்குச் சோர்வு நோய் உண்டாகும். உடல் மெலிவினால் இச்சாதகன் வாடுவான் என்பதைக் கூறவேண்டும்.

## அதிக பகைவரும் பகைவர்களின் அழிவும்

சுக்கிரன் ஏழின் கோளன் சுகமுடன் ஆறில் ஏற
மிக்கதாய் சனிசெவ் வாய்தான் விழியுடன் அவரைப் பார்க்க
தக்கசத் துருவாய் வாதைத் தானத்தைச் சுபர்கள் கூட
விக்கினம் இல்லை பார்த்தால் விளங்குசத் துருவும்
போமே. *(296)*

**(இ-ள்.)** சுக்கிரன், ஏழாம் இடத்திற்கு அதிபதி ஆகிய இருவரும் ஆறாமிடத்தில் அமர, இவர்களைச் சனி, செவ்வாய் நோக்க, பகைவரால் துன்பம் அடைவான். ஆறாம் தானத்தைச் சுபக்கோள்கள் நோக்க குறைவு உண்டாகாது. பகைவர்களும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவார்கள் என்றவாறு.

## தந்தையின் மூலம் அதிக பகைவர் உடையவன்

*ஆறினுக் குடையோன் இலக்கன நாதனும் அறிவாய்*
*வெய்யோன்*
*தேறியே பகைநீ சங்கள் சேர்ந்துடன் ஆறில் ஏற*
*ஊறிய இலக்க னத்தில் உயர்ந்தநட் பாள ரானால்*
*பேறியே தந்தை மூலம் சத்துரு பெருகும் தானே. (297)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு உடையவனும் இலக்கனாதிபதியும், சூரியனும் பகை, நீசம் பெற்றிருக்க, ஒன்று சேர்ந்து ஆறாமிடத்தில் ஏற, இலக்கனத்தில் நட்பாக விளங்கினால், தந்தையின் மூலமாக அதிகமான பகைவர்கள் இருப்பார்கள் என்றவாறு.

## உடலில் வெட்டுக்காயம் உடையவன்

*சொன்னஇம் மூன்று கோளும் சுகமுடன் ஆட்சி உச்சம்*
*பன்னவர்க் கோத்த மாகப் பகையாவன் தாயா தியினால்*
*இன்னமும் உடம்பில் புண்ணும் இசைந்திடும் ஆறில் வாழ்வான்*
*தன்னெச்சத் துருவால் பார்க்கச் சரீரத்தில் புண்கள்*
*உண்டாம். (298)*

*(இ-ள்.)* ஆறாம் இடத்திற்கு அதிபதியும், இலக்கனாதிபதியும், சூரியனும் ஆட்சி அல்லது உச்சம் பெற்று இருப்பின், இச்சாதகனுக்குப் பங்காளிகள் பகையாவார்கள். மேலும் உடலில் வெட்டுப்பட்டகாயம் உண்டாகும். ஆறாம் இடத்தில் இருப்பவனைப் பகைக்கிரகங்கள் பார்க்க, இச்சாதகனுக்கு உடலில் வெட்டுப்பட்ட காயங்கள் உண்டாகும் என்றவாறு.

### பகைவர்கள் உடையவன்

ஆறினுக் குடையோன் அத்த மனங்கள்நீ சங்க ளாகித்
தேறிவக் கிரமே யாகிற் சேர்ந்திட ஒருதா யாதி
கூறிய கதிரோன் ஒக்க கோள்களும் பகையாய் ஆறில்
ஊறிய அன்னோன் மூலம் சத்துரு உண்டாம் என்னே. *(299)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு அதிபதி நீசம், அத்தமனம் பெற்று இருப்பினும் வக்கிரம் பெற்று இருப்பினும் இச்சாதகனுக்குப் பங்காளிகள் பகையாவார்கள். சூரியன் முதலான பாவக்கோள்கள் பகைபெற்று ஆறாம் வீட்டில் இருப்பின் அந்தக் கோள்களுக்கு ஏற்பப் பகைவர்கள் இருப்பார்கள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### கால்நடைகள் உடையவன்

சத்துருத் தான நாதன் தகுபாவர் மூன்று பேரோ
டொத்திடக் கூடில் மாடு திரவியம் உண் டாலும் நாசம்
மத்துநல் சுபர்கள் மூன்று பேரொடு கூடி நின்றால்
சத்துரு இல்லை மாடும் குதிரையும் சதிராய் உண்டாம். *(300)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு அதிபதி, மூன்று பாவக்கிரகங்கள் சேர்ந்து இருக்கில், கால்நடைகள், பொருள்கள் இருப்பினும் பின் அவை அழிந்து போகும். ஆறாம் இடத்திற்கு அதிபதி மூன்று சுபர்களோடு கூடி இருப்பின், பகைவர்கள் இச்சாதகர்க்கு இருக்க மாட்டார்கள். மேலும் மாடு, குதிரை போன்ற விலங்குகளை உடையவனாக விளங்குவான் என்றவாறு.

### பகைவர் அழிவு

சொல்லிய ஆறின் கோளன் சுபனென அன்னோன் கூடப்
புல்லிய கிரகம் தானும் புகழ்சுப ராகக் கேந்திரம்
மெல்லவே திரிகோ ணத்தில் மேவியே இருக்கும் நாளில்
அல்லறும் சத்துரு அழிந்திடும் என்று சொல்லே. *(301)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு அதிபதி சுபராக, அவருடன் சுபர் கிரகம் ஒன்று சேர்ந்து கேந்திர, திரிகோணங்களில் இருக்கும் சாதகனுக்குத் துன்பங்கள் இல்லை. பகைவர்களும் அழிந்து போவார்கள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### பகைவர்கள் பயமும் உடலில் காயங்களும்

*புத்திரத் தான நாதன் கூடவே பொருத்தும் கோள்கள்*
*சுத்தமாய்ப் பலமாய்த் தோன்ற திரவியம் கொஞ்சம் நாசம்*
*மத்திமம் இரண்டு பேரில் வன்பலன் ஒருவ னாகச்*
*சத்துரு பயமும் புண்ணும் கொஞ்சமாம் சரீரம் மீதே. (302)*

**(இ-ள்.)** புத்திரத் தானத்திற்கு அதிபதியோடு சேர்ந்துள்ள கோள்கள் பலம் பெற்று இருப்பின், பொருள்கள் சிறிதளவு அழியும். இவ்விரு கோள்களில் பாவர் சேரின் பகைவர்களால் பயமும், உடலில் காயங்களும் உண்டாகும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### பொதுப்பலன்

*ஆறினுக் குடைய கோளன் கூடவே பாபி யாகில்*
*வேறிய கோளா னாலும் மிக்கவும் பலமோ ஈனம்*
*கூறிடும் காரகன் தன்னால் கூடிய அவதி எல்லாம்*
*தேறியே கண்டு கொள்வாய் சேதியை உரைத்த போதே. (303)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு அதிபதி, பாபிகளுடன் கூடி இருந்தாலும் அல்லது ஆறாம் இடத்திற்கு அதிபதியோடு சேர்ந்துள்ள கோள்கள் பலவீனமாக இருந்தாலும் காரகனைக் கொண்டு ஏற்படக் கூடிய துன்பங்களையெல்லாம் கண்டு சொல்ல வேண்டும்.

## புண் அல்லது காயம் ஏற்படுதல்

ஏழினுக் குடையா னோடு★ இயல்பொரு பாவர் கூடி
வாழும்இலக் கனத்தில் ஏற வந்திடும் உடம்பிற் புண்ணாம்
தாழ்வில்பாக் கியத்தில் ஐந்தில் தாண்டியே அன்னோன்
வந்தால்
ஆழும்ஐ யனுக்கு மேலே ஆனரோ கத்தில் புண்ணாம். *(304)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்திற்கு அதிபதியும் பாவக்கோளும் ஒன்று சேர்ந்து இலக்கனத்தில் இருக்க, இச்சாதகனுக்கு உடலின் உள்ளேயோ வெளியிலேயோ புண் உண்டாகும். ஒன்பதாம் இடத்தில் அல்லது ஐந்தாம் இடத்தில் ஆறினுக்குடையோனும் பாவரும் அமர தந்தையின் உடலில் காயம் ஏற்படும்.

## இதுவுமது

சொல்லியே கோளன் ஐந்தில் தோன்றிட புத்தி ரர்க்கு
வல்லமி னாலில் பாவர் வந்திட மேலே புண்ணாம்
நல்லவேழ் தானம் மீதில் நாடிடத் திரிக்கும் ஒன்பான்
சொல்லிட அம்மா னுக்குத் தீவினை யாலே புண்ணாம். *(305)*

**(இ-ள்.)** ஐந்தாம் இடத்தில், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் அமர, அச்சாதகனின் பிள்ளைகளுக்குப் புண் உண்டாகும்; நான்காம் இடத்தில், ஆறாம் இடத்திற்கு அதிபதியும், பாவரும் அமர்ந்திட, அச்சாதகனின் தாய்க்குப் புண் உண்டாகும். ஏழாம் இடத்தில், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் பாவரும் அமர்ந்திட, அச்சாதகனின் மனைவிக்குப் புண் உண்டாகும். ஒன்பதாம் இடத்தில் ஆறாம் இடத்திற்கு அதிபதியும் பாவரும் அமர தாய் மாமனுக்கு உடலில் புண் உண்டாகும் என்றவாறு.

---

★ "ஏழினுக் குடையானோடு" என்பது "ஆறினுக் குடையானோடு" என்று இருக்க வேண்டும்.

## இதுவுமது

முன்னமே உரைத்த கோட்கள் மூன்றினில் இருந்து வாழும்
என்னவே சகோத ரர்க்கு இலாபத்தில் மூத்தோர்க் கென்க
அன்னமே எட்டி லாய ஆனசா தகர்க்கு ரோகம்
சொன்னது பவன ரோகம் தோன்றிய உடம்பில்
புண்ணாம். *(306)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு அதிபதியும் பாவரும் மூன்றாம் இடத்தில், அமர, இளைய சகோதர சகோதரிகளுக்கு உடலில் புண் உண்டாகும். பதினோராம் இடத்தில், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் பாவரும் சேர, மூத்த சகோதர சகோதரிகளுக்கு உடலில் புண் உண்டாகும். ஆறாம் இடத்திற்கு அதிபதியும் பாவரும் எட்டாம் இடத்தில் இருக்க அச்சாதகர்க்கு ஆசனவாயில் புண் உண்டாகும் என்றவாறு.

### கண்டரோகம்

ஆதித்தன் நாலின் கோளும் ஆறினிற் கதிபன் இன்னோன்
வாதித்துக் கூடி லக்கினம் வந்திட வருத்த ரோகம்
பேதித்த தலையில் ரோகம் பெருகிடும் மதியோ டேகச்
சோதித்த முகத்திற் செவ்வாய் தோன்றிடக் கண்ட
ரோகம். *(307)*

**(இ-ள்.)** சூரியனும், நான்காம் இடத்திற்கு அதிபதியும், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் சேர்ந்து பகையாக இலக்கனத்தில் இருக்க, இச்சாதகனுக்கு தலையில் வருத்துகின்ற நோய் உண்டாகும். சந்திரனோடு நான்காம் இடத்திற்கு அதிபதியும், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் சேர்ந்து பகை பெற்று இலக்கனத்தில் இருக்க, இச்சாதகனுக்கு முகத்தில் நோய் உண்டாகும். செவ்வாயோடு, நான்காம் இடத்திற்கு அதிபதியும் ஆறாம் இடத்திற்கு அதிபதியும் சேர்ந்து பகைபெற்று இலக்கனத்தில் இருக்க இச்சாதகனுக்கு கண்டரோகம் ஏற்படும்.

## இதுவுமது

புந்தியோ டேக வன்னோன் நாபியிற் புண்ணாம் என்க
அந்தண னாகில் பொல்லா வரித்தலம் வெள்ளி கண்ணில்
மந்தனோ டாகில் வாயு ரோகம்ராகு கேது வுக்கு
உந்திய உதர ரோகம் வியாதியால் உறங்கு வானே. *(308)*

**(இ-ள்.)** புதனோடு நான்காம் இடத்திற்கு அதிபதியும், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்று சேர்ந்து பகை பெற்று இலக்கனத்தில் இருக்க, இச்சாதகனுக்கு, தொப்புளில் புண் உண்டாகும். குருவோடு நான்காம் இடத்திற்கு அதிபதியும் ஆறாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்று சேர்ந்து பகை பெற்று இலக்கனத்தில் இருக்க, இச்சாதகனுக்கு வரித்தலத்தில் புண் உண்டாகும். சுக்கிரனோடு நான்காம் இடத்திற்கு அதிபதியும், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் பகைபெற்று இலக்கனத்தில் இருக்க, இச்சாதகனுக்குக் கண்ணில் புண் உண்டாகும்.

சனியோடு நான்காம் இடத்திற்கு அதிபதியும் ஆறாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றுசேர்ந்து பகைபெற்று இலக்கனத்தில் இருக்க, இச்சாதகனுக்கு வாயுவினால் நோய் உண்டாகும். இராகு அல்லது கேதுவோடு நான்காம் இடத்திற்கு அதிபதியும் ஆறாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றுசேர்ந்து பகைபெற்று இலக்கனத்தில் இருக்க வயிற்றில் நோய் உண்டாகும் என்று சொல்ல வேண்டும்.

### நோயும் பகைவர்களால் துன்பமும்

புதனுடன் இலக்க னாதன் பொருந்திட அல்லால் புந்தி
பதமுடன் பார்க்கப் பொல்லா ரோகமாய்ப் பதியும் என்க
விதமுடன் ஆறிற் கோளன் மிகுபவ ருடனே கூடப்
பதவியால் பாவர் பார்க்கப் பலமிலா துண்டாம் சத்துரு. *(309)*

(இ-ள்.) புதனுடனும் இலக்கனாதியுடனும், ஆறாம் இடத்திற்கு அதிபதியும் பொருந்தி இருக்க அல்லது புதன் இலக்கனாதிபதியையும், ஆறாம் இடத்திற்கு அதிபதியையும் பார்க்க, அந்தரங்க இடத்தில் நோய் உண்டாகும். ஆறாம் இடத்திற்கு அதிபதி பாவருடன் கூட, பாவரால் பார்க்கப்பட, பலமில்லாமல் இருக்க, அச்சாதகனுக்குப் பகைவரால் துன்பம் உண்டாகும் என்று சொல்ல வேண்டும்.

## குதிரைகளால், வலிமை மிக்கோரால் பயம்

இலக்கனம் முதலாய் உள்ள இராசியில் நாடும் இராகு
தக்கமாய் மந்தன் ஆறிற் சதுரனும் ஒன்றாய்க் கூடிச்
சுக்கிர னாலே பார்க்கப் பட்டகாலம் துரகம் தன்னால்
மிக்கவ ராலே மெத்த விளைந்திடும் பயம்என் றோதே. *(310)*

(இ-ள்.) இலக்கனம் முதலாக உள்ள இராசிகளில் ஒன்றில் இராகு, சனி, ஆறாம் இடத்திற்கு அதிபதி ஆகிய மூன்று கோள்களும் ஒன்று சேர்ந்து அமர, சுக்கிரனால் பார்க்கப்பட குதிரைகளும் வலிமை மிக்கவராலும் அச்சாதகனுக்குப் பயம் தோன்றும் என்றவாறு.

## பகைவர்கள் அழிவு

ஆறினுக் குடையோன் எட்டில் ஆறினில் பன்னி ரண்டில்
ஊறிட நீச அஸ்த மனங்களாய் ஒடுங்கி வாழ்ந்தால்
கூறிய இலக்க னாதன் கொடுமையாய்ப் பலமில் லாமல்
தேறலாம் சத்துரு நாசம் என்றதைச் செப்ப லாமே. *(311)*

(இ-ள்.) ஆறாம் இடத்திற்கு அதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் நீசம், அத்தமனம் பெற்று பலமின்றி இருக்க, இலக்கனாதிபதியும் பலமில்லாமல் இருப்பின், அச்சாதகனுடைய பகைவர்கள் அழிவார்கள் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## உயர்ந்தவன்

சத்துருத் தான நாதன் தங்கிடக் கோபு ராங்கிசம்
உத்திடக் கதிரோன் பார்க்க உயர்ந்தஇலக் கனத்து னாதன்
ஏற்கவே பலவா னாக விளங்கவே நல்லோன் என்றும்
பெத்தவ ரவனைச் சொல்வார் பிறர்க்குப் காரி யாமே. *(312)*

(இ-ள்.) ஆறாம் இடத்திற்கு அதிபதி கோபுராம்சத்தில் ஏற, அக்கோளைச் சூரியன் பார்க்க, இலக்கனாதிபதி பலவானாக இருக்க, பெற்றவர்கள், இச்சாதகனை உயர்வாகக் கூறுவர். இவன் மற்றவர்களுக்கு மிகவும் உதவி செய்யக் கூடியவனாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

**ஆறாம் பாவம் முற்றும்.**



# ஏழாம் பாவம்

## பொது

கண்டிட ஏழாம் தானம் காரியம் அறிய வேண்டிற்
பெண்டிரின் குணமும் அல்லால் பேசிய கர்மம் தன்னைக்
கொண்டிடும் செய்தி புத்திரர் குறிப்பும்யாத் திரையு மாக
வண்டமர் குழலி னாலே ! சுகத்தையும் வகுக்க லாமே ! *(313)*

(இ-ள்.) மனைவியின் குணம், காமம், புதல்வர், யாத்திரை, சுகம் போன்றவற்றை ஏழாம் இடத்தைக்கொண்டு சொல்ல வேண்டும் என்றவாறு.

## பெண்களுடன் உறவு

சுக்கிரன் ஏழிற் கோளன் சுகமொடு இராகு தானும்
மிக்கதாய் ஒன்றாய்க் கூடில் மேவிட வேசைக் காளாம்
தக்கதாய் ஏழில் பொன்னன் சார்ந்திட அல்லால் பார்க்கத்
துக்கவே சைக்காள் அல்லாற் சொல்திரி கமனம்
துய்ப்பான். *(314)*

(இ-ள்.) சுக்கிரன், ஏழாம் இடத்திற்கு அதிபதி, இராகு ஆகிய மூவரும் ஒன்று கூடி இருக்கப் பிறந்த சாதகன் விலை மகளிடம் உறவு உடையவனாக இருப்பான். ஆனால் ஏழாம் இடத்தில் குரு இருக்க அல்லது ஏழாமிடத்தைக் குரு பார்க்கப் பிறந்த சாதகன், விலைமகளிடம் உறவு கொள்ளாது மனைவியுடன் சுகமாக வாழ்வான் என்றவாறு.

## மனைவியை இழந்தவன், காமன்

ஏழினுக் குடையோன் எட்டீ ராறினில் ஆறில் வாழ
ஏழினிற் பாவ ராய்ப் பார்த்திடத் திரியே இல்லான்
ஏழினிற் குடையோன் சுங்கன் இருவரும் கூடிப் பாவர்
வாழிரா சிகளில் இன்னோர் மருவிடக் காம மோகன். *(315)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்திற்கு உடையவன் ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் இருக்க, ஏழாம் இடத்தில் பாவக்கோள்கள் நின்றிருக்க, மனைவி இல்லாதவனாக இருப்பான். ஏழாமிடத்திற்கு அதிபதி, சுக்கிரன், இருவரும் ஒன்றுகூடி பாவர் இருக்கின்ற இராசிகளில் அமரப் பிறந்த சாதகன் காமம் மிகுந்தவனாக விளங்குவான் என்றவாறு.

### இராச சமானன்

சுங்கனும் ஏழிற் கோளும் சுபராசி மீதில் தோன்றிப்
பொங்கமாய்ச் சுபரே கூடிப் பொருந்திட அல்லாற் பார்க்கத்
துங்கனாம் வாழ்வ னாகித் துரகவா கனமும் தோன்றி
வங்கம்போ லான வெள்ளைக் குடையினில் இருந்து
வாழ்வன். *(316)*

**(இ-ள்.)** சுக்கிரனும் ஏழாம் இடத்திற்கு அதிபதியும் சேர்ந்து அமர்ந்திட அல்லது ஒன்று சேர்ந்துள்ள சுக்கிரனையும் ஏழாம் இடத்திற்கு அதிபதியையும் சுபக்கோள்கள் பார்க்க, சிறந்த உயர்ந்த வாழ்க்கையை உடையவனாக இச்சாதகன் விளங்குவான். குதிரை வாகனத்தோடு வெள்ளைக் குடை உடையவனாக அரசனைப்போல வாழ்வான் என்றவாறு.

### காமம் மிகுந்தவன்

ஆறினுக் குடையோன் ஏழுக் கதிபனும் இரண்டின் கோளும்
தேறிய வெள்ளி தானும் திரண்டஇலக் கனத்தில் ஏறச்
சீறிய பாவர் கூடிச் சேர்ந்திடப் பிறந்த பிள்ளைக்
கூரிய காமம் மீதில் உயர்ந்திட மோகம் உண்டாம். *(317)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு அதிபதியும், ஏழாம் இடத்திற்கு அதிபதியும் இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் சுக்கிரனும் இலக்கனத்தில் பாவக்கோள்களோடு கூடப் பிறந்த சாதகன் காமம் மிகுந்தவனாக விளங்குவான் என்றவாறு.

## இதுவுமது

சத்துருத் தான நாதன் தானும்இலக் கனத்திற் கோளும்
உத்திடும் பாவ ரோடு ஊறிடக் காம மோகன்
வைத்தகா மத்தின் நாதன் தன்னொடு வாக்கிற் கோளன்
பெத்திடும் பாவர் ஏழில் பெருகிடக் காம வானாம். *(318)*

(இ-ள்.) ஆறாம் இடத்திற்கு அதிபதியும் இலக்கனாதிபதியும் பாவக்கோள்களோடு சேர்ந்து இருக்கப் பிறந்த சாதகன் காமம் மிகுந்தவனாக விளங்குவான். ஏழாம் இடத்திற்கு அதிபதி இரண்டாம் இடத்திற்கு அதிபதி இருவரும் ஆறாம் தானத்திற்கு அதிபதியுடனும் இலக்கனாதி பதியுடனும் சேர்ந்து ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் காமம் மிகுந்தவனாக விளங்குவான் என்றவாறு.

### பெண்களுடன் உறவு

வாக்கினுக் குடையோன் ஏழுக் குடையவன் இலக்ன நாதன்
போக்கிலே ஏழில் வந்து பொருந்திட அநேக பாவம்
பாக்கியம் போலே செய்வான் பரத்திரி கமனத் தானும்
நீக்குடன் பொல்லான் என்றே நிகழ்த்துவான் யோகம் மீதே. *(319)*

(இ-ள்.) இரண்டாம் இடத்திற்கு அதிபதி, ஏழாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி ஆகிய மூன்று கோள்களும் ஏழாம் இடத்தில் ஒன்று சேரப் பிறந்த சாதகன் பாவ காரியங்களைச் செய்பவனாகவும் விலைமகளிருடன் உறவு கொள்பவனாகவும், பொல்லாதவனாகவும் விளங்குவான் என்று சோதிடநூல் வல்லவர்கள் இவ்வுலகில் எடுத்துரைத்துள்ளார்கள் என்றவாறு.

## இதுவுமது

கன்மநா யகனும் இரண்டுக் கதிபனும் ஏழிற் கோளும்
சொன்னபத் தாமி டத்திற் தோன்றிடச் சோர பர்த்தா
பொன்னழ் உடையோன் ஐந்திற் பொருந்திடப் பாவர் பார்க்க
தன்மன வேசைக் காளான் என்னவும் சாற்றலாமே. *(320)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, இரண்டாம் இடத்திற்கு அதிபதி, ஏழாம் இடத்திற்கு அதிபதி ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து பத்தாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் மனைவியைத் தவிர வேறு ஒரு பெண்ணுடன் உறவு கொண்டு வாழ்வான். குரு, ஏழாம் இடத்திற்கு அதிபதி ஆகிய இருவரும் ஐந்தாம் இடத்தில் அமர, அந்த ஐந்தாம் இடத்தைப் பாவக்கோள்கள் பார்க்கப் பிறந்த சாதகன் விலை மகளிருடன் உறவு கொண்டு வாழ்வான் என்றவாறு.

## இதுவுமது

*அந்தணன் சுங்கன் புந்தி அம்புலி யோடும் ஏழில்*
*வந்திடும் அநேகம் பேரை மருவிடக் கமனன் ஆவான்*
*சுந்தரச் சுங்கன் ஏழில் தோன்றிடப் பலவா னாகச்*
*சொந்தமாய் அநேகம் பெண்கள் தன்னொடும் சுகத்தைத்*
*துய்ப்பான். (321)*

(இ-ள்.) குருவும், சுக்கிரனும், புதனும், சந்திரனும் ஏழாம் இடத்தில் ஒன்று சேரப் பிறந்த சாதகன். பல பெண்களுடன் உறவு உடையவனாக விளங்குவான். சுக்கிரன், ஏழாம் இடத்தில் பலவானாக இருக்கப் பிறந்த சாதகன், பல பெண்களுடன் உறவு உடையவனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும்.

## ஒரு மகன் உடையவன்

*சுக்கிரன் செவ்வாய் ஏழுக் குடையவன் சுகமாய் ஐந்தில்*
*மிக்கதாய் ஏழில் வந்து மேவிட அல்லாற் சுங்கன்*
*தக்கதாம் மதியும் ஆறில் சார்ந்திட சாத கர்க்குப்*
*பக்கமில் மின்னார் ஒன்றாம் என்பதைப் பகரலாமே. (322)*

(இ-ள்.) சுக்கிரன், செவ்வாய், ஏழாமிடத்திற்கு அதிபதி ஐந்தாம் இடத்தில் அல்லது ஏழாமிடத்தில் ஒன்று சேர்ந்து இருக்க அல்லது சுக்கிரனும் சந்திரனும் ஆறாம் இடத்தில் அமரப் பிறந்த சாதகனுக்கு ஒரு மனைவி மட்டுமே இருப்பாள் என்பதைச் சொல்லவேண்டும் என்றவாறு.

## குழந்தைப்பேறு இல்லாத சாதகி

*பன்னிரண் டேழில் பாவர் பதிந்துமால் பலமோ ஈனம்*
*என்னவே மலட்டுப் பெண்டீர் இல்லையாம் திரியும்*
*இல்லான்*
*மின்னிய கதிரோன் சுங்கன் ஏழினில் இலக்க னத்தில்*
*உண்ணவே மலட்டுப் பெண்டீர் உண்டவன் புருட*
*னாவான். (323)*

**(இ-ள்.)** பன்னிரண்டு, ஏழு ஆகிய இடங்களில் பாவக்கோள்கள் இருக்க, புதன் பலவீனமாக இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி குழந்தையைப் பெற இல்லாதவளாக இருப்பாள் என்று சொல்ல வேண்டும். சூரியன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் ஒன்று சேர்ந்து ஏழாம் இடத்தில் அல்லது இலக்கனத்தில் இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி குழந்தையைப் பெற இயலாதவளாக இருப்பாள் அல்லது அச்சாதகனுக்கு ஆண் ஒருவனே மனைவியாக இருப்பான் என்றவாறு.

## மனைவியின் தோற்றம்

*சந்திரன் இலக்க னத்தில் சேர்சம இராசி யாக*
*வந்தசுக் கிரகனோ நோக்கில் வர்ணமே ஸ்திரியைப்*
*போல்வாள்*
*விந்தையோன் இராசி வர்க்கப் புருடனாய் விளங்குங் காலை*
*அந்தரூ பத்தில் பண்டீர் அமர்ந்திடும் என்ன லாமே. (324)*

**(இ-ள்.)** சந்திரன், இலக்கனத்தில் இருக்க அந்த இராசி சம இராசியாக இருந்து, சுக்கிரன் இலக்கனத்தைப் பார்க்கப் பிறந்த சாதகனின் மனைவி பெண்ணுக்குரிய இலக்கனத்தை உடையவளாக இருப்பாள். சந்திரன், இலக்கனத்தில் இருக்க, அந்த இராசி ஆண் இராசியாக இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி ஆண் போன்ற தோற்றத்தை உடையவனாக விளங்குவான் என்றவாறு.

## பிற பெண்களுடன் உறவு

ஏழினிற் செவ்வாய் அன்னோன் இராசியங் கிசமாய் ஏற
வாழும்இலக் கனத்திற் செவ்வாய் வந்திட ஏழில் நீசர்
சூழத்த மானக் கோட்கள் தோன்றிட விலக்க மானாள்
ஆழம்வெள் ளாட்டிக் கைம்பெண் அணைந்திடும் புருஷ
னாவான். *(325)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்தில் செவ்வாய் நிற்க, ஏழாமிடத்ததிபதி செவ்வாயின் இராசி அல்லது நவாம்சத்தில் நிற்க, இலக்கனத்தில் செவ்வாய் அமர்ந்திருக்க, ஏழாமிடத்தில் நீசமான அல்லது அத்தனமான கோள்கள் இருக்கப் பிறந்த சாதகன், தீய பெண்களோடு உறவு கொள்வான் அல்லது வேலைக்காரப் பெண்களோடு உறவு கொள்பவனாக இருப்பான். மேலும் கைம்பெண்களோடு உறவு கொள்பவனாகவும் விளங்குவான் என்றவாறு.

## களத்திரம் மரணம்

சொன்னஇம் முறையே பெண்கள் சாதக மதிலே தோன்ற
அன்னமே புருடன் சாவான் அல்லது புருடர்க் கானால்
தன்னமை யான பெண்டீர் தான்செத்துப் போவாள் என்று
முன்னமே உரைத்த நூலை மொழிந்ததை மொழிய
லுற்றேன். *(326)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்தில் செவ்வாய் இருக்க, ஏழாமிடத்ததிபதி செவ்வாயின் இராசி அல்லது நவாம்சத்தில் இருக்கப் பிறந்த சாதகியின் கணவன் மரணமடைவான். ஆண் சாதகமானால் மனைவி இறந்துபோவாள் என்று முன்னமே சாதக பாரிசாதம் என்ற வடமொழியில கூறிய செய்தியை தமிழில் நான் கூறியுள்ளேன் என்றவாறு.

## மனைவியின் பண்புகள்

ஏழினிற் சுபராய்ப் பார்க்க இயல்புடன் இராசி நன்றாய்
வாழினில் ரூபி யாக வருங்குண வதியாம் பெண்டீர்ச்
சூழ்மதி பலவான் ஏழில் தோன்றிடச் சாது பெண்டீர்த்
தாழ்மதி ஏழில் சேரத் தினமடித் திரும்பெண் டாவாள். *(327)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்தில் சுபக்கோள்கள் இருக்க, ஏழாம் இடத்தைச் சுபக்கோள்கள் பார்க்க, ஏழாம் இடத்திற்கு அதிபதி நிற்கும் இராசியும் நன்றாக இருக்கப் பிறந்த சாதகரின் மனைவி அழகானவளாகவும், நல்ல குணமுடையவளாகவும் இருப்பாள். வளர்பிறைச் சந்திரன் பலம் பெற்று ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி சாதுவாக இருப்பாள். தேய்பிறைச் சந்திரன் ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி, கணவனை அடிப்பவளாக இருப்பாள் என்றவாறு.

## இதுவுமது

ஆதித்தன் ஏழில் உச்சம் ஆட்சியாய்ச் சுபரே பார்க்கப்
பேதித்த சாது பெண்டீர் பெற்றஇலக் கனத்திற் திங்கள்
சோதித்த ஏழில் ஆறும் தோன்றிடப் பாவர் கூட
வாதித்த பகைநீ சங்கள் வரில்விப சாரிப் பெண்டாம். *(328)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்தில் சூரியன் உச்சம் அல்லது ஆட்சி பெற்று விளங்க, ஏழாம் இடத்தைச் சுபக்கோள்கள் பார்க்கப் பிறந்த சாதகனின் மனைவி அமைதியானவளாக விளங்குவாள். இலக்கனத்தில் சந்திரனும் ஏழாம் இடத்தில் ஆறாம் இடத்திற்கு அதிபதியும் தோன்றிட, இவர்களுடன் பாவக்கோள்கள் சேர, அல்லது பகை, நீசங்கள் பெற்றிருக்கப் பிறந்த சாதகனின் மனைவி விலைமகளாக இருப்பாள் என்றவாறு.

## இதுவுமது

*சொல்லிய ஏழிற் பாவர் துலக்கமாய் இருந்து வாழ்ந்தால்*
*புல்லிய ஸ்திரீ தான்அவ சாரியாய்ப் போவாள் வெய்யோன்*
*ஒல்லையில் ஏழில் ஏக உயர்திரி மலடி நட்டம்*
*மல்லசந் திரனோ ஏழி லாய்விப சாரிப் பெண்டாம். (329)*

(இ-ள்.) ஏழாம் இடத்தில் பாவக்கோள்கள் பலமாக இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி, விலை மகளாக இருப்பாள். சூரியன், ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவளாக இருப்பாள். ஆனால் குழந்தையைப் பெற இயலாதவளாக இருப்பாள். சந்திரன் ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி, விலைமகளாக இருப்பாள் என்றவாறு.

## இதுவுமது

*திருந்திய செவ்வாய் ஏழிற் சேர்ந்திடத் திரியே சாவாள்*
*மருங்கொடு ரோகக் காரி ஆகவும் வழக்கும் உண்டாம்*
*வருந்திய சனியும் இராகும் ஏழினில் மருவி வாழ்ந்தால்*
*பொருந்திய கைம்பெண் போகம் பொருந்தளித் தினிது*
*வாழ்வார். (330)*

(இ-ள்.) செவ்வாய் ஏழாம் இடத்தில் நிற்கப் பிறந்த சாதகனின் மனைவி மரணம் அடைவாள் அல்லது நோயாளியாக இருப்பாள். சில வேலைகளில் வழக்கும் ஏற்படும். சனி, இராகு முதலான கிரகங்கள் ஏழாமிடத்தில இருக்கப் பிறந்த சாதகன், விதவைப் பெண்களோடு இன்பம் துய்ப்பவனாக விளங்குவான் என்றவாறு.

## இதுவுமது

*புந்தியும் குருவும் ஏழிற் பொருந்திடப் புனிதப் பெண்டீர்*
*வந்திடும் நல்ல பிள்ளை வாய்த்திடும் ஏழிற் சுங்கன்*
*உகந்திடப் பாக்கியப் பெண்டீர் உதவியாம் குளிகன் கேது*
*சொந்தமாய் ஏழி லாய தூரத்திரி யாலே வாழ்வான். (331)*

**(இ-ள்.)** புதனும் குருவும் ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி புனிதமானவளாக விளங்குவாள். அவர்களுக்கு நல்லப் பிள்ளைகள் தோன்றுவர். ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பிறந்த சாதகனுக்கு பாக்கியவதியான மனைவி வாய்ப்பாள். குளிகன், கேது முதலான பாவக்கோள்கள் ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் ஒதுக்கப்பட்ட பெண்ணோடு வாழ்வான் என்றவாறு.

## இதுவுமது

அந்தணன் ஏழில் நீச மாகவே திரியால் நட்டம்
மந்தனே ஏழில் மீன மாகவே மரணம் பெண்டீர்
விந்தையாய் சனிசெவ் வாயும் இராசியும் நவாங்கிச மீதில்
சொந்தமாய் வியாழம் ஏற சொல்லுதிரி அவசாரி
என்றே. *(332)*

**(இ-ள்.)** குரு, ஏழாம் இடத்தில் நீசம் பெற்று இருக்கப் பிறந்த சாதகனின், மனைவிக்கு மரணம் ஏற்படும். ஏழாமிடம் மீன இராசியில் இருக்க, அதில் சனி இருக்கப் பிறந்த சாதகனின் மனைவிக்கு மரணம் ஏற்படும். சனியும் செவ்வாயும் குரு இருக்கும் இராசி அல்லது நவாம்சத்தில் இருக்கப் பிறந்த சாதகனின் மனைவி விலைமகளாக இருப்பாள் என்றவாறு.

## இதுவுமது

நீலனும் செவ்வாய் ஏழில் நின்றிடப் பெண்டீர் சோரம்
மூலமே ழெட்டில் பாவர் முற்றிடப் பன்னி ரண்டில்
ஏலவே செவ்வா யூறில் ஏழினுக் குடையோன் எட்டில்
சீலமாய் ஆறீ ராறிற் சேர்ந்திடத் திரியால் சேர்வான். *(333)*

**(இ-ள்.)** சனி, செவ்வாய் ஆகிய இரு பாவக்கோள்களும் ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் பிற பெண்களுடன் உறவு கொள்பவனாக இருப்பான். ஏழாம், எட்டாம் இடங்களில் பாவக்கோள்கள் இருக்க, பன்னிரண்டாம்

இடத்தில் செவ்வாய் இருக்க, ஏழாம் இடத்திற்கு அதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் இருக்கப் பிறந்த சாதகன் பிற பெண்களோடு உறவு கொள்வான் என்றவாறு.

**மூன்று தாரங்கள், நல்ல மனைவி**

*வாக்கினில் ஏழிற் கோளன் வந்திடில் அநேகம் பாவர்*
*தாக்கிடப் பாவர் பார்க்கச் சார்ந்திடத் திரிகள் மூன்றாம்*
*ஆக்கமாய் ஏழிற் கோளன் அங்கிசம் சுபராய்ப் பார்க்க*
*தீர்க்கநல் அங்கி சத்தில் திரியுண்டாய்ச் சேர்வான் தானே. (334)*

(இ-ள்.) இரண்டாம் இடத்தில் ஏழாம் இடத்திற்கு அதிபதி பாவக்கோள்கள் பலவற்றுடன் சேர்ந்து அமர, அதனைப் பாவக்கோள்கள் பார்க்கப் பிறந்த சாதகனுக்கு மூன்று மனைவிகள் இருப்பார்கள். ஏழாம் இடத்திற்கு அதிபதி ஏறிய நவாம்சம் சுபராக இருக்க, அவ்விடத்தைச் சுபர் பார்க்கப் பிறந்த சாதகன், நல்ல அம்சங்கள் பொருந்தியுள்ள மனைவியை உடையவனாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும்.

**பல மனைவியர்**

*ஏழினிற் குடையோன் உச்ச ஆட்சியாம் நட்பில் ஏகித்*
*தாழ்வில்கேந் திரதிரி கோணம் தன்னிலே இருந்து*
*வாழ்ந்தால்*
*வாழ்வொரு பத்திற் கோளன் வலியவே பார்க்க வந்தோன்*
*வாழுவான் அநேகம் பெண்டீர் அணைந்திடும் புருஷ*
*னாவான். (355)*

(இ-ள்.) ஏழாம் இடத்திற்கு அதிபதி, ஆட்சி, உச்சம், நட்பு பெற்று கேந்திர, திரிகோணங்களில் இருக்க, ஏழாம் இடத்திற்கு அதிபதியைப் பத்தாம் இடத்திற்கு அதிபதி பார்க்கப் பிறந்த சாதகன், பல பெண்களை மணந்து வாழுவான் என்றவாறு.

## ஒரு மனைவி

கேந்திரங் களிலே ஏழுக் குடையவன் கெதியாய் வாழ
வாய்ந்தநல் சுபரே பார்க்க வந்திடும் இராசி நன்றாம்
சார்ந்திடும் சுபர்கள் அங்கிசம் தாழ்ந்திடச் சாத கர்க்கு
ஆய்ந்தநல் திரியே ஒன்றாம் அமர்ந்திடும் அறிந்து
பாரே. *(336)*

(இ-ள்.) ஏழாம் இடத்திற்கு அதிபதி, கேந்திரங்களில் இருக்க, சுபக்கோள்களால் பார்க்கப்பட, நின்ற இராசியும் நல்ல இராசியாக இருக்க, சுபக்கோள்களின் நவாம்சங்களில் இருக்கப் பிறந்த சாதககனுக்கு ஒரே மனைவி என்பதை அறிந்து பார்க்க வேண்டும் என்றவாறு.

## மனைவி, மக்கள் மரணம்

புந்தியும் ஏழிற் கோளும் பொருந்தவே பாவர் கூடி
வந்திடப் பகைநீ சங்கள் வர்க்கமாய்ப் பாவர் பார்க்க
அந்தமாய் உள்ள பெண்டீர் அகமதில் செத்துப போயும்
விந்தைநல் குலமும் நாசம் விளைந்திடும் என்ன
லாமே. *(337)*

(இ-ள்.) புதனும் ஏழாம் இடத்திற்கு அதிபதியும் பாவக்கோள்களுடன் கூடி பகை, நீச இராசிகளில் இருக்க, அந்த இராசியைப் பாவக்கோள்கள் பார்க்கப் பிறந்த சாதகனின் மனைவியும் புத்திரர்களும் மரணமடைவார்கள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இழிவான மனைவி

பாவர்க ளுடனே ஏழின் பதியெனத் தீய பாவர்
தீவிர மெனவே பார்க்கச் சேர்பாவ வர்க்கம் ஏறில்
ஆவதே பொல்லா வங்கிச மதில்திரி யாகும் பெண்ணை
மேவிடும் சாத கர்க்கு விளங்குமென் றுரைக்க லாமே. *(338)*

(இ-ள்.) ஏழாம் இடத்திற்கு அதிபதி பாவக் கோள்களுடன் சேர்ந்து இருக்க, இவர்களைப் பாவக்கோள்கள் பார்க்க, பாவ வர்க்கம் ஏறி இருக்கப் பிறந்த சாதகனுக்கு இழிவான குலத்தில் பிறந்த பெண் மனைவியாகக் கிடைப்பாள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## மனைவியர்

எத்தனை கிரகம் ஏழில் என்னவே சுங்க வேண்டும்
பெற்றிடும் கிரகம் தன்னைப் பேணியே திரியைச் சொல்லப்
பத்திடும் உச்சக் கோள்கள் தன்னையும் பரிந்து பார்த்து
ஒத்தநல் திரியாம் என்றே உரைக்கலாம் அறிந்து பாரே. (339)

(இ-ள்.) ஏழாம் இடத்தில் எத்தனைக் கோள்கள் இருக்கின்றனவோ அத்தனை மனைவிகள் என்று சொல்ல வேண்டும். சுக்கிரனோடு எத்தனைக் கோள்கள் இருக்கின்றனவோ அத்தனை மனைவிகள் என்று சொல்ல வேண்டும். ஒரு சாதகத்தில் உள்ள உச்சக் கோள்களையும் பார்த்து மனைவியைப் பற்றிச்சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

சுக்கிரன் வீட்டுக் கேழுக் குடையவன் தோன்ற ரண்டில்
மிக்கதாய்கிரகம் வாழ விளங்கவே சுங்க னோடும்
தக்கதாய் கிரக மெள்ளச் சார்த்திடும் திரியாம் என்ன
விக்கின மாகிற் கண்டு விளம்பவே வேண்டும் மின்னே! (340)

(இ-ள்.) சுக்கிரன் இருக்கும் வீட்டிற்கு ஏழாம் வீட்டிற்கு உடையவன், இரண்டில் உள்ள கிரகத்தோடு சேர்ந்து இருக்க, சுக்கிரனோடு உள்ள கிரகங்களின் எண்ணிக்கையைக் கொண்டு, சாதகனுக்கு எத்தனை மனைவியர் என்று சொல்ல வேண்டும். சுக்கிரனுடன் சேர்ந்துள்ள கிரகங்களின் பலவீனங்களுக்கு ஏற்ப, அந்த எண்ணிக்கையைக் கூறவேண்டும்.

## திருமணம் நடைபெறும் காலம்

சந்திரன் எந்த இராசி தன்னிலே இருக்கி றானோ
அந்தஇரா சியில்வி யாழன் அணைந்திட விவாக மாகும்
சுந்தர சுங்கன் ஏழுக் குடையவன் திசைகள் தோன்ற
முந்திய அபகா ரத்தில் முடிந்திடும் விவாகம் தானே. *(341)*

**(இ-ள்.)** சந்திரன் எந்த இராசியில் இருக்கின்றானோ அந்த இராசியில் கோசார ரீதியாக குரு வரும் காலத்தில், சுக்கிரன், ஏழாம் இடத்திற்கு அதிபதி இவர்களுடைய திசை, புத்தி காலங்களில் திருமணம் நடைபெறும் என்றவாறு.

## இதுவுமது

ஏழினுக் குடையோன் தன்னோ டேகியே கிரகம் ஏழின்
வாழ்வெனும் கிரகம் இன்னோர் வருதிசை அபகா ரத்தில்
ஊழ்வினை யான பெண்டீர் உதவுமாம் இரண்டின் கோளன்
சூழ்திசை அபாக ரத்திற் சுபகலி யாணம் சொல்லே. *(342)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்திற்கு அதிபதியோடு சேர்ந்துள்ள கிரகம், ஏழாம் இடத்தில் அமர்ந்துள்ள கிரகம் இவர்களுடைய திசை, புத்திகளிலும் இரண்டாம் இடத்திற்கு அதிபதியின் திசை, புத்திகளிலும் திருமணம் நடைபெறும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

பாக்கியத் ததிபன் பத்துக் குடையவன் திசைகள் தன்னில்
வாக்கமா தபகா ரத்தில் ஆனதோர் விவாகம் சொல்லத்
தீர்க்கமாம் சுபர்க ளாகிற் திசையினிற் திரவிய லாபம்
வாக்குடன் இலபிக்கும் என்று வகுத்தனர் நூல்வல் லாரே. *(343)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, பத்தாம் இடத்திற்கு அதிபதி ஆகியோரின் திசை, புத்திகளில் திருமணம் நடைபெறும் என்று சொல்ல வேண்டும்.

சுபர்களுடைய திசைகளில் பொருள் இலாபம் கிடைப்பதோடு, சாதனின் வாக்கிற்கும் நன்மதிப்பு கிடைக்கும் என்று சோதிடநூல் வல்லுநர்கள் எடுத்துரைத்துள்ளார்கள் என்று கூறவேண்டும்.

## இதுவுமது

இலக்கனத் ததிபன் எந்த நவாங்கிசம் நாடி னானோ
மிக்கதாய் அன்னோன் வாழும் இராசியில் வியாழன் திங்கள்
நிற்கவே விவாகம் சுங்கன் நிகழும்ஏ ழுடையோன் இராசித்
தக்கதாய்ப் பொன்னன் திங்கள் சார்ந்திடச் சாரும்
பெண்டீர். *(344)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி எந்த நவாம்சத்தில் இருக்கின்றானோ, அவன் ஏறியுள்ள இராசியில் குரு, சந்திரன் இருக்க திருமணம் நிகழும். சுக்கிரன், ஏழாம் இடத்திற்கு அதிபதி, இராசி ஆகியவற்றோடு குரு, சந்திரன் சேர்ந்திருக்கப் பிறந்த சாதகனுக்குத் திருமணம் நிகழும் என்றவாறு.

## பெண்களுடன் உறவு

ஏழினிற் கதிரோ னாகில் இயல்புடன் மலடி சேர்வான்
தாழ்வில்சந் திரனே யாகில் சங்கீதப் பெண்ணைச் சேர்வன்
தாழ்விலாச் சேயே யாகில் தூரமா னவளைச் சேர்வன்
தாழ்புத னாகில் வேசை தன்னையே அணையப்
போவான். *(345)*

**(இ-ள்.)** ஏழாம் இடத்தில் சூரியன் இருந்தால் குழந்தைப் பேறு இல்லாதவளோடு உறவு கொள்வான். ஏழாம் இடத்தில் சந்திரன் இருந்தால் சங்கீதம் தெரிந்த பெண்ணோடு உறவுகொள்வான். ஏழாம் இடத்தில் செவ்வாய் இருப்பின், வேறு பெண்ணோடு உறவு கொள்வான். ஏழாம் இடத்தில் புதன் இருக்க, விலை மகளிரொடு உறவு கொள்வான் என்றவாறு.

## இதுவுமது

*அந்தணன் ஏழி லாகி அணைந்திடும் பிரம ணத்திரி*
*சுந்தர சுங்க னாகிற் சுபகர்ப்பத் திரியைச் சேர்வன்*
*மந்த◌ ா ஏழில் நீசத் திரிதனை மருவி வாழ்வான்*
*விந்தரா ◌ுக்கே துத்தான் விரும்புவான் விலக்க மானாள். (346)*

**(இ-ள்.)** குரு, ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன், பிராமணப் பெண்ணோடு உறவு கொள்வான். ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பிறந்த சாதகன், கர்ப்பிணிப் பெண்ணோடு உறவு கொள்வான். ஏழாம் இடத்தில் சனி இருக்கப் பிறந்த சாதகன், இழிவானப் பெண்ணோடு உறவு கொண்டு வாழ்வான். ஏழாம் இடத்தில் இராகு அல்லது கேது இருக்கப் பிறந்த சாதகன் மாதவிலக்கு உடைய பெண்களோடு உறவு கொள்வான் என்றவாறு.

## உறவுகொள்ளும் இடம்

*ஆதித்தன் ஏழி லாகில் அணைந்திடும் இடமே காடு*
*சோதித்த மதியோன் ஏழிற் தோய்வது நல்ல வீடாம்*
*வாதித்த செவ்வாய் ஏழில் மருவுவன் குட்டிச் சுவராம்*
*சூதத்த புதனால் சித்திரம் தோன்றிடும் மச்சு வீடாம். (347)*

**(இ-ள்.)** சூரியன், ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் காட்டில் பெண்ணோடு சேர்வான். ஏழாம் இடத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன் நல்ல வீட்டில் பெண்ணோடு உறவுகொள்வான். செவ்வாய் ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் குட்டிச்சுவர் அமைந்த இடத்தில் பெண்ணோடு உறவு கொள்வான். ஏழாம் இடத்தில் புதன் இருக்கப் பிறந்த சாதகன் ஓவியங்கள் வரையப்பட்ட மாடி வீட்டில் உறவு கொள்வான் என்றவாறு.

## இதுவுமது

அந்தணன் ஏழில் நிற்க அணையுந்தே வால யத்தில்
சுந்தரச் சுங்கன் ஏழில் தோன்றும்நீ ரிடங்கள் சொல்லும்
மந்தனே ஏழில் நல்ல மடந்தனில் கிரீடை செய்வான்
விந்தைரா குக்கே துத்தான் விஷ்ணுவா லயத்தில் மேவும். *(348)*

(இ-ள்.) குரு, ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் கோயிலில் பெண்ணோடு உறவு கொள்வான். சுக்கிரன், ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன், நீரிடங்களில் பெண்ணோடு உறவு கொள்வான். சனி, ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன், மடத்தினில் பெண்ணோடு உறவு கொள்வான். இராகு, கேது முதலான கோள்கள் ஏழாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் திருமாலின் ஆலயத்தில் பெண்ணோடு உறவு கொள்வான் என்றவாறு.

### உடன் மரணம் அடையும் மனைவி

சுங்கனும் ஏழிற் கோனும் சுபரெனப் பலவா னாகில்
பொங்கமாய் ஏழில் வந்துப் பொருந்திடப் பாவர் கூடச்
சங்கையால் பாவர் பார்க்கிற் சாதகன் மரண மாகித்
தங்தண மான பெண்டீர் தானுமே மரண மாவாள். *(349)*

(இ-ள்.) சுக்கிரனும் ஏழாம் இடத்திற்கு அதிபதியும் சுபராக பலம்பெற்று ஏழில் நிற்க, அவர்களோடு பாவக் கோள்கள் பார்க்கப் பிறந்த சாதகன் மரணம் அடைந்த உடனேயே அவனுடைய மனைவியும் மரணம் அடைவாள் என்றவாறு.

### நிதம்பத்தைச் சும்பிப்பவன்

சுக்கிரன் ஏழிற் கோளன் சுகமுடன் கூடி வாழச்
சுக்கிரன் ஏழி லாக அல்லது சுகமாய்ப் பார்க்கச்
சுக்கிரன் இராசி ஏழாம் தானாய்த் தோன்று மாகில்
சுக்கில நிதம்பம் தன்னைச் சுகமொடு சும்பிப் பானே. *(350)*

(இ-ள்.) சுக்கிரனும் ஏழாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றாகச் சேர்ந்திருக்க, சுக்கிரன் ஏழாம் இடத்தில் இருக்க, அல்லது ஏழாம் இடத்தைப் பார்க்க, சுக்கிரன் இருக்கும் இராசி இலக்கனத்திற்கு ஏழாம் இடமாக இருக்க, நிதம்பத்தைச் சும்பிப்பவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

**அல்குலைச் சும்பிப்பவன்**

இப்படி இரண்டிற் கோளன் தன்னொடு இருக்கு மாகில்
அப்படிப் பலனைச் சொல்ல ஆனபத் துடையோன் சுங்கன்
செப்பமாய் இருவர் தானும் சேர்ந்துடன் ஏழி லாய
மைப்புறும் கண்ணாள் அல்குல் மருவிய சும்ப னாமே. *(351)*

(இ-ள்.) சுக்கிரன், இரண்டாம் இடத்திற்கு அதிபதி ஆகியோர் ஒன்றாகச் சேர்ந்திருக்க, சுக்கிரன் இரண்டாம் இடத்தில் இருக்க அல்லது இரண்டாம் இடத்தைப் பார்க்க, சுக்கிரன் இருக்கும் இராசி இலக்கனத்திற்கு இரண்டாம் இடமாக இருக்க, பத்தாம் இடத்திற்கு அதிபதி, சுக்கிரன் ஆகியோர் இருவரும் ஏழாம் இடத்தைப் பார்க்க அல்குலைச் சும்பிப்பவனாக இருப்பான் என்றவாறு.

**ஏழாம் பாவம் முற்றிற்று.**



# எட்டாம் பாவம்

## பொது

எட்டினில் குணங்கள் தன்னை இயல்புடன் உரைக்க
வேண்டில்
அட்டமம் என்னும் பேராம் ஆயுளில் வலிமை தீர்க்கம்
இட்டமாம் உரைக்க அற்ப ஆயுளோ டரிட்டம் எல்லாம்
திட்டமாய் மரணம் தானும் திடம்படச் செப்ப
லுற்றேன். *(352)*

**(இ-ள்.) எட்டாம் இடத்திற்கு அட்டமம் என்று பெயர். இந்த இடத்தைக்கொண்டு ஆயுளின் வலிமை, தீர்க்காயுள், அற்பாயுள், கண்டம், மரணம் போன்றவற்றைச் சொல்ல வேண்டும் என்றவாறு.**

## அற்பாயுள்

அட்டமத் ததிபன் பன்னி ரண்டினில் ஆறில் வந்து
திட்டமாய்ப் பாவர் கூடிச் சேர்ந்திட அற்பா யுள்தான்
இட்ட இலக் கினத்து நாதன் தன்னொடும் எட்டின் கோளின்
சட்டமாய் ஆறீ ராறிற் சார்ந்திட அற்பா யுள்தாம். *(353)*

(இ-ள்.) எட்டாம் இடத்திற்கு அதிபதி, பன்னிரண்டாம் இடம், ஆறாமிடம் ஆகிய இடங்களில் பாவருடன் சேர்ந்து அமர, அற்பாயுளாகும். இலக்கனாதிபதியுடன் எட்டாம் இடத்திற்கு அதிபதி சேர்ந்து ஆறாமிடம், எட்டாமிடம் இவற்றில் அமர்ந்திட அற்பாயுள் என்று கூறவேண்டும் என்றவாறு.

## நீண்ட ஆயுள்

எட்டினிற் குடையோன் எட்டில் இருந்திட தீர்க்கா யுள்தான்
இட்ட இலக் கனத்து நாதன் எழில்பெறும் எட்டின் கோளன்
திட்டமாய் ஆறிற் கோளன் தன்னொடு பன்னி ரண்டில்
திட்டமாய் இருக்க ஆயுள் தீர்க்கமாய்த் திருந்தச் சொல்லே. *(354)*

(இ-ள்.) எட்டாம் இடத்திற்கு உடையவன், எட்டாம் இடத்தில் இருக்க, தீர்க்காயுளாகும். இலக்கனாதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி, ஆறாம் இடத்திற்கு அதிபதி இவர்கள் ஒன்றுகூடிப் பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, ஆயுள் தீர்க்கம் என்று சொல்லவேண்டும்.

### அற்பாயுள்

பத்தினுக் குடையோன் எட்டில் பதியலக் கனத்து நாதன்
இத்தனைப் பேரும் கேந்திரம் ஏறிட திரிகோ ணத்தில்
மெத்திடத் தீர்க்க வாயுள் பேசிய கோட்கள் மந்தன்
அத்தனை கோள்பல வீன மாகினால் அற்பா யுள்தான். *(355)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி. இலக்கனாதிபதி ஆகிய மூவரும் கேந்திர, திரிகோணங்களில் இருக்க, தீர்க்க ஆயுளாகும். சனி, பத்தாம் இடத்கிற்கு அதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபது ஆகிய இவர்கள் பலவீனமாக இருப்பின் அற்பாயுள் என்று சொல்ல வேண்டும்.

### திட சரீரம், அற்பாயுள்

கன்மத்தோன் சென்ம நாதன் கருதிய எட்டிற் கோளன்
தன்மத்தாற் பலமாய்த் தீர்க்க ஆயுளான் சரீரம் நல்லான்
வன்மத்தான் இரண்டிற் கோள்கள் வலிமையால் மத்திய ஆயுள்
உன்மத்தான் ஒருவன் அல்லால் உரைக்கலாம் அற்பா யுள்தான். *(356)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி, எட்டாமிடத்திற்கு அதிபதி ஆகியோர் பலம் பெற்று இருப்பின், தீர்க்க ஆயுள் உடையவன். திடசரீரம் உடையவன். பத்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி, எட்டாமிடத்திற்கு அதிபதி ஆகிய மூன்று கோள்களில் இருவர் பலமாக இருப்பின், மத்திம ஆயுள் என்று சொல்ல வேண்டும். இம்மூன்று கோள்களில் ஒரு கோள் மட்டும் பலமுள்ளதாக இருப்பின் அற்பாயுள் என்று சொல்லவேண்டும்.

## தீர்க்காயுள்

சொன்னமும் மூன்று கோளும் சோர்பல வீன மாகில்
பன்னிரண் டாண்டுக் குள்ளே பாலகன் மரண மாக
இன்னமோர் எட்டிற் கோளன் இருந்திடும் இராசி நன்றாய்
அன்னவ ருட னே நற்கோள் இருந்திட தீர்க்கா யுள்தான். *(357)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி மூவரும் பலவீனமாக இருப்பின், இச்சாதகன் பன்னிரண்டு வயதிற்குள் மரணமாவான் என்று சொல்ல வேண்டும். எட்டாம் இடத்திற்கு அதிபதி நிற்கும் இராசி சுப இராசியாக இருந்து அவருடனே சுபக்கோள்கள் சேர்ந்து இருப்பின் தீர்க்காயுள் என்றவாறு.

## இதுவுமது

பாபஇரா சியிலே அட்ட மாதிபன் பதியிற் பாவர்
மேவிடக் கூடி வாழ வரையஆ றெட்டீ ராறில்
தாவிட அற்பா யுள்தான் தரணியில் சங்க மின்னே!
ஆவியைப் பொருளாய் நம்ப லாகுமோ அற்ப நாட்டே. *(358)*

**(இ-ள்.)** பாவ இராசிகளில் எட்டாம் இடத்திற்கு அதிபதி இருக்க, அவருடன் பாவர் சேர்ந்து இருக்க, ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடம் இவற்றில் இருக்க அற்பாயுள் என்று சொல்லவேண்டும்.

## இதுவுமது

அறிவுடன் இலக்க நாதன் ஆறீரா றெட்டி லாதல்
பிறிவுடன் எட்டின் கோளன் பேசிய தலத்திற் பாவர்
குறியுடன் கூடிப் பார்க்கக் கொடுநீசாஸ் தமனக்கோ ளாக
உறுபகை இராசி யாகில் ஒருங்கவே அற்பா யுள்தான். *(359)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி, ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவற்றில் இருக்க, எட்டாமிடத்திற்கு

அதிபதியுடன் பாவர் கூடி இருக்க, அல்லது பாவர் அவரை நோக்க அல்லது நீச அத்தமனம் பெற்றிருக்க, அல்லது பகையான இராசிகளில் அமர, அற்பாயுள் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

அட்டமா திபனும் இலக்ன நாதனும் அதிக உச்சம்
சட்டமாய் ஏற அல்லாற் கேந்திரத்திரி கோணம் தன்னில்
திட்டமாம் தீர்க்கா யுள்தான் திவ்வியகோ ளாட்சி யாக
முட்டவே தீர்க்கா யுள்தாம் மொழிவது சுகியு மாவான். *(360)*

**(இ-ள்.)** அட்டமாதிபதியும், இலக்கனாதிபதியும் அதிக உச்சம் பெற்ற இராசிகளில் ஏறி இருக்க, அல்லது கேந்திர திரிகோண தானங்களில் இருக்க, தீர்க்காயுளாகும். சுபக்கோள்கள் ஆட்சியாக இருக்க, தீர்க்காயுள் என்று கூறவேண்டும்.

## இதுவுமது

சென்மவான் அட்ட மாதி பத்திரி கோண கேந்திரம்
நன்மையாய்ப் பலவா னாக நாடிடத் தீர்க்கா யுள்தாம்
தன்மஇலக் கனத்து நாதன் தானங்கள் தனிலே கோள்கள்
அன்பொடு நற்கோள் பார்க்க ஆயுள்தீர்க் கமோடா
ரோக்கியம். *(361)*

**(இ-ள்.)** இராசியாதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி இருவரும் பலம் பெற்றுக் கேந்திர திரிகோணத் தானங்களில் இருக்க, தீர்க்காயுளாகும். இலக்கனம், இராசி, எட்டு ஆகிய வீடுகளில் நற்கோள்கள் இருக்க, அல்லது அவ்விடங்களை நற்கோள்கள் பார்க்கப் பிறந்த சாதகன் ஆரோக்கியமான வனாகவும், நீண்ட ஆயுளைப் பெற்றவனாகவும் விளங்குவான் என்றவாறு.

## மரணம்

*அட்டமா திபனீ ராறில் எட்டினில் ஆறில் ஏகச்*
*சட்டமாய்த் திசைய பகாரம் தன்னிலே மரணம் சாரும்*
*திட்டமாய்ச் சனியன் வாழும் இராசியின் திசைக்கோள் தன்னில்*
*எட்டின்கோள் அபகா ரத்தில் இயல்புடன் மரணம் சொல்லே. (362)*

(இ-ள்.) எட்டாம் இடத்திற்கு அதிபன், ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்களில் ஏறி இருக்க, எட்டாம் இடத்திற்கு அதிபதியின் திசை, புத்தியில் இச்சாதகர்க்கு மரணம் நேரிடும் என்று சொல்ல வேண்டும். சனி இருக்கும் இராசியாதிபதியின் திசையில் எட்டாம் இடத்திற்கு அதிபதியின் புத்தியில் சாதகனுக்கு இயல்பாக மரணம் நேரும் என்று சொல்லவேண்டும்.

## இதுவுமது

*செப்பிய அட்ட மாதித் திசையப காரம் தன்னில்*
*ஒப்பிய அட்ட மாதி பதியுடன் ஓதுங் கோள்கள்*
*தப்பிய திசையப காரம் சாத்தியசா மான்ய மென்னும்*
*அப்பல வீனம் அன்னோர் அவதிசை அபகார மாகா. (363)*

(இ-ள்.) எட்டாம் இடத்திற்கு அதிபதியும், எட்டாம் இடத்திற்கு அதிபதியோடு சேர்ந்துள்ள கோள்களும் பலவீனமாக இருந்தால் எட்டாம் இடத்திற்கு அதிபதியின் திசை, புத்திகளில், எட்டாம் அதிபதியுடன் சேர்ந்துள்ள கோள்களின் திசை, புத்திகளில் உயிருக்குக் கேடு உண்டாகும். அத்திசா புத்திகள் நன்மையைத் தரா.

## இதுவுமது

*பன்னிரண் டாறில் எட்டிற் பதியஇலக் கனத்து நாதன்*
*தன்னொடு கேது இராகு சார்ந்திடத் திசையப காரம்*
*சென்மவான் எட்டின் நாதன் இவரோடு சேர்ந்த கோட்கள்*
*அன்னவர் திசையப காரம் அதில்அவ மிருத்துண் டாமே. (364)*

(இ-ள்.) இலக்கனாதிபதியோடு சேர்ந்து கேது, இராகு முதலான கோள்கள் சேர்ந்து ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றில் இருக்க, இலக்கனாதி பதியின் திசை, புத்திகளிலும், இலக்கனாதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி இவர்களோடு சேர்ந்தவர்களின் திசை, புத்திகளில் உயிருக்குத் தீங்கு நேரிடும் என்றவாறு.

## இதுவுமது

எந்தஇரா சியிலும் இலக்கன நாதனும் எட்டின் கோளும்
வந்ததாற் திசைஅப காரம் வாய்த்திடும் மரணம் சொல்ல
வந்தஇலக் கனத்து நாதன் அறிவொடு இலக்க னத்தில்
உந்திடத் திசைஅப காரம் தன்னிலே உபாதி உண்டாம். *(365)*

(இ-ள்.) எந்த இராசியாக இருந்தாலும் இலக்கனாதி பதியும் எட்டாம் இடத்திற்கு அதிபதியும், சேர்ந்திருக்கப் பிறந்த சாதகனுக்கு அக்கோள்களின் திசை, புத்திகளில் மரணம் நேரிடும். இலக்கனாதிபதி, இலக்கனத்தில் இருக்க, இலக்கனாதிபதியின் திசை, புத்திகளில் மரணத்திற்கு ஒப்பான கண்டம் ஏற்படும் என்றவாறு.

## இதுவுமது

பத்தினுக் குடையோன் எட்டில் பதியஇலக் கனத்து நாதன்
சத்தியம் பகைநீ சங்கள் தனிலிவர் பலவீ னங்கள்
ஒத்திடத் திசைஅப காரம் உள்ளநாள் மரணம் உண்டாம்
மத்தனே குளிகன் அட்ட வர்க்கமும் அடைவாய் பாரே. *(366)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, எட்டாமிடத்தில் இருக்க, இலக்கனாதிபதி பகை, நீசம்பெற்று இருந்து பலவீனமாக பத்தாம் இடத்திற்கு அதிபதியின் திசை, புத்திகளில் மரணம் ஏற்படும். மேலும் குளிகனின் அட்ட வர்க்கத்தையும் தெளிவாய்க் கண்டு மரணத்தைப் பற்றிக் கூற வேண்டும் என்றவாறு.

### இதுவுமது

எட்டினுக் குடையோன் எட்டில் இருந்தவர் திசையப காரம்
தொட்டிடச் சரீரம் மீது தோய்ந்திட உபாதி சொல்ல
அட்டமா திபனும் நன்றாய் அதிபல வானா யானால்
சட்டமாய்ச் சரீர வாதை சற்றுமே இல்லை தானே. *(367)*

**(இ-ள்.)** எட்டாம் இடத்திற்கு அதிபதி, தன் சொந்த வீட்டில் இருக்க, அவனுடைய திசை, புத்திகளில் அச்சாதகனுக்கு நோய் உண்டாகும். அட்டமாதிபதி அதிக பலம் பெற்று விளங்கினால் உடலுக்கு துன்பம் நேராது என்றவாறு.

### இதுவுமது

சென்மகா லத்து இலக்கனம் அதிபல வீன மாகில்
வன்மஇலக் கனத்து நாதன் வாழ்ந்திடு திசையி லேயும்
நன்மையில் எட்டிற் கோளன் நடந்திடும் திசையி லேயும்
தன்மமில் கெட்ட காலம் சார்ந்திடும் அதிகம் தானே. *(368)*

**(இ-ள்.)** இலக்கனம் அதிக பலவீனமாக இருக்க, இலக்கனாதிபதியின் திசையிலும், எட்டமா இடத்திற்கு அதிபதியின் திசையிலும் தீமை அதிக தீமைகளாகும்.

### இதுவுமது

சென்மவான் இலக்க னாதி திசைபல வீன மாகி
நன்மையாய் இவர்கள் ஊனும் திசையிலும் அதற்கப் பாலே
தன்மவான் அட்ட மாதி பதிசனி இலக்க னத்தில்
வன்மையாம் திசையப காரம் வந்திடும் மரணம் தானே. *(369)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதியின் திசை மிகவும் பலமாக இருக்க, அத்திசையிலும் அக்கோளின் புத்தியிலும், எட்டாம் இடத்திற்கு அதிபதி, சனி இருவரும் இலக்கனத்தில் இருந்து அவர்களின் திசை. புத்தி நடைபெறும் காலத்திலும் மரணம் நிகழும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## இதுவுமது

அட்டமா திபனும் இலக்கன நாதனும் பலமாய் அன்னோர்
இட்டமாய்க் கேந்திர கோணம் ஏறிட இவர்க ளோடும்
திட்டமாய் வாழும் கோட்கள் திசைஅப கார மானால்
ஒட்டிய ரோக மல்லால் உடல்அவ பாதம் உண்டாம். *(370)*

**(இ-ள்.)** எட்டாம் இடத்திற்கு அதிபதியும், இலக்கனாதிபதியும் பலவான்களாக, கேந்திர திரிகோணங் களில் அமர, அவர்களோடு சேர்ந்து இருக்கும் கோள்களின் திசை, புத்திகளில் சாதகர்க்கு நோய்கள் உண்டாகும் அல்லது உடலில் ஊனம் உண்டாகும்.

## இதுவுமது

சொன்னலக் கனத்து நாதன் சுகமொடு எட்டிற் கோளன்
பன்னுகேந் திரத்திரி கோணம் பதிந்திட அட்ட மத்தில்
உன்னிய கிரகம் உண்ணும்உயர்திசை அபகா ரத்தில்
என்னலாம் அவமி ருத்து இசைந்திடும் என்று சொல்லே. *(371)*

**(இ-ள்.)** இலக்கனாதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி இருவரும் கேந்திர திரிகோண தானங்களில் அமர, எட்டாமிடத்தில் நிற்கும் கிரகத்தின் திசை, புத்திகளில் மரண பயம் ஏற்படும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

எட்டினுக் குடையோன் லக்ன நாதனோ டெவனா னாலும்
ஒட்டிய கிரகத் துக்கே உயர்பல வீன மானால்
இட்டதி கார மான இவர்திசை அபகா ரத்தில்
விட்டவ மிருத்துண் டாகும் என்னவும் விளம்ப லாமே. *(372)*

**(இ-ள்.)** எட்டாமிடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி இவர்களுடன் சேர்ந்து நிற்கும் கிரகங்கள் பலவீனமாக

இருப்பார்களாயின், அவர்களுடைய திசை, புத்திகளில் மரண பயம் உண்டாகும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### இதுவுமது

*ஐந்தினுக் குடையா னோடே அமர்ந்திடும் கிரகம பார்த்து*
*வந்திடக் கதிரைத் தள்ளி மற்றவர் திசையி னாலும்*
*விந்தையாம் அபகா ரத்தில் மிக்கவ மிருத்துண் டாகும்*
*சந்தேகம் இல்லை மின்னே! சதிரொடும் கணிதத் தாலே. (373)*

(இ-ள்.) ஐந்தாமிடத்திற்கு அதிபதியுடன் சேர்ந்து அமர்ந்திருக்கும் கோள்களில் சூரியன் நீங்கலாக மற்ற கோள்களின் திசை, அபகாரங்களில் மரணபயம் உண்டாகும் என்பதைச் சந்தேகமின்றிக் கூறவேண்டும் என்றவாறு.

### இதுவுமது

*அஞ்சினுக் குடையா னோடு அழகுஇலக் கனத்து நாதன்*
*தஞ்சமாய் எவரா னாலும் சார்திசை அபகா ரத்தில்*
*கொஞ்சிய மாதந் தோன்றும் நாளுக்குக் குறித்த முன்னாள்*
*மிஞ்சவே அங்க ஈனம் விளைந்திடும் மிருத்துத் தானே. (374)*

(இ-ள்.) ஐந்தாம் இடத்திற்கு அதிபதியோடு, இலக்கனாதிபதி சேர்ந்திருக்க இவ்விருவரின் திசை, புத்திகளில் சங்கரநாளில் இருந்து கணக்கிட்டு அச்சாதகனுக்கு உடல் குறைபாடு அல்லது மரண பயம் உண்டாகும் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### மனைவி மரணம்

*கொஞ்சியே பிதுர்த்தா னத்தின் கோளும்இலக் கனத்துக் கோளும்*
*அஞ்சியே கேந்திர கோணம் அடைவுடன் இருந்து வாழ்ந்தால்*
*மிஞ்சிய திசையப காரம் விளைந்திட மிருத்துண் டாகித்*
*துஞ்சுவாள் பெண்டீர் தானும் சுகமனு மரண மாவாள். (375)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியும் இலக்கனாதிபதியும் கேந்திர திரிகோணங்களில் இருந்து வாழ்ந்தால், அவர்களுடைய திசை, புத்திகளில் மரணபயம் உண்டாகி, மனைவி மரணம் அடைவாள் என்று சொல்ல வேண்டும்.

## வைசூரியால் மரணம்

திருந்திய செவ்வாய் மந்தன் அந்தணன் திங்கள் இராகு
பொருந்திய அட்ட மத்திற் போய்விட எவரா னாலும்
இருந்திட நாளுக் கப்பால் எமன்கொண்டு போகும் நாளில்
வருந்தியே வைசூரி யாலே வந்திடும் மரணம் தானே. *(376)*

(இ-ள்.) செவ்வாய், சனி, குரு, சந்திரன் இவர்களில் ஒருவர் எட்டாம் இடத்தில் ஏறி இருக்கப் பிறந்த சாதகனுக்கு வைசூரியால் மரணம் வந்தடையும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## உடலில் புண்

சந்திரன் இரண்டில் அல்லால் சாருமட்ட மத்திற் சாரப்
புந்தியும் செவ்வாய் தானும் பொருந்தியே பத்தில் ஏற
வந்திடும் சாத கர்க்கு வருந்தியே உடம்பில் புண்ணாம்
கந்தங்கற் றாழை நாற்றம் கனபுலால் மணமும் சேரும். *(377)*

(இ-ள்.) சந்திரன், இரண்டாம் இடத்தில் அல்லது எட்டாம் இடத்தில் இருக்க, புதனும், செவ்வாயும் பத்தாமிடத்தில் சேர்ந்திருக்க, சாதகர்க்கு உடலில் புண் ஏற்பட்டு, அப்புண்ணில் இருந்து கற்றாழை நாற்றமும், மாமிச நாற்றமும் சேர்ந்து வீசும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## நோயாளியும் சுகவானும்

எட்டினிற் பாவர் வந்து ஏறிட அல்லால் பார்க்க
முட்டிய ரோகம் எல்லாம் மூர்க்கமாய்த் தீர்க்க மாகும்
அட்டமந் தன்னில் நற்கோள் அண்டிட அல்லாற் பார்க்கத்
திட்டமாய் ரோக மில்லான் தினஞ்சுக வானாம்
செப்பே. *(378)*

**(இ-ள்.)** எட்டாம் இடத்தில் பாவக்கோள் இருக்க, அல்லது எட்டாம் இடத்தைப் பாவக்கோள் பார்க்க வருகின்ற நோய் கொடியதானதாக இருக்கும். எட்டாம் இடத்தில் சுபக்கோள்கள் இருக்க அல்லது எட்டாம் இடத்தை சுபக்கோள் பார்க்க நோய் இல்லாதவனாக சுகவானாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

**எட்டாம் பாவம் முற்றும்.**

# ஒன்பதாம் பாவம்

## பொது

*ஒன்பதாம் இடத்தைப் பார்த்து ஓதிய பலனே தென்னில்*
*அன்பனாம் பிதுர்கள் தன்னை ஆனபாக் கியத்தில் அல்லால்*
*இன்புறு சுபங்கள் தன்மம் இயல்புடன் தபசு ஆசான்*
*தன்பல னுடன்வி யாழம் தன்னையும் நாடிப் பாரே. (379)*

**(இ-ள்.)** ஒன்பதாம் தானத்தைக்கொண்டு தந்தையைப் பற்றி கூற வேண்டும். மேலும், சுபங்கள், தருமம்,தவம், ஆசிரியர் ஆகியவற்றையும் கூறவேண்டும். ஒன்பதாம் தானத்தோடு, குருவைக் கொண்டும் இப்பலன்களைக் கூறவேண்டும் என்றவாறு.

## செல்வன்

*அந்தணன் பாக்கி யத்துக் கதிபனும் அறிவாய் வாழ*
*உந்திய தானம் நல்ல உறுசுபர் வர்க்க மாக*
*அந்தமாம் சுபரே வாழ அல்லது சதுராய்ப் பார்க்க*
*வந்திடும் பாக்கி யங்கள் அல்லது இன்னும் சொல்லே. (380)*

**(இ-ள்.)** குரு, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியுடன் சேர்ந்திருக்க, ஒன்பதாம் தானம் சுபவர்க்கமாக இருக்க, ஒன்பதாம் இடத்தில் சுபக்கோள்கள் இருக்க அல்லது அந்தத் தானம் சுபக்கோள்களால் பார்க்கப்பட இச்சாதகன் அனைத்துவிதமான செல்வங்களையும் பெற்று விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு

## செல்வம் இல்லாதவனும் உள்ளவனும்

*பாக்கியத் ததிபன் நீச அத்தமனமாய்ப் பாவர் வாழ*
*நோக்கினும் தனமில் லாதான் நுண்ணிய நவத்தில் பாவர்*
*தாக்கிட ஆட்சி உச்சம் சார்ந்திடச் சுபரும் கூட*
*ஆக்கமாம் பாக்கி யங்கள் அவனிடம் பிரியா தாமே. (381)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி நீசம், அத்தமனம் பெற்றிருக்க, ஒன்பதாம் இடத்தில் பாவர்கள் இருந்தாலும், ஒன்பதாம் இடத்தைப் பாவர்கள் பார்த்தாலும் செல்வம் இல்லாதவனாக இருப்பான். ஒன்பதாம் இடத்தில் பாவக்கோள்கள் இருந்து ஆட்சி, உச்சம் பெற்று இருந்தாலும், சுபக்கோள்களுடன் சேர்ந்து இருந்தாலும் அனைத்து செல்வங்களையும் பெற்றவனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *பாக்கியவான்*

*தந்தையாம் இடத்தில் பாக்யத் ததிபனும் சார நன்றாய்*
*விந்தையாய்ச் சுபரும் கூடி விளங்கபாக் கியவா னாகும்*
*ஐந்தினுக் குடையன் இன்னோர் ஆட்சியால் உச்ச மானோர்*
*செந்திரு அனைய மாதே ! தீர்க்கபாக் கியவான் செப்பே. (382)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி தன் சொந்த வீட்டில் சுபக்கோள்களுடன் கூடி இருக்கப் பிறந்த சாதகன் பாக்கியவானாக விளங்குவான். இதைப் போலவே ஐந்தாம் இடத்திற்கு உடையவன் ஆட்சி அல்லது உச்சம் பெறப் பிறந்த சாதகன் நீண்டகாலம் பாக்கியவானாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## *இராசயோகம்*

*பாக்கியத் ததிபன் ஐந்தின் பதியலக் கனத்து நாதன்*
*நீக்கரும் கருமம் தன்னில் நிகழ்பெற உச்ச ஆட்சித்*
*தாக்குமங் கிசங்கள் ஏறிச் சார்ந்தினி திருக்கும் நாளில்*
*ஆக்கமாம் இராச யோகம் அவனனு பவிப்ப னாமே. (383)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி ஆகிய மூவரும் பத்தாம் இடத்தில் ஒன்று சேர அமர்ந்து உச்ச, ஆட்சி நவாம்சங்களில் இருக்கின்ற நாளில் பிறந்த சாதகன் இராசயோகத்தை அனுபவிப்பவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## சிவனுக்குப் பூசை செய்யோன்

உரைத்திடும் நாலு பேரும் உறுபல வான்க ளாகில்
சரித்திரம் ஏதொன் றாயோ சற்குண மாதே கேளாய்க்
கருத்தினால் சிவனைப் பூசைக் கையினால் பண்ணும் பாக்கியம்
பருத்திடு மரண மாகும் பரியந்தம் பலனைச் சொல்லே. *(384)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி, பத்தாம் இடத்திற்கு அதிபதி ஆகிய நால்வரும் பலவான்களாக இருப்பின், நற்குணங்களை உடையவனாகவும் மரணம் வரை சிவனுக்குப் பூசை செய்யும் சிறப்பினை உடையவனாகவும் விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## செல்வன்

ஐயன்தா னத்து மிக்காய் அந்தணன் பார்த்து நின்றால்
துய்யரா ஜாக்கள் யுக்தித் தோன்றும்வா கனவான் ஆவான்
பையவே செவ்வாய் பார்க்கில் பலித்திடும் பூமி இலாபம்
தையலே! புந்தி பார்க்கில் சார்ந்திடும் தனத்த னாமே. *(385)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்தைக் குரு பார்த்து நிற்கப் பிறந்த சாதகன் இராசதந்திரம் உடையவனாக விளங்குவான். அவனிடத்தில் வாகனங்கள் இருக்கும். ஒன்பதாம் இடத்தைச் செவ்வாய் பார்த்து நின்றால் பூமி இலாபம் அச்சாதகனுக்குக் கிட்டும். புதன், ஒன்பதாம் இடத்தைப் பார்த்து நின்றால் அச்சாதகன் செல்வனாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## சுகிவான், பெருஞ்செல்வன்

அப்பன்தா னத்திற் சுங்கன் அரவொடு பார்த்து நின்றால்
செப்பமாய் அநேக மாகச் சேர்ந்திடும் எசமான் ஆவான்
இப்படி மதியோன் பார்க்க இயல்பொடு சுகவான் ஆவான்
பெப்புர ணுடனே நீண்டுப் பெருந்தன வானாம் நீலன். *(386)*

**(இ-ள்.) ஒன்பதாம் இடத்தைச் சுக்கிரன் அல்லது இராகு அல்லது கேது பார்த்து நின்றால் பலருக்கும் எசமானனாக விளங்குவான். ஒன்பதாம் இடத்தை சந்திரன் பார்க்கப் பிறந்த சாதகன் சுகவானாக விளங்குவான். ஒன்பதாம் இடத்தைச் சனி பார்க்கப் பிறந்த சாதகன் பெருஞ்செல்வனாக விளங்குவான் என்றவாறு.**

## *செல்வன், படைத்தளபதி*

**குருகதிர் மதியன் தானும் கூடிஇத் தானம் பார்த்தால்**
**பரிபசுத் திரவி யங்கள் பெருகிடும் வித்து வானாம்**
**வருகதிர் வியாழன் செவ்வாய்ப் பார்த்திட வாக னங்கள்**
**பெருகிட இரத்தி னங்கள் பெரும்படைக் கெசமான்**
**ஆவான். *(387)***

**(இ-ள்.)** குரு, சூரியன், சந்திரன் மூவரும் சேர்ந்து ஒன்பதாம் இடத்தைப் பார்த்து நின்றால், குதிரை, பசு, முதலான கால்நடைகள் அச்சாதகனிடத்தில் மிகுதியாக இருக்கும். வித்துவானாக விளங்குவான். அவனிடத்தில் செல்வம் மிகுந்திருக்கும். சூரியன், குரு, செவ்வாய் ஆகிய மூன்று கோள்களும் ஒன்பதாம் இடத்தைப் பார்க்கப் பிறந்த சாதகனிடத்தில் பல வாகனங்கள் இருக்கும். விலையுயர்ந்த இரத்தினங்களுக்கு உரிமையாளனாக இருப்பான். மேலும் பெரிய படைக்குத் தளபதியாக விளங்குவான்.

## *வித்துவான்*

சூரியன் புதனும் கூடிச் சுகமோட்சத் தானம் பார்க்க
காரிய விநோத வித்தைக் கனவித்தைக் கதிப னாவான்
சீரிய வியாழன் சுங்கன் திகழ்கதி ரவனும் பார்க்கக்
கூரிய அதிக வித்து வானெனக் கூற லாமே. (388)

**(இ-ள்.)** சூரியனும் புதனும் ஒன்று சேர்ந்து ஒன்பதாம் இடத்தைப் பார்க்க, பல்வேறு வித்தைகளைச் செய்பவனாகச் செயலாற்றல் மிக்கவனாக விளங்குவான். குரு, சுக்கிரன்,

சூரியன் ஆகிய மூவரும் சேர்ந்து ஒன்பதாம் இடத்தைப் பார்க்கப் பிறந்த சாதகன் வித்துவானாக விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### கிரகாதிபதி, சுகவான்

மந்தன்ஆ தித்தன் பார்க்க வருகுண நல்ல புத்திச்
சொந்தமாம் கிரக மாதி பதியெனச் சொல்ல வேண்டும்
சந்திர வியாழன் செவ்வாய் சதிரோடு பார்த்து நின்றால்
இந்திரன் சுகவான் பெண்கள் இன்பமே இணங்கு
வானாம். *(389)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தைச் சனியும், சூரியனும் பார்க்க நல்ல குணமும், நல்ல புத்தியும் உடையவனாக அச்சாதகன் விளங்குவான். பல வீடுகளுக்கு அதிபதியாக இருப்பான் என்று சொல்ல வேண்டும். சந்திரன், குரு, செவ்வாய் ஆகிய மூன்று கிரகங்களும் ஒன்பதாம் இடத்தைப் பார்த்து நின்றால், இந்திரனைப் போன்று பெண்கள் இன்பத்தில் திளைக்கும் சுகவானாக இச்சாதகன் விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### சயன சுகம், சூரன்

சந்திரன் புந்தி பார்க்கத் தழுவனை மெத்தை கட்டில்
வந்திடும் வீட்டுப் பெண்டீர் தன்னோடு வணக்க மாவான்
சுந்தரச் சுங்கன் திங்கள் சுகமொடு பார்க்கச் சூரன்
செந்திரு வனைய மாதே! திரவியந் தேடச் சேரும். *(390)*

(இ-ள்.) சந்திரன், புதன் ஆகிய கிரகங்கள், ஒன்பதாம் இடத்தைப் பார்க்கப் பிறந்த சாதகன், மனைவிக்குக் கீழ்படிந்து இருப்பதோடு சயன சுகம் உடையவனாக இருப்பான். புதன், சுக்கிரன் ஆகிய இரு கோள்களும் ஒன்பதாம் இடத்தைப் பார்க்கப் பிறந்த சாதகன் சூரனாக விளங்குவான். செல்வம் இவனிடத்தில் பெருகும் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## *பெரிய வித்துவான்*

மின்னிய கதிரோன் செவ்வாய் மதியுடன் விரும்பிப் பார்க்க
அன்னிய தேச வாழ்வு அறிவுநல் உத்திர வாதிப்
பொன்னனும் புதனும் சுங்கன் தானுமே பொருந்திப் பார்க்க
மன்னவன் அறிய வித்து வானென வகுக்க லாமே. *(391)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தைச் சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகிய மூவரும் விரும்பிப் பார்க்க, பிற நாட்டில் வாழ்பவனாக இருப்பான். அறிவாளியாகவும் கல்வி கேள்விகளில் சிறந்தவனாகவும் விளங்குவான். ஒன்பதாம் இடத்தைக் குரு, புதன், சுக்கிரன் ஆகியோர் பார்க்கப் பிறந்த சாதகன் அரசரால் அறியப்பட்ட பெரிய வித்துவானாக விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *அரசன்*

திருந்தவே கிரக மெல்லாம் சீருடன் பாக்கி யத்தைப்
பொருந்தவே பார்க்க ராசா பொன்திர வியத்தான் என்ன
வருந்திய சுபரோன் பானில் வந்திட ராசச மானன்
இருந்திடும் கிரக மெல்லாம் பாக்கிய மோடு ராசன். *(392)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தைக் கோள்கள் எல்லாம் பார்க்கப் பிறந்த சாதகன் அரசனாவான். அவனிடத்தில் பெருஞ்செல்வம் இருக்கும். சுபக்கோள் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் அரசனுக்குச் சமானனாகப் போற்றப்படுபவனாக விளங்குவான். ஒன்பதாம் இடத்தில் கிரகங்கள் இருக்கப் பிறந்தவன் பாக்கியங்களைப் பெற்றவனாகவும் அரசனாகவும் விளங்குவான் என்றும் சொல்லவேண்டும் என்றவாறு.

## ஒன்பதாம் இடத்தில் கோள்கள் நின்ற பலன்

சந்திரன் தந்தை தானத் தரித்திடச் சனியும் புந்தி
விந்தையால் நோக்க மிக்காய் விளங்குபூ பதியாம் என்க
அந்தத்தா னத்தில் உச்சம் ஆட்சியாய்க் கிரக மண்ட
முந்தவே சுபரே பார்க்க முதல்வனாம் ராசா ஆவான். *(393)*

**(இ-ள்.)** சந்திரன், ஒன்பதாம் இடத்தில் நிற்க, சனியும் புதனும் ஒன்பதாம் இடத்தைப் பார்க்கப் பிறந்தவன், அரசனாக விளங்குவான். ஒன்பதாம் இடத்தில் ஆட்சி பெற்றும் உச்சம் பெற்றும் கிரகங்கள் நின்று, அவை சுபரால் பார்க்கப்படப் பிறந்தவன், அரசனாவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### இதுவுமது

சூரியன் திங்கள் தானும் தொடர்ந்துபாக் கியத்தில் ஏறக்
காரிய மதிலே வீரன் கண்ணில்நோக் காடுண் டென்கச்
சீரிய செவ்வாய் ஏறில் செப்பக்கேள் துக்கி யாவான்
தேரில் வாழ் கதிரோன் கூடில் சேரராசப் பிரிய வானாம். *(394)*

**(இ-ள்.)** சூரியன், சந்திரன் ஆகிய இரண்டு கிரகங்களும் ஒன்பதாம் இடத்தில் ஏறி நிற்கப் பிறந்தவன், செயலாற்றல் மிக்க வீரனாகவும் கண்களில் நோய் உள்ளவனாகவும் இருப்பான். ஒன்பதாம் இடத்தில் செவ்வாய் நிற்கப் பிறந்தவன் எந்நாளும் துக்கம் உடையவனாக இருப்பான். இச்செவ்வாய் சூரியனோடு சேர்ந்து ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் அரசர்களால் போற்றப்படுபவனாகவும் விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

### இதுவுமது

திங்கள்சூ ரியந வத்தில் சேர்ந்திடத் திரளாய்க் கோட்கள்
பொங்கமாய் ஏழில் ஏறப் பொருந்திய துக்கி யாவான்
அங்கவ ருடனே பொன்னன் அழுந்திட வையன் வாஞ்சைச்
சங்கையாய்ப் பிறந்தோன் தானே திரவியம் சமர்த்தாய்த்
தேடும். *(395)*

(இ-ள்.) சந்திரனும் சூரியனும் ஒன்பதாம் இடத்தில் நிற்க, ஏழாம் இடத்தில் அதிகமான கோள்கள் ஏறி நிற்கப் பிறந்த சாதகன் எந்நாளும் துக்கம் உடையவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும். ஒன்பதாம் இடத்தில் சந்திரனும், சூரியனும், குருவும் ஒன்றாகச் சேர்ந்து நிற்கப் பிறந்தவன் திறம்பட செல்வங்களைச் சேர்க்கக் கூடியவனாக இருப்பான் என்றவாறு.

## இதுவுமது

சேய்கதிர் திங்க ளோடு கூடியே நவத்தில் சேர்ந்தால்
தாய்தகப் பனுமோ இல்லை என்னவும் சாற்ற லாமே
தூய்கதிர் மதியோன் புந்திச் சுககுரு நவத்திற் தோன்ற
ஆயவும் சுகவா னப்பா ஆனைவா கனமு மாமே. *(396)*

(இ-ள்.) செவ்வாய், சூரியன், திங்கள் ஆகிய மூன்று கோள்களும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகனுக்குத் தாயும் தந்தையும் விரைவில் மரணமடைந்து விடுவார்கள் என்று சொல்லவேண்டும். சூரியன், சந்திரன், புதன், குரு ஆகியோர் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன், சுகவானாகவும், யானை வாகனத்தை உடையவனாகவும் விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

புகர்மதி கதிரோன் கூடி நவமதில் பொருந்தி நின்றால்
சுகஸ்திரி யுடனே சண்டைத் தொடங்கிய மனத்த னாவான்
பகலவன் நீலன் திங்கள் பதியவெள் ளாட்டி யோடு
இகலொடு வினோத மாக இருப்பவன் என்று கூறே. *(397)*

(இ-ள்.) சுக்கிரன், சந்திரன், சூரியன் ஆகிய மூவரும் ஒன்றுகூடி, ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் மனைவியுடன் எப்பொழுதும் சண்டையிடுபவனாக இருப்பான். சூரியன், சனி, சந்திரன் மூவரும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன், வேறு ஒரு பெண்ணுடன் வாழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### இதுவுமது

திருந்திய செவ்வாய்ப் புந்தி கதிரொடு நவத்தில் சேர்ந்தால்
பொருந்திய சுகவா னாகப் புவிதனில் இருந்து வாழ்வான்
அருந்தவர் வியாழன் ஏற அத்தனுக் கதிக ஆசை
இருந்தநல் அறமும் நன்றால் இயல்பொரு விவரத்
துண்டாம். *(398)*

**(இ-ள்.)** செவ்வாய், புதன், சூரியன் ஆகிய மூவரும் ஒன்றுகூடி ஒன்பதாம்இடத்தில இருந்தால், சுகவானாகப் பூமியில் வாழ்வான் என்று சொல்லவேண்டும். ஒன்பதாம் இடத்தில் குரு ஏறி இருக்க தந்தைமீது அதிக அன்பு கொண்டவனாக விளங்கி, அறம் செய்து வாழ்வான் என்றவாறு.

### இதுவுமது

ஆதித்தன் செவ்வாய்ச் சுங்கன் ஆனபாக் கியத்தில் ஏற
வாதித்த விவாத னாகும் வாழ்ந்திடும் கோபி அல்லால்
சூதொத்த முலையாள் பெண்டீர் தன்னையும் துடிக்க வைவான்
வேதித்த சனியால் வெந்து விரோதமாம் தந்தை சாவான். *(399)*

**(இ-ள்.)** சூரியன், செவ்வாய், சுக்கிரன் ஆகிய மூவரும் ஒன்பதாம் இடத்தில் அமரப் பிறந்தவன் விவாதம் செய்பவனாகவும் கோபம் உடையவனாகவும் இருப்பான் அல்லது பெண்களைத் துன்புறுத்துவான். அரச விரோதம் உடையவன். இவன் தந்தை விரைவில் சாவான் என்றவாறு.

### இதுவுமது

அந்தணன் புந்தி வெய்யோன் அன்புடன் நவத்தி லானால்
மந்திரி இராச மானன் வருதிர வியவான் என்ன
விந்தையாய்ச் சனிஒன் பானில் மேவிடப் பாவி யல்லால்
சொந்தமாம் வேசைக் காசை மோகனாம் என்று
சொல்லே. *(400)*

**(இ-ள்.)** குரு, புதன், சூரியன் ஆகிய மூவரும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் மந்திரியாகவும், இராசாவுக்குச் சமமாக மதிக்கத் தக்கவனாகவும் செல்வனாகவும் விளங்குவான். ஒன்பதாம் இடத்தில் சனி இருக்க அல்லது பாவக்கோள்கள் அமரப் பிறந்த சாதகன் விலைமகளிடத்தில் விருப்பம் உடையவனாக விளங்குவான் என்றவாறு.

## இதுவுமது

*சுங்கன்ஆ தித்தன் பொன்னன் சுகமொடு நவத்தில் தோன்ற*
*வங்கணப் பரத்தை மோகன் மருத்துவன் திரவி யத்தன்*
*சங்கையாற் சனிவி யாழன் கதிரொடு சார்ந்தாற் கல்விப்*
*பொங்கமாய் வெய்யோன் சுங்கன் பொன்காசு தேடி*
*வாழ்வான்.(401)*

**(இ-ள்.)** சுக்கிரன், சூரியன், குரு மூவரும் பலம் பெற்று ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன், விலைமகளிரிடம் விருப்பம் உடையவனாகவும் மருத்துவனாகவும் செல்வம் மிகுதியுடையவனாகவும் இருப்பான். குரு, சனி ஆகிய இருகோள்களும், சூரியனோடு சேர்ந்து ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் கல்விமானாக இருப்பான். சூரியன் சுக்கிரன் ஆகிய இருவரும் ஒன்பதாம் தானத்தில் இருக்கப் பிறந்தவன் பொன்னைத் தேடி வாழ்வான் என்றவாறு.

## இதுவுமது

*சந்திரன் செவ்வாய்ப் புந்தி தன்னொடு தந்தை தானம்*
*வந்திடப் பிறந்த பிள்ளை மனதுக்கு சலவா னாமே*
*அந்தணன் செவ்வாய்த் திங்க ளாகவே தெய்வந் தன்பன்*
*சுந்தர மதிசேய் சுங்கன் தோன்றநற் பெண்டாள் துஞ்சம்.(402)*

**(இ-ள்.)** சந்திரன், செவ்வாய், புதன் ஆகிய மூவரும் ஒன்பதாமிடத்தில் ஒன்று சேர்ந்து இருக்கப் பிறந்த சாதகன் மனம் எந்நேரமும் சஞ்சலத்துடன் இருக்கும். குரு, செவ்வாய், திங்கள் ஆகிய மூன்று கோள்களும் ஒன்பதாம் இடத்தில் ஒன்று

சேர அமரப் பிறந்த சாதகன் தெய்வ பக்தி மிக்கவனாக விளங்குவான். சூரியன், செவ்வாய், சுக்கிரன் ஆகிய மூன்று கோள்களும் ஒருசேர ஒன்பதாம் இடத்தில் நிற்கப் பிறந்த சாதகனின் மனைவி மரணம் அடைவாள் என்றவாறு.

## இதுவுமது

*சந்திரன் சனியன் செவ்வாய்ச் சதிரொடும் பாக்கி யத்தில்*
*வந்திட குருவின் தோடம் வகையினாற் தாயார் சாவாம்*
*அந்தணன் செவ்வாய்ப் புந்தி அவர்களும் நவத்தி லானால்*
*விந்தைசேர் குருவாய் மிக்க விளங்கவே தனவா னாமே. (403)*

(இ-ள்.) சந்திரன், சனி, செவ்வாய் ஆகிய மூவரும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகனுக்குக் குருவின் தோடம் காரணமாகத் தாயார் மரணம் அடைவாள். குரு, செவ்வாய், புதன் இவர்கள் மூவரும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் குருவாகப் புகழோடும் செல்வத்தோடும் விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*சுந்தரச் சுங்கன் புந்தி மதியொடு நவத்தில் தோன்றத்*
*தந்தையா னவனுக் கன்பாய்த் தாரமோ இரண்டாம் என்னப்*
*புந்திசந் திரனும் மந்தன் புகழும்பாக் கியத்தில் ஏற*
*அந்திரப் பாவி யாவான் அல்லது விவாத னாமே. (404)*

(இ-ள்.) சுக்கிரன், புதன், சந்திரனோடு ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் தந்தைக்குப் பிடித்தமான மகனாக விளங்குவான். இரு தாரங்களை மணந்து கொள்வான். புதன், சந்திரன், குளிகன் மூவரும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் பாவச்செயல்களைச் செய்பவனாக இருப்பான் அல்லது விவாதம் செய்பவனாக இருப்பான் என்றவாறு.

## இதுவுமது

*மதியொடு குருவும் சுங்கன் மருவியே நவத்தில் வாழ்ந்தாற்*
*சதிரனும் இராசன் ஆவான் தப்பிதம் இல்லை மின்னே !*
*கதிரொடு நீலன் நன்றாய் கலந்துபாக் கியத்தில் கண்டால்*
*அதிகமாம் நித்திய கன்ம அனுஷ்டானம் அவன்செய் வானே.(405)*

(இ-ள்.) சந்திரன், குரு, சுக்கிரன் ஆகியோர் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் மன்னனாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும். சூரியனும் சனியும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் தினமும் கடைபிடிக்க வேண்டிய ஆசார அனுட்டானங்களை முறைப்படி மேற்கொள்பவனாக இருப்பான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*மந்தனும் சுங்கன் புந்தி மருவிப்பாக் கியத்தில் வாழ*
*மந்திரி யாவான் பூமி பலிதமாய் வளர்நெல் கோட்டை*
*அந்தணன் திங்கள் செவ்வா யாகசத்திரியா ளாவான்*
*புந்திபொன் தனவான் வித்து வான்புக ழாசா ரன்தான். (406)*

(இ-ள்.) சனி, சுக்கிரன், புதன் ஆகிய மூவரும் ஒன்றாகக் கூடி. ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன் மந்திரியாவான். அவனுக்குப் பூமியால் இலாபம் உண்டாகும். நெல் முதலான தானியம் விளையும் என்று சொல்லவேண்டும். ஒன்பதாம் இடத்தில் குருவும் சந்திரனும் செவ்வாயும் நிற்கப் பிறந்தவன், வீரனாக விளங்குவான். புதனும், குருவும் ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் செல்வனாகவும், வித்துவானாகவும், ஆசாரவானாகவும் விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

குருபுகர் மதிமால் கூடிக் குணமொடு பாக்கி யத்தில்
வருபொழு திவனே தர்ம ராசனாம் வணங்க லாமே
எரிகதிர் சனிசேய் நல்ல இரணியன் இவர்க ளானால்
தைரியன் சூரன் மிக்கன் சாகசன் தனவான் வீரன். *(407)*

**(இ-ள்.)** குரு, சுக்கிரன், சந்திரன், புதன் ஆகிய நால்வரும் ஒன்றுசேர்ந்து ஒன்பதாம் இடத்தில் இருக்கப் பிறந்த சாதகன், தான தர்மங்கள் அளிக்கக்கூடிய அரசனாகவும், தொழத் தகுந்தவனாகவும் வாழ்வான் என்று சொல்ல வேண்டும். சனி, செவ்வாய் இவர்கள் ஒன்பதாம் இடத்தில் ஒன்றுசேர்ந்து இருக்கப் பிறந்த சாதகர்கள், தைரியவானாகவும், வீரனாகவும் செல்வனாகவும் வாழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## இதுவுமது

சேய்கதிர் புகர்வி யாழன் திரண்டுபாக் கியத்தி லானால்
ஆயநல் குணமும் மிக்கான் அழகுடன் அமர்ந்து வாழ்வான்
தூயஆ றஞ்சு நாலு மூன்றுகோள் கூடித் தோன்ற
பாயவன் இராச கீர்த்தி பரிவொடும் அவன்பண் பானே. *(408)*

**(இ-ள்.)** செவ்வாய், சூரியன், சுக்கிரன், குரு ஆகியோர் சேர்ந்து ஒன்பதாம் இடத்தில் அமரப் பிறந்த சாதகன், அழகுமிக்கவனாகவும், நற்குணங்கள் உடையவனாகவும் விளங்குவான் என்று கூறவேண்டும். இலக்கனத்திற்கு ஆறாமிடத்திற்கு அதிபதி, ஐந்தாமிடத்திற்கு அதிபதி, நான்காம் இடத்திற்கு அதிபதி ஆகிய மூன்று கோள்களும் ஒன்று சேர்ந்து ஒன்பதாம் இடத்தில் அமரப் பிறந்தவன், அரசனாகவும் புகழுடையவனாகவும் பிறரிடத்தில் அன்புடையவனாகவும் சிறந்த பண்பாளனாகவும் விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## இகழ்ச்சியுடையவன்

*குருபுதன் பாக்கி யத்தில் கூறிடா திருக்க வல்லால்*
*ஒருவனா கிலுமத் தானம் உண்மையாய்ப் பாரா னாகில்*
*வருகுணம் வியாதி காந்தி இல்லையாம் மனிதர்க் கெல்லாம்*
*தெருவிலே எறிந்து போட்ட கல்லெனத் தெரிந்து பாரே. (409)*

**(இ-ள்.)** குருவும், புதனும் ஒன்பதாம் இடத்தில் இருக்க, அத்தானத்தை வேறு எந்தக் கிரகமும் பார்க்கவில்லை என்றால், அச்சாதகனுக்கென்று குணமோ அழகோ இருக்காது. வியாதியும் வராது. தெருவில் எறிந்த கல்லைப் போன்று பிறரால் மதிக்கப்படுவார்கள் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## பாக்கியமற்றவன்

*பாக்கியத் ததிபன் ஆறில் பன்னிரண் டெட்டி லாகத்*
*தீர்க்கசத் துருநீ சக்கோள் திருட்டியாய்ப் பார்க்கப் பட்டால்*
*போக்கிடும் பொல்லா அங்கிசம் பொருந்தியே நீச ராசித்*
*தாக்கிடப் பிறந்த பிள்ளைச் சற்றும் பாக்கியமே இல்லான். (410)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் பகை நீசக் கிரகங்கள் பார்க்க, அல்லது தீய நவாம்சங்களில் ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி நிற்க, அல்லது நீச இராசியில் பொருத்தி நிற்கப் பிறந்த சாதகன் சிறிதளவும் பாக்கியங்கள் இல்லாதவான விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## பாக்கியவான்

*நவமதுக் குடையா னோடு நற்சுபர் கூடப் பார்க்கத்*
*தவமொரு நற்கோள் தானும் சார்ந்திடப் பார்த்து நின்றாற்*
*சிவரூப பத்தி கீர்த்தித் திரவியன் பாக்கி யத்தான்*
*நவமதில் மால்பொன் கூடில் நாடஐஸ் வரிய வானாம். (411)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியோடு, சுபக்கோள்கள் சேர்ந்து அமர்ந்திருக்க அல்லது பார்த்திருக்க, அல்லது ஒன்பதாம் இடத்தில் நற்கோள்கள் இருக்க, அவற்றை நற்கோள்கள் பார்த்து நின்றால், சிவன் மீதி பக்தி கொண்டவனாகவும் புகழுடையவனாகவும் மிகுந்த செல்வமுடையவனாகவும், பாக்கியவானாகவும் விளங்கு வான். ஒன்பதாம் இடத்தில் குருவும் புதனும் சேர்ந்திருப்பின் மிகுந்த செல்வமுடையவனாகவும் விளங்குவான்.

## கொடையாளி

*பாக்கியத் ததிபன் சிங்க அங்கிசம் பரிவாய் ஏற*
*தீர்க்கமாய் இலக்கன நாதன் திருட்டியாய்ப் பார்க்க வல்லால்*
*ஆக்கமாய்க் கரும நாதன் அறிவுடன் தானும் பார்த்தால்*
*ஊக்கமாய் மகாதா னங்கள் செய்குவான் உண்மை தானே. (412)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, சிங்கனாங்கிசம் ஏறி இருக்க, அக்கோளை இலக்கனாதிபதி பார்க்க அல்லது பத்தாம் இடத்திற்கு அதிபதி, சிங்கனாங்கிசம் ஏறியுள்ள ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியைப் பார்க்கப் பிறந்த சாதகன் பெரிய பெரிய தானங்கள் பலவற்றையும் செய்வான் என்று கூறவேண்டும்.

## ஆசாரவான், தர்மவான்

*நவமதுக் குடையோன் கோபு ராங்கிசம் நன்றாய் ஏறத்*
*தவமிகுங் கர்ம நாதன் தயையிடு இலக்கன நாதன்*
*இவர்களால் பார்க்க நல்ல எழில்குலத் ததிலே வந்து*
*அவனியில் புரோகி தங்கள் தானமும் பொருந்தச்*
*செய்வான். (413)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி கோபு ராங்கிசத்தில் ஏறி இருக்க, பத்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி ஆகியோரால் பார்க்கப்பட அந்தணர் குலத்தில் தோன்றி சமயச்சடங்குகளைச் செய்வதோடு, பலருக்கும் தானதர்மங்களைச் செய்பவனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## தந்தை, குருவிற்குப் பிரியமானவர்கள்

குருநவ மீதில் வாழ அன்னவர்க் குளந வாம்சத்
தருகனெச் சுபர்கள் பார்க்க ஐயனுக் கன்ப னாவான்
வருசுபன் நவத்தில் பொன்னன் வர்க்கமாய் நவத்திற்
கோளன்
வருகவே குருந வாங்கிசம் ஊறிடக் குருவின் பண்பாம். *(414)*

**(இ-ள்.)** குரு ஒன்பதாம் இடத்தில் ஏறி இருக்க, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி உள்ள நவாம்சத்திற்கு அதிபனைச் சுபர்கள் நோக்கப் பிறந்த சாதகன் தந்தைக்குப் பிரியமான மகனாக விளங்குவான். சுபக்கோள்கள் ஒன்பதாம் இடத்தில் இருக்க, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி குருவர்க்கமாக இருக்க, அல்லது குருவின் நவாம்சத்தில் ஏறி இருக்கப் பிறந்த சாதகன் குருவிற்குப் பிடித்த மகனாக இருப்பான் என்று சொல்லவேண்டும்.

## நல்லவன் தர்மவான்

புந்திசுக் கிரன்வி யாழன் பொருந்திய நவத்திற் போக
அந்தபாக் கியத்தின் நாதன் அறிவொடு பார்க்க நல்லன்
விந்தையாற் சுபக்கிர கங்கள் மத்தியில் விளங்க அன்னோன்
வந்தநாள் முதலாய்த் தர்ம வானென மகிழ்ந்து
வாழ்வான். *(415)*

**(இ-ள்.)** புதன், சுக்கிரன், குரு ஆகிய மூன்று கோள்களும் ஒன்பதாம் இடத்தில் அமர, அந்த ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி இம்மூவரையும் பார்க்க அவன் நல்லவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும். ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, சுபக்கோள்கள் அமைந்த இராசிகளுக்கு இடையில் இருக்க, அவன் பிறந்த நாள் முதல் தர்மவானாக, மகிழ்ச்சியுடன் வாழ்பவனாக விளங்குவான் என்றவாறு.

## தீயவாக்கு, தரித்திரன்

பாக்கியத் ததிலே பாவர் பதிந்திடப் பாக்கி யத்தோன்
தீர்க்கமாய் பாவ ரோடு சேர்ந்திடத் திரிந்து வாழும்
ஆக்கமாய்ப் பாவர் சட்டி அங்கிசம் ஏறி ஆண்டால்
வாக்கினில் தீய சொல்லும் வருதனம் இல்லா
வாழ்வான். (416)

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தில் பாவர்கள் நிற்க, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியுடன் பாவக்கோள்கள் சேர்ந்திருக்கப் பிறந்த சாதகன் பல இடங்களிலும் திரிந்து வாழ்வான். ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி பாவருடைய சட்டியாங்கிசத்தில் ஏறி இருக்கப் பிறந்த சாதகன் தீயவற்றைப் பேசக்கூடியவனாகவும் தரித்திரனாகவும் வாழ்வான் என்றவாறு.

## தர்மவான்

நவமதிற் குடைய கோளந் நற்பல வானாய் நண்ணத்
தவமிரு கேந்திர கோணம் தன்னிலே இருந்து வாழ
இவரலாற் சன்மக் கோட்கள் இயல்புஇலக் கனத்தைப் பார்க்க
தவசியாய் ஞானி யாகித் தவங்களாய்த் தன்ம வானாம். (417)

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி பலமாக இருக்க, கேந்திர, திரிகோண தானங்களில் இருக்க, இலக்கனாதிபதி இலக்கனத்தைப் பார்க்க, ஞானியாகி தவங்கள் செய்து தர்மவானாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## தந்தைக்கு உதவாத பிள்ளை

பாக்கியத் ததிலே எல்லாக் கிரகமும் பதிந்து வாழ
ஆக்கமாம் திரவி யம்பொன் அநேகமே உண்டாம் என்ன
தீர்க்கமாய் நவத்தோன் வெய்யோன் திருந்தஆ றெட்ட ராறில்
ஊக்கமாய்ப் பாவர் பார்க்கத் தந்தைக்கே உதவான் என்றே. (418)

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தில் அனைத்துக் கிரகங்களும் நிற்க, (இராகு கேது நீங்கலாக) செல்வம் அச்சாதகனிடத்தில் மிகுதியாக இருக்கும். ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, சூரியன் இவர்கள் இருவரும் ஆறு, எட்டு, பன்னிரெண்டு ஆகிய இடங்களில் நிற்க, இவர்களைப் பாவர் பார்க்கப் பிறந்த சாதகன் தந்தைக்கு உதவாத பிள்ளையாக இருப்பான் என்றவாறு.

*கதிரவன் பாக்கி யத்துக் கதிபனும் கறுத்த னோடும்*
*பதியவே கேந்திர கோணம் பதிவுடன் இருந்து வாழ்வான்*
*இதுவலால் அஞ்சொன் பானில் எழில்சுபர் இருக்கப் பார்க்க*
*அதிசய மாகத் தந்தை அந்திய முகத்துக் காவான். (419)*

(இ-ள்.) சூரியனும் ஒன்பதாம் இடத்திற்கு அதிபனும் சனியோடு கூடி கேந்திர திரிகோண இராசிகளில் பிறந்த சாதகன், சிறப்புடன் வாழ்வான். ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகியவற்றில் சுபக்கோள்கள் இருக்க அல்லது இவ்விடங்களைச் சுபக்கோள்கள் பார்க்கப் பிறந்த சாதகன், தந்தையின் மரண காலத்தில் அருகில் இருக்கமாட்டான் என்றவாறு.

## தந்தை மரணம்

*அம்புலி சுங்கன் நாலுக் கடைவாய்ரா சி★யிலி ருக்க*
*நம்பிஆ றெட்டீ ராறில் நாடியே இருந்து வாழ்ந்தால்*
*தம்பியைப் பெற்றுத் தந்தை தரணியில் இருந்து வாழ்நாள்*
*வெம்பியே எமகண் டங்கள் விளைந்திட மரண மாவான். (420)*

(இ-ள்.) சந்திரன், சுக்கிரன் ஆகிய இரண்டு கோள்களும் இலக்கனத்திற்கு நான்காம் இராசியில் இருப்பினும் ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருப்பினும் பிறந்த சாதகனின் தந்தை, இவன் பிறந்த உடனேயே மரணம் அடைந்துவிடுவான் என்று சொல்ல வேண்டும்.

---

* "நாலுக் கடைவாய் ராசி" என்பதன் பொருள் விளங்கவில்லை.

## தகப்பனுக்கு முன் தனயன் மரணம்

பாக்கியத் ததிபன் ஐந்தில் பதியகேந் திரத்திரி கோணம்
தாக்கிடச் சுபருங் கூடிச் சார்ந்திட அல்லாற் பார்க்க
ஆக்கமாம் தகப்பன் வாழ்வன் அந்திய மரண காலம்
போக்கிடும் பதற்கா லத்தில் என்பதைப் பொருந்தப் பாரே. *(421)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாமிடத்தில் அமர அல்லது கேந்திர, திரிகோண இராசிகளில் சுபர்களுடன் சேர்ந்து அமர அல்லது சுபர்களால் பார்க்கப்படப் பிறந்த சாதகனின் மரண காலத்தில் அவனுடைய தகப்பன் வாழ்வான் என்றவாறு.

## ஆறு சாத்திரங்கள் கற்றவன்

நவமதுக் குடையகோளன் நற்பல னாக வாழ
அவருடன் சுபரும் கூட அல்லது சுபரே பார்க்கத்
தவஞ்செய் ஆதி யான சாத்திர தியான மெல்லாம்
இவனிட மாக வாழும் என்றனர் நூல்வல் லோரே. *(422)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, பலம் பெற்று இருக்க, அக்கோள்களுடன் சுபக்கோள் ஒன்று சேர, அல்லது அக்கோளைச் சுபக்கோள் பார்க்கப் பிறந்த சாதகன், தவம் செய்பவனாகவும் சாத்திரத்தில் வல்லவனாகவும் தியானம் செய்யக் கூடியவனாகவும் இருப்பான் என்று சோதிடக் கலையில் வல்லவர்கள் கூறியுள்ளார்கள் என்றவாறு.

## வேதாந்தி

பத்தினுக் குடையோ னாலும் பாக்கியத் ததிப னாலும்
மத்திய தேவ லோக அங்கிசம் மருவி வாழப்
புந்தியாம் புதனும் நன்றாய்ப் பொருந்திய பர்வ தாங்சம்
ஒத்துடன் வேதாந் தங்கள் தன்னையே விளங்கப்
பார்ப்பான். *(423)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி அல்லது ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி தேவலோகாங்கிசத்தில் ஏறி இருக்க, புதனும் பர்வதாங்கிசத்தில் பொருந்தி இருக்கப் பிறந்த சாதகன் வேதாந்தங்களில் சிறந்து விளங்கி, தன்னைத்தான் உணர்ந்து கொள்ள முயல்வான் என்றவாறு.

## *தர்மவான்*

*பாக்கியத் ததிப னோடே பரிவுடன் வியாழன் கூட*
*வாக்குடன் பர்வ தாங்சம் மருவியே ஏறி வாழ*
*ஊக்கஇலக் கனத்துக் கோளை உண்மையாய் வியாழன் பார்க்க*
*ஆக்கமாம் மகாதா னங்கள் அவனளித் திடுவான் என்றே. (424)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியுடன் குரு சேர்ந்திருக்க, பர்வதாங்சம் ஏறி இருக்க, இலக்கனாதி பதியை வியாழன் பார்க்கப் பிறந்த சாதகன் பெரிய தானங்களையெல்லாம் செய்யக்கூடிய தர்மவானாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

ஒன்பதாம் பாவம் முற்றும்.



# பத்தாம் பாவம்

## *பொது*

பத்தினில் பலன்வியா பாரம் சீவனம் பகரும் கீர்த்தி
வித்தையாக் கினைவே ளாண்மை மிகுந்தஆ கமஞானங்கள்
நித்திரை கர்மம மானம் பூஷணம் நிதியோ டெல்லாம்
கொத்தவன் கதிர்மால் நீலன் குருவையும் பேணிப் பாரே. *(425)*

(இ-ள்.) வியாபாரம், சீவனம், புகழ், வித்தை, வேளாண்மை, ஆகம ஞானம், உறக்கம், தொழில், மானம், வெகுமதி, செல்வம் இவற்றை எல்லாம் பத்தாம் இடத்தைக் கொண்டும் சூரியன், புதன், சனி, குருவைக்கொண்டும் கூற வேண்டும் என்றவாறு.

## *ஆசாரவான்*

முந்தின சொன்ன சேதி மொழிவது பத்தில் பார்க்க
வந்திடும் கர்மக் கோளன் வரும்பல வீன மாகச்
சிந்தைசஞ் சலவா னாகும் செய்தொழில் ஆசா ரங்கள்
சொந்தமாய் அவனி டத்திற் தோன்றிடும் வகையைச்
சொல்லே. *(426)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி பலவீனமாக இருக்க, சாதகன் மனசஞ்சலம் உடையவனாக இருப்பான். செய்தொழிலில் திறமை உடையவனாகவும் ஆசாரங்களைக் கடைபிடிப்பவனாகவும் விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## *காசி யாத்திரைக்குச் செல்பவன்*

குருபுகர் கதிர்மால் இன்னோர் குணபல வீன மாக
ஒருபன்னி ரண்டில் ஆறில் எட்டினில் ஏறி நின்றால்
வருவது பொல்லாக் கன்மம் வழங்குவன் பத்தில் இராகு
எரிகதிர்க் கூடக் காசி யாத்திரை இவனே போவான். *(427)*

(இ-ள்.) குரு, சுக்கிரன், சூரியன், புதன் ஆகியோர் பலவீனமாக ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் ஏறி நின்றால், அச்சாதகன் தீயதொழிலைச் செய்பவனாக விளங்குவான். பத்தாம் இடத்தில் இராகு அல்லது சூரியன் இருக்க, இவன் காசியாத்திரைக்குச் செல்வான்.

## *கங்கையில் நீராடுபவன்*

*மீனமாய்த் தானம் பத்தாய் விளங்கிடு மதியாய் மோட்சம்*
*தானவன் சுங்க னோடும் கூடியே உச்சம் சார்ந்து*
*ஆனகேந் திரத்தில் ஏற அவன்கங்கா ஸ்நான மாடப்*
*போனவன் என்று பிள்ளைப் பூமியில் வருநாள் பேசே. (428)*

(இ-ள்.) பத்தாம் இடம் மீன இராசியாய் இருக்க, அதில் சந்திரன் இருக்க, மோட்சம் அடைவான். மீன இராசி பத்தாம் இடமாக இருந்து, சந்திரனுடன், சுக்கிரனும் உச்சம் பெற்றுக் கேந்திர திரிகோண தானங்களில் இருக்க, அவன் கங்கைக்குச் சென்று நீராடுவான் என்று சொல்ல வேண்டும்.

## *காசி யாத்திரைக்குச் செல்பவன்*

*வியமதில் மாலாய் அந்த வியபதி உச்சம் மாகில்*
*நயமுடன் புதனைப் பார்க்க நல்லபுண் ணியங்கள்*
*செய்வான்*
*தயவொடு பத்தில் பூர்ணச் சந்திரன் இருந்து வாழ்ந்தால்*
*அயனிட்ட அதிகா ரத்தால் அவனுங்கா சிக்கே*
*போவான். (429)*

(இ-ள்.) பன்னிரண்டாம் இடம் புதன் வீடாக அல்லது புதனுக்கு உச்சவீடாக இருக்க, அதனைப் புதன் நோக்க, நல்ல புண்ணியங்கள் செய்பவனாக விளங்குவான். பத்தாம் இடத்தில் பூரணச் சந்திரன் இருந்தால், அவன் காசி யாத்திரைக்குச் செல்லுவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## யாகம் செய்பவன்

பாவர்கள் பலவா னாகப் பத்தியில் சாக சங்கள்
சீவர்கள் பலவீ னங்கள் திருந்தநற் கரு மம் செய்யான்
கோவமில் பத்தில் கோளன் குருபுதன் இவரைக் கொண்டு
ஆவதே யாகம் கன்மம் அளிக்கச்சிந் திக்க லாமே. (430)

(இ-ள்.) பாவக்கோள்கள் பலவானாக பத்தாம் இடத்தில் இருக்க, சாகசங்கள் செய்பவனாக இருப்பான். பத்தாம் இடத்திற்கு அதிபதி, குரு, புதன் இவர்களைக்கொண்டு யாகம், கர்மம் ஆகியவற்றைக் கூறவேண்டும் என்றவாறு.

## இதுவுமது

பத்தினுக் குடையோன் லக்ன நாதனும் பதிந்தே காதி
பத்திய மாகத் தானே பணமுண்டாய்ப் பண்ணும் யாகம்
ஒத்தகன் மத்தோன் லக்கன நாதனும் ஒளிவாய வெய்யோன்
முத்தவே ளாண்மை பொன்னால் யாகங்கள் முடிப்பன்
என்றே.(431)

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதியும் இலக்கனாதிபதியும் ஒரே ஆதிபத்திய வீடுகளில் இருப்பின், பணம் மிகுதியும் சம்பாதித்து, யாகங்கள் பல செய்வான். பத்தாம் இடத்திற்கு அதிபதியும் இலக்கனாதிபதியும் மறைவு தானங்களில் சூரியனுடன் இருக்க, வேளாண்மையில் சிறந்து, பொருள் சம்பாதித்து யாகங்கள் பலவற்றையும் செய்வான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

பத்திர மாக இக்கோள் பதிந்திட அரவும் தீண்டக்
குத்திரத் தொழிலின் பொன்னாற் கொண்டவன் யாகம்
பண்ணும்
உத்தம வியாழன் கூடில் உயர்ந்தரா சாக்கள் கையால்
மெத்தவே திரவி யங்கள் வேண்டியே யாகம்
செய்வான்.(432)

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி இராகு அல்லது கேதுவுடன் சேர்ந்திருக்க, இழிவானவர்களிடம் இருந்து பொருளைப் பெற்று யாகம் செய்வனாக இச்சாதகன் விளங்குவான். பத்தாம் இடத்திற்கு அதிபதியுடன் குரு ஒன்று கூடி இருக்க, இச்சாதகன் மன்னர்களிடம் இருந்து பொருளைப் பெற்று யாகம் செய்பவனாக விளங்குவான்.

## இதுவுமது

பத்தினுக் குடையோன் ஏழின் பதியனும் ஒன்றாய்க் கூடிச்
சொத்திரி திரவி யத்தாற் சுகமொடு யாகம் துய்ப்பான்
வித்தகன் புந்தி சுங்கன் விளக்கிய இராசிக் கன்னோன்
ஒத்துடன் நோக்க யாகம் உண்டெனும் ஓர்ஜம் பொன்னால். *(433)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதியும் ஏழாம் இடத்திற்கு அதிபதியும் ஒன்றுசேர, பெண்களிடமிருந்து பொருள் பெற்று யாகங்கள் பலவற்றைச் செய்வான். புதன், சுக்கிரன் நிற்கின்ற இராசிக்கு அதிபதிகள் இவர்களை நோக்க, பொன்னைச் செலவு செய்து யாகம் செய்வான் என்றவாறு.

## இதுவுமது

சந்திரன் தனக்குப் பத்தாம் இடம்சுபர் சதிராய் வாழ
உந்திய உச்ச வர்க்கம் உண்டென வியாழன் கூட
சிந்தையால் வியாழன் பார்க்கச் செய்பவன் யாக மெல்லாம்
வந்தவன் அநேகம் கீர்த்தி வழங்கிடும் மகிப னாமே. *(434)*

(இ-ள்.) இராசிக்குப் பத்தாம் இடத்தில் சுபக்கோள் சிறப்புடன் உச்சம் பெற்று, அதனுடன் குரு சேர்ந்து இருக்க அல்லது அக்கோளை குரு பார்க்க, யாகம் செய்வன். பெரும்புகழ் உடையவனாக சாதகன் விளங்குவான். மேலும், பொருளை வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்வான்.

### அன்னதானம் செய்பவன்

புதன்குரு சுங்கன் இந்தப் புண்ணியர் இருக்கும் இராசிக்
கதிபன்ஆ றெட்டீ ராறில் ஆய்விட நல்ல கன்மம்
விதமுடந் பண்ணி யந்த விதங்களாய்க் கீர்த்தி யாகிப்
பதியும்லட் சுமியாள் அன்னம் பாரிசம் படரு வானே. *(435)*

**(இ-ள்.)** புதன், குரு, சுக்கிரன் ஆகிய சுபர்கள் இருக்கும் இராசிகளுக்கு அதிபன் ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருக்க, சாதகன் நற்செயல்கள் பலவற்றையும் செய்து அதனால் பெரும்புகழடைந்து, பெருஞ் செல்வங்களைச் சேர்ப்பான். பிறருக்கு அன்னதானம் செய்யும் வள்ளலாக விளங்குவான்.

### யாகங்கள் செய்பவன்

குருபுதன் பத்திற் கோளன் கூடியே பலவா னாகச்
சருவுடன் யாக மான சற்கருமம் முழுதும் உய்ப்பான்
இருவரும் தானக் கோளன் இவர்களிற் சுபராய்ப் பார்க்க
வருவதே அதிக யாகம் வகையினில் வாசி யோகம். *(436)*

**(இ-ள்.)** குரு, புதன், பத்தாம் இடத்திற்கு அதிபதி இவர்கள் மூவரும் ஒன்றுகூடி பலம்பெற்று விளங்க, நற்கர்மங்கள் அனைத்தையும் செய்பவனாக இருப்பான். குரு, புதன், பத்தாம் இடத்திற்கு அதிபதியுடன் நற்கோள் சேர அல்லது சுபக்கோள் பார்க்க, அதிக யாகங்கள் செய்பவனாக விளங்குவான்.

### தானங்கள் செய்பவன்

கன்மத்தான் சுபராய்க் கன்மம் கண்டிடப் புதனும் கூட
வன்மத்தால் இராகு தானும் மருவிடக் கூடி வாழ்ந்தால்
தன்மத்தாற் பழைய கோயிற் கோபுரம் தண்ணீர்ப் பந்தல்
இன்மத்தால் அழிதோப் பெல்லாம் அக்கமா யினல்வா
யாகம். *(437)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்திற்கு அதிபதி சுபக்கோளாகக் கர்மத்தானமா பத்தாமிடத்தைப் பார்க்க, புதனும் இராகுவும் சேர்ந்து இருந்தால், பழைய கோயில்,கோபுரம் இவற்றைப் புதுப்பித்து கும்பாபிசேகம் செய்து முடிப்பான். தண்ணீர்ப் பந்தல் அமைப்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## *பலர் போற்ற வாழ்பவன்*

புதனுச்ச மாகிக் கேதும் தன்னொடு பொருந்த வல்லாய்
இதமுடன் நவத்தில் கூட இணங்கியப் பத்தின் கோளும்
பதமுடன் இவர்கள் கூடிப் பதிந்திடப் பிறந்த பிள்ளை
விதம்வித மான யாகம் யாவையும் விழைப்பா னாமே. *(438)*

**(இ-ள்.)** புதன் உச்சம் பெற்று கேதுவுடன் சேர்ந்து இருக்க, அல்லது ஒன்பதாம் இடத்தில் இருக்க, பத்தாம் அதிபதியுடன் இவர்கள் கூடி ஒன்பதாம் இடத்தில் இருக்க, அச்சாதகன் யாகங்கள் பலவற்றையும் செய்வதோடு, பலரும் போற்றும் செயல்களைச் செய்பவனாகத் திகழ்வான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *யாகம் செய்பவனும், செய்யாதவனும்*

அதியுச்ச மாகப் பத்துக் கதிபனோ டழகாய்ப் புந்தி
மதியுடன் ஏழிற் கூடி வாழநிச் சயமாய் யாகன்
புதனுடன் இராகு கூடிப் பொருந்தியே பத்தி லானால்
இதமுடன் நல்ல கன்மம் இணங்கிடான் தூஷிப் பானே. *(439)*

**(இ-ள்.)** புதன் அதியுச்சம் பெற்று, பத்தாம் இடத்திற்கு அதிபதியுடனும் சந்திரனுடனும் கூடி இருக்க, அச்சாதகன் யாகம் செய்வது நிச்சயம். புதன், இராகுவுடன் ஒன்றுகூடி பத்தாம் இடத்தில் இருப்பின், சமயச்சடங்குகளைச் செய்யவிடாமல் அவமதிப்பான் என்று சொல்ல வேண்டும்.

### *யாகங்கள் செய்யாதவன்*

*பத்தினுக் குடையோன் ஆறில் எட்டினில பன்னி ரண்டில்*
*முத்திட விரோத கன்மம் ஒழியவும் என்ன லாகும்*
*உத்தம பத்துக் கோளன் உடன்புதன் இராகு கூடில்*
*ஒத்திடக் கன்மத் தேக உயர்ந்தயா கமும்செய் யானே. (440)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்திற்கு அதிபதி, ஆறாமிடம், எட்டாமிடம் பன்னிரண்டாம் இடம் ஆகியவற்றில் பகையுடன் நிற்க சமயச் சடங்குகளுக்கு இடையூறு விளைவிப்பவனாக விளங்குவான். பத்தாம் இடத்திற்கு அதிபதியுடன் புதன், இராகு இவர்கள் கூடி பத்தாம் இடத்தில் இருந்தால், யாகங்களைச் செய்யாதவனாக இருப்பான்.

### *ஆசாரவான்*

*நவமதில் பத்தின் கோளன் நாடிடப் பாக்கி யத்தோன்*
*தவகுரு இலக்க னாதன் தன்னொடு கன்மக் கோளும்*
*இவர்களும் பலவா னாக இருந்திடக் குணவான் கன்மன்*
*பவமிலா சார கன்மம் விதியொடும் பண்ணு வானே. (441)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்தில் அல்லது பத்தாமிடத்தில் நற்கோள்கள் இருக்க, ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, பத்தாம் இடத்திற்கு அதிபதி, குரு, இலக்கனநாதன் இவர்களுடன் பலவான்களாக விளங்க, நற்குணங்களை உடையவனாகவும் நற்செயல்களைப் புரிபவனாகவும் இருப்பான். மேலும் ஆசாரவானாகவும் பிறரால் வணங்கப்படுபவனாகவும் திகழ்வான் என்று சொல்ல வேண்டும்.

### *யாகங்கள் செய்பவன்*

*பாக்கியத் தான மேழம் பத்துடன் அஞ்சும் லக்கனம்*
*ஆக்கமாம் இந்த இராசித் தனில்சுபர் இருக்கப் பார்க்க*
*வாக்கொடும் அந்த இராசிக் குடையவன் பலமாய்*
*வாழ்ந்தால்*
*தீர்க்கமாய்ச் சுக்கிர தத்து லங்களும் சிக்கான் யாகன். (442)*

**(இ-ள்.)** பத்தாமிடம் ஒன்பதாமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம், இலக்கனம் ஆகிய இந்த இராசிகளில் சுபர்கள் இருக்க, அல்லது இவ்விடங்களைச் சுபர்கள் பார்க்க, இந்த இராசிகளுக்கு அதிபதிகள் பலம்பெற்று இருப்பின், யாகங்கள் செய்பவனாகத் திகழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## *வித்துவான்*

*பாக்கியத் ததிபன் பத்துக் குடையவன் லக்கன நாதன்*
*ஊக்கமாம் வியாழன் புந்தி உடைதிசை அபகா ரத்தில்*
*ஆக்கமாய் சற்கன் மங்கள் ஆசாரம் ஞானம் யாகம்*
*தீர்க்கமாய்வித்தை யெல்லாம் இட்டமாய் லபிக்கும்*
*தானே. (443)*

**(இ-ள்.)** ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, பத்தாம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி ஆகிய இவர்களோடு வியாழன், புந்தி ஆகிய நற்கோள்கள் இருக்க, அவற்றின் திசை, புத்திகளில் அச்சாதகங்கள் நற்செயல்கள் பலவற்றையும் செய்வான். ஆசாரவானாகவும் ஞானம் நிறைந்தவனாகவும் யாகங்கள் செய்பவனாகவும் விளங்குவான். அவன் செய்யும் தொழில்கள் அனைத்தையும் சிறப்பாக முடிப்பான் என்று சொல்ல வேண்டும்.

## *தானம் செய்பவன்*

*சந்திரன் தனக்கு மூன்றாம் தானமே சலரா சிக்கு*
*எந்ததன் மங்க ளாலே வசித்தது விழுந்து போனால்*
*அந்தசத் திரங்கள் தன்னை அன்புடன் புதிதாய்க் கட்டி*
*வந்தபேர் தனக்கு வேண்டும் பொருளெலாம் தானம்*
*செய்வான். (444)*

**(இ-ள்.)** சந்திரனுக்கு மூன்றாமிடம் சல இராசியாக இருக்கப் பிறந்த சாதகன், தர்மங்கள் நிறைந்து விளங்கிய இடிந்த சத்திரங்கள் முதலானவற்றைப் புதுப்பித்துக் கட்டி தன்னிடம் தர்மம் என்று வந்தவர்களுக்கு எல்லாம் வேண்டிய பொருளைத் தானமாக வழங்குவான் என்று கூற வேண்டும்.

## ஆறு சாத்திரங்களைக் கற்றவன்

பத்தினுக் குடையோன் கோபு ராங்கிசம் பதிவாய் ஏற
மெத்தநற் குளமும் வாவி கிணறுடன் வெட்டி வைப்பான்
ஒத்தநற் கன்மத் தானம் உயர்நவ ராசிக் கோட்கள்
மத்தரும் பலமாய் ஆறு சாத்திரம் வகையாய்ச்
சொல்வான். (445)

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி கோபுராங்கிசம் பெற்றிருப்பின், குளம், பொய்கை, கிணறு முதலானவற்றை வெட்டிவைப்பான். பத்தாம் இடத்தில் நற்கோள்கள் வலிமையுடன் இருந்தால் ஆறு சாத்திரங்களையும் முறைப்படி கற்றவனாக விளங்குவான் என்றவாறு.

## தவசி

ஐந்துகோள் நாலு கோட்கள் அமர்ந்தொன்றாய்க் கூடி கேந்திர
உந்திடத் திரிகோ ணத்தில் உயர்பல னாகி வாழ்ந்தால்
புந்திசந் திரன்வி யாழன் புகர்கதிர் சேய்பி லக்கில்
சந்தன வானப் பிரத்தன் அல்லது தவசி யாவான். (446)

(இ-ள்.) ஐந்து கோள்கள் அல்லது ஆறுகோள்கள் ஒன்றாகக் கூடி கேந்திர திரிகோண தானங்களில் பலவானாக இருக்க, புதன், சந்திரன், வியாழன், சுக்கிரன், சூரியன், செவ்வாய் இவர்கள் பலம் பெற்று விளங்க, அச்சாதகன், காட்டில் திரிபவனாகவும் அல்லது தவசியாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## மன்னரால் போற்றப்படுபவன்

ஒருத்திடும் சாத கர்க்கு உறுபலன் சொன்ன தல்லால்
விருத்தனாய் மலைகள் தன்னில் விரும்புவான் குகைசஞ்
சாரம்
தரித்துலோ கத்திற் பிட்சை சந்நியாசி யோகம் தானே
பெருத்தஞா னங்கள் மர்மம் பெரியவன் ராச போகன். (447)

(இ-ள்.) இச்சாதகன் மலைகளைச் சுற்றுதலையும் குகைகளில் வசிப்பதையும் விரும்புவான், துறவி கோலம் பூண்டு, பிட்சை ஏற்று உண்ணுபவனாக வாழ்வான். மிகுந்த ஞானம் உடையவனாகவும் பிறருக்குப் புரியாத தனித்தன்மை உடையவனாகவும், மன்னரால் போற்றப்படுபவனுமாக இருப்பான்.

### ஆசாரம் கடைபிடியாதவன்

*பத்தினில் மூன்றில் கோட்கள் பரிவுடன் உச்ச வர்க்கம்*
*ஒத்துடன் கன்மக் கோட்கள் உயர்பல மாய்ச்சந்நி யாசி*
*ஒத்துபத் ததிப னுக்கே உயர்பல வீன மானால்*
*கத்துமா சாரம் இல்லா தென்னவும் சாற்ற லாமே. (448)*

(இ-ள்.) பத்தாம் இடத்தில், மூன்றாம் இடத்தில் உள்ள கோட்கள் உச்சம் பெற்று விளங்க, பத்தாம் இடத்திற்கு அதிபதி, மூன்றாம் இடத்திற்கு அதிபதி ஆகியோர் வலிமையுடன் விளங்க துறவியாக வாழ்வான் என்றவாறு. பத்தாம் இடத்திற்கு அதிபதி பலவீனமாக இருப்பின், அவன் ஆசாரத்தைக் கடைபிடியாது வாழ்பவனாக விளங்குவான்.

### நடத்தைக் கெட்டவன்

*ஆக்கமாய்ப் பத்தின் கோளன் அருள்பல ஈன மாகி*
*வாக்கினுக் குடையோன் ஏழில் மன்னவர் இவர்க ளோடு*
*தாக்கிடச் சந்நி யாசி தப்பிதம் இல்லை இன்னோர்*
*பாக்கியத் திரிகள் கைம்பெண் தன்னொடும் பரிவாய்க்*
*கூடும். (449)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி பலகீனமாக இருக்க, இரண்டாம் இடத்திற்கு அதிபதி, ஏழாமிடத்திற்கு அதிபதி இவர்களோடு துறவிக்குரிய யோகங்களைச் செய்பவனாக இருப்பான். ஆயினும் சிற்றின்பத்தில் மனதைச் செலுத்தி, பெண்களிடமும் விதவைகளிடமும் உறவு கொள்பவனாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும்.

## துறவி

சூரியன் சனிசெவ் வாயும் தொடரவே இரண்டின் கோளும்
காரிய வைந்தின் நாதன் தன்னொடும் கலந்து நின்றால்
வீரியம் தன்னை நீக்கி வெறுத்துச்சந் நியாசி யாவான்
சீரியத் திரியாம் கைம்பெண் தன்னையும் தீண்டான்
என்னே. (450)

(இ-ள்.) சூரியன், சனி, செவ்வாய் இவர்களோடு இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் ஐந்தாம் இடத்திற்கு அதிபதியும் சேர்ந்து நின்றால், இவ்வுலகப் பற்று அனைத்தையும் வெறுத்து நீக்கி, துறவியாக விளங்குவான். சிற்றின்பத்தை நாடாமல் வாழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## யோகியாவான்

ஆதித்தன் சுபர்கள் அம்ச மாயுச்ச வர்க்க மாகிப்
பேதித்த கிரகம் எல்லாம் பின்னையும் கதிரைப் பார்த்தால்
சாதித்த வாலி பத்தில் சந்நியாசி யாகச் சார்ந்துப்
போதித்த ஞான யோகம் பொருந்துப் புண் ணியவா
னாமே. (451)

(இ-ள்.) சூரியன், நற்கோள்களின் அம்சத்தில் உச்ச வர்க்கத்தில் இருக்க, நற்கோள்கள் அச்சூரியனை நோக்க, இளம் வயதிலேயே துறவு மேற்கொண்டு, ஞானம், யோகம் உடைய புண்ணியவானாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## செல்வன்

சுக்கிரசந் திரனும் லக்ன நாதனைத் தொடர்ந்து பார்த்தால்
முக்கியசந் நியாசி பிச்சை திரவியம் விரும்பான் இல்லை
மிக்கவர் உச்ச பாகம் இருந்திட மதியால் பார்க்கத்
தக்கசந்நி யாசி யாவான் அன்றியும் தனவா னாமே. (452)

(இ-ள்.) சுக்கிரன், சந்திரன் ஆகியோர் இலக்கனாதிபதியைப் பார்த்தால், துறவியாகி, பிச்சையேற்று வாழ்வான். செல்வத்தை விரும்பமாட்டான். இவற்றுள் ஒரு கோள்உச்ச அம்சத்தில் இருக்க, அதனைச் சந்திரன் நோக்க,துறவியாவான். இவன் செல்வத்தை உடையவனாக இருப்பான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## துறவி

*சொன்னஇம் மூன்று கோளும் கூடியே சுகமாய் வாழ*
*அன்னவர் தன்னை மெத்தக் கிரகமும் அடவாய்ப் பார்க்கத்*
*தன்னவர் திசையப காரம் தன்னில்சந் நியாசி யாவான்*
*என்னவே உரைத்தார் நூலோர் இயல்பினால் செப்ப*
*லாமே.(453)*

(இ-ள்.) சுக்கிரன், சந்திரன், இலக்கனாதிபதி ஆகிய மூவரும் நட்புடன் ஒன்று சேர்ந்து இருக்க, மற்ற கிரகங்கள் அவர்களை நோக்க, அந்த மூன்று கிரகங்களுடைய திசை, புத்திகளில் துறவியாவான் என்று சோதிட வல்லுநர்கள் கூறியுள்ளார்கள் என்பதைச் சொல்லலாம்.

## இதுவுமது

*சந்திரன் மந்தன் இன்னோர் சார்ந்திடும் இராசி தன்னைப்*
*பந்தலக் கினத்தின் நாதன் பார்க்கத்தீட் சதனாம் மன்னோ!*
*மந்தன்திரே காண ராசி மண்மகன் இருக்கும் ஓரை*
*அந்தத்தா னத்தைக் காரிஅம் புலிபார்க்கச் சந்நி யாசி. (454)*

(இ-ள்.) சந்திரன், சனி ஆகியோர் நின்ற இராசியை இலக்கனாதிபதி பார்க்க, தீட்சிதனாக விளங்குவான், செவ்வாய் இருக்கும் இராசி, சனியின் திரேகாண இராசியாக இருக்க, அந்தத் தானத்தைச் சனியும் சந்திரனும் பார்க்க, அச்சாதகன் துறவியாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

*குருசனி செவ்வாய் இன்னோர் கூடிடும் இராசி தன்னைப்*
*பரிவுடன் நீலன் பார்க்க அல்லது பரிந்து கூட*
*வருநவ மதனில் பொன்னன் வந்திட இராசா அல்லாற்*
*பெரியசந் நியாசி யாவான் என்னநாம் பேச லாமே. (455)*

**(இ-ள்.)** குரு, சனி, செவ்வாய் ஆகியோர் ஒன்றுகூடி இருக்கும் இராசியைச் சனி பார்க்க, அல்லது இந்த மூவருடன் கூடி இருக்க, ஒன்பதாம் இடத்தில் குரு இருக்க, சக்கரவர்த்தியாக இருப்பான் அல்லது துறவியாக இருப்பான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *அரசன்*

*மதிநவ மீதில் வாழ மறந்திடக் கிரகப் பார்வை*
*அதிசய ராச போகம் ஆகியே கோட்கள் வாழ்ந்தால்*
*விதியொடு கன்மம் செய்து விளைந்தீட் சிதனாம் என்ன*
*இதுவல்லால் ராசா வாவர் என்பதை வெளியாய்ச்*
*சொன்னேன். (456)*

**(இ-ள்.)** சந்திரன் ஒன்பதாம் இடத்தில் இருக்க, எந்த கிரகப்பார்வையும் இல்லாமல் இருப்பின் இராசயோகம் உடையவனாக விளங்குவான். சந்திரனோடு நற்கோள்கள் சேர்ந்திருக்க நற்செயல்களைச் செய்து தீட்சிதனாகவும், மன்னனாகவும் இச்சாதகன் விளங்குவான் என்பதை வெளிப்படையாகச் சொன்னேன் என்றவாறு.

## *துறவி*

*சந்திரன் வியாழன் லக்கனம் தன்னைத்தான் சனிதான் பார்க்க*
*சொந்தமாய் ஒன்பான் மீதிற் தோன்றிடுங் குருவே யானால்*
*விந்தையால் இராச யோகம் விளங்கிய இராசா வல்லால்*
*வந்தசந் நியாசி யாகி மனைதொறும் பிச்சை ஏற்பான். (457)*

(இ-ள்.) சந்திரன், குரு ஒன்று சேர்ந்து இலக்கனத்தில் இருக்க, அக்கோள்களைச் சனி பார்க்க, ஒன்பதாம் இடத்தில் குரு இருக்க, இராசயோகம் நிறைந்த மன்னனாக விளங்குவான். அல்லது துறவியாகி வீடுதோறும் சென்று பிச்சையெடுத்து உணவு உண்பான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

நவமதில் நீலன் வந்து நாடிட மற்றக் கோட்கள்
நவமொடு அன்னோன் தன்னைச் சதியிலா நோக்க மின்றிப்
பவமற இராச யோகம் பதியும்தீட் சதனாய்ப் பாராய்
சிவன்செயல் எவர்க்கா னாலும் தெரியுமே சிந்தை
நோவான். *(458)*

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தில் சனி இருக்க, மற்றக் கோள்கள் ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியை நோக்காவிடில், அச்சாதகனுக்கு இராசயோகமாகும். ஆயினும் இவன் தீட்சை பெற்று பின்னாளில் மனம் நொந்து துறவியாவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## முனிவன்

பத்தினுக் குடையோன் நாலு பேருடன் பரிவாய்க் கூடி
உத்தகேந் திரத்திரி கோணம் மீதிலே உலாவி நின்றால்
பெத்தசா தகன்சந்நி யாசிப் பெருமையால் மோட்ச னாவான்
ஒத்தகன் மத்தில் நாலு கோளுறில் முனியா மன்னே. *(459)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, நான்கு கோள்களுடன் கூடி, கேந்திர திரிகோண தானங்களில் இருக்கப் பிறந்த சாதகன் துறவியாகி மோட்சம் அடைவான். பத்தாம் இடத்தில் நான்கு கோள்கள் இருக்கில் முனிவனாவான் என்று சொல்ல வேண்டும்.

## துறவி

*சனியன்லக் கனத்து நாதன் சதிரொடும் அவரைப் பார்க்கப்*
*புனிதமாய்க் கோட்கள் எல்லாம் பொருந்தவே பாரா தாகில்*
*இனியகன் மத்தில் லக்கின நாதன்தான் இருக்க வல்லாற்*
*தனியனாகப் பத்தின் கோளன் வரசந்நி யாசி யாமே. (460)*

**(இ-ள்.)** சனியை இலக்கனாதிபதி பார்க்க அல்லது இலக்கனாதிபதி சனியைப் பார்க்க, பிற கோள்கள் எவையும் இவற்றை நோக்காமல் இருந்தால், அச்சாதகன் துறவியாவான் பத்தாம் இடத்தில் இலக்கனாதிபதி இருக்க அல்லது பத்தாம் இடத்தில் பத்தாம் இடத்தோன் தனியாக நிற்க,அச்சாதகன் துறவியாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

*சந்திரன் தன்னை நீலன் சதிரொடு பார்க்க மந்தன்*
*உந்துந்திரே காண மாக வோடச்சந் நியாசி யாவான்*
*வந்தகன் மத்தி னோடு மாந்தியும் இராகு கூடில்*
*விந்தையாம் கொடூர வம்ச மேவச்சந் நியாசி யாவான். (461)*

**(இ-ள்.)** சந்திரனைச் சனி பார்க்க, சனி திரேகாணத்தில் இருக்க துறவியாக இருப்பான். பத்தாம் இடத்திற்கு அதிபதியோடு மாந்தியும் இராகுவும் சேர்ந்து, கொடூர அம்சங்களில் நிற்க, அச்சாதகன் துறவியாவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*கன்மன்தான் நீச அத்த மனங்களாய்க் கண்டு நிற்ப*
*வன்மத்தாற் பத்திற் செவ்வாய் ஆவது மந்தன் வாழச்*
*சென்மச்சா தகர்க்கு வந்தோன் செகத்திற்சந் நியாசி யாகி*
*இன்பத்தாற் சுரபா னங்கள் இயல்புடன் செய்வா*
*னன்றே. (462)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி நீசம், அத்தமனம் பெற்று நிற்க, பத்தாவது இடத்தில் செவ்வாய் அல்லது சனி இருக்கப் பிறந்த சாதகர் துறவியாகி, சுராபானம் முதலான பானங்களை அருந்துவர் என்றவாறு.

## *பொதுப்பலன்*

*பதிந்தசீ வளங்கள் எல்லாம் பகலவன் முதலாய்த் தந்தை*
*இதந்திரி சகோத ரங்கள் இயல்புடன் தாயார் ஆட்கள்*
*மதந்தானம் இலக்க னத்தை மதியொடு பத்திற் கோளன்*
*முதிர்ந்தஅங் கிசங்கள் பற்றி முடிந்தசீ வனங்கள்*
*சொல்லே. (463)*

(இ-ள்.) சூரியனை முதலாகக்கொண்டு, தந்தை, தாய், மனைவி, சகோதரர்கள், வேலையாட்கள் முதலானவற்றைச் சொல்லவேண்டும். பத்தாம் இடம், இலக்கனம், சந்திரன், பத்தில் அமர்ந்துள்ள கோள்களின் அம்சங்களைக் கண்டு தொழிலைப் பற்றி சொல்லவேண்டும் என்றவாறு.

## *தொழில்*

*கன்மத்தா னத்தின் நாதன் கதிர்நவாங் கிசத்தில் ஏறத்*
*தன்குணம் திருகு தாளஞ் சமுத்திர வியாபா ரத்தில்*
*பொன்திர வியங்கள் முத்துப் பொருந்திய துகில்வியா பாரம்*
*இன்புறு சினேகன் தூது இதுகள்சீ வனமாய் வாழ்வான். (464)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி சூரியனுடைய நவாம்சத்தில் இருக்கப் பிறந்தவன், ஏமாற்றும் குணம் உடையவனாக இருப்பான். கடல் கடந்து சென்று, பொன், வாசனைத் திரவியங்கள், முத்து, ஆடைகள் இவற்றை வியாபாரம் செய்பவனாகவும், தூது செல்பவனாகவும் திகழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

சந்திரன் நவாங்கி சத்தில் சதிரொடும் பத்தின் கோளன்
வந்திடச் சிலதுற் புத்தி யால்வரும் பதார்த்தத் தாலும்
இந்தவே ளாண்மை மண்ணால் வினோதத்தின் விபரத் தாலும்
தந்தரா சாக்கள் பெண்டிர் தமையனு சரித்துச் சீவன். *(465)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, சந்திர நவாம்சத்தில் இருக்க, சேர, சில தீய குணங்களைக் கொண்டவனாகவும் உணவுப் பண்டங்கள், பயிர்த்தொழில், தொடர்பான தொழில் முதலானவற்றைச் செய்பவனாக இருப்பான், அரசர்கள், பெண்கள், சகோதரர்களை அனுசரித்து வாழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

பத்தினுக் குடையோன் செவ்வாய் நவாங்கிசம் பரிந்து வாழ்ந்தால்
சத்தியமாய்ப் பூமி யாலே சண்டையின் விவரத் தாலும்
அந்தமில ருணத்தான் அங்கி வாதத்தால் களவி னாலும்
மெத்தவே கலகத் தாலும் விளங்கும்சா கசத்தால் சீவன். *(466)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி செவ்வாயின் நவாம்சத்தில் இருக்கப் பூமி சம்பந்தப்பட்ட தொழில் செய்பவனாகவும் போர்த்தொழிலில் ஈடுபடுபவனாகவும் இருப்பான். காயம் உடையவனாக, அக்கினி ஸ்தம்பனம் செய்பவனாக விளங்குவான். திருட்டு, கலகம், சாகசம் இவற்றைக் கொண்டு தொழில் செய்பவனாகவும் இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

புதன்அங்கி சத்தில் பத்துக் குடையவன் பொருந்து வாழ
விதமொடு சிற்ப வித்தை விதியோடா கமங்க ளாலும்
மதிமிகு கணக்கால் ஞான வேதத்தின் வகையால் நெய்யால்
சுதந்திர சோதி டங்கள் சொல்லும்புரோ கிதத்தால் சீவன். *(467)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, புதனின் நவாம்சத்தில் விளங்க, சிற்பக்கலை, ஆகமங்கள், கணக்கு, ஞானம், வேதம், கவிதை, சோதிடங்கள், மதசடங்குகள் என்றும் புரோகிதம் போன்றவை தொடர்பானத் தொழில்களைச் செய்பவனாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*குருவங்கி சத்தில் கன்மன் கூடவே தியனாய்த் தெய்வம்*
*திருவுளப் பொருட்டால் மிக்கச் சிவபுரா ணங்க ளாலும்*
*மருவுசாத் திரத்தால் வேத வகையாக மத்தால் தன்மம்*
*பெருமையால் உபதே சத்தால் பேசுமார்க் கத்தால் சீவன். (468)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி குருவின் நவாம்சத்தில் விளங்க, வேதியனாக, தெய்வத்தினாலும் சிவபுராணங்களாலும் சாத்திரங்களாலும், வேதங்களாலும், யாகங்களாலும் தொழில் செய்பவனாக இருப்பான். பிறருக்குப் பாடம் சொல்லுவதனாலும், தர்மம் பெறுவதனாலும் பொருள் பெறுபவனாக விளங்குவான்.

## இதுவுமது

*வெள்ளியின் நவாங்கி சத்தில் விளங்கிடப் பத்தின் கோளன்*
*உள்ளதாய்ப் பொன்மா ணிக்கம் உயர்கரிப் பரியால் இந்தக்*
*கள்ளவியா பாரம் கண்டு சர்க்கரை தயிர்வங் கத்தால்*
*பள்ளிகொள் லீலை தன்னாற் பெண்களின் பலத்தாற் சீவன். (469)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி சுக்கிர நவாம்சத்தில் இருக்கப்பிறந்தவன், பொன், மாணிக்கம், யானை, குதிரை ஆகியவற்றைக்கொண்டு வியாபாரம் செய்பவனாகவும், கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டவனாகவும் இருப்பான் மேலும் சர்க்கரை, தயிர், வங்கம் ஆகியவற்றாலும் பெண்களிடம் லீலைகள் செய்வதனாலும் பொருள் சம்பாதிப்பவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்..

## இதுவுமது

*சனிநவாங் கிசத்திற் கன்மன் சார்ந்திடக் கபட மார்க்கத்*
*தினில்மரம் வெட்டி விற்றும் சினத்துடன் அதட்டி யாளும்*
*இனியநல் கணக்காய் அன்ய இடத்தினில் கலக மாகி*
*மனிதரைப் போட்டி செய்து வாய்த்ததால் வாழும் சீவன். (470)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்திற்கு அதிபதி, சனி நவாம்சத்தில் இருக்கப் பிறந்தவன், தீய வழிகளிலும் மரம் வெட்டி விற்றும் தொழில் செய்வான். மேலும் பிறரை அதிகாரம் செய்து மிரட்டி சம்பாதிப்பவனாகவும், தண்டனையளிப்பவனாகவும், கலகம் செய்பவனாகவும், மற்றவர்களோடு போட்டியிடுபவனாகவும் இருந்து பொருள் சம்பாதிப்பவனாக இருப்பான் என்றவாறு.

## இதுவுமது

*ஒன்றுநான் கேழு பத்தில் உறுபவ ரோடே வாழ்ந்தால்*
*மன்றிநீசத் தொழிலின் மூல வகையினால் மூர்க்கத் தாலும்*
*நன்றெனப் பரத்தைத் தன்னை நயமொடு கமனம் போவான்*
*வென்றகு ரத்தால் ராசப் பிரிதியில் விளங்கும் சீவன். (471)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்திற்கு அதிபதி ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் பாவர்களோடு வாழ்ந்தால், கீழான தொழிலாலும், கொடூரத்தாலும் பொருள் சம்பாதிப்பவனாக இருப்பான். பரத்தையரோடு உறவு கொள்வான். வீரத்தால் வெற்றி கொண்டு அரசர்களிடத்துப் பொருள் பெற்று வாழ்பவனாக விளங்குவான்.

## *தீயவன்*

*பத்தினில் இருந்தோன் பத்தின் அங்கிசம் பரிந்து வாழ்வோர்*
*உத்தமச் சுபராய் புண்ய வானென உலகில் ஓதும்*
*ஒத்தகன் மத்திற் பாவர் ஊறிஅங் கிசமே யானால்*
*சத்துநற் கருமம் பண்ணான் சகலரும் பவனே என்பர். (472)*

(இ-ள்.) பத்தாம் இடத்தில் இருப்போர் நற்கோள்களாக, நற்கோள்களின் அம்சத்தில் வாழ்பவர்களாக இருப்பின், புண்ணியவான் என்று உலகத்தோரால் போற்றப்படுவார்கள். பத்தாம் இடத்தில் நிற்போர் பாவக் கோள்களாக பாவக்கோள்களின் நவாம்சத்தில் இருப்பின், நல்ல செயல்களையன்றித் தீய செயல்களையே செய்வான். உலகத்தோரால் தீயவன் என்று இகழப்படுவான் என்றவாறு.

## இதுவுமது

*சந்திரஇலக் கனத்துக் கிந்தச் சங்கையாற் பலனே தென்னில்*
*முந்தியே உரைத்த தானம் பலனையும் மொழிவ ரென்ன*
*அந்தபத் தாமி இராசி அங்கிசத் ததிபன் பாவர்*
*வந்தது பாபி யோடே மருஉபர் பாவம் பண்ணும். (473)*

(இ-ள்.) இராசிநாதன், பத்தாம் இடத்தில் இருந்தாலும், பத்தாம் இடத்தாதிபதி பாவராக இருக்க, அந்த பாவக் கோளுடன் சேர்ந்து இருந்தாலும் உபகிரகங்களுடன் சேர்ந்து இருந்தாலும் இச்சாதகன் பாவச்செயல்களில் ஈடுபடுவனாக விளங்குவான் என்று சொல்ல வேண்டும்.

## *சுகவான்*

*மதிதனக் கப்பாற் பத்தில் வருதிர் செவ்வாய் வந்தால்*
*சதிரொடு பாவ புத்தி சாரசா கசமே பண்ணும்*
*அதிசய வியாழன் பார்க்க அமைத்திந்த போகம் எல்லாம்*
*பதிதனில் இராசா வுக்குச் சரியெனப் பரிந்து வாழ்வான். (474)*

(இ-ள்.) சந்திரனுக்குப் பத்தாம் இடத்தில் சூரியன், செவ்வாய் இருந்தால் பாவ சிந்தனை உடையவர்களாகச் சாகசங்கள் செய்வார்கள். சந்திரனுக்குப் பத்தாம் இடத்தில் உள்ள சூரியனையும் செவ்வாயையும் குரு பார்க்க, இராசாவுக்குச் சமமாக அனைத்து சுகபோகங்களையும் பெற்று வாழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## *தலைவன்*

*சொன்னஇத் தானம் தன்னில் சுகமொடு சுபர்கள் வாழ*
*மன்னவன் கீர்த்தி மானாய் வணங்கிய குணவா னாகப்*
*பொன்னொடும் திரவி யங்கள் புகழுமிரா சப்பிரி யத்தால்*
*மின்னிய குலத்தில் மிக்க விதத்தினால் இருந்த சீவன். (475)*

**(இ-ள்.)** சந்திரனுக்குப் பத்தாம் இடத்தில் சுபக் கோள்கள் இருக்க, அச்சாதகன் புகழ் மிக்கவனாக, நற்பண்புள்ளவனாக விளங்குவான். மேலும், பொன், பொருள் முதலானவற்றை அரசனிடமிருந்து வெகுமதியாகப் பெறுபவனாகவும் தன் குலத்தில் சிறந்து விளங்குபவனாகவும் இருப்பான் என்று சொல்லவேண்டும் என்றவாறு.

## *பத்தாம் இடத்தில் நிற்கும் கோள்களின் பலன்*

*அம்புலி தனக்குப் பத்தில் ஆதித்தன் செவ்வா யாகில்*
*வெம்பிய மனத்தான் வேசைத் திரிகளை விரும்ப வல்லான்*
*நம்பிய வியாழன் சுங்கன் நயமொடு தானம் சேரில்*
*தம்பிக்கோ பிரியன் பெண்டீர் திரவியம் தனியே சாரும். (476)*

**(இ-ள்.)** இராசிக்குப் பத்தாம் இடத்தில் சூரியனும், செவ்வாயும் இருந்தால், துன்புற்ற மனதை உடையவன். விலைமாதுக்களை விரும்புபவனாக இருப்பான். இராசிக்குப் பத்தாம் இடத்தில் குருவும், சுக்கிரனும் சேர்ந்து இருந்தால் அனைவரிடமும் அன்புடையவனாகவும், பெண்களால் விரும்பப்படுபவனாகவும், செல்வம் அதிகம் உடையவனாகவும் விளங்குவான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## இதுவுமது

*சந்திரன் தனக்குப் பத்தில் சதிரொடு சுங்க னானால்*
*எந்தெந்தப் பேர்க ளெல்லாம் இயல்புடன் துய்ப்பான் என்ன*
*மந்தனே வந்து வாழ்ந்தால் வருத்தனாய் துக்க னாவான்*
*செந்திரு அனைய மாதே ! தெரிவது அரிது தானே. (477)*

(இ-ள்.) இராசிக்குப் பத்தாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, இச்சாதகன் பலருடனும் இன்பம் துய்க்கும் சிற்றின்பப் பிரியனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும். இராசிக்குப் பத்தாம் இடத்தில் சனி இருந்தால், துன்பம் உடையவனாகவும் வருத்தம் உடையவனாகவும் விளங்குவான் என்று சொல்லவேண்டும்.

## இதுவுமது

*திங்களுக் காப்பாற் பத்திற் சேய்புதன் திரிந்தி வாழ*
*அங்கஆ யுதங்கள் தொட்டுச் சேவகம் அதனால் சீவன்*
*சுங்கன்சேய் கன்மத் தானாற் தொழில்செய்வான் படைக்குக் கர்த்தன்*
*சங்கையாம் சனிபத் தானாற் தரித்திரம் தனிலே வாழ்வான். (478)*

(இ-ள்.) இராசிக்குப் பத்தாம் இடத்தில் செவ்வாயும், புதனும் இருக்க, ஆயுதங்களைக் கையில் ஏந்திச் செய்யும் தொழிலுடையவர்களாக விளங்குவர். சுக்கிரன், செவ்வாய் இருவரும் இராசிக்குப் பத்தாம் இடத்தில் இருந்தால், படைத்தளபதியாக விளங்குவான். இராசிக்குப் பத்தாம் இடத்தில் சனி இருந்தால் எத்தொழிலைச் செய்தாலும் தரித்திரத்தோட வாழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

*சொல்லிய பத்தில் இராகு சனிபுதன் தோன்றி நின்றால்*
*அல்லியும் அண்ணல் போற்றும் அரசர்கோ னாக வாழும்*
*நல்புதன் சுங்கன் திங்கள் நாடியே பத்தில் நண்ண*
*இல்திரி நிதியும் வித்து வானென நிலையும் சொன்னேன். (479)*

(இ-ள்.) இராசிக்குப் பத்தாம் இடத்தில இராகு, சனி, புதன் ஆகிய மூவரும் சேர்ந்து இருந்தால், இச்சாதகன் அனைவராலும் போற்றப்படும் அரசனாக வாழ்வான். புதன்,

வெள்ளி, திங்கள் ஆகியோர் இராசிக்குப் பத்தாம் இடத்தில் இருக்க, நல்ல மனைவியையும், செல்வத்தையும் பெற்று, நூல்கள் பலவற்றையும் கற்று அறிவில் சிறந்தவனாக இச்சாதகன் விளங்குவான் என்பதைச் சொன்னேன் என்றவாறு.

## இதுவுமது

*குருமதி நீலன் ஒன்றாய்க் கூடியே பத்தில் ஏற*
*வருபவன் சுகந்த நீல வர்ணச்சூ ரணத்தாற் செட்டி*
*எரிகதிர் கன்மத் தேகிலி இடர்படும் சனங்கள் சாடித்*
*தெரிவது கொஞ்ச நெஞ்சம் தெளிந்தவன் என்னும்*
*சீவன். (480)*

**(இ-ள்.)** குரு, சந்திரன், சனி இவர்கள் மூவரும் பத்தாம் இடத்தில் ஒன்று சேர்ந்து இருப்பின், இச்சாதகன் வாசனையுடைய நீலநிற வண்ணத்தூள் வியாபாரம் செய்பவனாக இருப்பான். சூரியன் பத்தாம் இடத்தில் இருக்க, துன்பமுறும் மக்களைக் காக்கும் தொழிலை யுடையவன் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

*பத்தினில் மந்தன் வந்து பரிவுடன் இருந்து வாழ்ந்தால்*
*புத்தகம் எழுத நோக்கப் புகழிசை வித்தை பூண்டோன்*
*வித்தக னாக வெள்ளி வியாழமும் விளங்கப் பத்தில்*
*உத்தபண் டிதனாய் ராசப் பிரியனாய் உலகில் வாழ்வான். (481)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்தில் சனி இருக்க, புத்தகம் எழுதுவதில் விருப்பம் உடையவனாக இருப்பான். புகழ் உடையவனாகவும் வித்தைகளில் திறமையுடைய வித்தகனாக விளங்குவான் என்று சொல்லவேண்டும். பத்தாம் இடத்தில் வெள்ளியும், குருவும் சேர்ந்து விளங்க, சாத்திரங்களைக் கற்றவனாக அரசரால் விரும்பப்படுபவனாக உலகில் வாழ்வான் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

## தலைவன்

பத்தினுக் குடையோன் வாழ்ந்து பதிந்திடும் ஓரை நன்றாய்
உத்தமாம் சுபராய் அன்னோ ருடன்சுபர் கூடி வாழ்நாள்
மத்தநல் சுபரே பார்க்க வரில்சுபாங் கிசங்கள் ஏற
இத்தனை யோகத் தாதல் இவன்ஒண்ணார்க்கு எசமான்
ஆவான். (482)

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி நின்ற இராசி சுப இராசியாக, அந்த இராசியாதிபதி சுபருடன் சேர்ந்து வாழ, அல்லது சுபக்கோள்களால் பார்க்கப்பட அல்லது சுபாங்கிசத்தில் ஏறி இருக்க, அனைத்து யோகங்களையும் பெற்றவனாகப் பகைவரை வென்று அவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குவான் என்றவாறு.

## அடிமை வேலை

கன்மத்த னத்தான் அந்த காரியன் உடனே கூட
வன்மத்தால் அட்ட மாதி பதியிவ னவனைப் பார்க்க
அன்பற்ற கொடூ ராங்சம் ஏறகேந் திரமே சேர
சென்மத்த்ல அதிக ஆக்கினை செய்திடத் தேக னாவாம். (483)

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி, சனியுடன் கூட, எட்டாமிடத்திற்கு அதிபதி இவனைப் பார்க்க, கொடூர பாவர் அம்சம் ஏற, ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திரத் தானங்களில் இருக்க, அதிக கொடூரமான முதலாளிக்குக் கட்டுப்பட்டு வேலை செய்ய வேண்டியவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## புகழுடையவன்

சந்திரன்கற் கடகம் தன்னில் சார்ந்திடச் சதிராய்ச் சுங்கன்
அந்தணன் இவர்கள் யாரும் அழகுடன் மதியைப் பார்க்க
வந்தபா ராவ தாங்கிச மனதொடும் ஏறி வாழ்ந்தால்
முந்தவே திரவி யங்கள் முற்றிடும் கீர்த்தி யாவான். (484)

(இ-ள்.) சந்திரன், கற்கடக இராசியில் இருக்க, சுக்கிரன், குரு இவர்களில் ஒருவர் சந்திரனைப் பார்க்க, சந்திரன் பர்வதாங்கிசத்தில் இருக்க, செல்வங்களை மிகுதியாகப் பெற்றவனாகவும் மிகுந்த புகழ் வாய்ந்தவனாகவும் திகழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## இதுவுமது

*பத்தினுக் குடையோன் நல்ல பரிசுப ருடனே அல்லால்*
*உத்தநல் சுபர்தன் மத்தி யத்திலே ஊறி வாழ*
*மெத்தநல் சுபாங்கி சங்கள் மேவவே கீர்த்தி மானாய்*
*வைத்தபி மானி கர்த்தன் என்னவே வழங்கும் போகம். (485)*

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதி சுபக்கோள் களுடனே சேர்ந்து வாழ, அல்லது சுபக்கோள்களுக்கு இடையே அமர்ந்திருக்க, நல்ல சுப அம்சங்களில் இருக்க, புகழ்மிக்கவனாகவும் உயர்ந்த நிலையையுடைய பெருமையுடையவனாகவும் வாழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## அழகு, புகழ் இல்லாதவன்

*கன்மத்தா னத்திற் பாவர் கலந்திடப் பாவர் பார்க்க*
*நன்பத்தாம் இடத்தின் கோளன் நற்பல வீன மாக*
*அன்பத்தால் அல்லால் தானம் அடர்ந்திடும் கன்ம வீட்டான்*
*இன்பறு காந்தி கீர்த்தி இல்லையாம் என்று சொல்லே. (486)*

(இ-ள்.) பத்தாம் இடத்தில் பாவர் இருக்க, அந்த இடத்தைப் பாவர் பார்க்க, பத்தாம் இடத்திற்கு அதிபதி கோள் பலவீனமாக இருக்க, தீய தானங்களில் கர்மவீட்டான் அமர்ந்திருக்க, அச்சாதகனுக்கு அழகு, புகழ் இவை இருக்காது என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

### *எசமானன்*

*திருந்திய செவ்வாய் அன்னோன் தன்னுடன் நாலோன் சேர்ந்து*
*பொருந்திய பலவா னாகிப் புதன்திரி கோண கேந்திரம்*
*வருந்திடப் பத்தின் கோனள மதியும்சுக் கிரனும் பார்க்க*
*இருந்தவே ளாண்மை லாபம் அடிமைமா டுடனே சீவன்.* *(487)*

**(இ-ள்.)** செவ்வாயுடன் நான்காம் இடத்து அதிபதி ஒன்று சேர்ந்து பலவானாக விளங்க, புதன் திரிகோண, கேந்திர தானங்களில் இருக்க, பத்தாம் இடத்திற்கு அதிபதியைச் சந்திரனும் சுக்கிரனும் பார்க்க, பயிர்த்தொழிலால் மிகுந்த இலாபம் அடைபவனாக விளங்குவான். நல்ல வேலையாட்களை உடையவனாகவும் அதிகமான கால் நடைகளை உடையவனாகவும் விளங்குவான் என்று சொல்லவேண்டும்.

### இதுவுமது

*பத்தினுக் குடையோன் எந்த நவாங்கிசம் பதியு றானோ*
*உத்தம நவாங்கி சத்துக் குடையவன் சனிசம் பந்தம்*
*சத்துருத் தான நாதன் சார்ந்திட அல்லால் பார்க்க*
*மெத்தவெள் ளாட்டி யார்கள் அடிமையும் மிகவுண் டாமே.* *(488)*

**(இ-ள்.)** பத்தாம் இடத்திற்கு உடையவன் எந்த நவாம்சத்தில் இருக்கின்றானோ அந்த நவாம்சத்திற்கு உடையவன், சனியொடு சம்பந்தம் பெற்று இருந்தாலும் ஆறாம் தானத்தின் அதிபதியைச் சார்ந்து நின்றாலும் அல்லது அவனால் பார்க்கப்பட்டாலும் அச்சாதகனுக்கு பல மனைவியரும் ஆள் அடிமைகளும் இருப்பார்கள் என்று சொல்லவேண்டும்.

**பத்தாம் பாவம் முற்றும்.**

# பதினோராம் பாவம்

## பொது

சொல்லிய இலாபம் அந்த இராசியில் தோன்றும் கோளை
நல்லவெய் யோன்த கப்பன் நயமிகு மதிதா யாகும்
அல்லசேய் பிழைப்புப் புந்தி அம்மான்வழி வர்க்கத் தாலும்
மெல்லவே பலமாய்இலாபம் திரவிய விதங்கள்
சொல்லே. *(489)*

**(இ-ள்.)** பதினோராம் இடம், அந்த இராசியில் தோன்றும் கோள்களில் சூரியனைக்கொண்டு தகப்பனையும், சந்திரனைக் கொண்டு தாயையும், செவ்வாயைக் கொண்டு பிழைப்பைப் பற்றியும், புதனைக்கொண்டு தாய்மாமன் வர்க்கத்தைக் குறித்தும், பலத்தைக்கொண்டு செல்வங்களைக் குறித்தும் பேசவேண்டும் என்றவாறு.

### பதினோராம் இடத்தில் கோள்கள் நிற்கும் பலன்

அந்தணன் இலாபம் மீதில் அனைந்திட ஆசா ரங்கள்
வந்திடும் வேத சாஸ்திர வகைதிர வியமும் சேயாம்
சுந்தரச் சுங்கன் இலாபம் தோன்றிட அலங்கா ரங்கள்
விந்தைநா டகசங் கீதம் வித்தைகா ரியமாய் மார்க்கம். *(490)*

**(இ-ள்.)** குரு, பதினோராம் வீட்டில் இருக்க, ஆசாரவானாக விளங்குவான். செவ்வாய் பதினோராம் வீட்டில் இருக்க அச்சாதகன் வேத சாஸ்திரங்களில் வல்லவனாகவும் செல்வனாகவும் திகழ்வான். சுக்கிரன் பதினோராம் வீட்டில் இருக்க, அலங்காரங்களிலும், நாடகம், சங்கீதம் முதலானவைகளிலும் வல்லவனாக விளங்குவான்.

### இதுவுமது

காரிலா பத்தில் தோன்றக் காணும்வே ளாமை தான்யம்
ஊரிவெள் ளாட்டிப் பள்ளு பறையுடன் முந்து செல்ல
சீரிய சுபர்லா பத்திற் திரவியம் சீராய்த் தேடும்
கூரிய பாபர் இலாபம் கொண்டுடன் தேடும்
பொன்னே. (491)

**(இ-ள்.)** சனி, பதினோராம் இடத்தில் இருக்க வேளாண்மையில் சிறந்து விளங்குவான். தன்னிடம் வேலை செய்வோரிடம் அதிகாரம் செலுத்துபவனாக அடக்கி ஆள்பவனாக இருப்பான். சுபக்கோள்கள் பதினோராம் இடத்தில் இருக்க, செல்வத்தை சிறப்புடன் தேடுபவனாக இருப்பான். பாவக்கோள்கள், பதினோராம் இடத்தில் இருக்க, தீயவழியில் செல்வத்தைத் தேடுபவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

### இதுவுமது

பாவரும் சுபரும்இலாபம் மீதிலே பதிந்து வாழ்ந்தால்
ஆவதே திரவி யங்கள் ஆனதர் மத்தா லாகும்
சீலமால் குருவும் இலாபம் சேர்ந்திட வித்தை புத்தி
தாவியே வந்து தன்தன் கிரிகையால் தனமும் தேடும். (492)

**(இ-ள்.)** பதினோராம் இடத்தில் பாவக்கோளும் சுபக் கோளுமாகக் கலந்து இருப்பின் அச்சாதகனுக்கு பிறர் தர்மம் செய்வதனால் செல்வம் வந்து சேரும். புதனும் குருவும் பதினோராம் இடத்தில் இருந்திட வித்தைகளில் சிறந்தவனாக விளங்குவான். தன் சுய முயற்சியினால் செல்வத்தைத் தேடுபவனாக இருப்பான் என்றவாறு.

### பொதுப்பலன்

சொல்லிய இலாபம் மீதில் தோன்றிய கிரகம் தன்னில்
மெல்லிய இட்ட கோட்கள் விளங்கிய பலத்தைப் பார்த்து
நல்லசா தகர்க்குப் புத்தி நற்குண வாக னங்கள்
துல்லிய மரண மட்டும் திரியுடன் சுகத்தைச் சொல்லே. *(493)*

**(இ-ள்.)** பதினோராம் இடத்தில் நிற்கின்ற கோள்கள், நட்புடன் விளங்கும் கோள்கள் ஆகியவற்றின் பலனைப் பார்த்து, சாதகரின் புத்தி, நற்குணம், வாகனங்கள், மரணம் வரை பெண்களால் கிடைக்கும் சுகம் போன்றவற்றைச் சொல்ல வேண்டும் என்றவாறு.

### தானங்கள் செய்பவன்

வாக்கினுக் குடையோன் இலாப மன்னவன் லக்ன நாதன்
ஆக்கமாய் இட்ட கோள்கள் அமர்ந்திடத் திரவிய இலாபம்
பார்க்கநல் கன்மம் தெய்வப் பிராமணர் தமக்குப் பத்தில்
போக்கிலே பாவம் போக பொருந்தவே தானம் செய்வான். *(494)*

**(இ-ள்.)** இரண்டாமிடத்துக்கு அதிபதி, பதினோராம் இடத்திற்கு அதிபதி, இலக்கனாதிபதி இவர்களுடன் நட்புடன் சுபக்கோள்கள் சேர்ந்து அமர்ந்திட செல்வம் மிகுதியும்கிடைக்கும். இச்சாதகன் தெய்வத்திற்கும், பிராமணர்களுக்கும் நல்ல காரியங்கள் பலவற்றையும் செய்வான். இவை பத்தாம் இடத்தில் அமர்ந்திட, தான் செய்த பாவங்கள் நீங்க, தானங்கள் பலவற்றையும் செய்வான் என்று சொல்ல வேண்டும்.

### பிச்சைக்காரன்

சொன்னலா பத்திற் கோட்கள் தோன்றவே பலமோ ஈனம்
என்னீசப் பகைரா சிக்குப் கிரகமாய் எட்டீ ராறில்
முன்னவே இருமூன் றுக்கு முதல்வனாம் சாத கர்க்கு
வன்னமோ ரேகை போக மாகவும் தினமும் பிட்சை. *(495)*

(இ-ள்.) பதினோராம் இடத்தில் பலவீனமோடு கோள்கள் இருக்க, பதினோராம் இடத்தின் அதிபதி பகை, நீசம் பெற்று, ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் இருப்பின் சாதகர்க்கு ரேகை யோகமாகும். இச்சாதகன் தினமும் பிச்சையேற்று உணவு உண்பவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## அரச சமானன்

*இலாபத்தான் இலாபம் மீது இருந்திட இயல்பாய் வெய்யோன்*
*உலோபத்தால் மதியும் கூடி ஊறிடப் பலனே தென்னில்*
*சுலோபத்தால் அரச ரென்னச் சொல்லவும் கூடும் மற்ற*
*கலாபத்தால் இராசா வெங்கே என்னவும் கணக்காய்த் தேடும். (496)*

(இ-ள்.) பதினோராம் இடத்திற்கு அதிபதி தன் சொந்த வீட்டில் இருக்க, சூரியனும் சந்திரனும் சேர, அச்சாதகன் அரசன் என்று சொல்ல வேண்டும். அல்லது அரசனை ஒத்த அதிகாரத்துடனும் செல்வாக்குடனும் செல்வத்துடனும் வாழ்வான் என்று சொல்ல வேண்டும்.

## நல்லவன்

*திருந்தியே செவ்வாய் இலாபம் சேரமந் திரியாம் புத்திப்*
*பொருந்தியே விவசா யத்தில் போதவே பணமும் தேடும்*
*மருந்தெனும் வியாழன் புந்தி வரஇலாபம் மீதில் வித்தை*
*வருந்திய வேந்து புத்திரர் வணக்கமா சாரம் செய்வான். (497)*

(இ-ள்.) செவ்வாய், பதினோராமிடத்தில் சேர, மந்திரியாக விளங்குவான். விவசாயத்தில் ஈடுபாடு கொண்டு செல்வத்தைச் சேர்ப்பவனாக இருப்பான். குரு, புதன் இருவரும் இலாபத்தானத்தில் ஏறில் வித்தைகளில் சிறந்து விளங்குவான். அரசகுமாரர்களின் வணக்கத்துக்கு உரியவனாக விளங்குவான். ஆசாரங்களைக் கடைபிடிப்பவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

### தீயவன்

குருவுடன் சுங்கன் கூடிக் குணமுடன் இலாபம் கொண்டால்
வருந ரத்தினம் மாலை வல்பரி பசுக்கள் எல்லாம்
தருமநல் திரியும் சாரும் சனிலாபம் தாண்டக் கண்டால்
அருளிலாப் பொல்லாக் கன்ம மாகவே நடந்து கொள்வான். *(498)*

**(இ-ள்.)** குரு, சுக்கிரன் ஆகிய இருகோள்களும் ஒன்று கூடி பதினோராம் இடத்தில் இருப்பின், விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களைப் பெற்றவனாக இருப்பான். அவனிடத்தில் வலிமையான குதிரை, பசு முதலான கால்நடைகள் மிகுதியாக இருக்கும். அவனுடைய மனைவியும் தானதருமத்தில் சிறந்தவளாக விளங்குவாள். பதினோராம் இடத்தில் சனி இருப்பின், பிறரிடத்து இரக்கம் இல்லாதவனாகவும், தீய செயல்களைச் செய்பவனாகவும் இருப்பான்.

### செல்வம் சேரும் காலம்

கேந்திரத்திரி கோணம் தன்னிற் கேதுடன் லாபக் கோட்கள்
சார்ந்திட லாபம் மீதில் தருபாவர் இருக்க இன்னோர்
வாழ்ந்திடும் உச்ச வர்க்கம் வரிற்திர வியமே இலாபம்
சேர்ந்தகா ரகன்பல மானாற் திசைவரில் சேரும் பொன்னே. *(499)*

**(இ-ள்.)** பதினோராம் இடத்திற்கு அதிபதி இலக்கனத்திற்குக் கேந்திர, திரிகோணங்களில் இருக்க அல்லது பதினோராம் இடத்தின் அதிபதியுடன் கேது சேர்ந்திருக்க அல்லது பதினோராம் இடத்தில் பாவர்கள் இருக்க, இப்பாவர்கள் உச்சம் பெற்றிருக்கில் பெருஞ்செல்வம் கிடைக்கும். இச்சாதகனுக்குக் காரகன் பலமாக இருக்கில் அவன் திசை வரும்பொழுது செல்வம் மிகுதியாகச் சேரும் என்றவாறு.

**பதினோராம் பாவம் முற்றும்.**

# பன்னிரண்டாம் பாவம்

## *பொது*

*வியமதுக் குடைய நாதன் வியத்தையும் சனிதான் பார்க்க*
*நயமுடன் தூர தேசம் நட்புநன் றில்லாக் கீர்த்தி*
*தயவுடன் தாதர வாகி தாங்குவான் சயனம் தானும்*
*பயமுடன் திரவி யங்கள் சிலவுடன் பரிவாய்ச் சொல்லே. (500)*

**(இ-ள்.)** பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதியையும், பன்னிரண்டாம் இடத்தையும் சனி பார்த்து தூரதேசம் செல்லுதல், நட்பு, அபகீர்த்தி, சயனம், பொருள் செலவு ஆகியவற்றைப் பற்றிக் கூறவேண்டும் என்றவாறு.

## *காட்டில் வாழ்பவன்*

*சொல்லிய பன்னி ரண்டிற் சுகர்சர கிரக மாக*
*இல்லியசர ராசி யாக ஈராறெட் டாறி னுக்கு*
*நல்லவன் அதிலே வாழ நாடியே சனியும் கூட*
*வல்லதால் நீலன் பார்க்க அவன்தேசம் காட்டுக் காவான். (501)*

**(இ-ள்.)** பன்னிரண்டாம் இடத்தில் உள்ள கிரகம் சர கிரகமாக இருக்க அல்லது பன்னிரண்டாம் இராசி சர இராசியாக இருந்து ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதிகள் அதில் இருக்க, அவர்களுடன் சனி கூடி இருக்க அல்லது சனி பார்க்க, அவன் காட்டில் வாழுபவனாக இருப்பான்.

## *செல்வம் அழிதல்*

*வியமதில் சுபரி ருக்க விரும்பியே சுபரும் கூட*
*நயமொடு சுபரே பார்க்க நாள்மூன்றிற் குடைய கோளன்*
*பயில்பல வீன நீச இராசியில் பதிந்து வாழ்ந்தால்*
*இயல்புறும் திரவி யங்கள் இருந்திட நாச மாமே. (502)*

**(இ-ள்.)** பன்னிரண்டாம் இடத்தில் அதிபதி சுபக்கோளாக இருக்க, சுபக்கோள் கூட, சுபக்கோள் பார்க்க மூன்றாம் இடத்திற்கு அதிபதி பலவீனமாகவோ நீசமாக அந்த இராசியில் இருந்து வாழ்ந்தால், அச்சாதகனிடத்திலுள்ள செல்வம் கைவிட்டுப் போகும் என்று சொல்ல வேண்டும்.

## கருமியும் வரவுக்கேற்ற செலவு செய்பவனும்

ஈராறுக் குடைய கோளன் இருப்பது வியமே யானால்
தாராள பலவான் கூடச் சார்ந்திடப் பலமோ ஈனம்
சீராகத் திரவி யங்கள் செலவிடான் சீலர் பாவர்
நேராசி இருக்கு மாகில் நிதிசம செலவாய் நிற்கும். *(503)*

**(இ-ள்.)** பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதி தன் சொந்த வீட்டிலேயே பலம் பெற்றிருக்க, பலவானோடு கூடினும் பலவீனனாவான். செல்வத்தைத் தக்கபடி செலவிடாதவனாக இருப்பான். சுபக்கிரகங்களும் பாவக்கிரகங்களும் சமமாக இருக்குமானால் வரவுக்கேற்ற செலவு செய்பவனாக இருப்பான் என்று சொல்ல வேண்டும்.

## தீய வழிகளில் செலவிடுபவன்

வியமதில் இட்ட கோள்கள் மிகசுப வர்க்க மானால்
தயவொடு திரவி யத்தைச் சதிரொடு செலவே செய்வான்
பயவரிட் டங்க ளானக் கிரகங்கள் பரிவாய்ப் பார்க்க
நயமில்லாத் துன்மார்க் கங்கள் நாடியே செலவாம்
பொன்னே. *(504)*

**(இ-ள்.)** பன்னிரண்டாம் இடத்தில் நிற்கும் கோள்கள், சுபக்கோள்களாக இருப்பின், பணத்தை அளவோடு செலவு செய்வான். தீயக்கோள்கள் பன்னிரண்டாம் இடத்தைப் பார்க்க, தீய வழிகளுக்காகப் பணத்தைச் செலவிடுவான் என்றவாறு.

## செல்வம் அழிதல்

*சொல்லிய பன்னி ரண்டில் தோன்றிய கிரகத் துக்குள்*
*வல்லகா ரகனா னாறும் வருபல வீன மானால்*
*நல்லசா தகர்க்கு அன்னோன் நல்திசை அபகா ரத்தில்*
*மெல்லவே திரவி யங்கள் வெகுசெல வாகு மாமே. (505)*

(இ-ள்.) பன்னிரண்டாம் இடத்தில் நிற்கும் கிரகங்கள், காரகன் ஆகியோர் பலவீனமானால் அச்சாதகர்க்கு அவர்களுடைய திசை, புத்திகளில் செல்வங்கள் மிகுதியாகச் செலவாகி கையை விட்டுப் போகும்.

## அடியாள் அழிவு

*ஆறெட்டுக் குடையோன் பாவ ராய்ப்பல மாய்ஈ ராறில்*
*ஊறவே ளாண்மை தன்னால் உயர்திர வியங்கள் சேதம்*
*கூறிய வியத்தி னாலும் கிரகங்கள் கூட மாடும்*
*நீறிடும் அடியார் தாமும் நிச்சயம் நாச மாமே. (506)*

(இ-ள்.) ஆறாம் இடத்திற்கு அதிபதி, எட்டாம் இடத்திற்கு அதிபதி பாவக்கிரகங்களாக இருந்து, பன்னிரண்டாம் இடத்தில் பலம் பெற்று இருக்க, பயிர்த்தொழிலால் வீணாகப் பணம் செலவழியும். பன்னிரண்டாம் இடத்தில் நான்கு கிரகங்கள் கூடியிருக்க, அச்சாதகர்க்கு அடியார்களாக இருப்போர்களுக்கு உறுதியாக அழிவு நேரிடும் என்றவாறு.

## பொருள் சேர்தலும் அழிதலும்

*வியமதில் வேதக் கோட்கள்★ விளங்கிட மிகுந்தா லென்ன*
*இயலொடு திரிக்கிர கங்கள் இருந்திட வியத்தில் எல்லாத்*
*தயவினால் நற்கோள் பன்னி ரண்டினில் சாத கர்க்கு*
*நயமிகும் அன்னிய புண்ணிய நாரியினால் திரவிய நாசம். (507)*

---

★ வேதக் கோட்கள் என்பதன் பொருள் விளங்கவில்லை.

(இ-ள்.) பன்னிரண்டாம் இடத்தில் அதிக எண்ணிக் கையில் பெண் கிரகங்கள் அதில் இருக்க, அல்லது பன்னிரண்டாம் இடத்தில் சுபக்கோள்கள் இருக்க அச்சாதகர்க்குப் பிற பெண்களால் பொருள் அழியும் என்றவாறு.

## வள்ளலாகத் திகழ்பவன்

சொல்லிய தானம் தன்னிற் சுபர்வரின் யோகி யாவான்
நல்லுள வனவே ளாண்மை நன்மையாம் தன்மம் செய்வான்
இல்லையால் வியத்திற் பாவர் இருந்திட விவாதக் காரன்
அல்லவே கிரகம் ஆட்சி யாய்உப காரி கண்டாய். *(508)*

(இ-ள்.) பன்னிரண்டாம் தானத்தில் சுபக்கோள்கள் நின்றால், யோகியாக விளங்குவான். பயிர்த்தொழிலில் இலாபம் கிட்டும். தானதர்மங்கள் செய்வான். பன்னிரண்டாம் இடத்தில் பாவக்கோள் இருந்திட வீண் விவாதம் செய்பவனாக இருப்பான். பன்னிரண்டாம் இடத்தில் உள்ள கிரகம் ஆட்சிபெற்று இருப்பின், பிறருக்கு வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்வான் என்றவாறு.

## இராசயோகமும் பொருள் அழிவும்

சூரியன் மதிதான் பன்னி ரண்டினிற் தோன்றி நின்றால்
சீரிய இராச யோகம் சேருமேல் திரவிய நாசம்
காரிகை செவ்வாய் திங்கள் கலந்துடன் இருக்கப் பார்க்க
வீரியத் தாலும் நாலா விதத்திலும் திரவிய நாசம். *(509)*

(இ-ள்.) சூரியனும் சந்திரனும் ஒன்றுகூடி பன்னிரண்டாம் இடத்தில் இருப்பின் இராசயோகமாகும். ஆனால் அரசால் பொருள் அழிவு ஏற்படும். செவ்வாய், சந்திரன் ஆகிய இரண்டு கோள்களும் ஒன்று சேர்ந்து பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, பலத்தினாலும் பல வழிகளிலும் பொருளுக்கு அழிவுண்டாகும் என்றவாறு.

## செல்வம் காப்பவனும், சயன சுகம் அடைபவனும்

*அந்தணன் திங்கள் சுங்கன் அறிவொடு வியத்தில் ஏறச்*
*சிந்தையாற் தேடும் பொன்னைத் திருந்தரட் சிப்பா னென்ன*
*விந்தையால் வியத்திற் சுங்கன் மேவிடச் சுபருங் கூடச்*
*சந்தமாய்ச் சுபரும் பார்க்கச் சயனத்தில் சுகவா னன்றே. (510)*

(இ-ள்.) குரு, சந்திரன், சுக்கிரன் மூவரும் பன்னிரண்டாம் இடத்தில் சேர, தன் சொந்த முயற்சியால் தேடிய பொருளாகக் கவனத்துடன் காப்பவனாக விளங்குவான். பன்னிரண்டாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, சுபக்கோள் சேர, சுபக்கோள் நோக்க, இனிமையான சயன இன்பத்தை உடையவனாக விளங்குவான் என்றவாறு.

## சயனசுகம் அடைபவன்

*வியமதுக் குடைய கோளன் மிகவுச்ச இராசிக் கேக*
*தயவுடன் சுபர்கள் வர்க்கச் சார்ந்திடச் சுபரே பார்க்க*
*நயமொடு மால்பா லாழி நண்ணிய சயனம் போல*
*இயல்புடன் சாத கர்க்கு இணங்கிய சயன இன்பம். (511)*

(இ-ள்.) பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதி, உச்ச இராசியில் அமர, அக்கோளோடு சுபக்கோள்கள் சேர்ந்திட, சுபக்கோள்கள் நோக்க, திருப்பாற்கடலில் திருமால் பள்ளி கொண்டு ஆனந்த சயனம் கொள்வதைப் போல இச்சதாகர்க்கு இனிமையான சயன இன்பம் உண்டாகும் என்றவாறு.

## சயன சுகமும் உயர் ஆடை ஆபரணங்களை அணிதலும்

*அதியுச்ச பாகம் தன்னில் அமர்ந்தி வியத்தா னத்தோன்*
*பதிநன்றாய்த் தூங்கு மஞ்சம் பதிந்திடச் சயனம் செய்வான்*
*இதுவலாற் பாக்கி யத்தோன் இயல்புடன் அவனைப் பார்த்தால்*
*புதுநவ மணிகள் தன்னால் பூஷணம் மிகஉண் டாமே. (512)*

**(இ-ள்.)** பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதி அதிக உச்சம் பெற்று இருப்பின், சயன இன்பம் உடையவனாக விளங்குவான். அல்லது ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, பன்னிரண்டாம் அதிபதியை நோக்க, விலையுயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை மிகுதியாக உடையவனாக விளங்குவான்.

## இராசயோகம்

இட்டமாச் சுங்கன் மந்தன் மதியொடு இவற்றில் ஆறின்
அட்டமத் துக்கும் அப்பால் ஆகிய திரிகோ ணத்தில்
முட்டியே வந்தோர்க் கெல்லாம் மொழிவதே இராச யோகம்
திட்டமாய் இதனைப் பார்த்துத் திடம்படத் தேர்ந்து
சொல்லே. *(513)*

**(இ-ள்.)** சுக்கிரன், சனியுடனும், சந்திரனுடனும் திரிகோண தானத்தில் இருப்பின், இராசயோகம் என்பதை உறுதியாகச் சொல்ல வேண்டும்.

## சயன சுகமும் வீட்டில் பிற உயிரின வருகையும்

சுக்கிரன் பாவ ரோடும் கூடியே வியத்தில் தோய்ந்தால்
பக்கமாய்த் திரியும் தானும் பரிவுடன் சயனம் செய்வான்
மிக்கசேய் சுங்க னோடும் கூடியே வியத்தில் வீழ்ந்தால்
பக்கையும் பலவி தானவகையெல்லாம் விழுந்து
போமே. *(514)*

**(இ-ள்.)** சுக்கிரன், பாவக்கோளோடு சேர்ந்து பன்னிரண்டாம் இடத்தில் இருப்பின் அச்சாதகன் பெண்ணுடன் இன்பமாகச் சயனம் செய்வான். செவ்வாய், சுக்கிரனோடு சேர்ந்து பன்னிரண்டாம் இடத்தில் இருந்தால், அச்சாதகன் வாழும் வீட்டில் ஆமை முதலான உயிரினங்கள் வந்து செல்லும் என்றவாறு.

## *நரகில் வீழ்பவன்*

*மந்தனும் இராகும் அட்ட மாதிபன் வனித மாக*
*வந்திட வியத்தா னத்தில் மருவிடச் சாத கர்க்கு*
*முந்தவே நரக லோகம் என்னவே மொழிய அல்லால்*
*விந்தையாம் பாவர் நிற்க நரகத்தில் விழுவான் மின்னே. (515)*

**(இ-ள்.)** சனியும் இராகுவும், எட்டாமிடத்திற்கு அதிபதியும் ஒன்று சேர்ந்து வியத்தானத்தில் நின்றிட சாதகர்க்கு நரகலோகம் கிட்டும். வியத்தானத்தில் பாவர் நிற்க நரகத்தில் வீழ்ந்து துன்புறுவான் என்றவாறு.

## இதுவுமது

*சத்துருத் தானக் கோளன் தாண்டியே வியத்தா னத்தில்*
*பத்திடப் பார்க்க வந்தப் படிநரகத்தில் பாய்வார்*
*சொற்றமி ழாக இந்தச் சூத்திரம் செகத்தில் தோன்ற*
***வித்தகன் வேத லிங்கப் பட்டராம்** விளம்ப லுற்றார் !. (516)*

**(இ-ள்.)** ஆறாம் இடத்திற்கு அதிபதி, பன்னிரண்டாம் வீட்டைப் பார்க்க அச்சாதகன் நரகத்தில் வீழ்வான் என்று இவற்றையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்து இவ்வுலகில் உள்ளோர் அறியும் வண்ணம் உரைத்த **வேதலிங்கப்பட்டர்** எடுத்துக் கூறியுள்ளார் என்றவாறு.

## *மோட்சம் அடைபவன்*

*இரணியன் இலக்க னத்தில் இருந்திட ஏழிற் சுங்கன்*
*திரணமாய்க் கன்னி வீட்டிற் சேய்புதன் சென்ம இலக்கனம்*
*தரணியில் வீரர் கையில் தனு★மே சாங்கி சத்தில்*
*மரணமாம் சாத கர்க்கு வாய்த்திடும் மரண மோட்சம். (517)*

---

★வீரர் கையில் தனு என்பதன் பொருள் சரியாக விளங்கவில்லை.

(இ-ள்.) குரு, இலக்கனத்தில் இருக்க, ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, அல்லது கன்னி வீட்டில் இருக்க, செவ்வாய், புதன் இருவரும் இலக்கனத்தில் இருக்க தனுசு, மேசாம்சத்தில் இருக்க, அச்சாதகன் மரணத்திற்குப் பின் சுவர்க்கம் சென்று சேருவான் என்றவாறு.

***ஆக பாவம் பன்னிரண்டுக்கு மொத்தச் செய்யுள் 517***

**சாதக பாரிசாதம் முற்றும்.**

# செய்யுள் முதற்குறிப் பகராதி

**எண் : பாடல் எண்**


### அ

அஞ்சினில் இலக்கன 259
அஞ்சினில் வெய்யோன் 160
அஞ்சினுக்குடையோன் 156, 248, 249, 279, 374
அட்டமத் ததிபன 353
அட்டமாதி பனீ 362
அட்டமாதிபனும் 360, 370
அட்டமா திபனை 173
அட்டமாய் பன்னீ 166
அதியுச்ச பாகம் 512
அதியுச்ச மாக 439
அந்தணன் இருக்கும் 246
அந்தணன் இலாபம் 490
அந்தணன் என்னும் 197
அந்தணன் ஏழி 346
அந்தணன் ஏழில் 332, 348
அந்தணன் ஐந்தின் 275
அந்தணன் சுங்கன் 321
அந்தணன் திங்கள 510
அந்தணன் பாக்கி 380
அந்தணன் புந்தி 142, 400
அந்தணன் வைசேடி 260
அப்பன் தானத்திற் 386
அம்புலி சுங்கன் 420
அம்புலி தனக்கு 476
அம்புலி பாவ 277
அம்புலிலக் கனசம் 176
அய்யன் இலக்கனத்தில் 289
அல்லது செவ்வாய் 112
அறிவுடன் இலக்க 359
அறிவுடன் மூன்று 106
அன்பது வயதா 263

### ஆ

ஆகும் மூன்றுடைய 135
ஆக்கமாய்ப் பத்தின் 449
ஆண்டிடும் மூன்றின் 128
ஆதித்தன் இருந்த 291
ஆதித்தன் ஏழி 347
ஆதித்தன் ஏழில் 328
ஆதித்தன் ஐந்தில் 235
ஆதித்தன் சுபர்கள் 451
ஆதித்தன் செவ்வாய் 399
ஆதித்தன் நாலின் 307
ஆதித்தன் மூன்றாம் 94
ஆறிரண்டினிலே 23
ஆறினில் பலனை 294
ஆறினுக் குடைய 303
ஆறினுக்குடையோன் 149, 152, 204, 299, 311, 317
ஆறெட்டில் பன்னி 195
ஆறெட்டுக்குடையோன் 506
ஆன இலக்கனத்து 19

### இ

இட்டமாச் சுங்கன் 513
இந்த நாலுடைய 158
இப்படி இரண்டிற் 351

இலக்கனத்ததிபன் 344
இலக்கன நவாங்கிச 3
இலக்கன நாதன் 6
இலக்கனம் முதலாம் 310
இலக்கனாதிபனும் 33, 213, 254
இலக்கனாதிபனோ 37
இலக்கனாதிபன் ஆ 261
இலக்கனாதிபன் ஈ 5
இலாபத்தான இலாபம் 496
இலாபத்தானத்தோன் 221
இலாபத்தான வாக்கு 36
இலாபத்தில் நான்கின் 186
இரணியன் இலக்க 517
இராகுவின் உடன் 64

ஈ

ஈராறுக்குடைய 503

உ

உயிர்தனக்குடைய 9
உயிர்தனில் சுபக்கிர 25
உரைத்திடு நான்கு 194
உரைத்திடும் ஓரை 27
உரைத்திடும் கிரகம் 113
உரைத்திடும் நாலு 384
உரைத்திடும் மூன்றின் 136

எ

எட்டினிற்குடையோன் 354
எட்டினிற்குணங்கள் 352
எட்டினிற் பாவர் 378
எட்டினுக்குடையோன் 367, 372
எண்ணிய நாலிற் 199
எண்ணிய லக்னாதி 13
எத்தனை கிரக 102
எத்தனை கிரகம் 339
எந்த இராசியிலும் 365

ஏ

ஏழினில் ஆறில் 60
ஏழினிற் கதிரோன் 345
ஏழினிற் சுபராய் 327
ஏழினிற் செவ்வாய் 325
ஏழினுக்குடையா 304
ஏழினுக்குடையோன் 41, 75, 241, 250, 315, 335, 342

ஐ

ஐந்தினில் வாழும் 276
ஐந்தினுக் குடையா 373
ஐந்தினுக்குடையோன் 159, 251, 288
ஐந்து கோள் நாலு 446
ஐயன் தானத்து 385

ஒ

ஒருத்திடும் சாத 447
ஒன்பதாம் இடத்தை 379
ஒன்று நான் கேழு 471

ஓ

ஓதிய பலனே 85

க

கண்டிட ஏழாம் 313
கண்ணுடைத் தான 76
கண்ணுடையோனும் 43
கதிரவன் ஐந்தின் 286
கதிரவன் பாக்கி 419
கன்மத் தானத்தான் 483
கன்மத்தானத்திற் 486
கன்மத்தானத்தின் 464
கன்மத்தான் சுபராய் 437

கன்மத்தான் நீச 462
கன்மத்தோன் சென்ம 356
கன்ம நாயகனும் 320
கன்னியே சென்ம 243

கா

காரகச் செவ்வாய் 90, 104, 123
காரிலா பத்தில் 491

கு

குடும்ப தானத்தில் 46
குடும்பதானத்து 45
குடும்பத் தானத்தோன் 42,81
குடும்பத் தானத்தை 59
கும்பிடுத்தானம் 239
குருகதிர் மதியன் 387
குருசனி செவ்வாய் 455
குருநவ மீதில் 414
குருபுகர் கதிர்மால் 427
குருபுகர் மதிமால் 407
குருபுதன் பத்திற் 436
குருபுதன் பாக்கி 409
குருமதி நீலன் 480
குருவங்கிசத்தில் 468
குருவுடன் இரண்டு 73
குருவுடன் சுங்கன் 498
குருவுடன் மதியும் 181
குருவொடு இலக்க 264

கூ

கூடவே வந்தோன் 86

கே

கேந்திரங்களிலே 336
கேந்திரத் தானன் 52
கேந்திரத் திரிகோண 4, 70, 100, 227
கேந்திரத் திரிகோணம் 499

கொ

கொஞ்சியே பிதுர்த்தா 375

கோ

கோபுராங் கிசத்தில் 162

ச

சகோதரத் தானம் 93
சத்துரு தான 24
சத்துருத் தான300, 312, 318,516
சந்திர இலக்கனத்துக் 473
சந்திர னுடனே 155
சந்திரன் அமர 146
சந்திரன் இரண்டி 177
சந்திரன் இரண்டில் 377
சந்திரன் இலக்க 324
சந்திரன் எட்டீ 96
சந்திரன் எந்த 341
சந்திரன் என்னும் சுங்கன் 153
சந்திரன் கற்கடகம் 484
சந்திரன் சனியன் 403
சந்திரன் சுங்க 247
சந்திரன்சுங்கன் 53, 137
சந்திரன் செவ்வாய் 402
சந்திரன் தந்தை 393
சந்திரன் தனக்கு44, 434, 444, 477
சந்திரன் தன்னை 461
சந்திரன் நவாங்கி 465
சந்திரன் நாலில் 290
சந்திரன் நாலின் 161
சந்திரன் பலவா 169
சந்திரன் புந்தி 295, 390
சந்திரன் மந்தன் 454
சந்திரன் வியாழம் 183
சந்திரன் வியாழன் 266, 457

சர இராசியாக 16
சரஇராசி யார்க்கு 15
சனி நவாங்கிசத்திற் 470
சனியன் லக்கனத்து 460

சா

சார்ந்த இலக்கனத்து 20

சீ

சீவனில் சுபரே 2

சு

சுக்கிரசந்திரனும் 452
சுக்கிரன் ஆறின் 55
சுக்கிரன் ஏழில் 314
சுக்கிரன் ஏழிற் 350
சுக்கிரன் ஏழின் 296
சுக்கிரன் கேந்திரத்தில் 74
சுக்கிரன் செவ்வாய் 322
சுக்கிரன் திங்கள் 182
சுக்கிரன் தேவ 26
சுக்கிரன் நான்கின் 179
சுக்கிரன் பலவா 144
சுக்கிரன் பாவ 574
சுக்கிரன் மூன்றில் 132
சுக்கிரன் வியாழன் 138
சுக்கிரன் வீட்டு 340
சுங்கனும் ஏழிற் 316, 349
சுங்கன் ஆதித்தன் 401
சுந்தரச் சுங்கன் 404

சூ

சூரியன் ஐந்தின் 285
சூரியன் சனி செவ்வாய்450
சூரியன், செவ்வாய் 72
சூரியன் திங்கள் 394
சூரியன் நாலாம் 233
சூரியன் புதனும் 388
சூரியன் மதிதான் 509

செ

செந்தநாலுடைய 185
செப்பிய அட்ட 363
செப்பிய மூன்றின் 125
சென்ம இலக்கனத்தின் 84
சென்ம இலக்கனத்து 218
சென்ம இலக்கனத்தோன் 50
சென்ம காலத்து 368
சென்மநா தனுக்கீ 14
சென்மமீ தணைந்தோன் 196
சென்மலக்கனமே 1
சென்மவானாகி 78
சென்மவான் அட்ட 361
சென்மவான் இலக்க 369
சென்மவான் பாவ 17

சே

சேயுடன் மதியும் 154
சேயுடன் மூன்றின் 89
சேயொடும் ஐந்தின் 271
சேய்கதிர் திங்கள் 396
சேய் பலவானே 88
சேய்பல வீன 117
சேய்வரு தான 256

சொ

சொல்லிய ஆறின் 301
சொல்லிய இலாபம் 489,493
சொல்லிய ஏழிற் 329
சொல்லிய ஐந்தாம் 269
சொல்லிய கிரகம் 191
சொல்லிய கோளன் 305
சொல்லிய தானம் 508

சொல்லிய நாலில் 147
சொல்லிய நாலின் 172
சொல்லிய நாலும் 283
சொல்லிய பத்திற் 479
சொல்லிய பன்னி 501, 505
சொல்லிய மூன்றாம் 114
சொல்லிய மூன்றின் 109, 118,119
சொல்லு நாலுடைய 168
சொன்னஅக் கோளும் 35
சொன்னஇக் கோளன் 68
சொன்னஇத் தானம் 131, 475
சொன்ன இம்முறையே 326
சொன்ன இம்மூன்று 357, 453
சொன்னகேந் திரத்தில் 208
சொன்ன தானத்தை 95
சொன்ன நாலுடைய 145, 175
சொன்னநா லுடையான் 228
சொன்னலக் கனத்து 371
சொன்னலாபத்திற் 495
சொன்னவ னுடனே 120
சொன்னவன் சுங்கன் 170
சொன்னவைந்துடைய 284

**த**

தக்கலக் கனத்தோன் 189
தந்தை இலக்கனத்து 287
தந்தையாம் இடத்தில் 382

**தா**

தாயார் தானத்தின் 225
தானங்கள் அறிய 34
தானமாம் மூன்றின் 129

**தி**

திங்களுகப்பாற் 478
திங்கள் சூரியன் 395
திண்ணிய மூன்றின் 105
திருந்தவே கிரக 392
திருந்திய இலக்க 111
திருந்திய செவ்வா 122, 330, 376, 398, 487
திருந்தியே செவ்வாய் 497
திருந்திய சேயா 91
திருந்திய மூன்றின் 103

**தூ**

தூக்கிடும் ஐந்தாம் 242

**தே**

தேடிய ஐந்தில் 270

**தோ**

தோன்றிய நாளில் 171
தோன்றிய மூன்றில் 127
தோன்றிய வியாழன் 167

**ந**

நண்ணிய நாலாம் 141
நலமிகு சுபர்கள் 163
நலம் தரும் நான்காம் 139,224
நல்லவன் வியாழன் 130
நவமதில் பத்தின் 441
நவமதிற்குடைய 417
நவமதுக்குடைய 422
நவமதுக்குடையா 411
நவமதுக்குடையோன் 413
நவமீதில் நீலன் 458

**நா**

நாடிய நாலாம் 216
நாடிய நான்கின் 226
நாடியே மூன்றின் 108
நாலினில் வந்தோன் 164

நாலினிற் பாவர் 272
நாலினுக் கதிபன் 209
நாலினுக்குடைய 174, 184
நாலினுக்குடையோன் 240, 292

நீ

நீலனும் செவ்வாய் 333

நே

நேத்திரத்தானம் 61

ப

பசிய இலக்கனத்து 18
படமுடன் இராகு 274
பதிந்த சீவனங்கள் 463
பத்தினுக்குடையோ 423
பத்தினுக்குடையோன் 157, 210, 355, 366, 431, 433, 440, 445, 459, 466, 482, 485, 488
பத்திரமாக 432
பத்தினில் இருந்தோன் 472
பத்தினில் பலன்வி 425
பத்தினில் மந்தன் 481
பத்தினில் மூன்றில் 448
பத்தினில் முன்றின் 134
பத்தினிற் நாலில் 212
பரிவுடன் மூன்றின் 116
பலமொடு மூன்றின் 87
பன்னிரண்டாறில் 364
பன்னிரண்டுடையோன் 222
பன்னிரண்டேழில் 323
பன்னிரண் டொன்பான் 262
பன்னுலக் கனத்தின் 21

பா

பாக்கியத் ததிப 424
பக்கியத்ததிபன் 11, 51, 54, 150, 165, 193, 202, 206, 282, 343, 381, 383, 410ஸ 412, 421, 424, 443
பாக்கியத்ததிலே 273, 416, 418
பாக்கியத் தான 442
பாக்கியத் தானம் 257
பாக்கியநாதன் 201
பாக்கியம் மீதில் 214
பாடிய நாலிற் 217
பாப இராசியிலே 358
பாரிலக் கனத்து 28
பார்த்த இலக்கனாதி 32
பாவரும் சுபரும் 492
பாவர் இலக்கனத்தை 31
பாவர்களுடனே 230, 338
பாவர்களோடு 22
பாவர்கள் பலவா 430
பாவர்தன் இடையில் 268

பி

பிஞ்சுமதி தரித்த 232

பு

புகர்மதி கதிரோன் 397
புண்ணிய நாலின் 219
புண்ணிய புதனோர் 67
புதனுச்ச மாகி 438
புதனுடன் இலக்க 309
புதனொடும் வியாழம் 66
புதன் அங்கிசத்தில் 467
புதன்குரு சுங்கன் 435
புத்திரத் தான 237, 253, 278, 280, 293, 302
புத்திரத்தானம் 234, 244, 258, 265

புந்தி சுக்கிரன் வி 415
புந்திதான் உச்ச 188
புந்திதான் ஐந்தில் 236
புந்திதான் மூன்றில் 133
புந்தியும் ஏழிற் 337
புந்தியும் குருவும் 331
புந்தியோ டேக 308
புந்திலக் கனத்தில் 207
புருட இரா சியிலே 99

**பூ**

பூரண சந்திரனும் 180

**பே**

பேசிய மூன்றாம் 107

**பொ**

பொருந்திய நாலிற் 215
பொன்னவன் சிங்கா 83
பொன்னவன் பன்னி 49
பொன்னவன் புந்தி 143
பொன்னவன் வெள்ளி 211

**ம**

மகவுடைத் தான 245, 281
மகனுடைத் தானம் 252
மக்கள் தானத்தில் 267
மக்கள் தானத்தின் 255
மதிதனக் கப்பாற் 474
மதிநவ மீதில் 456
மதிபாவ ருடனே 151
மதியுடன் நாலின் 178
மதியொடு குருவும் 405
மந்தனும் இராகும் 515
மந்தனும் சுங்கன் 406
மந்தனும் செவ்வாய் 56
மந்தன்ஆ தித்தன் 389
மந்தன் இலக்கனத்தை 30
மன்னவன் நாலிற் 200

**மா**

மாதுரு தான 12
மாதுருத் தான 97, 205
மாலவன் வியாழன் 69

**மி**

மின்னிய கதிரோன் 391

**மீ**

மீனமாய்த் தானம் 428

**மு**

முந்தின சொன்ன 426
முந்தைய பாட்டில் 190
முன்னமே உரைத்த 124, 306
முன்னுரை செய்த 198

**மூ**

மூன்றினில் ஐந்தில் 148
மூன்றினிற் சுபர்கள் 231
மூன்றினிற் சுபனாய் 229
மூன்றினுக் குடைய 98, 101, 115, 121
மூன்று தானத்தின் 10

**மொ**

மொழிந்த லக்கனத்து 110

**வ**

வருந்திய நாலின் 192
வருந்திய மூன்றின் 126

**வா**

வாகன நாதன் 187
வாகனத்தான 223

வாகனத் ததிபன் 203
வாக்கினில் ஏழிற் 334
வாக்கினில் கிரகம் 39
வாக்கினில் சுபரி 80
வாக்கினில் சுபர்கள் 58
வாக்கினிற் செவ்வாய் 71
வாக்கினுக் கதிபன் 92
வாக்கினுக்குடைய 7,8,57,65
வாக்கினுக் குடையோன்38,40, 77, 79, 220, 319, 494
வாக்குத் தானத்தோன்47, 48, 62, 63

**வி**

வித்தையாம் பாவர் 82
வித்தையான் வித்தை 140
வியமதில் இட்ட 504
வியமதில் சுபரி 502
வியமதில் மாலாய் 429
வியமதில் வேத 507
வியமதுக் குடைய 500, 511

**வெ**

வெய்யவன் முதலாய் 29
வெள்ளியின் நவாங்கி 469
வெள்ளியும் குருவும் 238


